சுதேச
மித்திரன்
ஏப்ரல் 8, 1956 விலை 4 அணா



ராமுவுக்கு வீடு திரும்ப நடுக்கம்...
என் துணி அழுக்காகி விட்டது, சோமு. அம்மா கோபித்துக் கொள்வாளே இப்போ.
என் துணி களுந்தான் அடிக்கடி அழுக்காகிறது, ராமு. ஆனால் எங்கம்மா கோபித்துக் கொள்வதில்லை வா, போவோம்.
சோமுவின் வீட்டில்:
ஏன் அழுகிறான் இவன்?
துணிகளை அழுக்காக்கிக் கொண்டான், ஆகவே வீட்டுக்குப்போக பயப்படுகிறான்
ராமுவின் வீட்டில்:
மறுபடியும் அழுக்கோடு வந்தாயாடா! இன்மேலே உன்னை விளையாடப் போகவிடமாட்டேன்.
குழந்தையை கோபிக்காதீங்க. விளையாடும் போது குழந்தைகள் அழுக்காவது சகஜம்.
அரும்பாடுபட்டு ஒவ்வொரு நாளும் அடித்துத்துவைக்கிறேன், அதன் பிறகு துணிகள் சீக்கிரம் கிழிந்து விடுகின்றன.
அது வாஸ்தவம். அடித்துத்துவைத்தால் நூலிழைகள் நைந்து, துணிகள் சீக்கிரமே கிழிந்து விடும்
(அடித்துத் துவைத்த துணி பூதக் கண்ணாடி மூலம்)
ஆனால் ஸன்லைட் சோப் உபயோகிக்கும் போது நீங்கள் அடித்துத்துவைக்கவே வேண்டியதில்லை. வளமையான அதன் நுரை எல்லா அழுக்குகளையும் அகற்றுகிறது. உங்கள் துணிகளும் நெடுங்காலம் உழைக்கும்.
உண்மைதான்! துரிதமாக நுரைத்துக்கொள்ளும் ஸன்லைட் சோப் துணிகளை அடித்துத்துவைக்காமலேயே தூய்மையாகவும் பிரகாசமாகவும் வெளுக்கிறது. இதனால் துணிகள் நீடித்திருக்கிறது, எனக்கும் பணம் மிச்சம்.
SUNLIGHT SOAP
Reward!
GUARANTEED
ஸன்லைட் சோப்
துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது.
இந்தியாவில் தயாரித்தது
S. 237-X

பொருளடக்கம்

Vol: XXVII] மன்மதஹூ பங்குனிமீ 26வ. ஏப்ரல் 8, 1956 [No. 10

பாகிஸ்தானின் புரட்டு 3
தலைநகர் தபால் 4
கல்கத்தா கடிதம் 5
அன்புக்கும் உண்டோ உருவம்? —க. பஞ்சாபகேசன் 6
பம்பாய் நிகழ்ச்சிகள் 10
குடைக் காதல் —ராம்குமார் 11
இரும்பும் புரட்சியும் —ந. பிச்சமூர்த்தி 13
அமர காதல் —நடனு 15
திரிவேணி —ஹேமா ஆனந்ததீர்த்தன் 19
அக்கினித் தலையன் —கேதாரி 24
தெருவில் துர்நடத்தை... —சுமங்கலி 27
நஷ்டதத்தின் ரகசியம் —ஜமீலா 28
சட்டம் பேசுகிறது! —வழக்கறிஞர் 31
சாரணர் உலகம் —சித்தார்த்தன் 32
நாராயணீயம் —அனந்தராம தீக்ஷிதர் 33
அதிசய வீணை —வாண்டு மாமா 35
பஞ்ச தந்திரம் 36
இட்ட பலன் —கேயார் 38
எழுத்துலகம் —எஸ். ராஜா 42
மோக முள் —தி. ஜானகிராமன் 43
பார்த்தசாரதியின் பேட்டி —சங்கரநாராயணன் 49
மறு சுவை —எஸ். விஜயா 51
கலா மண்டபம் 53
தீக்ஷிதர் கீர்த்தனை 56

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

புது வருஷ இதழ்

★

தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களின்
கதைகள், கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி
புது வருஷப் பிறப்புக்கு முன்தினமே வெளிவருகிறது.

★

72 பக்கங்கள்

விலை 4 அணா தான்

★

மித்திரன் வாரப்பதிப்பு

இமாலயப் பிரச்னை
சேரி ஒழிப்பின் அவசியத்தை அறிவுறுத்தி இருக்கிறார் நேரு ஜி.
சேரிகள் பிரச்னை
வாமனவதாரம்!
இந்திய கம்யூனிஸ்ட் தலைவரொருவரின் குட்டையான ஆகிருதி ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது சோவியத் மந்திரி மிகோயனை
இந்திய கம்யூனிஸ்ட்
காஷ்மீர் எக்ஸ்பிரஸ்!
காஷ்மீர் பிரச்னையில் முடிவுகாண திரும்பவும் பாகிஸ்தான் தீர்மானித்திருக்கிறது!
OOMMEN

வாழிய செந்தமிழ் சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

பாகிஸ்தானின் புரட்டு

காஷ்மீர் பிரச்னை விஷயத்தில் தம் மனம் போனபடியெல்லாம் பாக். பிரதமர் கதைகட்டியிருக்கிறார். இந்தியப் படைகள் காஷ்மீருக்குள் புகுந்து பாகிஸ்தானின் பந்தோபஸ்துக்கே ஆபத்து ஏற்பட்டதாயும், அப்போதுதான் பாக். ராணுவம் காஷ்மீருக்குள் பிரவேசித்ததாயும் சரடுவிட்டிருக்கிறார் அவர். உண்மையில் ஒரு பாதுகாப்புமின்றித் திறந்துகிடந்த காஷ்மீரில் பாக். அதிகாரிகள் முதலில் மலை ஜாதியினரை ஏவிவிட்டதும், அதைத் தொடர்ந்து பாக். ராணுவமே அந்த ராஜ்யத்துக்குள் புகுந்ததும் அனைவருக்கும் தெரியும். இது நடந்தது 1947-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில். பாக். துராக்கிரமிப்பைக் கண்டதன் பேரிலேயே காஷ்மீர் சர்க்காரின் அவசரக் கோரிக்கையை ஒட்டி இந்தியா தனது ராணுவத்தை அங்கு அனுப்பிவைத்தது. காஷ்மீரை எப்படியாவது தன் வசப்படுத்திக்கொள்ளும் எண்ணம் இந்தியாவுக்கு இருந்திருந்தால் அப்போதே அதை எளிதாக நிறைவேற்றிக்கொண்டிருக்க முடியும். காஷ்மீர் மகாராஜாவும் இந்தியாவுடன் அந்த ராஜ்யத்தை இணைப்பதாக அப்போதே சட்ட பூர்வமாக அறிவித்துவிட்டார். ஆயினும், இந்தியா சட்ட முறையோடு தர்ம-நியாயத்திலும், நேர்மையான ஜனநாயக முறையிலும் நம்பிக்கை கொண்ட நாடு. எனவே காஷ்மீரின் எதிர்காலத்தைப்பற்றி ஜனநாயக முறையில் அங்குள்ள மக்களின் கருத்தறிந்து அதற்குக் கட்டுப்பட்டு நடக்க இந்திய சர்க்கார் தாங்களாகவே முன்வந்தனர். எனினும் இன்றுவரை அங்கு பொதுஜன வாக்கெடுப்பு நடக்கமுடியவில்லை என்றால் அதற்கு பாகிஸ்தானே பொறுப்பாளி. ஐ. நா. சங்கத்தின் தீர்மானப்படி காஷ்மீரிலுள்ள பாக். துருப்புகள் முதலில் வாபஸாகவேண்டும். ஆனால், இன்றுவரை அதற்கான நடவடிக்கை எதையும் எடுத்துக்கொள்ளாததுடன் காஷ்மீர் பிரச்னையை இன்னும் சிக்கலாக்கி அதோடு, இந்தியாவின் பந்தோபஸ்துக்கே அபாயம் விளைக்கக்கூடிய சில நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. ஸீட்டோ, பாக்தாத் ராணுவக் கூட்டுகளில் அந்நாடு சேர்ந்திருப்பதன் நோக்கம் தெளிவு. மேலும் அது அமெரிக்காவிலிருந்து பெருவாரியாக ஆயுதங்களை வரவழைத்துக் குவித்துக்கொண்டுவருகிறது. பாகிஸ்தானிலும், அதன் ஆதிக்கத்திலுள்ள காஷ்மீர் பிரதேசத்திலும் ராணுவ தளங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இலக்கு என்று சொல்லத் தேவையில்லை. உண்மையில், தங்களிடம் பெருகிவரும் ராணுவ பலத்தைக்கொண்டு பலாத்கார முறையில் காஷ்மீர் பிரச்னையைத் தீர்த்துவைக்கப் போவதாக இதற்கு முன்னிருந்த பாக். பிரதமர் பகிரங்கமாகவே அறிவித்ததும் அனைவரும் அறிந்ததே.

இந்தியாவின் காஷ்மீரிலுள்ள தங்கள் படைகளை பாக். அதிகாரிகள் சில மைல் தூரம் பின்வாங்க ஒப்புக்கொண்டாலும் கூட அதனால் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிடாது. பாக். எல்லையில் முன் எப்போதும் இல்லாத ராணுவ பலம் இப்போது இருந்துவருகிறது. எனவே சர்வஜன வாக்கெடுப்புக்கான நிபந்தனை விதிக்கப்பட்ட போதிருந்ததைவிட தற்போதைய நிலைமை மிகவும் மாறுபட்டது. இதற்கேற்ப பிரத்தியட்ச உணர்வுடன் காஷ்மீர் விவகாரத்தைக் கவனிக்க வேண்டுமென்பதே இந்தியாவின் கட்சி. காஷ்மீர் மக்கள் தங்கள் பிரச்னையில் பாகிஸ்தானும், இந்தியாவும் ஒரு சமரச முடிவுக்கு வர நெடுநாள் காத்திருந்தனர். அவ்வெண்ணம் ஈடேறாததைக்கண்டு அவர்கள் தம் வாழ்வை தாங்களாகவே ஸ்திரப்படுத்திக் கொண்டு வருகின்றனர். இதைக் கவனித்து நடந்து கொள்வதே அனுபவசாத்யமான நடைமுறை.

சட்ட முறையைக்கொண்டு பார்த்தாலும், காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்ததை எவ்விதத்திலும் ஆட்சேபிக்கமுடியாது; சட்டத்தை மீறி காஷ்மீர் விஷயத்தில் துராக்கிரமிப்பில் இறங்கியது பாகிஸ்தானே என்ற உண்மையை ஐ. நா. பிரதிநிதியே எடுத்துக்காட்டியிருக்கிறார். ஆனால், ஐ. நா. சங்கம் அந்த அடிப்படையில் தனது தீர்மானத்தை அமைத்து பாகிஸ்தானின் துராக்கிரமிப்பை ஒடுக்க ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. அதன் பலனாக பாக். துராக்கிரமிப்பு வெறி மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதையொட்டித்தான் அது தற்போது தன் ராணுவ பலத்தை அதிகரித்துக் கொண்டுவருகிறது. இந்திய எல்லையில் பாக். விஷமம் பெருகிவருவதில் மர்மம் எதுவுமில்லை. பாக். திருஷ்டி கோவா மீதும் திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. துராக்கிரமிப்புக்கான பாக். ஏற்பாடுகள் அனைத்தையும் இந்தியா உணர்ந்துதான் இருக்கிறதென்பதை பண்டித நேரு தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால், இவ்வளவுக்குப் பிறகும் ஐ. நா. சங்கம் காஷ்மீர் பிரச்னையில் ஆரம்பத்திலேயே தான் செய்திருக்கவேண்டிய கடமையை

கர்நாடக சங்கீத சபையாரும், தட்சிண பாரத் சமாஜத்தாரும் நடத்திய நாடக விழா, திங்களன்று 'டாக்டரும் பேயும்' என்ற நாடகத்துடன் முடிவடைந்தது. இந்த நாடகம் முந்திய இரண்டு நாடகங்களைவிட நன்றாயிருந்தது என்பது ரஸிகர்களின் கருத்து. வெகு காலத்திற்குப்பின், தில்லியில் தொடர்ந்தாற்போல நாடகங்களை நடத்திய பெருமை நாரதர் ஸ்ரீனிவாஸ ராவைச் சேர்ந்தது. இதை சாத்தியமாக்கி நிறைவேற்றிக் கொடுத்தவர், சமாஜ்—சபாவின் அக்ராஸனர் ஸ்ரீ டி. எஸ். பட்டாபிராமன். அவருக்கு உறுதுணையாக நின்று அல்லும் பகலும் உழைத்த ஸ்ரீ கே. ராமமூர்த்தி, ஸ்ரீ ஏ. ஜீ. வி. சுப்ரமண்யம், ஸ்ரீ ஹரிஹர் சங்கர் முதலான எண்ணற்ற அன்பர்களையும் குறிப்பிட வேண்டும்.

ஃ ஃ ஃ

தில்லியில் சென்ற ஞாயிறன்று (25–3–56) துவங்கிய நாடக உரைக் கோவையில் 'தமிழ்ப் பிரதிநிதி இல்லையே!' என வருத்தமுற்றிருந்தோம் அல்லவா? ஆனால், மகாநாடுதுவங்கிய இரண்டு நாட்களுக்குப் பிறகாவது தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் வந்து கலந்துகொள்ளும் படிச் செய்த சங்கீத நாடக அகாடெமியாரைப் பாராட்டத்தான் வேண்டும்! ஸ்ரீ டி. கே. ஷண்முகம் விமானத்தில் பறந்து வந்து, உரைக்கோவையில் கலந்துகொண்டார். கடைசி நேரத்தில்தான் 'தமிழ் மொழிக் கலைஞர் ஒருவர் வேண்டும்' என்று அகாடெமிக்குத் தோன்றிற்று போலும்! திடுதிப்பென்று ஸ்ரீ ஷண்முகத்திற்குச் சொல்லியனுப்பினார்கள். இரண்டு நாள் அவகாசம்கூட இல்லாத நிலையிலும், அவர் இரவோடு இரவாக உட்கார்ந்து, தனது அறிக்கையை எழுதித் தயார் செய்ய வேண்டியிருந்ததாம். என்றாலும்

தலைநகர் பால்.....

அறிக்கை சிறப்பானதாகவும் அமைந்து விட்டது என்பதை, புதனன்று மாலை ஏழரை மணிக்கு ஸ்ரீ ஷண்முகத்தின் உரையைக் கேட்டவர்களின் மகிழ்ச்சி ஆரவாரம், பாராட்டுரைகளிலிருந்து நன்கு புலனாயிற்று. தமிழ் நாடக வளர்ச்சி வரலாற்றை தமிழகத்தின் சிறப்பான நடிகர் ஒருவரின் வாயிலாகக் கேட்டார்கள், இந்தியாவின் நாடகக் கலைஞர்கள். தமிழகத்தின் பிரதிநிதி சிறப்பான முறையில் தனது பொறுப்பை நிறைவேற்றியிருப்பதுகண்டு டில்லித் தமிழன்பர்களும் அகமகிழ்வெய்தினர்.

"இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு கலாசார கோஷ்டிகளை அனுப்புவதைப்போல, இந்நாட்டு உறுப்பு ராஜ்யங்களுக்கிடையேயும் கலாசார கோஷ்டிகளை பரிவர்த்தனை செய்துகொள்ள வேண்டும்; கலைகளின் விருத்தி சம்பந்தமான உதவிச் சம்பளம் வழங்குவது உட்பட, கலை நடவடிக்கைகள் அனைத்துமே, மத்ய அகாடெமி, ராஜ்ய அகாடெமி மூலம் நடந்தால்தான், அவை இணைப்பாகவும் சீராகவும் இருக்க முடியும். கலைத் திட்டங்களுக்கான பணத்தை உறுப்பு ராஜ்ய அரசாங்கங்களின் மூலம் செலவிட வேண்டும். ஒவ்வொரு ராஜ்யத் தலைநகரிலும் ஒரு தேசீயக் கலை அரங்கைக் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் பணம் கொடுக்க வேண்டுமேயன்றி, டில்லி அரங்கு ஒன்றுக்கே 75 லக்ஷம் ரூபாய் செலவிடுவதென்பது உசிதம் அல்ல" என்று கூறினார் ஸ்ரீ ஷண்முகம். தவிர, "ராஜ்யங்கள்தோறும் இத்தகைய உரைக் கோவைகளை ஏற்பாடு செய்து, அவற்றிலிருந்து மத்திய உரைக் கோவைக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம்" என்றும் ஸ்ரீ டி. கே. எஸ். கூறினார்.

அவர், தமது தமிழ்ப் பேச்சை மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யுமாறு கோரியிருந்தார். ஆனால், நிர்வாகத்தார் ஏதும் செய்யாமலிருந்துவிட்டதால், டில்லி வந்த பின்னர், கம்யூனிஸ்டு தலைவர் ஸ்ரீ பி. ராமமூர்த்தியின் உதவியை நாட வேண்டியதாயிற்று. ஷண்முகத்தின் உணர்ச்சி மிக்க பிரசங்கத்தை, அப்படியே ஆவேசமிக்க தம் ஆங்கிலத்தில் பொழிந்து தள்ளினார், தோழர் ராமமூர்த்தி!

டில்லிக்கு திடீர் விஜயம்செய்த தமிழ்க் கலைஞர் ஸ்ரீ ஷண்முகத்தைக் கௌரவிக்க இரண்டே மணி நேரத்தில் தமிழன்பர்கள் சிலர் புதனன்று இரவு விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்துவிட்டனர். டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், ஸ்ரீ ஷண்முகானந்த சபைத் தலைவர் ஸ்ரீ அன்னதானம், ஸ்ரீ சக்கரவர்த்தி, ஸ்ரீ ஜம்புநாதன் ஆகியோரும், தமிழ் சங்கத்து முக்யஸ்தர் பலரும், கலைஞருடன் விருந்துண்டு அளவளாவினர். பம்பாயில் பிரம்மாண்டமான தமிழ்ச் சங்கக் கட்டிடம் எழுவதற்கு உதவிய டி. கே. எஸ். சகோதரர்களைப் பாராட்டினார், ஸ்ரீ ஏ. வி. குப்புஸ்வாமி. "டில்லியிலும் அத்தகைய முயற்சி அவசியம்; உயரிய தமிழ் நாடகங்களை டில்லி மக்கள் கண்டு களிக்கவும் வகை காண வேண்டியது அவசியம்" என்று அன்பர்கள் விருப்பம் தெரிவித்தார்கள்.

(இடது) லோக் சபை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்காரைக் கௌரவிக்க தில்லி இம்பீரியல் ஹோட்டலில் ஸ்ரீ அன்னதானம் நிகழ்த்திய விருந்தின்போது எடுத்த படம். ஸ்ரீ அய்யங்காரையும், ஸ்ரீ அன்னதானம், நடனமாடிய குமாரி ஜயம் உட்பட பல பிரமுகர்களையும் படத்தில் காணலாம். (வலது) நாடகக்கலைஞர் ஸ்ரீ டி. கே. ஷண்முகத்திற்கு தில்லித் தமிழ் அன்பர்கள் விருந்துபசாரம் நடத்தியபோது, விஞ்ஞானி டாக்டர் கிருஷ்ணன், ஸ்ரீ அன்னதானம், ஸ்ரீ அனந்தஸ்வாமி ஆகியோர் விஜயம் செய்திருந்தனர்.

டில்லி தென்னிந்திய மாதர் சங்கத்தின் ஆண்டு விழாக் கொண்டாட்டத்துக்குத் தலைமை தாங்கிய நீதிபதி ஸ்ரீ சந்திரசேகரய்யரையும், சங்கத் தலைவி ஸ்ரீமதி அம்முஸ்வாமிநாதனையும் படத்தில் காணலாம். காரியதரிசி ஸ்ரீமதி அம்புஜம் கிருஷ்ணமூர்த்தி ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்கிறார். (வலது) மாதர் சங்கத்தின் ஆண்டு விழாவில் கதம்ப நிகழ்ச்சிக் காட்சிகளில் ஒன்று.

லோக் சபாவின் சபாநாயகராகத் தேர்வு பெற்றுள்ள ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்காரைக் கௌரவிக்க, ஷண்முகானந்த சபையின் அக்ராஸனர் ஸ்ரீ அன்னதானம், திங்களன்று இம்பீரியல் ஹோட்டலில் நடத்திய தேனீர் விருந்து அரியதொரு கலை நிகழ்ச்சியாகவே இருந்தது. அதுவும், இம்பீரியல் ஹோட்டல் 'பால்ரூ'மில்—அதாவது சித்திர வேலைப்பாடுகள் மிகப் பரந்த சௌந்தர்ய மஹாலில்—டில்லியின் சிறந்த நடனமணியாகத் தேர்ச்சி அடைந்து மேன்மையுற்று வரும் குமாரி ஜயத்தின் நடன விருந்து அபாரம். வித்வான் ஒ. வி. சுப்ரமண்யத்தின் கர்நாடக இசைக் கச்சேரியும், பிரபல வித்வான் ஸ்ரீ உமாசங்கர் மிஸ்ராவின் சிதார் வாத்ய இசையும் நிகழ்ச்சியை மேலும் சிறப்பித்தன. இந்தத் தேனீர் விருந்தில் திரளான தமிழ்ப் பிரமுகர்களும், சுசீலா நய்யார் உட்பட வடநாட்டினர் பலரும் கலந்துகொண்டு, ஸ்ரீ அய்யங்காரை வாழ்த்தினர்; ஷண்முகானந்த சபையாரையும் அவர்களது அக்ராஸனர் ஸ்ரீ அன்னதானத்தையும் பாராட்டினர்.

ஃ ஃ ஃ

கரோல் பாகில் தென்னிந்திய மாதர் சங்கத்தின் வருஷாந்திர விழா நீதிபதி சந்திரசேகரய்யர் தலைமையில், சிறுவர் சிறுமியரின் கலை நிகழ்ச்சியுடன் கோலாகலமாக நடந்தேறிற்று. தலைநகரில் விதவிதமான நிகழ்ச்சிகளும் விழாக்களும் இருந்தும்கூட, டில்லித் தமிழர், தீரர் சத்யமூர்த்தியின் மறைவு தினத்தை உரிய வகையில் அனுஷ்டிக்கத் தவறவில்லை. அமைச்சர் ஸ்ரீ அளகேசன் தலைமையில் விமரிசையாக நடந்த கூட்டத்தில், பார்லிமெண்டு அங்கத்தினர்கள் ஸ்ரீ திருக்குறள் முனிஸ்வாமி, ஸ்ரீவீராசாமி, ஸ்ரீ ராமசுவாமி, ஸ்ரீ பி. டி. தாணு பிள்ளை முதலானோர் சுதந்திரப் போராட்டத் தலைவனின் புகழ் பாடி, அஞ்சலி செலுத்தினார்கள்.

★

கல்கத்தா கடிதம்

சௌ. சரோஜினிக்கு,

நான் கடந்த மூன்று வாரங்களாக இந்தக் கடிதத்தை எழுதாமலிருந்ததற்குக் காரணம், உனக்கு எழுதித் தெரிவிக்குமளவு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் ஏதும் நம்மவரிடையே நிகழாததுதான்.

'கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்க' முற்பட்டனர், கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தினர் கடந்த வார இறுதியிலே. இரண்டு நாள் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கம்பன் விழாவின் முதல் நாள் கூட்டத்தில், சங்கத் தலைவர் ஸ்ரீ ஒ. சு. வே. மணியம் எல்லோரையும் வரவேற்றார். வங்கப் பிரமுகர் ஸ்ரீ நரேந்திர தேவ் துவக்கவுரையை நிகழ்த்தினார். வங்க மொழியிலுள்ள 'கீர்த்தி வாசகர்' ராமாயணத்தைப் பற்றிப் பேசுவதற்கு முன்பாக, இத்தகைய உரைக் கோவைகள் வெவ்வேறு மொழி பேசுபவர்களை ஒன்றுபடுத்த எந்த வகையில் உபயோகப்படுகின்றன என்பதைப் பற்றியும் எடுத்து விளக்கினார்.

இந்த உரைக் கோவையில் கலந்து கொண்ட பிரபல வழக்கறிஞர் ஸ்ரீ கே. பி. கைத்தான், கம்பனுக்குப் பின் வந்த துளசிதாசர் தன் ராமாயண காவியத்தைக் கம்பனின் தமிழ் இராம காதைக்கு ஓர் வழி நூலாகவே ஆக்கினார் என்று எடுத்துக் காட்டியபோது, நாங்கள் எல்லோரும் பெருமிதம் அடைந்தோம். கம்பன் புகழைவிடக் காவியத் தலைவன் இராமன் புகழே முதல் நாளன்று வெகுவாகப் பேசப்பட்டது.

ஆனால், மறு நாள் நிகழ்ச்சியிலே கலந்துகொண்ட நம் இளைஞர்கள், 'கம்பன் புகழ்', 'சொல் புரட்சியில் கம்பன்,' 'கம்பன் வளர்த்த பண்பு' என்ற பல தலைப்புகளில் கம்பன் புகழைப் பலபடப் பேசி, மன நிறைவை ஏற்படுத்தினார்கள். கல்கத்தாவில் பண்பட்ட தமிழ்ப் பேச்சாளர்களான ஸ்ரீமான்கள் ஆ. சு. கிருஷ்ணன், ந. சிங்காரம், சித்தலிங்கய்யா, எஸ். வெங்குஸ்வாமி முதலிய அன்பர்கள் பல கோணங்களில் கம்பனையும் அவனது காவிய நயத்தையும் ஆராய்ந்து, தம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். படாடோபமின்றி வெகு அடக்கமாக நடந்த இந்த விழாவின் பொறுப்பைச் செயலாளர் ஸ்ரீ குப்புஸ்வாமி ஏற்றுத் திறம்பட நடத்தி வைத்தார்.

ஃ ஃ ஃ

இதன் மத்தியில், கல்கத்தா ரசிக ரஞ்சன சபையினர் கடந்த வாரத்தில் முதல்முதலாகத் திறந்த வெளி அரங்கில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளுடைய இசை நிகழ்ச்சியொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். 'ஓஹோ' என்று சொல்லு மளவுக்கு அன்றையக் கச்சேரி அமை[illegible] விட்டாலும், வழக்கம்போல் சாஹி[illegible] சுத்தமாகவும், பாவ பூர்வம[illegible] இருக்கத் தவறவில்லை.

ஃ ஃ ஃ

இன்ஷூரன்ஸ் தொழில் தேசீய[illegible] மாக்கப்பட்டதாலே கல்கத்தா [illegible] இந்தியா கிளப் கட்டிடம் க[illegible] முயற்சி பாதிக்கப்படவில்லை எ[illegible] விஷயமறிந்த வட்டாரங்களில் பே[illegible] கொள்கிறார்கள். கடந்த கால் நூற்ற[illegible] களுக்கு மேலாகத் தமிழர் சமூகத்துக்[illegible] பல துறைகளிலும் பாடுபட்டு வரும் இந்த ஸ்தாபனம், சொந்தக் கட்டிடத்தைக் கட்டிக்கொள்ளும் முயற்சியில் எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இதற்கு முன்னோட்டமாக, சமீபத்தில் விலகிய மூன்று அன்பர்கள் மறுபடியும் இந்த ஸ்தாபனத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும்.

இப்படிக்கு,

—"பாலம்"



அன்புக்கும் உண்டோ உருவம்

ஊஞ்சலைப் பிடித்துக்கொண்டு மெதுவானதும் அழுத்தமானதுமான குரலில், "பாட்டி . . ." என்றேன்.

"பாட்டி வீட்டில் இல்லை. கோயிலுக்குப் போயிருக்கிருள்" என்று மெதுவானதும் மனோகரமானதுமான குரல், சமையல் அறையிலிருந்து வந்தது.

எனக்கு அந்த மாதிரியான வரவேற்பு பிடிக்கவில்லை. 'வீடு தேடி வந்திருக்கும் மனிதனைப் பார்த்து ஒருவார்த்தை பேசக்கூடிய அத்தனை இங்கிதம்கூடத் தெரியக்கூடாதா?' என்று மனம் ஆதங்கப்பட்டது.

"சரி" என்று நான் சொன்னது சமையல் அறையில் இருந்தவளின் காதில் விழுந்திருக்குமோ என்னவோ, திரும்ப ஆரம்பித்தேன்.

". . . இதோ ஒரு நிமிஷம். பாட்டி உங்களிடம் கொடுக்கச் சொன்னுள். . ." என்று குரல் வந்தது. அவளும் வந்தாள், அவசர அவசரமாகப் புடவை முந்தானையால் தன் மென்கரங்களைத் துடைத்துக்கொண்டே.

மறுபடியும் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்றேன். வேகமாக அலமாரியைத் திறந்து ஒரு சம்புடத்தை எடுத்தாள். அதிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு வந்து, ஊஞ்சலின் ஓரத்தில் வைத்தாள்.

"இதென்னது?" என்றேன்.

"நீங்கள் போன மாசம் கடனுகக் கொடுத்த பணம். பாட்டி இல்லாத சமயம் நீங்கள் வந்தாலும், என்னை விட்டுத் திருப்பிக்கொடுக்கச் சொன்னுள். . ." என்ருள்.

ஒன்றும் புரியாமல்—ஆனல் கொஞ்சம் கூட இஷ்டமில்லாமல்—அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வெளியே நடந்தேன்.

"இன்றைக்கு அண்ணுவிடமிருந்து பணம் வந்தது. அதனல் திருப்பித்தர முடிந்தது. . . ." என்றெல்லாம் அவள் சொல்லிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்து விடாமலிருந்தது.

தெருவில் நடந்து கொண்டிருந்தவனுக்கு எதிரே உலகமெல்லாம் நடந்து கொண்டிருந்தாலும் ஒன்றுமேயில்லாத சூன்யமயமாயிருந்ததைப்போல்தான் இருந்தது.

யாருக்காவது உதவி செய்துவிட்டு, அந்த உதவியைத் திரும்பவாங்க விருப்பமில்லாமலிருக்கும்போது, அது நம்மை வலுக்கட்டாயமாகத் தேடி வரும்போது உண்டாகும் எல்லையற்ற சோகம் என்னைச் சூழ்ந்தது.

இந்தப் பத்து ரூபாய் இப்போது என்னிடம் திரும்பிவந்து எனக்கு என்ன ஆகப் போகிறது? அவர்களிடமிருந்தாலாவது அவர்களுக்கு இன்று இல்லாவிட்டாலும் நாளைக்குப் பயன்படுமே. அந்தப் பாட்டி, அன்று முதல் முறை நான் அவளைச் சந்தித்த போது, சொன்னுளே. . . . .

எனக்கு அந்தச் சம்பவம் கண் முன்பு வந்தது. . .

நான் அந்த ஊர் போஸ்டாபீஸ் கிளார்க்காக மாற்றலாகிப் போனேன். சின்ன ஊரானுலும், கோயிலும், ஆற்றங்கரையுமாக அழகான ஊராக இருந்தது. போஸ்டாபீஸ் இருந்த வீட்டுக்குப் பின்னுலேயே ஜாகை.

நான் அங்கே டியூடி ஒப்புக்கொண்ட இரண்டு, மூன்று நாட்களுக்கெல்லாம் போஸ்ட்மாஸ்டர் லீவில் போனுதலால், அவருடைய ஸ்தானத்தில் இருந்து வேலை செய்யும் பொறுப்பு என்னைச் சுமந்தது. அப்போது—

"அப்பா, குழந்தை! ஒரு கார்டு தறையா?" என்ற குரல் ஜன்னலுக்கு வெளியே இருந்து கேட்டது.

ஒரு பாட்டி—

அறுபது வயசிருக்கும்; அந்த வயசையும் மீறி, முதிர்ச்சியில் தொந்த தளர்ந்த வடிவம்; முகத்தில் வாழ்க்கையின் கஷ்டசுகங்களில் பட்டுத் தெளிந்த கோடுகள் கோலமிட்டிருந்தன. பாட்டியின் குரலில் கருணை பொங்கித் ததும்பியது.

முக்காலணுக் காசை வாங்கிக்கொண்டு பாட்டியிடம் கார்டை நீட்டினேன்.

"குழந்தை! நாலு வரி சொல்லுகிறேன். எழுதிப் போட்டுவிடேன். . ." என்ருள் பாட்டி.

அப்போது போஸ்டாபீஸ் கெடுபிடி கொஞ்சமும் இல்லாமல் ஈ ஓட்டிக் கொண்டிருந்தேனுதலால், "அப்படியே

ஆகட்டும், பாட்டி. சொல்லுங்கள். . ." என்றேன்.

"அப்பா குழந்தை! எனக்குப் படிச்ச பேத்தி ஒருத்தி இருக்காள் அகத்தில். இருந்தாலும் இப்போது அவளை எழுதச் சொல்லச் சந்தர்ப்பம் இல்லை. . என் மூத்த பேரனுக்கு—அவளுடைய அண்ணுவுக்கு—எழுதவே இப்போது அவளுக்குப் பிடிக்கவில்லை. . . பாரு! அவன் இரண்டு மாசமாக எங்களுக்குப் பணம் அனுப்பவில்லை. அனுப்ப சௌகர்யப்படவில்லையோ என்னவோ? அவனுக்கும், பாவம், ஆயிரம் கஷ்டமிருக்கும். 'பொறுப்புத் தெரியாத அண்ணுவுக்குக் கடுதாசி எழுதுகிறது எதற்காக? பிடித்துச் சாப்பிடுகிறதைக் கரைச்சுச் சாப்பிடுகிறது' என்றெல்லாம் சொல்கிறாள். அதற்காகத்தான் நீயே எழுது என்கிறேன்" என்றாள் பாட்டி.

பாட்டி, "குழந்தை, குழந்தை" என்று கூப்பிட்டாள்; போனேன்.

"உட்காரேன்" என்றாள். உட்கார்ந்தேன்.

"கல்யாணி! கல்யாணீ. . . ." என்று உள்புறம் திரும்பிக் கத்தினாள்.

அடுத்து வாசலில் வந்து நின்றாள் கல்யாணி. அவள்தான். . . ; அழகுப் பிம்பம் என்றால், அழகுப் பிம்பம்தான்! என்னைக் கண்டதும் தலை குனிந்து கொண்டாள்.

"கூஜாவில் தீர்த்தம் கொண்டு வந்து கொடு" என்றாள். அவள் மின்னலென உள்ளே போனாள். அந்த நடையில்தான் என்ன ஒய்யாரம்! அவள் திரும்பிய போது, சாட்டையைப்போன்ற அந்தப் பின்னல், எப்படி வெளிவாங்கி அவள் மேல் நாட்டியம் செய்தது!

ஆபீஸில் எவரும் இல்லாத வேளையில், பாட்டியின் குரல்—

"குழந்தை. . ."

"வாருங்கள், பாட்டி. . ."

"ஒண்ணுமில்லை, குழந்தை. அவசரமாக ஒரு பத்து ரூபாய் வேண்டும். என்னை நம்பிக் கொடு. பேரப் பிள்ளையிடமிருந்து மணியார்டர் வந்ததும் தந்துவிடுகிறேன். மணியார்டர்கூட நீதானே என் வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும்? அதனால் பயப்படாமல். . ."

"என்ன பாட்டி, இத்தனை வார்த்தை சொல்கிறீர்கள்? இந்தாருங்கள். . உங்களுக்கு எப்போது சௌகர்யமோ அப்போது திருப்பித் தரலாம்" என்று சொல்லிப் பாட்டியிடம் பணத்தைக் கொடுத்தேன்.

"என்னைப்போன்ற ஏழைகளுக்கு அவசரத்தில் உதவி செய்தால், உன்னைப்

கடிதத்தைப் பாட்டிக்கு எழுதிக் கொடுத்து அவளுக்கு எதிரேயே அதற்கு முத்திரையும் போட்டு, 'லார்ட்டிங் அலமாரியில்' அதைத் தள்ளினேன்.

"திருப்தியாச்சு. நான் வரேண்டா குழந்தை. நீ மகாராஜனாக இருப்பாய். ." என்றாள் பாட்டி புறப்பட்டுக்கொண்டே.

'நெ. 4, சன்னதித் தெரு'—இது பாட்டி தன் விலாசமாகக் கொடுத்தது கார்டில்.

மறு நாள் கோயிலுக்குப் போக, சாயந்திர வேளையில் சன்னதித் தெருவில் நுழைந்தேன்.

நான்காம் நெம்பர் கிருஹத்தில் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த

"அதெல்லாம் வேண்டாம், பாட்டி. . ."

"பரவாயில்லை, அப்பா. . . என்னால் அதற்கு மேல் ஏதும் கொடுக்கச் சக்தியில்லை. ஒரு சந்தோஷ சமாசாரம் அப்பா. இன்றைக்கு என் பேரப் பிள்ளையாண்டானிடமிருந்து பணம் வந்தது. எல்லாம் உன் கைப்பட நீ கடிதம் எழுதிய வேளை. . ."

"சந்தோஷம், பாட்டி."

கல்யாணி கூஜாவையும், டம்ளரையும் திண்ணையோரம் வைத்தாள். நான் ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டுப் புறப்பட்டேன்.

இதற்குப் பிறகு ஒரு நாள் போஸ்ட்

போல இன்னும் வாழ்க்கையை நிறைய அனுபவிக்க இருக்கிறவர்களுக்கு ஆண்டவன் நிறைய வாரி வழங்குவார் குழந்தை" என்று பாட்டி ஆயிரம் வாழ்த்து வாழ்த்திவிட்டு, அங்கிருந்து போனாள்.

ஸேவிங்ஸ் பாங்கியில் என் கணக்கில் இருந்த பணத்தை, தினமும் போஸ்டாபீஸில் இருந்துகொண்டே பூதம் காப்பதுபோல் காத்துக்கொண்டிருக்கிறேனே! இன்னும் பத்து ரூபாய் கேட்டிருந்தால்கூடக் கொடுத்திருப்பேனே!

இந்தச் சமயத்தில், அந்தப் பணம் எதிர்பாராத விதமாக—ஆமாம், எதிர்

பாராத விதமாகத்தான்—என் ஹிருதயத்தில் குடிகொண்டுவிட்ட கல்யாணியின் கையாலேயா திருப்பித் தரப்பட வேண்டும்?

தெருவில் இத்தனைச் சிந்தனைகளையும் மனத்தகத்தில் சுழலவிட்டுக்கொண்டு, 'பாக்கெட்'டின் மேலோடியில் படபடத்துக்கொண்டிருந்த பத்து ரூபாய் நோட்டோடு நடந்துகொண்டிருந்த என்னை 'பளிச்'சென்று என் மனச்சாட்சி ஒரு கேள்வி கேட்டது:

'கடனாக நீ கொடுத்த பணம்தானே? கடனைத் திருப்பி அடைத்தால், அதில் மனக்கிலேசமடைய வேண்டிய காரணம்? இதிலிருந்து உன் மனம் சுத்தமாயில்லை என்று தெரிகிறதே. . .'

கடனாகக் கொடுத்த பணம்! அன்பு கொண்டவரிடம் பணம் கொடுத்து வைத்தால், அதுவா கடனாகக் கொடுத்த பணம்? நடையைச் சற்றுத் தாரிதமாக்கிய நான், என் மனக்கண் முன் என் அக்காளின் அந்தக் கடிதத்தின் குறிப்பிட்ட அந்தப் பகுதியைக் கண்டேன்:—

". . . நீ வித்தியாசமாக நினைக்காதே. நீ வேலையில் இல்லாமலிருந்தபோது, அதாவது இங்கே என்னிடம் ஒரு வருஷம் தங்கிக்கொண்டிருந்தபோது, சாப்பிட்டதற்காக இப்படி மறைமுகமாகக் கேட்கிறாள் என்று லவலேசமும் நினைக்காதே. உன் அருமை அக்காளுக்கு இப்போது கொஞ்சம் கஷ்ட தசை வந்திருக்கிறது. உன் அத்திம்பேர் உனக்கு எழுதத் தயங்குகிறார். வெட்கப்படுகிறார் என்று வைத்துக்கொள்ளேன். இந்த அவசரத்துக்கு ஒரு நூறு ரூபாய் அனுப்பி வைத்தாயானால், உன் அக்காளின் நொந்திருக்கும் மனசுக்கு ஆறுதலாயிருக்கும். . . வித்தியாசமாக நினைக்க மாட்டாயே. . ."

அந்தக் கடிதம் கிடைத்ததும் நான் எவ்வளவு துடிதுடித்தேன்! தாயாரில்லாத எனக்குத் தாயாரையும் விஞ்சி அல்லவா அன்பு செலுத்தினாள் அக்கா!

உடனே நூறு ரூபாய் அனுப்பினேன். அவள் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் லவலேசமும் எனக்கு இருக்குமோ? அவள் திருப்பிக்கொடுக்க வந்தால், என் மனம் படுகிற அவதிக்குத்தான் கணக்கு வழக்கிருக்குமா?

இதெல்லாம் ஏன்? அன்பு செய்பவருக்கு, அந்த அன்பே திருப்பித் தேவைப்படாதபோது, கேவலம் செய்த உதவியா திருப்பித் தேவைப்படும்?

அக்காளைப் பற்றி நினைத்தபோது, நான் எத்தனை உணர்ச்சி வசப்பட்டேனோ, அத்தனை உணர்ச்சி வசப்பட்டேன் கல்யாணியைப்பற்றி நினைத்தபோதும். . . இப்படியிருக்கும்போது. . .

நடந்துகொண்டே இருந்தவனுக்கு எதிரில் பாட்டி வந்துகொண்டிருந்தாள்.

". . . பாட்டி. . ."

"குழந்தை! நீயா? கடைத்தெருவுக்குப் போய்விட்டு வருகிறேன். . ."

"அதிருக்கட்டும், பாட்டி. எனக்கு இப்போது ரூபாய்க்கு என்ன அவசரம்? உங்கள் பெண் ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டாளே. . ."

"என்ன? திருப்பியா கொடுத்தாள்? நான் கொடுக்கச் சொல்லவில்லையே. . ." என்று ஆரம்பித்த பாட்டி, 'சட்'டென்று சமாளித்தவளாக ". . . ஓஹோ! ஆமாமடா, குழந்தை! மறந்துவிட்டது. இன்றைக்கு என் பேரப் பிள்ளையாண்டானிடமிருந்து பணம் வந்தது. நான் இல்லாதபோது நீ வந்தாலும் கொடுக்கச்சொல்லியிருந்தது எனக்கு ஞாபகமில்லை. வயசாயிடுத்தோல்லியோ? எதுவும் சீக்கிரம், சீக்கிரம் மறந்துவிடுகிறது. . . வித்தியாசமாக நினைக்காதேயடா, குழந்தை. வேண்டுமென்கிறபோது உரிமையோடு கேட்டு வாங்கிக்கொள்ளுகிறேன். . . . . . நான் வரட்டுமா?"

பாட்டி போய்விட்டாள்.

நான் மேலே நடந்தேன். என் நடையில் வேகமில்லை. என் மனம் வெந்து தணிந்த சாம்பல்போல் நிரந்தரச் சூட்டில் 'கம்'மென்றிருந்தது. பாட்டிக்குக் கூடத் தெரியாமல் அல்லவா பணத்தை எனக்குத் திருப்பித் தந்துவிட்டாள்!

'யாரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று தெரியாமல், அன்புசெலுத்திவிட்டாயே' என்று மனச்சாட்சி குத்தியதைப் போலிருந்தது. 'அன்புடையார் எல்லாம் உடையார்' என்ற வார்த்தைகளில் சுழன்று, நெருப்பில் வழியும் எஃகைப்போல என் மனம் பரம உஷ்ணத்தில் கலங்கியது.

அன்று இரவெல்லாம் தூக்கமில்லை. 'நேற்று' பார்த்த கல்யாணி, என் மனத்தில் இருந்து தாண்டவமாடிய தருணத்தில் புரிந்த அபஸ்வர நாட்டியம் என்னைத் தூங்க விடுமா?

மறு நாள் போஸ்டாபீஸில் ஒரு சின்னப் பையன் எனக்கு ஒரு கடிதத்தைத் தந்துவிட்டு, வந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டான். கல்யாணிதான் எழுதியிருந்தாள், முத்தன்ன எழுத்துக்களில்.

"உங்களுக்குக் கடிதம் எழுதுவது தகாத முறையாக இருக்கலாம். ஆனால், என் மனத்தில் இருப்பதைக் கொட்டி எழுதிவிட வேண்டியது என் கடமையாதலால் எழுதுகிறேன்.

போன விடுமுறையன்று நீங்கள் ஆற்றங்கரை மேட்டில் உங்கள் நண்பர்களுடன் உட்கார்ந்திருந்தீர்கள். பக்கத்தில், சற்றுத் தாழ படித்துறைக்குப் போகும் படிகள் நீங்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து தெரியாது...நான் அப்போது அங்கே வந்தேன் என்பது உங்களுக்குச் சொல்லாமலேயே விளங்கும்.

ஒரு நண்பர் உங்கள் பெயர் சொல்லி, 'என்ன அப்பா! பண ஒத்தாசைகூட ஆரம்பித்தாயிற்றுபோலிருக்கே!' என்றார். அதைத் தொடர்ந்து இன்னொருவர், 'கல்யாணம் செய்துகொண்டாலும், காலமெல்லாம் நீதான் எந்தச் சிறு விஷயத்துக்கும் பண ஒத்தாசை செய்ய வேண்டும், அப்பனே!' என்றார் வேறொருவர், என்னவோ என் அட்வைஸைக் கேட்டால் கேளு. விட்டால் விடு. அழகு வாழ வேண்டிய இடத்தில் வாழாமல் இருப்பது ஏதோ ஈசுவர நியதி. இதற்காக நீ மனசை விட்டுக்கொடுத்து விடக்கூடாது. உனக்கென்ன? ராஜாவாட்டம் இருக்கிறாய்; ராஜாவாட்டம் வேலை இருக்கிறது...ஆயிரம் பெண்கள், உடம்பெல்லாம் பொன்னகைவும், கையெல்லாம் காசாகவும் வருவார்கள்...நான் பார்த்து. எல்லாக் காரியத்தையும் முடித்து வைக்கிறேன்...' என்றார்.

இதெல்லாம்கூட என் மனசுக்கு வருத்தம் தரவில்லை. நாலாமவர், இப்படித் தனிக் காட்டு ராஜாவாகக் கண்டகண்ட இடத்தில் பழக்கம் வைத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறாயோ? வா, வா! நாளைக்கே உன் அத்திம்பேருக்கு லெட்டர் எழுதுகிறேன்' என்றார்.

இந்த வார்த்தையெல்லாம் எதற்காக? உங்களிடம் என் பாட்டி, எங்கள் கஷ்



முஸ்லீம்கள் நாட்டாண்மையும், இந்தியப் பிரமுகரும், வர்த்தக அரசரும், சிறந்த கொடையாளியுமான ஜனாப் ஜ. மு. அப்துல் அஜீஸ் அவர்கள் தாய்நாட்டிலிருந்து செய்கோன் வந்திறங்கியபோது, நண்பர்கள் பலரால் விமானத்திடலில் வரவேற்கப்பட்டார்.

டத்தை வாயைவிட்டுச்சொல்ல, ஒரு பத்து ரூபாய் பெற்றாள் என்பதற்காகத்தானே இப்படி ஊரெல்லாம் சொல்லிவிட்டீர்கள்?

என் குணத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்களோ, மாட்டீர்களோ? என் அண்ணனைக்கூடக் கட்டாயப்படுத்திப் பணம் அனுப்பச் சொல்ல மாட்டேன், நான். அதற்கு நீராகாரமே மேல் என்று நினைப்பவள் நான்.

போதும், உங்களிடமிருந்து வாங்கிய பத்து ரூபாய்க்காக நாங்கள்பட்ட அவதி. 'பத்து ரூபாய் கொடுத்தேன்' என்று எந்த வாயைக்கொண்டு ஊரெல்லாம் தம்பட்டமடித்தீர்களோ, அதே வாயைக்கொண்டு, 'பத்து ரூபாய் திரும்பி வந்துவிட்டது' என்றும் சொல்வீர்கள் என்று நம்புகிறேன்.

வார்த்தையைக் காப்பாற்றிக்கொள்ளத் தெரியாத உங்களிடம், எனக்கு நம்பிக்கை இல்லை. அதனால்தான் இந்தக் கடிதத்தில் என் கையெழுத்தைக்கூட நான் போடவில்லை..."

கடிதத்தைப் படித்து முடித்த பிறகு, என் மன வேதனைக்கு வார்த்தைகள் இல்லை. இதில் ஆச்சரியம் என்னவென்றால், கல்யாணி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி ஆற்றங்கரை மேட்டில் என் நண்பர்கள் அப்படிப் பேசியது உண்மையென்றாலும், நான் அவர்களுக்குப் பணம் கொடுத்த விஷயத்தை அதுபரியந்தம் யாருக்கும் வெளியிட்டவனல்ல...வெந்த புண்ணில் வேல் பாயச் செய்துவிட்டது கல்யாணியின் கடிதம்.

இன்னது செய்கிறேன் என்ற உணர்வு முழுவதுமில்லாமல், என் அக்காளுக்கு 'மளமள'வென்று ஒரு கடிதம் எழுதினேன்; அதில் கல்யாணியின் கடிதத்தையும் அடக்கப்படுத்திவிட்டு, என் கையாலேயே முத்திரையிட்டு, 'ஸார்ட்டிங்' அலமாரியில் போட்டேன்.

ஆபீஸுக்கும் அரை நாள் லீவு போட்டுவிட்டு, பின்னல் ஜாகைக்குச் சென்று, கட்டிலில் விழுந்தேன். 'இந்த உலகத்தில் அன்பு செய்வது மிகப் பெரிய பாவம்' என்று மனம் பிரலாபித்துக் கொண்டிருந்தது.

அக்காளும் அத்திம்பேரும் திடீரென்று வந்து இறங்கினார்கள். அவர்களை வரச் சொல்லி நான் எழுதவில்லை; அவர்கள் அப்படி வந்து இறங்கியதும் எனக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது.

வந்து இறங்கியதும் இறங்காததுமாக என் அக்காள், "எங்கேடா அந்தப் பெண்? எந்தத் தெருவில் இருக்கிறாள்? எந்த வீட்டில் இருக்கிறாள்? 'சட்டுப்புட்'டென்று அட்ரஸ் சொல்லு, கண்ணுக்கு லக்ஷணமாக இருந்தாளானால், முதலில் அவளை உன் கழுத்தில் கட்டிவிட்டுத்தான் மறு வேலை" என்றாள்.

அக்காளை என் ஜாகைக்குள் அழைத்துக்கொண்டு போகப்பட்ட பாடு, எனக்குப் பெரியதாகப் போயிற்று.

"டேய், நீ நல்ல பிள்ளையடா!"

"ஏன் அக்கா?"

"பணம் கேட்டெழுதினால், உடனே அனுப்புகிறாய். கொடுத்த பணத்தை வாங்கமாட்டேன் என்கிறாய். உன்னைப் போல் உலகத்தில் நாலு பேர் இருந்துவிட்டால், உங்களை மொட்டையடிக்க நாலாயிரம் பேர் முந்தி வருவார்கள்..."

"அக்கா..."

"பயப்படாதே, தம்பி. கண்ணுக்கு லட்சணமாய் மூக்கும்முழியுமாக அழகாக இருந்தாளானால், அவளையே உனக்குப் பண்ணி வைக்கிறேன்..."

அன்று மாலை அவர்களுக்கும் அக்காவுக்கும் என்ன பேச்சு நடந்ததோ எனக்குத் தெரியாது; ஜாகைக்கு வந்ததும் என் அக்காள், "ஆற்றங்கரை வம்புக்கு இந்த உலகத்தில் பிராயச்சித்தம் கிடையாதுடா, தம்பி...ஆனால் பயப்படாதே! காரியம் சாதித்தாகிவிட்டது..." என்று ஒரு போடு போட்டாள்.

"அக்கா...."

"ஆமாமடா. மகாலட்சுமிபோல இருக்கிறாள்; நம் அகத்துக்கு வந்தாளானால், மனசும் வீடும் நிறைஞ்சிருப்பதில் சந்தேகமில்லை...அவளுக்கிருந்த ஒரு சந்தேகத்தைப் போக்கிவிட்டேண்டா..."

"என்ன சந்தேகம் அக்கா?"

"போடா முட்டாள்! ஹிஹி என்று அவள் அழகைப் பார்த்து உனக்கு இளிக்கத் தெரிகிறதேயொழிய, வழியாகச் சிந்தனை பண்ணத் தெரியவில்லை உனக்கு...அவர்களுக்கு பத்து ரூபாய் கொடுத்ததாக நீ ஊர் முழுவதும் தம்பட்டம் அடித்துவிட்டதாக அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். . ."

"ஆமாம், அக்கா. ஆனால், தெய்வமறிய நான் ஏதும் ஒரு வார்த்தை வெளியில் சொல்லவில்லையே..."

"அந்தப் பாட்டி இருக்கிறாளே, அவளுக்கு உன்மேலே அபார அன்புடா! 'குழந்தை—நேற்றைக்குத்தான் ஊருக்கு வந்திருக்கும் குழந்தை—என்னை நம்பி பத்து ரூபாய் கொடுத்திருக்கிறான். தங்கமான பிள்ளை; இந்த மாதிரிப் பிள்ளைகளிடத்தில்தான் தங்கமே நிரந்தரமாகத் தங்கும்' என்று அந்தப் பாட்டிதான் தம்பட்டமடித்திருக்கிறாள்!...பாரு! 'ஸேவிங்ஸ் பாங்'கில் எத்தனை பணம் வைத்திருக்கிறாய்? அத்தனையையும் வெளியில் எடுத்து விடு. கல்யாணத்தை நாம்தான் நடத்திவைக்க வேண்டும்..."

நான் ஒன்றும் சொல்லவில்லை. வார்த்தைகள் வெளிவந்தால்தானே!

"ஆனால், டேய் தம்பி, ஒரே ஒரு புத்திமதி சொல்கிறேன்...ஒருவருக்கு ஒத்தாசை செய்து, அவர் அதை நமக்குத் திருப்பிச் செய்தால், ஏதோ குடி முழுகிப் போய்விட்டதாக நினைத்துக் கொள்ளாதே. அந்தப் பெண் பத்து ரூபாய் நோட்டைத் திருப்பித் தந்தால் என்ன? நீ என்ன கோடீஸ்வரனா, மூலைக்கு மூலை பணத்தைக் குவித்து வைத்துச் சும்மா அலட்சியமாயிருக்க? இந்தக் காலத்தில் கோடீஸ்வரன்கூட அப்படி இல்லையே..."

அக்காளுக்கு என் மன நிலையை விண்டு சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல், நான் திண்டாடிக்கொண்டிருந்த போது, கல்யாணியின் அன்புருவமே என் கண் முன்பு நின்றது.

கல்யாணி என் எதிரே நின்றாள், புது மணக் கோலத்துடன்! அறையில் வேறெவரும் இல்லை.

நான் அவளுடைய தளிரன்ன மென் கரங்களைப்பற்றி, அவள் அளித்த அதே பத்து ரூபாய் நோட்டை அவற்றில் வைத்து மூடினேன்.

கல்யாணியின் கண்களில் கண்ணீர் மல்கியது.

"கல்யாணி! இதென்ன?..."

"ஒன்றுமில்லை..."

"என்னிடம் நீ எதையோ மறைக்கிறாய்..."

"'இந்தப் பத்து ரூபாயைக்கொண்டு, உங்கள் பொன்னான உள்ளத்தை எப்படிப் புண்படுத்தி விட்டேன்' என்று நினைத்தால், வருத்தமாயிருக்கிறது..."

"இந்தப் பத்து ரூபாய்தான் அன்பின் உருவம், கல்யாணி..." என்று நான் சொன்னதைக் கேட்டுக்கொண்டே, கல்யாணி என் தோள்களில் சாய்ந்தாள்.

அப்போது எங்கள் இதயங்களுக்குள் இருந்த அன்புக்கு ஒரே உருவம்தான் இருந்தது; இன்னதென்று புரிபடாத நிரந்தரமான உருவமாகவுமிருந்தது அது.

நீரிழிவுக்கு நிவாரணம்

சிறுநீரில் சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும். இப்பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான்.

அதிகதாகம், பசி, அடிக்கடி சிறுநீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதிகளின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை, கட்டிகள், சாளேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும்.

பல வருட ஆராய்ச்சிக்குப்பின் வீனஸ் சார்ம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதை உபயோகிப்பதால் பலர் மரணத்தினின்றும் தப்பியுள்ளனர். சில தினங்களுக்குள் குணம் அடைந்து வருவதை உணர்வீர்கள். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 6-12-0, பாக்கிங் தபால் செலவு இனாம்.

வீனஸ் ரீஸர்ச் லாபரட்டரி
(S. M. W.)
Post Box No. 587, CALCUTTA.

பம்பாய் நிகழ்ச்சிகள்

பம்பாய்த் தமிழர்களின் தாய்மொழிப் பற்றின் விளைவாகத் தோன்றிய பம்பாய்த் தமிழ்ச் சங்கம், கடந்த பதினுறு ஆண்டுகளாக கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் தொண்டாற்றி வருகிறது. அங்கத்தினர்கள் பேச்சுவன்மையையும், அறிவையும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஞாயிறுதோறும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. வருடப் பிறப்பு, பொங்கல் திருநாள், காந்தி ஜயந்தி, சுதந்திர தினம் ஆகியவைகளும், தமிழ் இலக்கியச் செல்வங்களை நமக்கு அள்ளி அள்ளிக் கொடுத்த கம்பர், திருவள்ளுவர், பாரதி முதலியோரது விழாக்களும், டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர், வ. உ. சிதம்பரம் பிள்ளைபோன்ற பெருமக்களின் நினைவு நாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் பெரிய அளவில் கொண்டாடப்படும் தமிழ் விழாவிற்குத் தமிழ் நாட்டிலிருந்து இலக்கியப் பிரமுகர்களை வரவழைத்து, கருத்துச் செறிவுள்ள பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். திருக்குறள், பெரிய புராணம், சிலப்பதிகார வகுப்புகளும் நடத்துவதோடு, ரஸிகர்களின் பல்வேறு சுவைகளுக்கேற்ப ஏராளமான நூல்கள் அடங்கிய புத்தகசாலையொன்றையும் வைத்துப் பராமரிப்பது சங்கத்தின் பிரதான பேரம்சமாகத் திகழ்ந்து வருகிறது. முத்தமிழ்க் கலைகளில் ஒன்றான நாடகக்கலையை வளர்ப்பதிலும் சங்கம் பெரிதும் ஈடுபட்டிருக்கிறது.

இவ்வாறு, கலை, இலக்கியம் இவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் பம்பாய்த் தமிழ்ச்சங்கத்தினர், சொந்தக் கட்டிடம் இல்லாத குறையை நீக்கக் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கலை நிகழ்ச்சிகளும், நாடக விழாக்களும், நடத்தி வந்தனர். அதன் மூலம் வளர்ந்த நிதியைக் கொண்டும், தமிழன்பர்களது பொருளுதவியைக் கொண்டும் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் மிகப் பெரிய மணி மண்டபம் ஒன்றை நிறுவியுள்ளனர். சமீபத்தில் அதற்குத் திறப்பு விழா நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கட்டிடத் திருப்பணிக்கு மேலும் நிதி தேவைப்படுவதால், இம்மாதம் 15-ந் தேதியன்று மாலை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசைக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்துள்ளனர். மாதுங்கா கிங்ஸ் சர்க்கிள் அருகே நிர்மாணிக்கப்படும் விசேஷப் பந்தலில் நடைபெறும் இவ்வுதவி நிகழ்ச்சிக்கு, பம்பாய்வாசிகள் திரளாகச் சென்று, கட்டிட நிதியைப் பெருக்குவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

★

அட்டைப் படம்

★

ஐயய்ய, இந்தக் 'குழந்தை'யைப் பாருங்களேன்; 'தட்டாமாலை தாமரைப் பூ; சுத்தி சுத்தி சுண்ணாம்பு' என்று அந்தப் பையனையும் சுற்றிக்கொண்டு, தானும் சுற்றிச் சுற்றி வருகிறாள்! "குதிருக்கு ஆளைப்போல வயசு பதினெட்டு ஆறது! சுத்தறாளாம் சுத்தறா, கொஞ்சங்கூட வெக்கமில்லாம!" என்று அத்தைப்பாட்டி இந்தக் 'குழந்தை'யைக் கோபித்துக்கொள்ளப் போகிறாள்; யாரும் அவள் காதில் போட்டுவைக்கப் போகிறார்கள்? அவள் அருமைத்தம்பி ஆச்சு; அவளாச்சு! இப்ப சுத்தினால்தானே உண்டு அவனை? அப்புறம் அவள் 'கையைப் பிடிப்பவன்' அல்லவா அவளைச் 'சுற்றிச் சுற்றி' வளைய வந்து கொண்டிருப்பான்!

வீட்டு வாழ்க்கையில் சாதாரணமாக நிகழும் ஒரு காட்சியையே, வெகு அழகான முறையில் அட்டை ஓவியமாக உயிர் கொடுத்திருக்கிறார் சைத்திரிகர் 'ஸாகர்.'

அம்பர்நாத் தென்னிந்திய சங்கம்

சென்ற மாதம் 26-ந் தேதியன்று அம்பர்நாத் தென்னிந்திய சங்கத்தின் பள்ளிக்கூடக் கட்டிட நிதிக்காக ஸ்ரீமதி கமலா லக்ஷ்மண் பம்பாய் ராஜ்ய நிதி மந்திரி ஸ்ரீ ஜீவராஜ் மேத்தாவின் தலைமையில் ஒரு நாட்டியக் கச்சேரி நிகழ்த்தினார்.

'நாதர் முடி மேல்' என்ற புன்னாகவராளி பதத்திற்கு ஸ்ரீமதி கமலா அபிநயம் பிடித்தது பிரமாதம். அடுத்தபடியாக நடந்த 'ஸாதிஞ்சனே' என்ற 'ஆரபி' ராக வர்ண அயிட்டமும், கடைசியாக நடந்த 'குறவஞ்சி' நாடகமும் எல்லோராலும் நன்கு ரசிக்கப்பட்டன. குமாரி ராதாவும் ஸ்ரீமதி கமலாவுடன் கச்சேரியில் பங்கெடுத்து ஆடினாள். 'நல்ல பெண்மணி' என்ற துக்கடாவுக்கும், மீரா பஜனை கீதத்துக்கும் அவள் பிடித்த அபிநயம் உயர்ந்ததாக இருந்தது என்று ரசிகர்கள் பாராட்டினார்கள்.

சங்க நிர்வாகிகள் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்குக் கைமாறாக இந்த முயற்சி வெற்றியாகவே அமைந்தது என்பது குறிப்பிடத்தக்க விஷயம். பள்ளிக் கட்டிடம் நிர்மாணிக்க இப்போது வசூலாகியுள்ள தொகை போதாதாகையால், மேலும் இம்மாதிரி உதவிக் கச்சேரிகள் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. இதுவரை உதவி வந்த அன்பர்களும் ஆதரவாளர்களும் இனியும் உதவியைத் தொடர்ந்து அளித்து வருவார்கள் என்று சங்க நிர்வாகிகள் எதிர்பார்க்கிறார்கள்.

★

கொட்டடா!

இந்திய விமானப் படையில் பாதிப் பேர் சாராய வாசனையையே அறியாதவர்கள் என்று விமானப் படை தளபதி ஸ்ரீ அர்ஜுன் சிங் கூறினார்.

—ஹைதராபாத் செய்தி.

நல்லவர்கள் 'வாசனை' அதிகமாக இருப்பது காரணமாக இருக்குமோ?

ஃ ஃ ஃ

காரி தங்க விழாவை முன்னிட்டு பல புருஷர்கள் தாடி வளர்ப்பதால், அதையே பயன்படுத்திக்கொண்டு பல கொள்ளைக்காரர்கள் தாடியுடன் பிரவேசித்துக் கொள்ளையடிக்கின்றனர்!

—காரி செய்தி.

சரிதான், 'தாடி பற்றிக்கொண்டிருக்கையில் பீடிக்கு நெருப்பு கிடைத்தவரை சரி!' என்று நடக்கத் தொடங்கி விட்டனர் போலும், பிரஸ்தாப கொள்ளையர்!

ஃ ஃ ஃ

'காசி' என்ற பெயரை மாற்றி 'வாராணசி' என்று காசிக்குப் பெயர் வைக்க வேண்டுமென புத்த ஜயந்திக் கொண்டாட்டக் குழுவினர் மத்திய சர்க்காரைக் கோரியுள்ளனர்.

—புதுடில்லி செய்தி.

காசி என்ற பெயருக்கே 'முழுக்கு' போட்டு விடுங்கள் என்கிறார்கள் போலும்!

ஃ ஃ ஃ

ஸோவியத் கலாசார மந்திரியாலயம் அமெரிக்கப் பின்னணி சங்கீதக் குழுவினரை ரஷ்யாவுக்கு அழைத்திருப்பதை ஏற்று, அனுப்புவதா வேண்டாமா என்று உள்நாட்டு இலாகா அதிகாரிகளால் தீர்மானிக்க முடியவில்லை!

—வாஷிங்டன் செய்தி.

ரஷ்யாவுக்குப் போய் எங்கே அவர்கள் சொன்னதுக்கெல்லாம் 'தாளம்' போடத் துவங்குவார்களோ என்ற பயம் காரணமாக இருக்குமோ?!

—தாளம்.

சௌ. சரோஜா—சிர. வி. ராமாமிருதம்

மணமகள்: சென்னை சித்ரா டாக்கீஸ் உரிமையாளர் ஸ்ரீ கே விஸ்வநாதனின் புத்திரி. மணமகன்: பிலிப்ஸ் கம்பெனி கல்கத்தா கிளையில் என்ஜினியர். சென்ற மாதம் 15உ திருப்பதியில் விவாஹம் விமரிசையாக நடைபெற்றது.

குடைக்காதல்

ராம்குமார்

கல்லூரியில் வகுப்பு முடிந்துவிட்டதற்கு அறிகுறியாகக் கணகணவென்று மணி ஒலித்தபொழுதுதான் கண்ணன் சுய உணர்வு பெற்றான்.

வகுப்பில் ஒரு சலசலப்பு. புத்தகங்களைப் படபடவென்று மூடும் சப்தம். பேராசிரியர் பட்டென்று பிரசங்கத்தை நிறுத்தி, 'அடுத்த வகுப்பில் மற்ற விஷயங்களைக் கவனிப்போம்' என்று, எழுந்து சென்றுவிட்டார்.

"ஏன், நாராயணா? இன்று கடைசி 'பீரியட்' கிடையாதல்லவா?" என்று கேட்டான் கண்ணன்.

"கிடையாது. தமிழ் ஆசிரியர் வரவில்லையாம். வீட்டுக்குப் போவோம், வருகிறாயா?" என்று கேட்டான் நாராயணன்.

"வீட்டுக்கா? இப்பொழுது போய் என்ன செய்கிறது அப்பா! நான் இப்படி இங்கேதான் சுற்றிக்கொண்டிருக்கப் போகிறேன். இங்கேயே இருந்தால், கண்ணுக்குக் குளிர்ச்சியாக நாலு 'கலர்'களைப் பார்க்கலாம். அதோடு எனக்குக் கொஞ்சம் லைப்ரரிக்கு வேறு போய்வர வேண்டியிருக்கிறது. அதனால் நான இப்பொழுது வரவில்லை!"

"ரொம்ப சரி. இருந்து நன்றாகப் பார்த்துவிட்டு வா. நான் போய் வருகிறேன்!" என்று புன்முறுவலோடு விடைபெற்றுக்கொண்டான் நாராயணன். கண்ணன் களகுஷியாகச் சீழ்க்கை அடித்துக்கொண்டு லைப்ரரிக்குள் நுழைந்தான்.

லைப்ரரியிலிருந்து புஸ்தகங்களை வாங்கிக்கொண்டதும், ஒவ்வொன்றாக வகுப்புகளைப் பார்வையிட்டுக்கொண்டே போனான். ஆண்களும், பெண்களும் ஆனந்தமாக உட்கார்ந்து பேராசிரியரின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கண்ணன் கால் போன வழியே சென்றான். கடைசியில் ஒரு காலி அறைக்குள் நுழைந்தான். நுழைந்ததும் நுழையாததுமாக, அவன் கண்களில் ஒரு குடை பட்டது. "அடே! 'லேடீஸ் அம்ப்ரெல்லா' போலிருக்கிறதே!" என்று வாய்விட்டுக் கூறிய வண்ணம் தாவி ஓடிப்போய் எடுத்தான்.

'ஆகா! எத்தனை அழகான குடை! ஏன் இராது என்கிறேன்! இதுவோ பெண்கள் குடை! ஒரு மெல்லியலாளுடையதாகவோ, மான் விழியாளுடையதாகவோதானே இருக்கவேண்டும்!

அவள் இதைப் பிரித்துப் பிடித்துக்கொண்டுபோனால், எவ்வளவு நன்றாயிருக்கும்! இந்தக் குடையின் காம்பைப் போலவே அம்மெல்லியலாளின் உடல் அமைப்பு ஒல்லியாக, கனகச்சிதமாக இருக்கவேண்டும். இந்தக் குடைக்குப் போட்டிருக்கும் பட்டுத் துணியைப் போலவே, அந்தப் பூவையாளின் பூவுடலைப் பகட்டான நிறம் படைத்த ஜார்ஜெட் புடவை அலங்கரித்துக்கொண்டிருக்கும். குடைக் காம்பின் நுனியில் பொருத்தப்பட்டிருக்கும் ரோஜா நிறப் பிடியைப்போலவே, அவளது தாமரை முகத்தின் நிறமும் இருக்கும். அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுபோகும் கன எழிலுடன் விளங்குவாள்.

கைப்பிடிக்கு அருகில் தொங்கிக்கொண்டிருக்கும் நாடாவைப்போலவே, அவள் தலை பின்னி வைத்துக்கொண்டிருக்கும் நீல நிற ரிப்பனும் மிக ரம்யமாகக் காட்சி அளிக்கும்.

ஆகா! இந்தக் குடையே அல்லவா தனது எஜமானியின் எழிலுருவம் எப்படி இருக்கும் என்பதைக் காட்டுகிறது! அவளுடைய இந்த உயிர் அற்ற குடையே இவ்வளவு அழகாயிருக்கும்பொழுது, அவள் எவ்வளவு எழில் பெற்று விளங்குவாள்!

கண்ணன் பின்னும் கடுமையான சிந்தனையில் ஆழ்ந்தான்.

'பீரியட் முடிந்ததும், அவள் பதற்றப்பட்டுக்கொண்டு வருவாள். அவளுடைய மையல் விழிகள் குறுகுறுவென்று குடையைத் தேடும். அவள் வாயிலிருந்து அவளையறியாமலே, 'இங்கேதானே வைத்திருந்தேன்? அதற்குள் எங்கே போய்விட்டது?' என்ற கேள்வி பிறக்கும். உடனே அவன் அவளை நிறுத்தி, "ஏன் அம்மா! என்ன தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்பான்.

அவள் பதற்றமுற்று அவனைப் பார்ப்பாள். வியப்பும், வருத்தமும் அவள் விழிகளில் ததும்பும். கலவரமடைந்த குரலில், 'வந்து.. வந்து.. என் குடை... இங்கே வைத்திருந்தேன்.. மறந்துவிட்டேன்..' என்று இழுப்பாள்.

அவள் தன் வாக்கியத்தைச் சரியாக முடிப்பதற்கு முன்பாகவே, அவன் 'ஆமாம், ஆமாம். உங்கள் குடை ரொம்ப ரொம்ப அழகாயிருந்தது!' என்று ஆரம்பிப்பான். 'நீங்கள் எங்கேயாவது அதைப் பார்த்தீர்களா?' என்று அவள் ஆவலை அடக்கமாட்டாமல் கேட்பாள்.

அவன் நாடக பாணியில், 'ஆமாம், பார்த்தேன். அதைப் பார்த்ததும், ஒரு ஊகத்துக்கு வந்தேன். அந்த ஊகம் உண்மையாகவும் முடிந்தது. ஆகா! என்ன அழகான குடை! அது தன்னிடத்தில் யாருடைய அழகையோவல்லவா மூடி மறைத்து வைத்துக்கொண்டிருந்தது!' என்பான்.

'அட! நீங்கள் கவிதை புனையத் தொடங்கிவிட்டீர்களே!' என்று அவள் முகத்தில் முறுவல் தாண்டவமாடக் கேட்பாள்.

'ஆமாம், ஆமாம். சில சமயம் இப்படி உள்ளம் பேசத் தொடங்கிவிடுகிறது!' என்பான் அவன்.

'நன்றாகப் பேசுகிறீர்களே!' என்பாள் அவள்.

'உள்ளம் படைத்த ஒவ்வொருவனும் என்னிடம் இதையேதான் சொல்கிறான்!' என்பான் அவன்.

அவள் மறுபடியும் பதற்றமுற்று, 'என் குடை உங்களிடம் இருக்கிறதல்லவா?' என்று கேட்பாள்.

'இருக்கிறது. எதற்காக இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்? நீங்கள் நல்ல அதிர்ஷ்டசாலி. இல்லாவிட்டால், அந்தக் குடை என் கையில் கிடைத்திருக்குமா? இன்னொருவன் கையில் இது கிடைத்திருந்தால், இதை உங்கள் ஞாபகார்த்தமாகச் சொல்லாமல் கொள்ளாமல் சுருட்டிக்கொண்டு நடையைக் கட்டியிருப்பான். நானாகையிருக்கக்கொண்டு..' என்று கூறி, அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்ப்பான்.

'ஏன், மிஸ்டர்! நீங்களும்தான் இதை என் ஞாபகார்த்தமாக எடுத்துக்கொண்டு போயிருக்கக்கூடாது?' என்று வெட்கம் கலந்த குரலில் கேட்பாள். அப்பொழுது அவன் சட்டென்று வெகு மிடுக்குடன், 'மற்றவர்கள் எல்லோரும் உங்கள் ஞாபகார்த்தமாக உங்கள் குடையைத்தான் எடுத்துச் செல்வார்கள். நான் உங்களையே அல்லவா என் உள்ளத்தில் ஏந்திச் செல்லுகிறேன்!' என்று பதில் சொல்வான்.

'அன்புக் கடலில் ரொம்ப தூரம் இறங்கிவிடாதீர்கள். கடைசியில் முழுகிவிடப் போகிறீர்கள்!' என்று அவள் கண் ஜாடை காட்டிக் குத்தலாகச் சொல்லுவாள்.

'காதல் கடலுக்குள் மூழ்கி மூழ்கி முத்துக் குளிப்பதைக் காட்டிலும் நீந்துவதில் என்ன ஆனந்தம் கிட்டப்போகிறது, அம்மா!' என்று அவன் உடனே நறுக்குத் தெறித்தாற்போல் பதில் சொல்வான்.

'சரி, சரி! என் குடையைக் கொடுங்கள்! வாதத்தில் உங்களை ஜயிக்க இங்கே யாரால் ஆகும்?" என்று முறுவலிப்பாள் அந்த முத்துப் பல்லாள்.

'இதோ! அதைக் கொடுத்துப் போகத்தானே, இத்தனை நேரமாக இங்கே காத்திருக்கிறேன்!' என்று சொல்லி, அவன் குடையைக் கொடுப்பான். அப்பொழுது அவள் விரல்கள் அவனுடைய விரல்களுடன் உறவாடும்.

'உஸ்ஸ்... நீங்கள் ரொம்ப ரொம்ப..!' என்று அன்புக் கலவையுடன் கூறுவாள் அவள்.

'ரொம்ப ரொம்ப என்னவாம்?' என்று கேட்பான் அவன். இருவருமே பிறகு விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

'அப்புறம்? அப்புறம் என்ன?' அவன் சிந்தனையில் ஆழ்ந்தான். அப்புறம்தான் வழி ராஜபாட்டையாகிவிட்டதே! அவளை அவள் வீட்டு வரையில் கொண்டு விட அவன் போவான். வழி நெடுகத் தித்திக்கத் தித்திக்க இருவரும் பேசிக் கொண்டே போவார்கள். அப்புறம் காதல் பாதையில் கையோடு கைகோத்துக் கொண்டு இருவரும் முன்னேறத் தொடங்குவார்கள். அப்புறம்?.. அப்புறம் அப்புறம்தான்! எத்தனை ஆனந்தமாக அப்புறம் வாழ்க்கை ஓடும், நல்ல தார் ரோடில் டயர் போட்ட வண்டி ஓடுவதுபோல!' யோசிக்க யோசிக்க ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. அவன் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான்.

அந்தக் கற்பனைக் காரிகை, உள்ளத் தரசி, யாராக இருப்பாள்?

ஒரு வேளை அவள் ஜிக்கிலியாக இருப்பாளோ? ஆகா! அழகுக் களஞ்சியம் அல்லவா அவள்! ஒற்றைநாடியான உடல். சிவந்த மேனி. 'பாப்' செய்யப்பட்ட தலைக் கேசம். கவர்ச்சியென்றால் இந்த உலகத்துக் கவர்ச்சியில்லை. ஒருவனை அவள் பார்த்தால், அப்படியே தன் கருநீல விழிக் கடலில் ஆழ்த்திவிடுவாளோ என்றே தோன்றும். பாடத் தொடங்கி விட்டால், குயிலின் இசை கெட்டது என்று சொல்லும்படியாக இருக்கும். நாகரிகத்தின் சிகரம் அவள். கலாசாலையே அவளுக்காகத் தவம் கிடக்கிறது. காலேஜ் முழுவதும் 'ஜிக்கிலி, ஜிக்கிலி' என்று பெயர் ஒலிக்கிறது. . .

ஆனால், ஜிக்கிலி குடை கொண்டுவந்து அவன் பார்த்ததேயில்லையே! ஒரு வேளை கல்யாணியின் குடையாக இருக்குமோ? அப்படியிருந்தாலும் அவன்பாடு கொண்டாட்டம்தான். பெயருக்கேற்றாற்போல் அவள் நிஜமாகவே கல்யாணிதான். நீலப் புடவை கட்டிக்கொண்டு அவள் மேனி குலுங்கக் கனஜோராகக் காட்சியளிக்கும்பொழுது, நீல வானில் நீந்தும் நிறை மதியை ஒத்துக் காட்சி அளிப்பாள். . .

ஐய்யய்யோ! இந்தக் குடை கோமளாவினுடையதாக இருந்துவிட்டால், கேடுதான்! இந்த நேர்த்தியான குடை அந்தத் தாடகையினுடையதாக இருந்துவிட்டால், அப்புறம் வேறு வினை வேண்டியதில்லை. பெயர் கோமளா. ஆனால், சரீரமும், சாரீரமும்! கண்ணபிரானும் விநாயகப் பெருமானும் அவள்மீது அளவு கடந்த அருள் புரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அத்தனை கரியாக, அத்தனை கட்டைக் குட்டையாக உடல் வளர்ந்திராதே!

அவள் நடந்தால் பூமி அதிரும். பூமாதேவி பொறுமைசாலி என்பதற்கு அவளைத் தாங்குவதைக் காட்டிலும், வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

கடவுளே! இன்று எனக்கு நீ சரியான சந்தர்ப்பத்தைத்தான் அளித்திருக்கிறாய். கொடுத்தால் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பாய் என்பார்களே! அது முற்றிலும் உண்மை. நீ கொடுத்த இந்தச் சந்தர்ப்பத்தை நான் எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறேன் என்று என் கெட்டிக்காரத்தனத்தையும் பார்!'

கணகணவென்று கல்லூரி முடிவதற்கு அறிகுறியாக மணி ஒலித்தது. தன் கற்பனைக் காதலியைக் கண்ணாரக் காண அவன் தன்னைத் தயார் செய்துகொண்டான். அவன் உள்ளம் களிப்பும் கலவரமும் அடைந்து படபடவென்று அடித்துக் கொண்டது. அவன் கண்கள் ஆவலுடன் அகல விரிந்து, அந்த அழகிய குடையைத் தேடி யார் வருகிறார்கள் என்பதைக் கவனிக்கத் தொடங்கின.

முதன் முதலாக அவன் மனதைக் கவர்ந்த ஜிக்கிலி வகுப்பிலிருந்து வெளியே வந்தாள். அட! அவள் அவன் பக்கமேதான் வந்துகொண்டிருந்தாள். அவனுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. இன்று நாம் நரி முகத்தில்தான் விழித்திருக்கிறோம் என்று தீர்மானித்துக்கொண்டான். ஆனால் அட, அதிர்ஷ்டக்கட்டையே! அவன் அருகில் வந்துகொண்டிருந்தவள், அவனைப் பார்க்காமலே நேராக அல்லவா போய்விட்டாள்! அவன் உள்ளத்தில் பளிச்சென்று பிரகாசித்துக்கொண்டிருந்த நம்பிக்கை விளக்கு ஒன்று பக்கென்று அணைந்துவிட்டது. அவன் மனம் முறிந்துவிட்டது.

கல்யாணி வெளியே வந்தாள். 'அவள் இந்தப் பக்கம் வரத்தான் வருவாள். முக்கால்வாசி அந்தக் குடை அவளுடையதாகத்தான் இருக்க வேண்டும். அடச்சே! அவள் கையில்தான் அதோ ஒரு குடை இருக்கிறதே! இந்தக் குடையும் அவளுடையதாக எப்படியிருக்க முடியும்?' அவன் நினைத்தாற்போலவே, அவள் தன் சைக்கிளை நாடிச் சென்றுகொண்டிருந்தாள்!

'அவளும் போய்விட்டாளா? இந்தக் குடையைத் தேடி எவள் வரப்போகிறாளோ?'

கண்ணனுக்குச் சப்பிட்டு விட்டது. ஒரு முறை கண்களை மூடித் திறந்த அவன் கண்களில், கோமளா காட்சி அளித்தாள். அவன் பக்கமாகத்தான் அவளும் வந்து கொண்டிருந்தாள்!

'அட கடவுளே! எதைநினைத்துப்பார்த்தோமோ, கடைசியில் அதுவே நடந்துவிட்டதே! என் துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது? சரி, இதைக் கொண்டுபோய்க் காரியாலயத்திலேயே ஒப்படைத்துவிட்டுப் போவோம். இந்தக் கோமளத்தினிடம் யார் பேசிக்கொண்டு நிற்கிறது?'

இப்படி யோசித்தவன், இரண்டு அடி எடுத்து வைப்பதற்குள்ளாகக் கோமளா லைப்ரரிக்குள் புகுந்துவிட்டாள். 'அப்பாடா! பிழைத்தோம்!' என்று பெருமூச்சு விட்டான் கண்ணன்.

அணையும் தருவாயிலிருந்த நம்பிக்கை விளக்குக்கு ஒரு ஊன்றுகோல் கிடைத்த மாதிரி இருந்தது. கோமளா மறைந்ததும், அதை யாரோ தூண்டிவிட்டு விட்டார்கள்.

உள்ளத்துக்கு ஒரு புதிய பலம் கிடைக்கவே, பார்வையை நாற்புறமும் ஓட்டினான். தன் மனத்துக்கு இசைந்த மெல்லியலாள் யாராவது வருகிறாளா என்று தேடுவதில் அவன் விழிகள் அவனுக்கு வேண்டிய ஒத்தாசை புரிந்தன.

கல்லூரியின் வகுப்பு அறைகளுக்குள்ளிருந்து வரும் ஒவ்வொரு மாணவியையும் அவன் ஆசையோடு பார்ப்பான். ஒவ்வொருவரும் அவனது நம்பிக்கைப் பயிரில் ஒரு குடம் தண்ணீரை விட்டு மறைந்துவிடுவார்கள்.

கீதா போய்விட்டாள்; கமலா போய் விட்டாள்; விமலா போய்விட்டாள். இப்படி ஒவ்வொருவராக எல்லோருமே போய்விட்டார்கள். அவன் உள்ளத்தில் ஒளி வீசிப் பிரகாசித்துக்கொண்டிருந்த நம்பிக்கை விளக்குகளும் ஒவ்வொன்றாக அணையத் தொடங்கிவிட்டன.

அவனுக்கு வருத்தம் தொண்டையை அடைத்தது. மனச் சுமை மேனியை வாட்டியது. 'நம் துரதிர்ஷ்டத்தை யாரிடம் போய்ச் சொல்லி அழுவது? நாம் என்ன நினைத்துக்கொண்டு வந்தோம்! என்ன நடந்துவிட்டது! இந்தக் குடையை வாங்கிக்கொள்ள இனி எந்த மூதேவி வரப்போகிறாளோ?' என்று எண்ணிய அவன், மனம் உடைந்துபோய் உட்கார்ந்துவிட்டான்.

இதே சமயம் அவன் காதுகளில் அவனுக்கு மிக மிக அறிமுகமான ஒரு பெண் குரல் விழுந்தது. "அண்ணா! இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? குடை ஏதாவது இங்கே பார்த்தீர்களா? இங்கேதான் இந்த வகுப்பில் வைத்துவிட்டு மறந்து போனேன்! அடுத்தகத்து சரோஜா மாமியுடையது. மழமழன்னு அழகாயிருக்கிறதே யென்று, 'நான் கொஞ்சம் எடுத்துண்டு போயிட்டு வரேன் கொடுங்க' என்று சொல்லி வாங்கி வந்தேன். குடையை வாங்கிக்கொண்டு வருவதைப் பார்த்து அவளுடைய அகத்துக்காரர்கூட ஒரு மாதிரியாக மூஞ்சியை வைத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். . . அதுக்குத் தகுந்தாற்போல் இப்படிக் காணாமல் போயிட்டது. . ." என்று அழமாட்டாக் குறையாகக் கூறினாள், அவன் அருமைத் தங்கை!

அவன் பிரமை பிடித்தவன் போலாகி விட்டான். மலையின் உச்சியிலிருந்து அதல பாதாளத்தில் விழுவதுபோலத் தோன்றியது அவனுக்கு. அவனுக்கெதிரே அவன் தங்கை சியாமளா நின்றுகொண்டிருந்தாள்!

"நன்றி கெட்ட குடை. இதனால் எத்தனை ஏமாற்றம், பார்!" என்று அவன் தன்னையும் மீறிச் சொல்லிவிட்டான். சியாமளாவுக்குக் குடை கிடைத்துவிட்டதில் மகிழ்ச்சி. அண்ணாவுடைய மனக் கோட்டை சரிந்தது பற்றி அவளுக்கு எங்கே தெரியப் போகிறது!

இரும்பும் புரட்சியும்

ந. பிச்சமூர்த்தி

எனக்கு ஜோஸியம் தெரியாது. ஆனால், ஒவ்வொரு கோளுக்கும் ஒவ்வொரு உலோகம் உண்டென்று சொல்லுகிறார்களே, அதுஉண்மை என்று தோன்றுகிறது. சனி பகவானுக்கு இரும்பென்று சொல்லுகிறார்கள். தத்வரீதியாக இரும்புக்கும் புரட்சிக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமா என்பதுதான் என் கேள்வி. இரும்பை ஆதி மனிதன் உபயோகிக்க அறிந்தபொழுது, நாகரீகத்திலே பெரிய மாறுதல் உண்டாயிற்றென்றும், கொழுமுனையை உபயோகிக்க ஆரம்பித்த பிறகு உண்டானபுரட்சிதான் விவசாயம் எனவும் அறிஞர்கள் சொல்கிறார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் யந்திரங்கள் தோன்றியபொழுதே புரட்சியும்தோன்றி விட்டதென்று பொருளாதார நிபுணர்கள் எழுதுகிறார்கள். அவ்வளவு தூரமெல்லாம் போவானேன்! நமக்குத் தினசரி பழக்கமான பஸ்ஸையே எடுத்துக் கொள்ளுங்களேன். புரட்சிகரமான கருத்துக்களையும் சம்பாஷணைகளையும் பஸ் பிரயாணத்தின்போது எத்தனை தடவை கேட்டிருக்கிறோம்! ரயில் பிரயாணத்தின்போது திடுக்கிடும்படியான எத்தனை கருத்துக்களையும் அனுபவங்களையும் பெற்றிருக்கிறோம்! புரட்சிக்கு நாற்றங்கால் இரும்பு என்று சொன்னால் என்ன பிசகு?

இதைப்பற்றி எல்லாம் ஏன் எண்ணுகிறேனென்றால், நேற்று பஸ்ஸில் பிரயாணம் செய்த பொழுது, அவ்வளவு புதிய கருத்துக்கள் அவுட்டாக வெடித்தன!

"குழந்தை குட்டி இல்லாத பேர் புண்ணியசாலிகள்."

"தலைகீழாகப் பேசுகிறாயே, வாலிழந்த நரி சமாசாரமா?"

"அதெல்லாம் இல்லை. ஆழ்ந்து யோசித்துப் பாரேன். இரண்டு பேருக்கு சம்பாதிக்கிறது எப்படி? நண்டும் சிண்டுமாக நாலு குழந்தைகள், வளர்ந்த பெண் இரண்டு, மழுங்கட்டை மகன்கள் இரண்டு- இவ்வளவு பேருக்கும் சம்பாதித்துப் போடுவது எப்படி? அதுதான் புண்யசாலியின் லட்சணமா?"

வெற்றிலை பாக்குக் கடையில் உட்கார்ந்து, கவனமாக இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

"ஐயா! காலணா போடுங்க" என்று ஒரு கரகரப்பான குரல் என்னை இழுத்தது. திரும்பிப் பார்த்தேன். ஒரு பிச்சைக்காரன். இடது பக்கம் முழுவதும் பாரிச வாயுவால் முடங்கி சூம்பிக் கிடந்தது. காக்கி அரைக்கை சட்டை. காக்கி டிராயர்.

"ஐயா! காலணா போடுங்க" என்றான் மறுமுறை. நான் காலணாவை எடுத்துப் போட்டேன்.

பிச்சைக்காரர்களில் பலவிதம் உண்டு. காசு போட்ட உடனே 'மவராஜனாய் இருக்கணும்' என்று வாழ்த்துவோர் உண்டு. 'புண்யவான்' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு போகிற பேரும் உண்டு. இவன் இந்த கோஷ்டிகள் ஒன்றையும் சேரவில்லை. காசை வாங்கிக் கொண்டு பேசாமல் திரும்பிவிட்டான்.

சில நிமிஷங்கள் கழித்து வெற்றிலைப் பாக்குக் கடையைவிட்டு, பஸ்ஸின் முன்புறம் டிரைவருக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன். எனக்கு இடது பக்கத்தில் ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தான். பிச்சைக்காரனைக் கவனித்ததால் விட்டுப்போயிருந்த சம்பாஷணை மறுபடி கவனத்தைக் கவர்ந்தது.

"அப்படி என்றால் குழந்தைகுட்டி இல்லாதவனைப் பாவி என்று எதைக் கொண்டு ருசுப் பண்ணுவாய்?"

"நரக வேதனைப் பட்டால் பாவி. சுகமாய் இருந்தால் புண்யசாலி; அவ்வளவுதான்."

"நரக வேதனை என்கிறாயே. எனக்கு வேம்பாய் இருப்பது உனக்குக் கரும்பாய் இருந்தால்? ஒட்டகம் வேப்பிலை தின்கிறதே, உனக்கு இனிக்குமா?"

"ஐயா! காலணா போடுங்க" என்ற குரல் மறுபடி கேட்டது. எனக்கு இடது பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரிடம் யாசகம் கேட்க வந்த குரல்.

என் பக்கத்தில் இருந்த இளைஞன் ஒரு 'வத்தக்காய்ச்சி' இருபது வயதிருக்கும். காதில் வாங்கிக்கொள்ளாமல் உட்கார்ந்திருந்தான். பிச்சைக்காரன் என்னைப்

பார்த்துக்கொண்டே, மறு முறை இளைஞனைக் கேட்டான்.

"தம்பி, உன்னைத்தானே! காலணா காசு போடு. உழைச்சுப்புழைக்க முடியாத ஆத்மா" என்று தொட்டுக் கேட்டான்.

தொட்டது பிசகாய்ப் போயிற்று.

"போடா, காசு கொடுக்க மாட்டேன்" என்றான் இளைஞன்.

"அப்படிச் சொல்லாதே தம்பி" என்று மறுபடி பிச்சைக்காரன் தொட்டுக் கேட்டான்.

அந்தச் சமயத்தில் பிச்சைக்காரனது முகமும், குரலும் பெரிய புதிராய் விளங்கின. வார்த்தைகள் என்னவோ கருணையைத் தூண்டுவனவாய்த்தான் இருந்தன. ஆனால், அவைகளில் ஏறி வந்த குரலோ உறுதியாய் ஒலித்தது; எனக்குப் பிச்சை போடுவது உங்கள் கடமை என்று தெளிவாகச் சொல்லுவதுபோன்ற அழுலுடன் ஒலித்தது. அவன் முகத்தைப் பார்த்தேன். அதில் ஒரு கொடுமை. கண்களோ—'கண்களா பிச்சுவாக்களா?' என்ற சந்தேகத்தை எழுப்பின.

இளைஞன் கல்லுப் பிள்ளையாராய் இருந்தான்.

"காலணா கொடுக்க மாட்டே? பொறக்கறப்போ கொண்டுகிட்டு வரல்லே. போறப்போ கொண்டுகிட்டு போக மாட்டே...பிச்சை கேக்கற ஆளா நான்? கால் அணா போடு" என்று அதட்டினான்.

பிச்சைக்காரன் குரல் என் மனத்தில் ஒருபுறம் பயத்தை உண்டாக்கிற்று. அதற்கு மாற்றாக அவனுக்குக் காலணா தர்மம் செய்திருக்கும் அகம்பாவம் எனக்கு மற்றொரு புறம் தெம்பளித்தது.

"ஏனப்பா! பிச்சை கொடுத்தால் வாங்கிக்கொள்ளவேண்டும். கொடுக்காவிட்டால், போய்விட வேண்டும். கோபித்துக் கொள்வதும் சாபமிடுவதும் அழகில்

பட்டணவாசி: போன வருஷம் இங்கெல்லாம் ஒரே குப்பைமோடா இருந்துதுங்க!......இந்த வருஷம் பெரிய பெரிய கட்டடங்களா வளர்ந்துபோச்சு பாத்திங்களா?...

கிராமவாசி: குப்பை மோடுன்னா நல்ல எருவாச்சுங்களே!......வளர்றத்துக்கு என்ன கேக்கணுங்களா!

லையே" என்று நியாயத்தைச் சொன்னேன்.

என்னிடத்தில் என்ன கண்டானோ தெரியவில்லை. அடக்கமான குரலில் சொன்னான்:

"வேறெ வழி இல்லிங்க. நியாயத்துக்கு மசிகிற உலகமா இது? அநியாயத்துக்குத்தான் இங்கே ஆட்சி. அழுத பிள்ளைதான் பால் குடிக்குமாம். இந்தக் கை, கால் இருந்தால் நான் பிச்சையா கேட்பேன்?"

என் பக்கத்தில் இருந்த இளைஞன் மனத்தில் என்ன தோன்றிற்றோ என்னவோ!

"பின்னே பாருங்களேன்..தொட்டுக் கேட்கிறது..இதெல்லாம் என்ன கல்லடி மங்கத்தனம்!" என்று சொல்லிக்கொண்டே ஒரு காலணாவைத் தகரக் குவளையில் போட்டான்.

காசை வாங்கிக்கொண்டதும் எந்தவிதமான நன்றியையும் காட்டாமல் பஸ்ஸின் பின்பக்கமாக, பிச்சைக்காரன் நகர்ந்துவிட்டான்.

"காலணா போடுங்க அண்ணே" என்ற சப்தம் இப்பொழுது பின்புறத்தில் கேட்டது. அதே சொற்கள் இரண்டு மூன்று முறை கேட்டது. தடவைக்குத் தடவை குரலில் கடுப்பு விஷம்போல் ஏறிக்கொண்டிருந்தது. இளைஞனைவிட அழுத்தமான பேர்வழிகள் பின்னால் இருப்பதுபோல் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தேன். நான் நினைத்தது சரிதான். வெள்ளையும் சள்ளையுமாக சில மோட்டா ஆசாமிகள் தென்பட்டார்கள். இவன் பிச்சை கேட்டுக்கொண்டே இருந்தான்.

"காலணா போட்டா ஆண்டி ஆயிட மாட்டீங்க, அண்ணே."

"சரிதான் போடா" என்று ஒருவர் அதட்டினார்.

"என்ன அடாபுடாங்கறீங்க. காலணா பிச்சைபோட யோக்யதை இல்லை. ஜம்பமா வெள்ளை சட்டை, மணி பர்ஸோடெ வந்துட்டீங்க."

"சும்மா போறியா இல்லாட்டி—?"

"உதைச்சுபிடுவியா? பார் வேணா. ஒத்தைக் கை கால் வசமில்லேன்னு பாக்கிறயா? உதைச்சுப் பாரு."

அதற்குள் பஸ்ஸில் கலவரம் உண்டாகிவிட்டது. விஷயத்தை முற்றவிடாமல் வேறு யாரோ ஒருவர் அரையணா காசைக் கொடுத்து, பிச்சைக்காரனை மெதுவாய் அப்பால் அனுப்பினார். அவன் அப்பால் போய்விட்டபோதிலும் பஸ்ஸில் அமைதி ஏற்படவில்லை. சில நிமிஷங்களுக்குப் பிறகு ஒருவர் ஆரம்பித்தார்:

"அவன் பிச்சைக்காரனில்லீங்க. அதனால்தான் அப்படி."

"நல்லாச் சொல்றிங்களே. அவன் பிச்சைக்காரன் இல்லை என்றால், நாமா?"

"அப்படி இல்லிங்க. அந்த ஆள் நம்மைப்போல் நன்றாய் இருந்தவன்தான். சம்சாரம் பிள்ளை குட்டி எல்லாம் இருக்கு. இவன் மதுரை துணி மில்லிலே வேலை செஞ்சுகிட்டிருந்தான். அப்போ இவனைப் பார்க்கணும். இவன் வச்சுகிட்டிருந்த மீசையைப் பார்க்கணும். போதாத காலம். மிஷின் வார் பெல்ட் ஒரு தரம் கழண்டுபோய், இவனை அடிச்சுப் புரட்டி இழுத்துவிட்டது. விழுந்தவன்தான். பிரக்ஞை இல்லை. ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். ஒரு மாதத்திற்கு மேல் அங்கே இருந்தான். ஆள் என்னவோ பொழச்சுப் போய்விட்டான். ஆனால், ஒரு பக்கத்து கையும் காலும் சுவாதீனமில்லாமல் போய்விட்டது. நரம்புகளில் ஏதோ ஆய்விட்டதாம். அவ்வளவுதான். அத்துடன் அவனுக்கு வேலையும் போய்விட்டது."

"அப்படி என்றால் சட்டப்படி கம்பெனியில் நஷ்டஈடு கொடுக்கவேணுமே."

"கொடுக்காமலா இருப்பார்கள்? கொடுத்தார்கள். அதைக்கொண்டு ஒரு பெண்ணைக் கட்டிக்கொடுத்தான். இரண்டு வருஷம் சாப்பிட்டான். கிடைச்சது காலி ஆகிவிட்டது. தகரக் குவளையை எடுத்துக்கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்துவிட்டான்."

"மிஷினிலே வேலை செஞ்ச ஆளா? அதான் சனியன்மாதிரி பிடிச்சுக்கிறான். மூஞ்சியைப் பாருங்களேன் இரும்பிலே செஞ்சாப்பலே!"

"பாவம்!"

"சொல்றோமே ஒழிய, எங்கே அது மாதிரி இருக்கிறோம். பெண்டாட்டி பிள்ளைங்களுக்கு இவன் தினம் சோறு போட வேண்டுமே? ஒரு ரூபாயாவது வேண்டாம்? அறுபத்தி நாலு பேராவது கால் காலணாவாகக் கொடுக்கவேண்டாம்? ஒரு நாளைக்கு பஸ் மொத்தம் எட்டு நடைதானே போவுது—இந்த நடையிலே இவ்வளவு தாறுக்குப் பிறகு அவனுக்கு கிடைச்சிருக்கிறது முக்கால் அணா தானே. கோபம் வராமெ எப்படி இருக்கும்?"

"அதெல்லாம் சரிதான். இதுக்கெல்லாம் நாமா பிணை? போலீஸ் ஸ்டேஷன், கலெக்டர் ஆபீஸ், இல்லாத போனால் கவர்ன்மெண்டு; அங்கே போய் கல்லடிமங்கத்தனம் பண்ணட்டுமே. பிச்சைக்காரங்களைக் காப்பாத்தர கடமை நம்மதா? வேணும்னால் பிச்சைக்காரர் வரி என்று ஒன்றைப்போட்டு, அவர்களைக்காப்பாத்துவதற்காக வாங்கிக்கொள்ளட்டும். இப்படி பிச்சைக்காரன்கள் வந்து மிரட்டி, தர்மத்தை நமக்குச் சொல்லிக் கொடுக்கிறதென்றால், சும்மாயிருக்க முடியுதா?"

"நீங்க சொல்றது சரிதான். அநியாயம் செஞ்சால்தான் நியாயம் நிலைக்கிறது. கேட்ட உடனே நாமாகக் காலணா ஏன் போடவில்லை, சொல்லுங்கோ? இதுதான் இந்த கம்யுனிஸ்ட் கட்சிக்கு ஆதாரம்."

அந்த சமயத்தில் டிரைவர் தன் இடத்தில் வந்து உட்கார்ந்ததும், சினிமா சுருள்மாதிரி பேச்சு அறுந்துபோய்விட்டது. பஸ் நகர்ந்தது.

பக்கத்து பஸ்ஸுக்கருகில் பிச்சைக்காரன் கத்திக்கொண்டிருந்தான்.

"காலணா போடுங்க அண்ணே. புசல் வருது அண்ணே. இப்போ வந்ததிலே முந்நூத்தி அம்பது பேருங்க. அடுத்ததாலே எவ்வளவோ..காலணா போடுங்க அண்ணே! புசல் வருது அண்ணே."

அவசரம் அவசரமாக ஓடிவந்தஅண்ணுசாமி, அப்பொழுதுதான் நகரத் தொடங்கிய மின்சார ரயிலில் தாவி ஏறிக்கொண்டார். வேகமாக ஓடி வந்ததால் ஏற்பட்ட பெருமூச்சுகளை லட்சியம் செய்யாமல், நெற்றியிலே அரும்பி வழியத் தொடங்கிய வேர்வையைத் துடைத்துக்கொண்டார். சிறிது படபடப்பு அடங்கியதும், வண்டியினுள்ளே நோட்டம் செலுத்தினுர்.

ஏதோ மனிதர்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்போல, வண்டியினுள்ளவர்களை ஒவ்வொருவராகக் கண்களால் ஊடுருவிப் பார்த்துக்கொண்டே வந்தவர், தினசரிப் பத்திரிகை ஒன்றினுல் உருவத்தின் முக்கால் பாகத்தை மறைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ஒரு உருவத்தைக் கண்டதும் முகம் மலர அருகே நெருங்கினுர்..

“அடே..அடே! என்னது. சோமசுந்தரமா? இன்று என்ன சீக்கிரமாக இருக்கிறதே! எப்போதும் ஐந்தே கால் வண்டியில் வர்ர வழக்கமாச்சே..” என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கியது அவர் வாய்.

இந்த ஆச்சரியமான கேள்விகளுக்குக் காரண பூதாக இருந்த சோமசுந்தரம் பத்திரிகையை முகத்திற்குக் கீழே தாழ்த்திக்கொண்டு தன் எதிரே பேசிய நண்பரை நோக்கினுர். அவர் முகம் பிரகாசமடைந்தது. “ஊங்க். . .” என்று ஒரு ஹுங்கார சப்தம் கொடுத்துவிட்டு, தன் வாயிலிருந்த புகையிலையை ஒரு முறை நன்கு குதப்பி ஜன்னலுக்கு வெளியே நான்கு தரம் துப்பிவிட்டு நிமிர்ந்தார்.

“ஹலோ, அண்ணுசாமியா! ஆமாம்.. என்னை மட்டும் சீக்கிரமென்று சொல்லி விட்டீரே; உங்க சேதி என்ன?” என்ற கேள்வியைப் போட்டுவிட்டு ஏதோ பிரமாதமான ஒரு விஷயத்தைக் கண்டு பிடித்துவிட்டவர்போல் ஒரு சிரிப்புச் சிரித்தார் சோமு.

“இன்றைக்கு என்ன; மூன்று மாதமாகவே இதே டயத்திற்குத்தான் போகிறேன். வீட்டிலே.. மனைவி..”

“என்னது! மனைவியா.. போன வருஷம்.. தவறி..” சந்தேகத்துடன் தலையைச் சொரிந்துகொண்டே மென்று விழுங்கினுர் சோமு.

“ஏன் ஐயா முழுங்குகிறீர்? சென்ற வருஷம் அவள் இறந்தது வாஸ்தவந்தான். துணையுடனேயே இருந்து இவ்வளவு வருஷங்களாகப் பழகிப்போன எனக்கு, தனிமை மிகவும் கஷ்டமாக இருந்தது. மூன்று மாதத்திற்கு முன்னுல் தான் புதுக் கல்யாணம் நடந்தது.”

“அட, அப்படியா! எனக்குக்கூடச் சொல்லாமல் காரியத்தை நடத்திவிட்டீரே; பெரிய ஆளய்யா நீர். இரண்டு வருஷத்துக்கு முன்னுலே என்னைக்கூடப் பல பேர் மணம் செய்துகொள்ளும்படிக் கட்டாயப்படுத்தினுர்கள். வயது கிட்டத்தட்ட 50 ஆகிறதே இனிமேல் எதற்கு என்று நினைத்தேன். உமக்கு என்னைவிட ஒன்றிரண்டு வயது அதிகமிருக்குமே; நீர் தைரியமாக வெளுத்துக் கட்டி விட்டீரே..”

“என்னய்யா வயது வயதுன்னு அடித்துக் கொள்கிறீர்? அப்படி என்ன வயதாகி விட்டது நமக்கு? ஐம்பது ஒரு வயதா? அந்த வயதுக்குத்தானே இளமையே வருகிறதென்கிறுர்கள் வெள்ளைக்காரர்கள். முதல் கல்யாணமே அப்பொழுது தானே ஐயா செய்து கொள்கிறுர்கள். நாம் இரண்டாம் கல்யாணம் செய்து கொள்வதற்கென்ன? பொறுமைக்காரர்கள் பலவிதம் சொல்வார்கள். அவர்கள் பேச்சைக் கேட்காதீர். நான் சொல்வதைக் கேளும். பேசாமல் நீரும் ஒரு கல்யாணம் செய்து கொள்ளும்”

“கல்யாணமா? ..போன வாரம் தானே காதலே உண்டாகியிருக்கு. . .”—கூடவே ஜலதோஷமும் உண்டானதன் அடையாளமாக இரண்டு தரம் இருமி ஒரு தும்மலும் தும்மினுர் அவர்.

“அட! அசகாய சூரனுயிருக்கிறீரே. ஹ்ஹ்ஹா.. காதலா! கல்யாணமே வேண்டாமென்று இரண்டு வருஷமாக பீஷ்மரைப் போலிருக்கும் உமக்கு எங்கே, எப்படி, எப்பொழுது ஐயா அந்தப் பிசாசு பிடிச்சுது?”

ஒரு புன்சிரிப்பு சிரித்துக் கொண்டார் சோமசுந்தரம். பெரிய சிரிப்புச் சிரிக்க முடியாமல் இருமல் அவரைத் தடுத்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு பேசினுர் அவர்.

“அது ஒரு பெரிய கதை. சுருக்கமாகச் சொல்கிறேன். போன வாரம் பிரமாதமான காற்றேடு ஒரு மழை பெய்தது பாரும். .ஞாயிற்றுக்கிழமை அன்று. அன்று மாலை மழை ஆரம்பிப்பதற்கு முன்பு ‘பெங்களூர் ஸீஸன்’ மாதிரி ‘ஜில்’—ன்னு இருந்தது.இப்படிக் கொஞ்சம் உலாவி வரலாம்னு கிளம்பினேன் கோடம்பாக்கத்திலிருந்து. பழைய மாம்பலம் கேட்டுக்கருகில் வரும்போது, வானம் நன்ருக இருண்டு பெரிய காற்றும் மழையும் பிடித்துக்கொண்டு விட்டன. ‘கேட்’டை வேறு மூடிவிட்டான். ‘சிவனே’ன்னு அங்கிருந்த ஒரு மரத்தடியில் நின்றேன். திடீரென்று ஒரு பெண்... பெண்ணு அவள்... அப்ஸரஸ்தான். மழைக்குப் பயந்து ஓட்டமும் நடையுமாக வந்தவள், மரத்திற்கு அருகே வந்ததும் . .வழுக்கி அந்த வேகத்தில் என் மேல் விழுந்து விட்டாள். நல்லவேளை! நான் கெட்டியாக அவளைப் பிடித்துக் கொண்டுவிட்டேன் கீழே விழாமல். அந்த ஒரு நிமிஷம். .விநாடி. . எப்படியிருந்தது தெரியுமா? என் உடம்பெல்லாம் என்னமோ செய்தது. மயிர்க் கூச்செடுத்து, உடம்பே குளிர் ஜுரம் வருகிற மாதிரி நடுங்கியது. அந்த சில விநாடிகள் நான் என்னையே மறந்தேன். மழையை மறந்தேன், அந்த ஆலமரத்தையும், ஏன்..உலகத்தையே மறந்து விட்டேன்.

அந்தப் பெண்..முதலில் அப்படியே பிரமித்துப் போய் விட்டாள். பிறகு மெல்ல நகர்ந்தாள். என் உயிரே உடம்பிலிருந்து நகர்வதுபோலிருந்தது. என்னை மேலும் கீழும் ஒருமுறை பார்த்தாள்; ஒரு சிரிப்புச் சிரித்தாள். ஆகா! என்னை அப்படியே வெட்டி இழுத்து ‘ஷாக்’ அடித்த மாதிரி ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. போவதற்கு முன்னுல் ஒரு பார்வை பார்த்தாள்.. எப்பேர்ப்பட்ட பார்வை..ஐயோ! இன்னமும் என் கண் முன் அப்படியே அந்த முகம் தாண்டவமாடுகிறது; நினைக்கும் போதெல்லாம் தோன்றிக் கொண்டேயிருக்கிறது.

அவள் ‘கேட்’டைத் தாண்டிப் போகும் வரை அவள் நடையழகை ரசித்துக் கொண்டே நின்று விட்டேன். எவ்வளவு நேரம் நின்றேனே எனக்கே ஞாபகமில்லை. ‘தடதட’வென்று இடித்த இடியோசையைக் கேட்டதும்தான் சுய ஞாபகம் வந்தது. உடம்பெல்லாம் ‘சொட்டச் சொட்ட’ நனைந்துவிட்டது. அதிலிருந்து.. ஜலதோஷம்.. இருமல். தலைவலி. . . .” ஒரு இருமல் இருமினுர், சோமசுந்தரம்.

“அப்புறம். . உம். . .”–ஆவல் ததும்ப சுவாரஸ்யமாகக் கேட்டார் அண்ணாசாமி.

“அப்புறமென்ன, அப்புறம்? ஜலதோஷம், இருமல், ஜுரம் ஒன்றையும் லட்சியம் செய்யாமல், காதல் பாதையிலே நடக்கத் தொடங்கினேன். மறுபடி ஒரு தரமாவது அந்த ‘காதல் தெய்வ’த்தை தரிசிக்க மாட்டோமா என்னும் ஆசையில் தினம் அதே வேளைக்கு அதே இடத்திற்குப்போய் வருகிறேன். ஆனால் இதுவரை கண்ணில் படவேயில்லை. இந்த ஜலதோஷமும் இருமலும் கூட என்னை உருக்கவில்லை. அந்த.. காதல் தான் என்னை க்ஷயரோகம்போல் உருக்குகிறது. இன்றாவது தரிசனம் கிடைக்குமோ என்னவோ? உடம்பு வேறு பாரமாக ஜுரம் வரும்போலிருக்கிறது. ஒரு தரமாவது அவளைப் பார்த்தால் தான் என் உயிர் நிற்கும் போலிருக்கிறது. .” கண்களையும் மூக்கையும் துடைத்துக்கொண்டார் சோமு.

“ஆ..ச்சு..” என்று சூள் கொட்டிக்கொண்டே ரசித்தார் அண்ணாசாமி. தன்னுடைய கொள்கைக்கு ஆதரவு கிடைத்ததில் மகிழ்ச்சி ஏற்பட்டது. சோமுவின் பரிதாபகரமான நிலைமைக்கு ஆறுதல் கூற வேண்டும்போல் இருந்தது அவருக்கு.

“சோமு! ஒன்றுக்கும் கவலைப்படாதேயும். காதல் பாதை காட்டில் நடப்பது போன்றது. ஆனால், முடிவில் வெற்றி தான். மன உறுதியோடு இரும். வருகிற ஞாயிற்றுக்கிழமை நம்ம வீட்டில் உமக்கு ‘டின்னர்.’ என் கல்யாணத்திற்கு ஆத்ம நண்பராகிய உம்மைக் கூப்பிடவில்லையே என்று எனக்கே வருத்தம் தான். உம்ம கவலை மறக்கும்படியா செய்து விடுகிறேன். கண்டிப்பாக வர வேண்டும். மறந்துவிடாதேயும். கொஞ்ச நேரம் நேரம். . சந்தோஷமா. .”

அதற்குள் கோடம்பாக்கம் ஸ்டேஷன் வந்துவிடவே, “ஊம், ஆகட்டும். .” என்று தலையை ஆட்டிக்கொண்டு, தட்டுத்தடுமாறி இறங்கினார் சோமசுந்தரம்.

“பாவம்!” என்று முணுமுணுத்தார் அண்ணாசாமி.

ஃ ஃ ஃ

அண்ணாசாமி வீட்டை நெருங்கும் பொழுதே இளம் மனைவி வாசற்படியில் எதிர் நோக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். மகிழ்ச்சி பொங்கியது. உள்ளம் விம்மியது. உள் நுழையும்பொழுது அவள் முதுகில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டிவிட்டு நுழைந்தார். பின்னேதுள்ளி வந்தாள் அவள். டிபன், காப்பியைக் கொண்டுவந்து வைத்துவிட்டு சோபாவில் அவர் பக்கத்தில் உட்கார்ந்து உபசாரம் செய்தாள்.

அண்ணாசாமி அனுபவித்துச் சாப்பிட்டுக்கொண்டே அளவளாவினார். அவள் செய்த உபசாரம் அவரை முப்பது வருடம் இளமையாக்கியது. உள்ளம் இன்ப வெள்ளத்தில் மிதந்தது.

“இன்று பீச்சுக்குப் போவோமா?” என்று ஆசையுடன் கேட்டார் அண்ணாசாமி.

“வேண்டாம், வேண்டாம்; மழை வரும் போலிருக்கிறது. அன்றைக்கு மழையில் மாட்டிக் கொண்டதில் ஆரம்பித்த ஜலதோஷமே இன்னும் போகவில்லை. . .” –தனது கைக்குட்டையால் மூக்கைத் துடைத்துக்கொண்டு இடுப்பில் செருகிக்கொண்டாள் சுந்தரி.

“மழையா. .? என்றைக்கு? . .எங்கு. .”

“அடேடே. .அதைச் சொல்லவில்லையா உங்ககிட்டே. நாலைந்து நாளைக்கு முன்னே. . ஒரு ஞாயிற்றுக்கிழமை. நீங்ககூட அவசர வேலையிருக்குன்னு முணுமுணுத்துக்கொண்டே போனீர்களே. . எனக்குப் பொழுதே போகவில்லை. இப்படிக் கொஞ்ச தூரம் போய்விட்டு வரலாம்னு கிளம்பினேன். பழைய மாம்பலம் கேட்டருகில் வரபோது மழை பிடித்துக்கொண்டுவிட்டது. பக்கத்திலிருந்த மரத்தை நோக்கி ஓடினேன். ஓடிய வேகத்தில் கால் சருக்கிவிட்டது. .”

“ஊம். . கீழே விழுந்துட்டியா?”

. . . அங்கே யார் யாரோ இருந்தார்கள். சருக்கின வேகத்திலே. . . அப்படியே விழுந்துவிட்டேன், ஒருத்தர் மேலே. மெதுவாகச் சமாளித்துக்கொண்டு பார்த்தால். . ஒரு கிழம். . ! அதன் மூஞ்சியும் அழகும் குரங்கு மாதிரி. என்னையே வெறித்துப் பார்த்தது. எனக்கு வந்த ஆத்திரத்தில் அதுக்கு அழகு காட்டிவிட்டு வேகமாக ஓடிவந்துவிட்டேன். அன்றைக்குத்தான் பிடித்தது. . ஜலதோஷம்”–மூக்கைத் துடைக்கக் கைக்குட்டையைத் தேடினாள் இடுப்பிலே.

அண்ணாசாமி அசந்து போனார். அவர் மனத்தில் பலதரப்பட்ட எண்ணங்கள் தோன்றித் தோன்றி வட்டமிட்டுச் சுழன்றன. ரயிலில் சோமு சொன்ன சோகம் ததும்பிய காதல் கதையின் கதாநாயகி தன் மனைவி சுந்தரியேதான் என்பதைப் புரிந்துகொள்ள சிறிது நேரமாயிற்று அவருக்கு. “அப்ஸரஸ்”, “அழகு பிம்பம்” “ஒரு தரமாவது பார்க்காவிட்டால் உயிரே போய்விடும்” என்றெல்லாம் வர்ணித்தது தன் மனைவி சுந்தரியைத் தான் என்பதை நினைத்தவுடன், பொறாமைத் தீ அவர் மனத்தில் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது.

“ஒரு கிழக் குரங்கு” என்றாளே சோமுவை. அவன் ரொம்ப ஷோக்குப் பேர்வழி; என்னைவிட வயதில் இரண்டு வருஷம் சிறியவன்...அவனையே கிழவனென்றால். . என்னைப் பற்றி என்ன நினைத்திருக்கிறாளோ? இளம் வயதுடையவர்களைப் பார்த்தால் என் மீது வெறுப்பும் அலட்சியமும் தோன்றினாலும் தோன்றும். இனி சோமுவையோ சோமுவைவிட வயதில் சிறியவர்களையோ இந்தப் பக்கமே அண்டவிடக் கூடாது...அவளை அதிகம் வெளியே செல்ல அனுமதிப்பதுகூட ஆபத்து... என்ன செய்யலாம். . . ?

அட பாவி! விருந்துக்கு வேறு கூப்பிட்டு விட்டேனே. மாப்பிள்ளை மாதிரி வந்து நிற்பானே. இளம்மனைவி இருப்பாளென்பது அவனுக்குத் தெரியுமே. . . .ஒரு வேளை இவள்தான் தவறி விழுந்தவள் என்பது அவனுக்குத் தெரியுமோ. . .தெரிந்து கொண்டே தெரியாதவன் போல் பேசினானோ. . . ?

“வெகு நாழியாக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். காதிலேயே விழாமல் என்ன பிரமாத யோசனை. எந்தக் கோட்டையைப் பிடிக்க?”–சுந்தரியின் குரல் அவரை சிந்தனையிலிருந்து தட்டி எழுப்பியது.

“எல்லாம் உன் மனக்கோட்டையைத் தான்”

“ஆமாம் எப்பவும் இந்தப் பேச்சுத் தான்...விஷயத்தைச் சொல்லுங்கன்னா...”

“ஒன்றுமில்லே, என் நண்பன் சோமுவை ஞாயிறு அன்று சாப்பிட வரச் சொல்லியிருக்கிறேன். அதைப் பற்றித் தான் யோசிக்கிறேன்...”

“அதற்கு யோசனை என்ன? வரட்டுமே விருந்து போட்டா போச்சு”

“அதற்கு யோசனை இல்லே.. இப்ப எப்படி அவனை வராமல் செய்வது என்று தான் யோசனை”.

“நன்றாக இருக்கிறது. வரச்சொல்லிவிட்டு வராமல் செய்ய யோசனையா? உங்கள் உபசாரம் பேஷாயிருக்கு! வந்தா வரட்டுமே. .”

அண்ணாசாமியின் மனமென்னும் அடுப்பு மறுபடி புகையத் தொடங்கியது. . . அந்தச் சோமுவை இவளுக்கு முன்பே தெரியுமோ? . அவனைத்தான் சாப்பிட வரச் சொல்லியிருக்கிறேனென்பதைத் தெரிந்துதான் பேசுகிறாளோ? தனக்குப் பிடிக்காததுபோல் காண்பித்துக் கொள்ளத்தான் “கிழக் குரங்கு” என்றெல்லாம் சொன்னாளோ. . எல்லாம் “மேலுக்கு”ச் சொன்ன வார்த்தைகளோ. . அந்தரங்கத்தில். . . சந்தேகப் பேய் உள் நுழைந்தது. அந்தத் தெளிவற்ற நிலையில் அவருக்கு ஒரே ஒரு சிந்தனை தான். “சோமுவை எப்படியாவது வராமல் செய்ய வேண்டுமே, அதற்கு என்ன வழி”

பாத்ருடுவின் “பாலசஞ்சீவினி” REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354.

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி

பம்பரம் சுழன்று சுழன்று வருவது போல் அதுவே தோன்றிக்கொண்டிருந்ததே தவிர, ஒரு முடிவும் தோன்றவில்லை அவருக்கு. தனது மனநிலையை தன் மனைவிக்குக்கூட காட்ட இஷ்டப்படவில்லை அவர்.

"உனக்குத்தான் உடம்பு சரியாக இல்லையே; ஜலதோஷம் தலைவலி என்று சொன்னையே! ஜுரம் வேறு வந்துவிட்டால். . . ?" என்று சமாதானத்துக்காக அந்தச் சாக்கை எடுத்து வீசினர், அண்ணுசாமி.

"அதற்காக. .. விருந்து போடுகிறேன் என்று ஒருவரை வரச்சொல்லிவிட்டு, ஒன்றுமில்லாமல் திரும்ப அனுப்பினல் நன்றாக இருக்காது. ஜுரமோ தலைவலியோ! எப்படியாயவது சமையல் செய்து விடுகிறேன். இதற்காக ஒன்றும் நீங்கள் அநாவசியமாகக் கவலைப்பட வேண்டாம். வந்துவிட்டுப் போகட்டும்" என்றாள், சுந்தரி.

அண்ணுசாமிக்கு இந்த பதில் திருப்தியளிப்பதற்கு பதிலாக ஆத்திரத்தையும் கவலையையும் கிளப்பி விட்டுவிட்டது.

அவர் உள்ளத்தின் வேகம் எதையுமே அவர் மனைவி சுந்தரி அறியவில்லை.

'பாவம்! நமது உடம்பைப் பற்றி எவ்வளவு கவலைப்படுகிறார்? அதற்காகத் தமது நண்பர்கூட வர வேண்டாமென்று நினைக்கிறார். நம்மிடம் இவ்வளவு அன்புள்ள இவரது மனம் கஷ்டப்படும்படி விடலாமா? எவ்வளவு உடம்பாக இருந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் விருந்துச் சமையல் செய்துதான் போட வேண்டும்' என்னும் அசைக்க முடியாத தீர்மானத்திற்கு வந்தாள் அவள்.

அதே சமயத்தில் அண்ணுசாமியும் தமது மனத்தில் அசைக்க முடியாத ஒரு தீர்மானம் செய்து கொண்டார்.

"நாளை ஆபீஸ் போனதும் முதல் காரியமாக சோமுவை நேரில் பார்த்தோ போன் மூலமாகவோ பேசி "அவளுக்கு" உடம்பு சரியில்லை என்று சொல்லி அவன் இங்கு வாரமல் தடுக்க வேண்டும். இவளிடம், 'சோமுவுக்கு உடம்பு சரியில்லையாம், எழுந்திருக்கவே முடியவில்லையாம். அதனல் வர முடியாதாம்' என்று சொல்லிவிட வேண்டும்" என்று உறுதி செய்து கொண்டார்.

மனம் ஓரளவு சமாதானமடைந்ததே தவிர, முன்பிருந்த குஷி உண்டாகவில்லை.

மறுநாள் ஆபீஸிற்குச் செல்லும் பொழுதே ஒருவிதக் குழப்பத்துடன் தான் போனர். முதல் வேலையாக சோமுவைப் பார்க்க வேண்டுமென்றுதான் நினைத்தார். ஆனல் ஆபீஸில் வேலைத் தொந்தரவு அதிகமாயிருந்தது. "இன்று நேற்று, முப்பது வருஷங்களாக நண்பனையிற்றே சோமு. எப்படி விஷயத்தைச் சொல்வது என்று சிறிது கலக்கமாகத் தான் இருந்தது. 'டெலிபோன்' தான் அதற்குச் சரியான வழி. நமது முக பாவத்தை வெளியில் காட்டாமலே பேசி முடிக்கத் தகுந்த சாதனம்" என்னும் தீர்மானத்திற்கு வந்தார் அண்ணசாமி. பல முறை முயற்சி செய்த பிறகே "லைன்" கிடைத்தது. தம்மை ஒரு மாதிரியாகத் தயார் செய்து கொண்டு பேசத் தொடங்கியபொழுது, சோமுவின் ஆபீஸிலிருந்து வேறு யாரோ பேசினர்கள். சோமுவுக்கு உடல் அசௌக்யமென்றும் ஆபீஸிற்கே வரவில்லை என்றும் தொ

ந்துகொண்டார். மறுநாளும் ஆபீஸிற்கு வந்ததும் முதல் காரியமாக "போன்" செய்ததில் அன்றும் சோமு வரவில்லை என்று தெரிந்தது. அதற்காக நேரில் வீட்டிற்குத் தேடிக்கொண்டுபோக இஷ்டப்படவில்லை அவர்.

சனிக்கிழமை மாலை வீட்டிற்கு வந்ததும்தான் அவருக்கு மறுபடி பழைய யோசனைகள், கவலைகள் எல்லாம் சினிமாப்படம்போல் தோன்றி ஒரே ஆட்டமாக ஆடத் தொடங்கின. "அவனை நேரில் போய்ப் பார்த்தாவது சொல்லாமல் வந்துவிட்டேனே. நாளைக்கு மாப்பிள்ளைபோல் வந்து நின்றால் என்ன செய்வது? முட்டாள்.. முட்டாள்..." என்று தன்னையே நொந்துகொண்டார். "அவன் வந்துவிடப்போகிறனே" என்பதை நினைக்க நினைக்க அவருக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தார். இதற்கு வழியை ஆலோசிப்பதிலேயே இரவு பூராவும் கழிந்தது.

காலையிலேயே அவர் மனைவி, இரவு விருந்திற்குத் திட்டம் போட்டு, காய் கறிக்காக அவரைத் துரத்தினள் மார்க்கெட்டிற்கு. மனத்திற்குள்ளாகவே முணுமுணுத்துக்கொண்ட அவர், அப்பொழுது நேரே கோடம்பாக்கமே சென்று சோமுவைப் பார்த்துச் சொல்லிவிட்டு வந்துவிடலாமா என்றுகூட நினைத்தார். ஒருவேளை அவன் வீட்டிலில்லாவிட்டால் என்ன செய்வது என்ற சந்தேகம் எழுந்தது. தான் போய் வந்தது தன் மனைவிக்குத் தெரிந்தால் விஷயம் பூராவும் சொல்லும்படி நேர்ந்துவிடுமே என்று தோன்றவே, கடைத்தெருவை நோக்கிச் சென்றார்.

அவர் மனம் கலங்கித் தவித்தது. தனக்கு எமனைப்போல் வரப்போகும் சோமுவை இனித் தடுக்க முடியாது என்று தோன்றியது. அதற்குமாறாக ஏதாவது வேறு வழிதான்கண்டு பிடிக்க வேண்டுமென்று தோன்றியது. அதற்கான வழி தன் மனைவியின் கவனத்தைக் கவர்ந்து, தன் மேல் அதிகப் பற்றுதல் உண்டாகும்படிச் செய்வதுதான் என்று தீர்மானித்தார் அண்ணுசாமி.

கண்ணுடிக்கு எதிரே உட்கார்ந்து கொண்டார். நன்றாக முகத்தை க்ஷவரம் செய்துகொண்டார். "வழவழ"வென்று இருக்கிறதா என்று பலமுறை தடவிப் பார்த்துத் திருப்தியடைந்தார். வாசனைத் தைலங்களை பாலைவனம் போன்றிருந்த தனது தலையில் தடவிக்கொண்டார். சீப்புக்கு அகப்படாத தலைமயிரை 'பிரஷ்'ஷினல் தடவி முன் பக்கமிருந்த மயிரால் பின்னல் விழுந்திருந்த வழுக்கையை மறைத்தார். பளபளப்பான உடைகளை அணிந்து தனது தளர்ந்துபோன உடலை மறைத்து அழகு செய்து கொண்டார். அலங்காரம் பூர்த்தியானதும் கண்ணுடியில் பார்த்துக்கொண்டு, மிக்க இளமையடைந்துவிட்ட திருப்தியுடன் புன்சிரிப்பு சிரித்துக்கொண்டார். அன்று அவருடைய அலங்காரத்துக்கும், வழக்கத்திற்கதிகமான கொஞ்சலுக்கும் காரணம் புரியாமல் திணறினள், சுந்தரி. நண்பர் வரப்போவதை உத்தேசித்து இப்பொழுதிருந்தே தயாராக இருக்கிறார் போலுமென்று நினைத்துக்கொண்டாள்.

மாலை நெருங்க நெருங்க அண்ணுசாமியின் உள்ளமும் "திக் திக்"கென்று அடித்துக்கொண்டது. பழையபடியே ஞாபகங்கள் தோன்றி அவரைக் குழப்பின.

"வந்து விடுவானே பாவி.." என்று ஆத்திரம் பொங்கும். "வாரமலிருக்க மாட்டான.." என்று ஏக்கம் தோன்றும். "வந்து விட்டால்.. என்ன ஆகும்.. என்ன விதமானவிபரீதங்கள்நேருமோ" இம்மாதிரி சுற்றிச்சுழன்று வட்டமிடும் எண்ணச்சுழல்கள் அதற்குமேல் ஓட்டமின்றி, மூக்குக் கயிறு இழுக்கப்பட்ட

மாடுபோல் நின்றுவிடும். வேறு ஒன்றும் தோன்றாமல் தனக்கு வேண்டிய–வேண்டாத– கடவுள்களை எல்லாம் நினைத்து நினைத்து "வாராமலிருக்க வேண்டுமே." என்னும் ஜபத்தில் இறங்கிவிடுவார்.

அதுவரை விருந்துத் தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சுந்தரியும் வெளியே வந்து சேர்ந்தாள். "குட்டி போட்ட பூனைபோல்" அவர் உள்ளேயும் வெளியேயும் அலைவதைப்பார்த்துவிட்டு, "ஏன், மணி 7–க்கு மேலாகிவிட்டதே.. உங்கள் நண்பர் வரவில்லையா?" என்று விசாரித்துக்கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்தாள் அவள்.

கணக்கற்ற யோசனைகளில் மூழ்கியிருந்த அண்ணாசாமி அப்பொழுதே சுய உணர்வு வரப்பெற்றார். ஹால் சுவரில் அவர் மனத்தைப்போலவே அடித்துக்கொண்டிருந்த கடிகாரத்தை நோக்கினார். மணி ஏழைவிட்டு நகர்ந்திருந்தது, அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. எதிலும் கச்சிதமாக நடந்து கொள்ளும் சோமு, தாமதம் செய்வதன் காரணம் அவருக்கே புரியவில்லை. தன் மனோநிலை வெளியே தெரியக்கூடாதென்ற எண்ணத்துடன் எழுந்து சென்று ரேடியோவைப் பெரிதாக்கிவிட்டு, கையில் பேப்பரை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தார் அண்ணாசாமி. கை மட்டும் பேப்பரை பிடித்துக்கொண்டிருக்க அப்படியே சிறிது அசந்துவிட்டார்.

"ரேடியோவிலே இங்கிலீஷ் நியூஸ் ஆரம்பிச்சாச்சு. எழுந்திருங்கோ சாப்பிட. இனிமேல் உங்கள் நண்பர் வருவாரென்று தோன்றவில்லை.. என்ன தூக்கமா...?" என்ற தனது மனைவியின் குரல் கேட்டு கண்களைக் கசக்கிக்கொண்டார். தனது உட்கார்ந்த நிலைத் தூக்கத்திலிருந்து தலையை இப்படியும் அப்படியுமாக ஆட்டித்தன்னை ஒரு மாதிரியாக விடுவித்துக் கொண்டார். அதுவரை தான் கண்டு கொண்டிருந்த கதம்ப சொப்பனங்களை மறந்துவிட்டு ஒரு கொட்டாவி விட்டார். ரேடியோவிலேயே அவருக்குப் பிடிக்காத அம்சம் .அந்த கட்டம்தான். ஆனால் அது அன்று மிகவும்சுவாரஸ்யமாக இருந்தது அவருக்கு. இனி நண்பன் வரமாட்டான் என்ற தைரியம் வந்தது. மனத்தில் இதுவரை அழுத்தி அவரைத் துன்புறுத்திய எண்ணக் குழப்பங்களிலிருந்து விடுதலையடைந்த மகிழ்ச்சியின் சின்னமாக ஒரு பெருமூச்சு எழுந்தது.

ஆறிப்போன விருந்தை ரசித்துச் சாப்பிட்டார். மனைவியிடம் உல்லாசமாகக் கொஞ்சினார். மாலை பூராவும் ஏதோ பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டவர் போன்று அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த அண்ணாசாமி, அளவுக்கு மீறி கொஞ்ச ஆரம்பித்ததன் மர்மம் சுந்தரிக்குப் 'புரியாத புதிரா'கவே இருந்தது. புருஷர்களின் மனோபாவமே அப்படிப்பட்டதுதானே என்று நினைத்துத் தன் மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டாள் சுந்தரி.

மறு நாள் காலை ஆபீஸிற்குக் கிளம்பிய அண்ணாசாமி, அசாத்திய திருப்தியுடன் காணப்பட்டார். உல்லாசமாகக் கோட்டை மாட்டிக்கொண்டு கிளம்பிய அவர் வாயிலிருந்து எப்பொழுதோ பார்த்த சினிமாவின் காதல் பாட்டு ஒன்று உருமாறி வெளிவந்துகொண்டிருந்தது.

அன்று ஆபீஸிற்குப் போனதும் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்ட அவர் மனம், நண்பரையே மறந்துவிட்டது. மாலையில் வழக்கம்போல் 'பீச்' ஸ்டேஷனுக்கு வந்ததும்தான் நண்பர் சோமசுந்தரத்தின் ஞாபகம் வந்தது அவருக்கு. காணவில்லையே அவரை என்று வருத்தம் உண்டாகவில்லை அவருக்கு; ஆச்சரியம் தான் உண்டாயிற்று. ஒரு நிமிஷத்தில் அந்த எண்ணத்தையே ஒதுக்கித் தள்ளிவிட்டு வீடு வந்து சேர்ந்தார்.

வழக்கம்போல் மனைவி கொடுத்த டிபனைச் சாப்பிட்டுவிட்டு, சோம்பலுடன் சோபாவில் சாய்ந்துகொண்டார் அண்ணாசாமி. அவர் காலி செய்த பாத்திரங்களை எடுத்துக்கொண்டு உள்ளே சென்ற சுந்தரி கையில் ஒரு கடிதத்துடன் திரும்பினாள். அதை அண்ணாசாமியிடம் கொடுத்துவிட்டு, பக்கத்தில் உட்கார்ந்தாள்.

அலட்சியமாகக் கடிதத்தைப் பிரித்த அண்ணாசாமியை உள்ளேயிருந்த கடிதம் துள்ளிக் குதிக்கச் செய்தது. கடிதத்துடன் ஒரு கல்யாண அழைப்புக் கடிதமும் இருந்தது. இரண்டையும் மாறி மாறிப் பலமுறை படித்தும் அவர் சந்தேகம் தீரவில்லை. மறுபடியும் படித்தார்.

"அன்புள்ள அண்ணாசாமிக்கு,

உன்னிடம் கூறியபடி விருந்துக்கு வராததற்கு வருந்தவேண்டாம். நான் அன்று மிகவும் முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டியிருந்தது. என் காதல் தெய்வமான கமலாவைக் காணும் பாக்கியம் கிடைத்தது. ஞாயிறன்று நிச்சயதார்த்த வேலையில் ஈடுபட்டிருந்ததால் வர இயலவில்லை. விவரமாகச் சொல்வதென்றால், கதையாகிவிடும். வருகிற ஞாயிறு வடபழனி ஆண்டவர் சந்நிதியில் கல்யாணம். நீ உன் மனைவியுடன் வந்திருந்து சிறப்பித்து விருந்து உண்ணவேண்டும்.

காதல் விஷயத்தில் நீ சொன்ன யோசனைகளுக்கும் புத்திமதிகளுக்கும், தைரியம் ஊட்டியதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன். விவரங்களை நேரில் பேசிக்கொள்வோம்.

அன்பன்
சோமு."

அவர் மனம் கிரகணம் விட்ட சூரியன் போல் பிரகாசித்தது. உள்ளத்திலிருந்த சந்தேகம் மறைந்து நிம்மதியான பெருமூச்சு ஒன்று எழுந்தது.

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்டபுண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

சைபால் CIBOL

ரமணீஸ் **பேபி கிரைப்**

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

★ தொடர் கதை ★

திரிவேணி

ஹேமா ஆனந்ததீர்த்தன்

14

'இடைவேளை' என்ற எழுத்துக்கள் திரையில் தோன்றியதும் தியேட்டர் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. ஜனங்கள் குபுலென்று கூட்டம் கூட்டமாக எழுந்து வெளியே செல்ல ஆரம்பித்தனர். ராஜு சோம்பல் முறித்துக்கொண்டே சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தான்.

அவனுக்குப் பின்னால் இரண்டாவது வரிசையில் உட்கார்ந்திருந்த இளைஞன் ஒருவன் அவனைப் பார்த்ததும், "ஹலோ!" என்று கூறிச் சிரித்துக்கொண்டே எழுந்து வந்தான்.

ராஜுவும் மரியாதைக்குச் சிரித்தானே ஒழிய, அவன் யாரென்று சட்டென ஞாபகம் வரவில்லை. முகம் மாத்திரம் எங்கேயோ பார்த்த முகம் மாதிரி இருந்தது.

"ஹலோ மிஸ்டர் ராஜு, என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே, அந்த இளைஞன் ராஜுவுக்குப் பக்கத்தில் இருந்த காலி நாற்காலியில் வந்து உட்கார்ந்தான்.

ராஜுவுக்கு மிகவும் கூச்சமாக இருந்தது. அவன் அணிந்திருந்த உயர்தர ட்வீட் சூட்டும், சில்க் ஷர்ட்டும், கையில் கட்டியிருந்த ரிஸ்ட்வாச்சும், விரல்களுக்கிடையே அலட்சியமாகப் பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டும் வாழ்க்கையை நன்றாக ரசித்து அனுபவிக்கிறவன் என்பதைக் காட்டிற்று.

"அதற்குள்ளே மறந்து விட்டீர்களா? நீங்கள் பத்மாவின் ஹஸ்பெண்ட்தானே?" என்று அவன் தொடர்ந்து கேட்டான்.

"ஆமாம்!" என்று சொல்லிவிட்டு ராஜு தன் மூளையைக் குடைந்து கொண்டான். பத்மாவைப் பற்றிக் கேட்பதால் யாரோ அவளுக்குச் சொந்தமாகவோ தெரிந்தவனாகவோ இருக்க வேண்டும். 'பத்மா' என்று அவ்வளவு உரிமையுடன் குறிப்பிடுவதனால் அவளுக்கு மிகவும் தெரிந்தவனாக இருக்க வேண்டும்? அப்படி யார்...?

திடீரென்று அவனுக்கு ஞாபகம் வந்தது. 'ஆம்; அவனாகத்தான் இருக்க வேண்டும்' என்று நிச்சயித்துக்கொண்டு, "நீங்கள்...சேகரன்தானே?" என்று கேட்டான்.

"க்வைட் ரைட். அப்படியானால் நீங்கள் என்னை மறக்கவில்லை. ஒரே ஒரு முறைதான் நாம் சந்தித்திருக்கிறோம். இல்லையா?"

"ஆமாம்; கல்யாணத்தின்போது பார்த்ததுதான். பிறகு நீங்கள் வரவே இல்லையே வீட்டுப் பக்கம்?"

"எங்கே ஸார், வரவே முடியவில்லை. மேலும், வரவும் பிடிக்காமல் போய்விட்டது. உங்களுக்கு பூர்வ சரித்திரம் எல்லாம் தெரிந்திருக்குமென நினைக்கிறேன்."

ராஜு ஒரு மாதிரியாகத் தலையை அசைத்துவைத்தான். 'தெரியும்' என்று சொல்லவும் விரும்பவில்லை; 'தெரியாது' என்று சொல்லவும் விரும்பவில்லை. அந்த விஷயத்தைப் பற்றியே ராஜு அவனோடு பேச விரும்பவில்லை.

"முதலில் யாரோ என்று சந்தேகித்து விட்டீர்கள் போலிருக்கிறது. ஆனால், உங்கள் மேல் நான் தவறு சொல்ல முடியாது. கல்யாணத்தின்போது எவ்வளவோ பேரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்திருப்பார்கள். அந்த மாதிரிதான் நானும் ஒருவன். என்னை நீங்கள் எப்படி ஞாபகம் வைத்துக் கொள்ள முடியும்? ஆனால் நீங்களோ மாப்பிள்ளை. யூ வேர் தி சென்டர் ஆப் அட்ராக்ஷன் தட் டே!" என்று மடமடவென்று பொழிந்து தள்ளினான் சேகரன்.

ராஜு பேச வேண்டுமென்ற தேவையே அவனுக்கு இல்லை போலிருந்தது. வெறுமென தலையை அசைத்தாலோ, ஒரு புன்னகையை நெளியவிட்டாலோ அதுவே போதும் அவனுக்கு. மேற்கொண்டு பேசிக்கொண்டே போனான். நான்கு வார்த்தைக்கு ஒரு வார்த்தை ஆங்கிலம் கலந்தே அவன் பேசியது ராஜுவுக்கு வேடிக்கையாக இருந்தது. ஏனெனில், அவன் பேச்சிலே இயற்கை லாகவம் இருக்கவில்லை. வேண்டுமென்றே, ஆங்கிலப் பதங்களை உபயோகிக்க வேண்டுமென்பதற்காகவே, அப்படிப் பேசுகிறான் என்பது நன்றாகத் தெரிந்தது.

"அடடா, என்ன முட்டாள் நான்! பேசிக்கொண்டே மரியாதையை மறந்து விட்டேனே? ப்ளீஸ் எக்ஸ்யூஸ் மி. டூ யூ லைக் டு ஸ்மோக்?" என்று சிகரெட் கேஸை எடுத்து ராஜுவின் முன் நீட்டினான். ரோல்டு கோல்டு கேஸ் பளபளவென்று பிரகாசித்தது.

"வேண்டாம்; பழக்கமில்லை" என்று ராஜு மறுதளித்தான்.

"பழக்கமில்லையா? ஆச்சரியமாக இருக்கிறதே. நீங்கள் எந்த காலேஜில் வாசிக்கிறீர்கள்?"

"பிரெஸிடென்ஸி."

"பிரெஸிடென்ஸி! பிரஸிடென்ஸியில் வாசிப்பவர் ஸ்மோக் பண்ணுமலிருப்பது ஆச்சரியம்தான். பரவாயில்லை. இன்றைக்கொரு நாள் ருசித்துப் பாருங்களேன்."

"வேண்டாம். இவைகளெல்லாம் பிடித்துக்கொண்டுவிட்டால் பிறகு விடாது."

"அது வாஸ்தவம்தான். நானும் அப்படித்தான் விளையாட்டாக ஆரம்பித்தேன், இந்தப் பழக்கத்தை. இப்போது அது என்னோடு விளையாட ஆரம்பித்துவிட்டது. ஒரு நாளைக்கு நான்கு பாக்கெட் இல்லாமல் என்னால் முடியாது."

ராஜு பேச்சை மாற்ற எண்ணி, "படம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

சேகரன் தன் தலையை விரல்களால் அழுத்தியவாறே, "ஓ! டெரிபிள் போர். தலைவலி எடுத்துவிட்டது. நான் சாதா

ஹோமியோபதி

வைத்தியம் மிகச் சிறந்தது சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடியது தமிழில் தபால்மூலம் குறைந்த செலவில் இவ்வைத்திய முறையைக் கற்றுக்கொள்ள இதுவே கடைசி சந்தர்ப்பம் விருப்பம் இருந்தால் முழு விவரங்களுக்கு இன்றே எழுதுங்கள்

ஹோமியோபதி ஹௌஸ், S. W.
77, ராமகிருஷ்ணமடம் ரோடு, மதராஸ்-28.

ரணமாகத் தமிழ் படங்களுக்கும் போகும் வழக்கம் கிடையாது. இன்றைக்குத் தெரியாமல் யார் பேச்சையோ கேட்டுக்கொண்டு, இங்கே வந்து மாட்டிக்கொண்டுவிட்டேன்."

"தமிழ்ப் படமென்றால் உங்களுக்கு அவ்வளவு வெறுப்பா?"

"தமிழ்ப் படங்கள் மாத்திரம் என்ன? ஹிந்திப் படங்களும்தான். இரண்டையுமே நான் பார்ப்பதில்லை. எனக்குப் பிடித்தது இங்கிலீஷ் படங்கள்தான். அவர்களிடமிருந்து இந்தத் தொழிலில் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது மிஸ்டர் ராஜகோபால்."

"ராஜு என்று என்னைக் கூப்பிடுங்களேன் போதும். அதிகம் மரியாதையை நான் விரும்புவதில்லை."

"அந்த விஷயத்தில் நானும் உங்களுடன் சேர்ந்தவன். அரை மணி நேரப் பழக்கம் போதும் எனக்கு. உடனே தோள் மேல் கை போட்டுக்கொண்டு ஏக வசனத்தில் பேசும் அளவுக்கு நெருக்கம் ஏற்படுத்திக்கொண்டு விடுவேன்........ இப்போ நீயே இப்படிச் சொன்னதைப் பற்றி எனக்கு ரொம்ப சந்தோஷம் ராஜு" என்று சிரித்துக்கொண்டே சொன்னான்.

"நீங்கள் மயிலாப்பூரில்தானே இருக்கிறீர்கள்?" என்று கேட்டு வைத்தான் ராஜு. உண்மையில் அவனுக்கு அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையே இல்லை. ஆனாலும் சேகரனோடு ஏதாவது பேசத்தான் வேண்டும் போலிருந்தது. ஆகவே, எதையாவது கேட்டு வைப்போமே என்று கேட்டு வைத்தான்.

"ஆமாம்; என்ன, என்னைச் சொல்லிவிட்டு நீ மாத்திரம் நீங்கள், தாங்கள் என்று பேசுகிறாயே? இது நியாயமில்லை!"

"நீங்கள் என்னைவிடப் பெரியவர் இல்லையா?"

"இருக்கட்டுமே! அதனால் நான் ஒன்றும் கிழவனில்லையே! உன்னைவிட நான்கோ ஐந்தோ வயது பெரியவனாக இருப்பேன். என்னையும் நீ ஒருமையிலேயே பேசலாம்."

"சரி; அப்படியே" என்று ராஜு ஒத்துக்கொண்டான்.

அதற்குள்ளாக விளக்குகள் அணைந்து படம் மீண்டும் ஆரம்பிக்கவே, அவர்கள் சம்பாஷணை நின்றது. இருவரும் படத்தைக் கவனிப்பதில் ஈடுபட்டனர். சேகரன் ஒரு சிகரெட் முடிந்ததும் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டே இருந்தான்.

படம் முடிந்து விளக்குகள் எரிய ஆரம்பித்ததும், எல்லோரும் எழுந்து செல்ல ஆரம்பித்தனர்.

"நம்முடைய ஜனங்களுக்கு இன்னும் அந்த வெள்ளைக்காரனுடைய கட்டுப்பாடு வரவில்லை ராஜு. பாரேன், திரையில் தேசீயக் கொடி காட்டிக்கொண்டிருக்கிறான். ஒவ்வொருவனும் அதை லட்சியம் செய்யாமல் எழுந்து போய்க்கொண்டிருக்கிறான். மேனாட்டான் அப்படிச் செய்வானா என்று கேட்கிறேன்" என்று சேகரன் காரமாகவே சொன்னான்.

ராஜு முறுவலித்தபடியே தலையை அசைத்து, தன் அங்கீகாரத்தைத் தெரிவித்தான்.

சேகரன் தொடர்ந்தான்: "பஸ்ஸைப் பிடிக்க ஓட வேண்டுமே. கும்பல் சேருவதற்குள் ஸ்டாண்டுக்குப் போய் பஸ்ஸைப் பிடித்துக்கொண்டுவிட வேண்டும். அதற்குத்தான் இவ்வளவு அவசரம்!"

"பாவம், அவர்களுக்கு அவர்கள் கவலை. பஸ் கிடைக்காவிட்டால் இரண்டு ரூபாயோ, மூன்று ரூபாயோ டாக்ஸிக்கோ, ஆட்டோ ரிக்‌ஷாவுக்கோ அழுதாக வேண்டுமே!" என்று ராஜு ஜனங்களின் பக்கமாகப் பரிந்தான்.

"வாஸ்தவம்" என்று சேகரன் ஒப்புக்கொண்டான்.

இருவரும் தியேட்டர் வாசலுக்கு வந்தனர்.

"அப்போ நான் விடை பெற்றுக்கொள்ளட்டுமா சேகரன்? உங்களைப் பார்த்தது ரொம்பவும் சந்தோஷமாயிற்று" என்று ராஜு சேகரனிடம் சொன்னான்.

"மறுபடியும் 'உங்கள்' வருகிறதே?"

"ஓ! உன்னைப் பார்த்தது ரொம்பவும் சந்தோஷமாயிற்று. போதுமா?" என்று ராஜு சிரித்துக்கொண்டே சொன்னான்.

"நோ, நோ. நீ எப்படிப் போகப் போகிறாய்?"

"பஸ்தான்."

"சரியாப் போச்சு. வா, வா. காரில் ஏறிக்கொள். உன்னைக் கொண்டு போய் வீட்டில் விட்டுவிட்டு நான் போகிறேன்" என்று சேகரன் ராஜுவை அழைத்தான்.

"வேண்டாம் சேகர். மயிலாப்பூர் எங்கே, புரசவாக்கம் எங்கே? உனக்கு வீண் சிரமம். நான் இப்படியே பஸ்ஸில் போய்விடுகிறேன்" என்று ராஜு மறுத்தான். ஆனால் சேகரன் அவனை விடவில்லை. வலுக்கட்டாயமாகக் காருக்கு அழைத்துச்சென்று ஏற்றிக்கொண்டான். கார் புரசவாக்கத்தை நோக்கி ஓடிற்று.

"உன் கதையையெல்லாம் நான் படித்திருக்கிறேன் ராஜு. எல்லாக் கதைகளுமே எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று சேகரன் சொன்னான். அதைக் கேட்டு ராஜுவுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்" என்று சொல்லும்போதே, ராஜுவுக்கு சேகரன் மேல் பிரியம் ஏற்பட்டுவிட்டது.

"நிச்சயமாகத்தான். வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை. முதல் முதலில் உன் கதையைப் படித்ததுமே உன்னைப் பாராட்ட வேண்டுமென்று தோன்றியது. ஆனால், சந்திக்க முடியவில்லை. ஓரிரண்டு சமயங்களில் உன்னை வழியில் எங்காவது பார்ப்பேன். அப்போதெல்லாம்கூட உன்னைக் கூப்பிட்டு உன்னோடு பேச வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இருந்தாலும் நீ என்ன நினைத்துக்கொள்வாயோ என்ற பயத்தால் பேசாமல் போய்விடுவேன்."

"ஏன், அப்படி நினைக்கும்படி என்ன இருக்கிறது?"

"ஒன்றுமில்லை. ஆனால் லீலாவும், பத்மாவும் என்னைப்பற்றி உன்னிடம் என்னவெல்லாம் சொல்லி வைத்திருக்கிறார்களோ? என்னுடைய சில சுபாவங்கள் எல்லாம் அவர்களுக்குப் பிடிக்காது."

சேகரனைப் பற்றி லீலா எழுதியிருந்ததெல்லாம் ராஜுவுக்கு அப்போது நினைவுக்கு வந்தன. ஆனால், அதையெல்லாம் வெளிக்காட்டிக்கொள்ளாமல், "லீலாவோ, பத்மாவோ இதுவரை உன்னைப்பற்றி



நண்பர்:

ஆபீஸ்லே ஏதோ பிசகு பண்ணிட்டீராமே! பிசகை ஒப்புக்கொண்டு விடுங்களேன்......மன்னிச்சுடுவாங்க!...

மற்றவர்:

ஏழெட்டு பிசகுலே எந்தப் பிசகுன்னு தெரியல்லியே சார்!...... அதுனாலேதான் யோசிக்கறேன்....



சில்லறை விற்பனைக்கான
கிளை ஆபீஸ்கள்:
285, சைனபஜார் ரோடு,
மதராஸ்
&
71, பாண்டி பஜார்,
தியாகராய நகர்.

என்னிடம் பேசியதேயில்லை. உனக்கு பத்மாவைக் கொடுக்க வேண்டுமென்று கொஞ்ச நாள் பேச்சுவார்த்தை இருந்ததாகவும், பிறகு ஏதோ காரணத்தினால் அது நின்றுவிட்டதாகவும் மாத்திரம் தெரியும்" என்றான்.

"ஏதோ காரணம் என்ன? என்னை அவர்களுக்குப் பிடிக்காமல் போனதுதான் காரணம். அவர்களைச் சொல்வானேன்? என் மாமா ராமசுவாமிக்கே என்னைப் பிடிக்காமல் போய்விட்டது! வேறொன்றுமில்லை—நான் எல்லாரோடும்—ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி—சகஜமாகப் பழகுவேன். எனக்குப் பெண் நண்பர்கள் அதிகம். அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. என் வீட்டில் என் தாயாரைப் பார்க்கப் பல பெண்கள் வருகிறார்கள். அவர்களோடெல்லாம் நான் தாராளமாகப் பேசிப் பழகியதுதான். ஒருவர் மூலமாக ஒன்பது பேர் பழக்கமாகிறது. இதற்காக என்மீது தப்பபிப்ராயம் கொண்டால் நான் என்ன செய்யமுடியும்? என்ன ராஜு நான் சொல்வது?" என்று ராஜுவின் தோள்மீது கையைப் போட்டபடிக் கேட்டான்.

ராஜு பதிலொன்றும் சொல்லாமல் தலையை மாத்திரம் ஆட்டிவைத்தான்.

"பெண்களுடன் தாராளமாகப் பேசுவதனால் மாத்திரம் ஒருவன் மீது குற்றம் சாட்டிவிடலாமா? ஒரு பெண்ணைத் தொடுவது என்பது அவ்வளவு சுலபமா ராஜு?" என்று கேட்டான்.

அவனுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. ஆகவே, பேச்சை வேறு வழியில் திருப்ப முயன்றான்.

"இத்தனை நாள் நான் உன்னை எங்கும் சந்திக்கவே இல்லையே. வெளியூர்களுக்கெல்லாம் அடிக்கடி போகவேண்டியிருக்குமோ?" என்று கேட்டான்.

"அடிக்கடி என்ன? பெரும்பாலும் நான் சென்னையில் இருப்பதே கிடையாது. எங்கேயாவது வெளியூர்களில் தான் சுற்றிக்கொண்டிருப்பேன். பம்பாய், கல்கத்தா, டில்லி—இங்கெல்லாம் மாசத்துக்கு ஒரு தடவை போகாமல் இருக்கமாட்டேன்."

"ஊம்" என்று ஆச்சரியப்பட்டான் ராஜு.

"ஆமாம் ராஜு; என்ன இருந்து என்ன பிரயோஜனம்? என்னை யாரும் மதிக்கமாட்டேனென்கிறார்கள். படிப்பில்லை; ஊர் சுற்றுகிற சோதா என்றுதான் நினைக்கிறார்கள்."

"என்ன பிஸினஸ்?"

"நான் செய்யாத பிஸினஸ்ஸே கிடையாது. காண்ட்ராக்ட், புரோக்கர், ஷேர் மார்க்கெட், கமிஷன்—எவ்வெரி திங்! சொன்னால் நம்புவாயோ மாட்டாயோ? இன்றைக்கெல்லாம் நான் படித்தது மூணாவது பாரம் வரையிலும்தான். ஆனால், மாதம் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்கிறேன். எந்த எம். ஏ. சம்பாதிக்கிறான் காட்டு பார்ப்போம்."

ராஜு வாய் திறவாமல் கேட்டுக் கொண்டே இருந்தான். சேகரன் மேலே மேலே பேசிக்கொண்டே போனான்.

வீடு வந்ததும்தான் கார் நின்றது. அவன் பேச்சும் நின்றது.

"உள்ளே வந்துவிட்டுப் போயேன்" என்று ராஜு சேகரனை அழைத்தான்.

"வேண்டாம் ராஜு; வேண்டாம். என்னை வற்புறுத்தாதே. இன்னொரு நாள் வருகிறேன். நான் இங்கே வந்ததாகவே வீட்டில் சொல்லாதே. நான் வரட்டுமா?" என்று காரை ஸ்டார்ட் செய்துவிட்டான் சேகரன்.

"சரி, அப்படியானால் மறுபடியும் சந்திப்போம்" என்று கூறி, ராஜு கைகூப்பவே, கார் புறப்பட்டது.

"யார் கூட வந்தே? காரில் வந்தாப்லே இருந்ததே?" என்று ராஜு உள்ளே நுழையும் போதே லீலா கேட்டுக் கொண்டே எதிரே வந்தாள்.

"ஒரு காலேஜ் நண்பனுடன்" என்று கூறிச் சிரித்தான் ராஜு.

"பொய்."

"பின் நீதான் சொல்லேன் பார்ப்போம்."

"நான் கவனிக்கவில்லை. ஆனால், காலேஜ் நண்பன் என்று நீ சொல்வது பொய் என்று மாத்திரம் தெரியும்" என்றாள் லீலா.

அதற்குள்ளாக பத்மாவும் அங்கே வந்து சேர்ந்தாள்.

"சொல்லட்டுமா? ஆச்சரியத்தினால் மூர்ச்சை போட்டு விழுந்துவிடப் போகி



ராஜுவுக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது. அந்தப் பேச்சை அவன் தொடர விரும்பவில்லை. தொடர்ந்தால் இன்னும் அது எப்படி வளருமோ என்று

றீர்கள் ஜாக்கிரதை!" என்று ராஜு வேடிக்கையாக அவர்களை எச்சரித்தான்.

"ஒரு சமயம் மைசூர் மகாராஜாவின் காரோ? இல்லாவிட்டால் ஜவஹர்லால் நேருவின் காரோ?" என்று பத்மா 'அழகு' காட்டினாள்.

"நான் வந்தது சேகரன் காரில்!"

'ஆ...ங்' என்று லீலா பத்மா இருவருமே ஆச்சரியப்பட்டுத்தான் போனார்கள்.

"அவன் எங்கே கிடைத்தான் உனக்கு?" —லீலா கேட்டாள்.

"சினிமாவுக்குப் போயிருந்தேன். பக்கத்து சீட்டில் உட்கார்ந்திருந்தான்."

"அவன் மாத்திரம் தனியாகத்தான் வந்திருந்தானா...அல்லது..." என்று பத்மா இழுத்தாள்.

"கூட 'எதாவது ஒண்ணை' இழுத்துக்கொண்டு வந்திருந்தானா" என்று லீலா அதை முடித்தாள்.

"தனியாகத்தான் வந்திருந்தான். என்ன பேச்சுப் பேசுகிறான் என்கிறாய்! ஓயவே மாட்டேனென்கிறான்."

"ஆமாம், அவன் பேசக் கேட்கவேண்டுமா? பேசிப் பேசி ஊரையே மோசம் பண்ணுவதுதானே அவனுக்கு வேலை!" என்றாள் லீலா.

"ஆனாலும் நீ ரொம்ப மோசம் லீலா. ஏன் அவனை இப்படிக் கரித்துக்கொட்டுகிறாய்? அவனைப் பார்த்தால் நல்லவன் என்றுதான் எனக்குப் படுகிறது."

"சரிதான் அவன் பேச்சில் மயங்கிவிட்டீர்கள்போலிருக்கிறது. நன்றாகக் குல்லாய் போட்டிருப்பான்." என்று பத்மா சொன்னாள்.

"என் கதைகளையெல்லாம் படித்திருக்கிறானாம். ரொம்பவும் அவனுக்குப் பிடித்திருக்கிறது என்று சொன்னான்."

"பார்த்தாயா? அதுதான் அவன் கெட்டிக்காரன் என்பது? சரியான அஸ்திரத்தைத்தான் உபயோகித்திருக்கிறான். எழுத்தாளர்களுக்கு அவர்கள் கதைகளை யாராவது புகழ்ந்துவிட்டால் போதுமே! அவ்வளவுதான் உலகத்தையே தூக்கிக் கொடு என்றாலும் கொடுத்துவிடுவார்கள்" என்றாள் லீலா.

"அப்படியெல்லாம் ஒன்றும் என்னிடம் எதிர்பார்த்து அவன் சொல்லவில்லை லீலா. அப்படித்தான் அவனுக்குக் கொடுக்கும்படி என்னிடம் என்ன இருக்கிறது?"

"என்னமோப்பா. அவன் சிநேகம் உனக்கு வேண்டாம். நான் அவ்வளவுதான் சொல்லுவேன். மெதுவாக அப்படியே கத்தரித்துக்கொண்டுவிடு" என்று லீலா சொன்னாள்.

"நல்ல வேளை, இப்பவெல்லாம் முந்தி போல் இங்கே வருவதில்லை" என்றாள் பத்மா.

"இனிமேல் இந்தச் சாக்கு பிடித்துக்கொண்டுவிடப் போகிறான்" என்று லீலா பயந்தாள்.

ராஜு தன் உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பிட வந்தான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, லீலா சொன்னாள்: "இன்னும் பத்து நாளில் இவர் வந்துவிடுவார் போலிருக்கிறது."

ராஜு அவள் முகத்தைப் பார்த்தான். நான்கு மாதம் கழித்துக் கணவர் ஊரிலிருந்து வருகிறார் என்றால் மனைவிக்கு எவ்வளவு துடிதுடிப்பும் ஆனந்தமும் பொங்க வேண்டும்! ஆனால் லீலாவின் முகமோ?...அதைப் பார்க்கவே அவனுக்கு வேதனையாக இருந்தது.

'ஐயோ வந்துவிடப் போகிறாரே!' என்ற பயமும் வெறுப்பும்தான் அவள் முகத்தில் தேங்கியிருந்ததைக் கண்டான். 'பாவம் லீலா! அவள் தாம்பத்ய வாழ்க்கை இப்படிப் பாலைவனமாகவா போக வேண்டும்!' என்று மனம் நொந்துகொண்டான்.

"கடுதாசி வந்ததா?" என்று கேட்டான்.

"கடுதாசி போட்டு வாழ்ந்தார் அவர். நாலு மாசமாய் இல்லாத கடுதாசி, இப்போ போட்டுடப் போறாரா?"

"பின்னே எப்படிச் சொல்லுகிறாய், வந்துவிடுவாரென்று. எங்கே இருக்காராம் இப்போ?"

"கூடப் போயிருக்கிறாரே நடேசய்யர். அவர் சம்சாரம் வந்திருந்தாள் இன்றைக்கு சாயங்காலம். அவள்தான் சொன்னாள். சிந்திரியில் இருக்கிறார்களாம் இப்போ. இன்னும் ஏதோ நான்கைந்து ஊரைப் பார்த்துக்கொண்டு வந்துவிடப் போகிறார்களாம்."

"ஊம்" என்று மாத்திரம் சொல்லிவிட்டு ராஜு சாப்பாட்டிலேயே கவனமாக இருந்தான்.

"அவர் வந்து இது தெரிந்ததும் இனி என்ன அமர்க்களம் பண்ணப் போகிறாரோ? நினைத்தாலே குடல் நடுங்குகிறது" என்றாள் லீலா.

"என்ன பைத்தியக்காரி லீலா நீ? அவர் வந்து என்ன செய்ய முடியும்? ஒன்

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ 5. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

றும் செய்யமாட்டார். விஷயம் அறிந்து சந்தோஷம்தான் படுவார். அவர் ஊரை விட்டுப் போய் நாலு மாசம் ஆகிறது. உனக்கு ஆறு மாசம் ஆகப்போகிறது, இல்லையா? அப்புறம் என்ன?" என்றான் ராஜு.

பத்மா கவலை தோய்ந்த முகத்துடன் இருவரையும் பார்த்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

ராஜு பேச்சை மாற்ற நினைத்து, "என்ன லீலா, டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்தும் டானிக்கும் ஒண்ணும் பிரயோஜனமில்லைபோலிருக்கே. பத்மாவின் உடம்பு தேறவே இல்லை. அப்படியே தானே இருக்கு!"

"இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் பார்ப்போம். டானிக் உடம்பில் ஒட்ட வேண்டாமா? நீ அதற்குள் அவசரப் பட்டாயானால்?"

"அவசரப்படுகிறேனா? இரண்டு மாசமாக சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள் ஒரு டானிக்கை. கொஞ்சமாவது குணம் தெரிய வேண்டாமா? முகத்தில்கூட ஒரு பிரகாசத்தைக் காணோமே? மூஞ்சி வாடியேதான் இருக்கிறது. பெரிய டாக்டர் யாரிடமாவது காட்டினால் தேவலை என்று நினைக்கிறேன்" என்றான்.

"ஒன்றும் வேண்டாம். சும்மா சும்மா டாக்டருக்கு ஏன் பணம் கொட்டிக் கொடுக்க வேண்டும். உடம்பு தேறினால் தேறட்டும். இல்லாவிட்டால் இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். யாரிடம் இங்கே அப்படிப் பணம் கொழுத்துக் கிடக்கிறது?" என்று பத்மா வெறுப்போடு சொன்னாள்.

ராஜு, லீலா இருவருக்குமே அவள் அப்படிப் பேசியது மிக்க வேதனையை அளித்தது. பத்மா கொஞ்ச நாளாகவே இப்படி வெறுப்புடனும் சலிப்புடனும் பேசி வந்ததை இருவரும் கவனித்திருந்தனர். தன் உடம்பு கெட்டுப் போய்விட்டதே என்ற வருத்தம்தான் பத்மாவை அப்படியெல்லாம் பேசச் செய்திருக்க வேண்டும்.

"பணத்தைப் பற்றியெல்லாம் உனக்கேன் கவலை பத்மா? அது எங்கள் பொறுப்பு. நீ இனிமேல் இப்படியெல்லாம் பேசாதே. நாங்கள் செய்கிறபடி செய்துகொள்" என்றாள் லீலா. சொல்லும்போதே அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. கண்களில் ஜலம் தேங்கி விட்டது.

ராஜு சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்தான்.

'டேபிள் லைட்'டைப்போட்டுக்கொண்டு மேஜை முன் உட்கார்ந்து, 'என்ன படிக்கலாம்' என்று யோசித்தான். எதிலுமே மனம் செல்லவில்லை. உள்ளத்தை ஏதோ பாரம் அழுத்திக்கொண்டே இருந்தது.

லீலா கர்ப்பமுற்றிருக்கிறாள் என்ற செய்தி தெரிந்ததிலிருந்து அந்த வீட்டில் மூவர் மனத்திலும் உற்சாகம் மறைந்துவிட்டது. போதும் போதாததற்கு பத்மாவின் உடல்நிலை வேறு.

மூன்று பேரும் உட்கார்ந்து வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசுவதும் சிரிப்பதும் மிகவும் அபூர்வமாகிவிட்டன. எப்பொழுதாவது தப்பித் தவறிக் கொஞ்ச நேரம் விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்து விட்டார்களென்றால், உடனே எப்படியோ துயரம் சூழ்ந்து கொண்டுவிடும் அவர்களை.

"நான் இருக்கிற இருப்புக்கு இந்த சிரிப்பும் விளையாட்டும் என்ன வேண்டிக் கிடக்கிறது" என்று இருந்திருந்தாற் போல் லீலா அலுத்துக் கொள்வாள். எல்லோர் மனமும் சூம்பிவிடும்.

லீலா அன்று செய்யவிருந்த விபரீத காரியத்தை நினைத்துக்கொண்டு விட்டாலோ ராஜுவின் உடலில் நடுக்கம் ஏற்பட்டுவிடும். இப்பொழுதும் அவனுக்குப் பயம்தான். லீலா எந்த நிமிஷத்தில் என்ன செய்துகொண்டு விடுவாளோ என்ற திகிலிலேயே அவன் காலத்தைக் கழித்து வந்தான். ஆனால் தன்மேலும் பத்மா மேலும் ஆணையிட்டு அவள் இனிமேல் அப்படிச் செய்யக்கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கிறானல்லவா? அவளும் சத்தியமாக இனிமேல் அதுபோன்ற பைத்தியக்காரச் செய்கையைச் செய்ய மாட்டேனென்று சொல்லியிருக்கிறாளல்லவா? அதை நினைத்துக்கொண்டு ஆறுதலடைவான்.

லீலா, ராமசுவாமி வந்ததும் என்ன சொல்லுவாரோ என்று பயப்படும்போதெல்லாம் அவன் அவளுக்குத் தேறுதல் சொல்லி வந்தானே தவிர, கொஞ்சம் கொஞ்சமாக அவன் மனத்திலேயே பயம் தோன்ற ஆரம்பித்தது. 'அவர் மனத்திலே தகாத சந்தேகம் உதித்துவிட்டால்? அதன் பலாபலன்கள் என்ன ஆகும்? அவர் முரடராயிற்றே. முன்பின் யோசியாமல் ஏதாவது செய்துவிட்டாரென்றால்?' என்று நினைக்கும்போதே அவனுக்குக் குலை நடுங்கும்.

"என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய், படிக்காமல்" என்று கேட்டுக் கொண்டே லீலா அங்கே வந்தாள்.

"ஒன்றுமில்லையே அப்படி....கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கொண்டு பிறகு படிப்பேன்."

"பரீட்சை எப்போ?"

"இந்த மாசம் 19-ந் தேதி."

"இன்னும் பத்து நாள்கூட இல்லையே. நன்றாகப் படித்திருக்கிறாயா?"

"இனிமேல்தான் படிக்க வேண்டும்."

"அதைப் பார்த்துக்கொள் ராஜு, உனக்குப் படிப்புதான் முக்கியம். மற்ற கவலைகளையெல்லாம் நீ மனதில் வைத்துக் கொள்ளாதே" என்றாள் லீலா.

ராஜு அவள் முகத்தைப் பார்க்கவில்லை. பார்க்கும் தைரியம் அவனுக்கிருக்கவில்லை. பார்த்தால் அதில் படர்ந்திருக்கும் துயரம் அவன் மன வேதனையைத்தான் அதிகரிக்கும்.

"படி படி. நான் போகிறேன்" என்று கூறி லீலா அவ்விடம் விட்டகன்றாள்.

"மணி பத்தடிக்கப்போகிறது. இனிமேல் என்ன படிப்பு அக்கா? படுத்துக் கொள்ளச் சொல். காலையில் எழுந்திருந்து படிக்கட்டும். சினிமாவுக்குப் போய்விட்டுவந்து படித்தால் கண் எரியும்" என்று சொன்னாள் பத்மா.

"உன் பெண்டாட்டி சொல்கிறாள் அப்பா. அப்படியே செய். இந்தா பாலைக் குடித்துவிட்டுப் படுத்துக்கொள்" என்று பால் டம்ளரைக் கொண்டுவந்து அவன் மேஜை மீது வைத்தாள்.

ராஜு அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அவள் உதடுகளிலே சுளித்த புன்னகையிலேதான் எவ்வளவு வாட்சி! அவன் உள்ளம் கருகியது அதைக் கண்டு.

(தொடரும்)

பாலஸாதி

குழந்தைகளின் சகல நோய்களுக்கும் சிறந்தது.

★

எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.
அல்லது கீழ்க்கண்டவருக்கு எழுதுக:

Vaidya J. G. VARADH Office, NADIAD

ஸ்டாகிஸ்டுகள்: **தாமோதர் & கம்பெனி,**
113, நைனியப்ப நாயகன் தெரு, சென்னை-3.

நிலையாக இருந்து, நேருக்கு நேராகக் காணும் விஷயங்களையே, ‘கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய்’ என்று தள்ளச் சொல்லும் காலத்தில், கண்களால் எல்லோராலும் காண முடியாத பொருள்களை நம்பச் செய்வது கடினம்தான்.

என்னையே எடுத்துக்கொள்ளுங்களேன். எனக்கு முதலில் பேய்களில் அறவே நம்பிக்கை இல்லாமல் இருந்தது. நண்பர்கள் ராமமூர்த்தி, டேவிட் முதலியவர்கள் சொன்ன தகவல்களிலிருந்து என் மனமும் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தலைப்பட்டது. எனினும் பேய்கள் எங்காவது இருந்தாலும், நாம் கற்பனையின் மூலமாக அநேக பேய்களைச் சிருஷ்டித்துப் பயப்படுகிறோம், அல்லது பயப்படச் செய்கிறோம். இந்த உண்மை வெளியாகும்பொழுது பேய்களைப்பற்றிய சந்தேகம் வலுத்து, ‘இதெல்லாம் வெறும் மனப் பிராந்தி, பேய்களே கிடையாது’ என்று முடிவும் கட்டுகிறோம்.

நண்பர் ராமமூர்த்தி திடீரென்று வெளியூருக்குப் போய்விட்டார் என்று முன்பு சொன்னேன், அல்லவா? நல்ல வேளை, அவர் திரும்பி வந்துவிட்டார். பம்பாய்க்குப் போயிருந்தாராம். என்னிடம் சொல்லிக்கொண்டு போக முடியவில்லையாம். நேற்றுக் காலை, எப்படிப் போனாரோ, அப்படியே எதிர்பாராமல் வந்து நின்றார்.



அக்கினித் தலையன்

கேதாரி

கொஞ்ச நேரம் அவருடைய வழக்கமான ஹாஸ்ய வெடிகளை உதிர்த்துவிட்டு, பம்பாயைப்பற்றிப் பேசத் தொடங்கினார். மாதுங்கா என்கிற தமிழர்கள் வசிக்கும் பகுதி ‘நம்ப மயிலாப்பூர்’ மாதிரியே இருக்கிறதாம். அங்குள்ள தமிழர்களின் உபசாரத்தைப்பற்றி மணிக்கணக்கில் பேசினார். மற்றவர்களை உபசரித்து அனுப்புவது என்ற தமிழருக்கே உள்ள தனிப்பண்பாடு, இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களை விட்டுவிட்டு, பம்பாய்த் தமிழர்களிடம் சென்றுவிட்டதாம். இதை அவர் மிகவும் அழுத்தமாகச் சொன்னதும், என் மனைவியை அழைத்து, ராமமூர்த்திக்கு ஒரு தம்ளர் நல்ல காபியாகப் போட்டுக் கொண்டு வரச் சொன்னேன்.

பிறகு எங்கள் பேச்சு, வழக்கமாகப் பேசும் விஷயத்திற்கு வந்தது.

“உங்களுக்காக நிறைய சமாசாரம் வைத்திருக்கிறேன். எதை முதலில் சொல்வது என்றுதான் புரியவில்லை.”

“உங்களுக்கா புரியவில்லை! எங்காவது நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்ததா அல்லது செய்கைகளைத்தான் கண்ணால் பார்த்தீர்களா? . . ?”

“ஆமாம், நேரில் பார்த்த ஒரு பேயைப் பற்றியே கூறுகிறேன்” என்று சொல்லி விட்டுச் சிரித்தார். ஏன் சிரிக்கிறார் என்று எனக்குப் புலனாகவில்லை. அவரையே கேட்டதற்கு, “இது ஒரு மிகவும் வேடிக்கையான பேய்” என்றார்.

“பேய்களிலேகூட வேடிக்கை செய்பவைகள் இருக்கின்றனவா?” என்று நான் ஆச்சரியப்பட்டேன். “கதையைக் கேளுங்கள்—எல்லாம் பிறகு தெரியும்” எனக் கூறிவிட்டு, கதையைத் தொடங்கினார்:—

“பம்பாயில் எனக்கு வாசுதேவன் என்ற நண்பர் ஒருவர் இருக்கிறார். ரொம்பவும் நெருங்கிய சிநேகம். அவர் வீட்டில்தான் நான் தங்கி இருந்தேன்.

நான் ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் போனேன் என்பதால், ஏதோ மர்மம் என்று நினைக்க வேண்டாம். ஒரு இரவில் ‘பாஸ்’ கிடைத்தது. அதன் கெடு முடியும் தறுவாயில் இருந்ததால், உடனே கிளம்பவேண்டி இருந்தது. வாசுதேவன்தான் அதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்.”

“ரயில்வேயை ஏமாற்றிவிட்டீர்கள்!” என்றேன் நான், இடைமறித்து.

“வடக்கே ஏமாற்றுகிறதைப் பார்த்தால், இதெல்லாம் ஒன்றுமே இல்லை. சொந்தத் தமக்கையை, சம்சாரம் என்று சொல்லிக்கொண்டு, ஒருவன் ஊருக்கு ‘பாஸில்’ அழைத்துக்கொண்டு போகிறான். இந்த அநியாயம் எங்காவது உண்டோ? உலகமே, நன்மை தனக்கு உண்டு என்றால், யாரையும் ஏமாற்றத் தயங்குவது இல்லை” என்ற ராமமூர்த்தி, மேலும் தொடர்ந்து சொன்னார்:—

“பம்பாயைச் சுற்றிப் பார்த்த பிறகு, வாசுதேவன் அந்த நகரத்திற்கு அருகில் உள்ள இடங்களுக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கே உங்களைப்பற்றிய பேச்சு அடிக்கடி வரும். உங்களைப்பற்றி என்றாலே, பேய்களைப் பற்றியும் என்று சொல்லவேண்டுமா? ஒரு நாள் வாசு என்னிடம், ‘மத்ரான் என்று இங்கே ஒரு கோடை ஸ்தலம் இருக்கிறது. அங்கு ஒரு பங்களாவில் ஏதோ பேய் இருக்

கிறது என்று யாரும் தங்குவது இல்லை. மத்ரானையும் பார்த்துவிட்டு அந்த வீட்டைப் பற்றியும் விசாரிப்போம். உங்களை இந்த சமாசாரம் கொண்டு வந்ததற்காக உங்கள் நண்பர் வாழ்த்துவார்' என்று சொன்னார்.

உடனே போக வேண்டும் என்று நான் துள்ளவும், நண்பர் 'அப்படிச் சுலபமாகப் போக முடியாது. இரண்டு ரயில்கள் மாறி, சிறிய பெட்டி வண்டியில் சென்று, மலைமீது ஏற வேண்டும். இன்னும் சில நண்பர்களும் வருகிறார்கள் சேர்ந்து போகலாம்' என்றார்.

அவர் நண்பர்களில் ஒரு கிறிஸ்தவரும் இருந்தார். அவர் கையில் நீளத் துப்பாக்கியொன்று இருந்தது. ஏதோ ஆகார நோக்கம்போல் இருக்கிறது என்று நினைத்தேன்.

மத்ரான்தான் எவ்வளவு அழகிய இடம்! நெடிது வளர்ந்த பாறைக்கூட்டங்கள்; பள்ளத்தாக்குகள். குனிந்து பார்த்தால்—வயிற்றைக் கலக்குகின்றதே! அழகிய மரங்கள். புஷ்பச் செடிகள். மேடும் பள்ளமுமான பாதையில், இளம் குதிரைகள்மீது சிறிய பிள்ளைகள் கம்பளிச் சட்டைகளை அணிந்துகொண்டு சவாரி செய்யும் காட்சிகள்.

மனதிற்கு இதமான இந்தப் பிரதேசத்தைச் சுற்றிப் பார்த்தோம். கடைசியாக, அந்தப் பங்களாவிற்கு வந்து சேர்ந்தோம். அதனுடைய சொந்தக்காரர், பம்பாயில் இருப்பவர், அந்த வீட்டுமாலிக்கு ஒரு கடிதம் கொடுத்து இருந்தார்; எங்களுக்கு அங்கே சகல உபசாரங்களும் செய்து, செளகர்யமாக வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று. மாலி எங்களைக் கண்டதும் பரிதாபமாகப் பார்த்தான். 'இரவுகூடத் தங்கப் போகிறீர்களா?' என்று கேட்டான். நண்பர் வாசு என்னைப் பார்த்தார். 'இருந்து பார்த்துவிட்டுப் போகலாம். நாம்தாம் நாலு பேர்கள் இருக்கிறோமே' என்றேன் நான். இருப்பதாகவே முடிவும் செய்தோம். கையில் கொண்டு வந்த ஆகாரப் பைகளைக் காலிசெய்து அன்னப் பைக்குள் இட்டு நிரப்பிவிட்டு, மீண்டும் மீண்டும் அந்த மலைப்பிரதேசத்தைச் சுற்றி வந்தோம். களைப்பே தெரியவில்லை.

இரவு வந்தது.

மாலி மட்டும் அன்று மாலை எங்களை எச்சரிக்கவில்லை என்றால், பேய் பற்றிய நினைவுகூட எங்களுக்கு வந்திருக்காது. அவ்வளவு தூரம் எங்களை ஈர்த்துவிட்டது அந்தப் பிரதேசம். அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம்.

மாலி எங்களை இரவு வேளையில், நடுநிசியில், தனியாக எங்கும் போக வேண்டாமென்று எச்சரித்தான். எதற்கு வேண்டுமானாலும் வெளியே படுத்திருக்கும் தன்னை அழைக்கும்படிக் கூறினான். உள்ளே ஏதாவது விழுந்தாலும் பயப்பட வேண்டாம் என்றும் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல எங்களுக்குள் ஏதோ ஒரு பய உணர்வு தோன்ற ஆரம்பித்தது. நண்பர் வாசு, 'ஏன் இந்த விஷப் பரீட்சை? நான் வெளியே மாலியோடு படுத்துக்கொள்ளப் போகிறேன்' என்றார்.

> 'கேதாரி' எழுதி வரும் பேய்க் கதைகளில் ஆறாவது இது. பாத்திரங்களும், சம்பவங்களும் மாறுபடினும், பேய் பற்றிய ஆராய்ச்சியாளர்கள், அதே நபர்கள்தாம்.

'நீங்கள்தானே இதைச் சொல்லி அழைத்து வந்தீர்கள்?'

'நான் என்ன சொன்னேன்? ஏதாவது தகவல் இருந்தால் விசாரிக்கலாம் என்று சொன்னேன்; இங்கேயே இரவு தங்கி, அந்தப் பேயைப் பிடித்துக்கொண்டு போய், உங்கள் நண்பரிடம் கொடுங்கள் என்றா சொன்னேன்?' என்று பொருமினார்.

கிறிஸ்துவ நண்பர், 'பயப்படாதீர்கள் வாசு! என் கையில் துப்பாக்கி இருக்கிறது. அது என் கண்ணில் பட்டால் சுட்டுவிடப் போகிறேன்' என்றார்.

மாலி, 'உங்களில் யாராவது நடப்பதைக் கண்டு தூக்கக் கலக்கத்தில் சுட்டுவிடப் போகிறீர்கள்! ஜாக்கிரதை!' என்றான்.

'அப்புறம் ஒன்றுக்கு இரண்டாக இங்கு சுற்ற ஆரம்பிக்கும்' என்றார் இன்னொரு நண்பர்.

எப்படியோ வாசுவைக் கட்டாயப்படுத்தி, எங்களுடன் படுக்கச் சொல்லிவிட்டோம். அவர் இலேசில் இணங்குகிற ஆசாமி அல்ல. மாலி, தான் இரவில் ரோந்து சுற்றப்போக வேண்டியிருக்கும் என்று கூறவும், தனியாக வெளிவராந்தாவில் படுக்க அஞ்சி, உள்ளே வர இணங்கினார்.

அந்தப் பங்களாவின் அமைப்பைப் பற்றிச் சொல்லவில்லையே. முன் முகப்பு எண்பதடி அகலம் இருக்கும். நீளம் சுமார் இருநூறு அடி இருக்கலாம். வெளிச் சுவரைத் தாண்டி இருபதடி போனால், வீட்டின் முன் வராந்தாவிற்குள் கொண்டுவிடும். அதையும் தாண்டி அப்பால் போனால், இரண்டு பக்கத்திலும் இரு பெரிய அறைகள், அதற்கு அப்பால் ஒரு பெரிய ஹால், அதைக் கடந்து சமையல், உக்ராண அறைகள்.

நாங்கள் ஹாலில் படுத்திருந்தோம். அந்த ஹாலின் இரு பக்கங்களும் காம்பவுண்டு சுவரை நோக்கி இருந்தன. ஏராளமான ஜன்னல்கள் இருந்ததால், வெளியே நடப்பவர்களை நாம் படுத்தபடியே காண முடியும்.

பத்து மணிக்கு மேலாயிற்று. நாள் முழுவதும் நடந்த அசதியால் எங்களை அறியாமலே உறக்கம் அமுக்கியது. நானும் கிறிஸ்தவ நண்பரும் மெள்ளப் பேசிக்கொண்டு இருந்தோம். தூங்காமல் இருந்து அங்கே நடப்பவைகளைக் கவனிக்க வேண்டும் என்பது எங்கள் அவா. நல்ல நடுநிசி நேரத்தில், கனத்த இருளுக்குத் தூபம் போடுவதுபோல் மிகவும் ஜில்லென்று காற்று வீசி, எங்களை நடுங்கச் செய்தது. வெடவெடப்பின் இன்ப வேதனையில் நண்பர் வாசு உடலை வளைத்துச் சுருட்டிக்கொண்டு உறங்கினார்.

ஜன்னல் கதவுகளைச் சாத்திவிடலாமா என்ற பிரச்னை வேறு எழுந்தது. அவைகளை மூடினால், உள் இருள் அதிகமாகி பீதியை எழுப்பும் என்ற காரணத்தினால் அந்த எண்ணத்தைக் கைவிட்டோம்.

இவ்வாறு நாங்கள் பேசிக்கொண்டே இருக்கும்பொழுது, சமையல் அறையிலிருந்து அடுக்கடுக்காக இருந்த பாத்திரங்கள் சரிந்து விழுவதுபோன்ற சப்தம் கேட்டது. அந்த நிலையில் எங்கள் நிலை எப்படி இருந்திருக்கும் என்று விவரிக்கவே முடியாது. எதையும் கண்டு பயப்படாத எனக்கே, உள்ளூர நடுக்கம் எடுத்தது. தெரியாமல் இங்கே வந்து அகப்பட்டுக்கொண்டோமே என்று வருந்தினேன்.

ஹாலுக்கு வெளியே யாரோ ஓடுவது போன்ற சப்தம். பிறகு உக்ராண அறையிலிருந்து கட்டைகள் உருளுவன போன்ற ஒலி கேட்டுக்கொண்டே இருந்தது.

கிறிஸ்தவ நண்பர் தைரியமாக 'மாலி, மாலி' என்று குரல் கொடுத்தார். உடனே விளக்கை ஏற்றினோம். மாலியும் கை விளக்குடன் உள்ளே வந்து, எங்களுடன் கொஞ்ச நேரம் இருந்தான்.

'தினம் இதே தொல்லைதான். ஆனால், எனக்குப் பழக்கமாகிவிட்டது. எங்கள் வீட்டில், நான் இதன் கையில் அகப்பட்டுத்தான் ஒரு நாள் சாகப்போகிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இங்கு வந்தவர்கள் யாரும் இரண்டு நாட்கள் தங்கியதில்லை.'

அவன் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, உக்ராண அறையில் மீண்டும் சப்தம் கேட்டது.

'ஒரு வேடிக்கை பாருங்கள்' என்று கூறிவிட்டு, மாலி கைத்தடியைத் தரையில் அடித்தான். உக்ராண அறையில் இருந்த சப்தம் ஓய்ந்து, பதிலாக ஓரடி அடித்த சப்தம் கேட்டது. ஏதாவது எதிரொலியாக இருக்கலாம் என்று நான் கருதினேன். பிறகு மறுபடியும் ஏதோ சப்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

மதன் மஞ்சரி

மாத்திரைகள்

58 வருஷப் பிரசித்தியுடையது. நரம்புத் தளர்ச்சி, மலச் சிக்கலைப் போக்கி ரத்த விர்த்தியும், தேக புஷ்டியும் தரும். ஞாபகசக்தி உண்டாகி சந்தோஷ வாழ்க்கைப் பெறுவீர். 40 மாத்திரைகள் கொண்ட டப்பி ஒன்றின் விலை ரூ. 1—4—0

மதன் மஞ்சரி பார்மஸி

ராம்வாடி, கல்பாதேவிரோட், பம்பாய்-2

ஏஜண்டுகள்:— சென்னை: மேத்தா டிரேடிங் கார்ப்பொரேஷன், 52, பந்தர் தெரு; சேலம்: மாடர்ன் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்; பெங்களூர்: சிடி மெடிகல் ஸ்டோர்ஸ், சிக்பேட்

மற்ற இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

'பயப்படாதீர்கள். இது ஒன்றும் செய்யாது' என்று கூறிவிட்டு, வாசலுக்குப் போனன்.

இத்தனை சப்தங்களுக்கிடையில் வாசுவும் மற்ற நண்பரும் நன்ருகத் தூங்கிக் கொண்டுதான் இருந்தார்கள்.

விஞ்ஞானிகள் எதையெல்லாமோ கண்டுபிடிக்கிருர்கள். இதைப் பற்றி ஒன்றும் ஆராய்ச்சி செய்து முடிவு சொல்லவில்லையே என்று பேசிக்கொண்டிருந்தோம்.

துப்பாக்கி நண்பர் அச்சப்படாமல் எழுந்து, ஜன்னல் வழியாக வெளியே நோக்கினர். அவருக்குப் பின்னல் நான் நின்று கொண்டிருந்தேன். எங்கள் கண்களுக்கு ஒன்றும் தென்படவில்லை. பிறகு வந்து படுத்தோம். சற்று கண் அயர்ந்திருப்போம் என்று நினைக்கிறேன். திடீரென்று இருவரும் விழித்துக்கொண்டு 'ஏதோ சப்தம் கேட்டதே' என்று ஆச்சாியத்தோடு வினவினேம். என்ன மாதிரி சப்தம் என்று தெளிவாகத் தொியவில்லை. ஏதோ கனத்த குரலில் ஊதிய மாதிரி இருந்தது. பாட்டாி விளக்கைப் போட்டு, அறை முழுவதும் பார்த்தால், என்ன வேடிக்கை! ஜன்னல் கதவுகளிலிருந்து ஜலம் சொட்டிக் கொண்டிருந்தது. ஜன்னலுக்குப் பக்கத்தில், உள்ளே ஜலம் கொட்டி ஓடியிருந்தது. மழை பெய்திருக்கப் பிரமேயமில்லை. வானத்தில் மப்பில்லை. தாரகைக் கூட்டங்களும் தெளிவாகத் தொிந்தன.

'பொல்லாத வீடுதான். பயம் இல்லாவிட்டாலும், தாங்க முடியவில்லை பாருங்கள்! மனிதனைக் குலைக்க இது போதாதா?' என்ருர் நண்பர்.

அப்பொழுது'பயம் இல்லாவிட்டாலும்' என்று சொன்னரே அந்த நண்பரையும், ஒரு விநாடி பேச்சு மூச்சற்றுப் போகும் படியான சம்பவம் நிகழ்ந்தது. எனக்கும் அப்படித்தான்.

பத்தடி உயரத்திற்குமேல் கன்னங்கரேல் என்ற உருவம். உடம்பின் பாகங்கள் தெளிவற்றுத் தொங்கியது போன்று இருந்தன. கைகளை இரு பக்கமும் நீட்டியபடி ஏதோ கம்பியில் நடப்பது போன்று ஹாலுக்கு வெளியே நடந்தது. அதன் தலையில் ஒரு அக்கினிச் சட்டி எரிந்து கொண்டிருந்தது. அந்தக் குளிாிலும் என் உடல் வியர்த்தது. 'ஹா ஹா' என்று அது மூச்சுவிட்டுக் கொண்டு போனபோது எங்கள் மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அது பக்கத்து ஜன்னல் வழியாகத் தொிந்தது. நான் ஏதோ அதைக் கவனிக்காது தூங்கியது போல், பாசாங்கு செய்தேன். அரைக் கண்ணைத் திறந்து, அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தீச்சட்டியின் ஒளியினல் விழுந்த ஜன்னல் கம்பிகளின் நிழல்கள் எங்கள் மீது ஊர்ந்து சென்றன.

அந்த உருவம் அப்பால் சென்றதும் நண்பர், என்னிடம் காதருகில், 'அடுத்த தடவை இங்கு அது தோன்றினல், சுட்டு விடப் போகிறேன்' என்ருர்.

நான், 'வேண்டாம், ஏதாவது பொிய ஆபத்து வந்துவிடப் போகிறது, செய்யாதீர்கள்' என்றேன் அவாிடம். அவர் கேட்கவில்லை. இருட்டிலேயே துப்பாக்கியைச் சாி செய்துவிட்டு, மெள்ள ஊர்ந்து ஜன்னலுக்கு அருகில் பதுங்கியபடி உட்கார்ந்து கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி அந்த உருவம் அப்பொழுது அங்கே தோன்றவில்லை. ஹாலின் வேறு பக்கத்து ஜன்னல் வழியாகச் சென்று மறைந்துவிட்டது. நண்பர் உட்கார்ந்தபடியே இருந்தார்.

நான் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தேன். இந்த அசட்டு மனிதனல் நமக்கும் மற்ற நண்பர்களுக்கும் ஏதாவது தீங்கு வந்துவிட்டால், என்ன செய்வது என்ற கலக்கம் என் உள்ளத்தைத் தின்றது.

பின்புறத்தில் கனைப்புடன் எக்காளச் சிாிப்பு என் இரத்தத்தை உறையச் செய்தது. நண்பர் அசையவில்லை.

கொஞ்சம் நேரமாயிற்று.

ஏதோ காலடிச் சப்தம் கேட்கவே, நண்பர், துப்பாக்கியை ஜன்னலின் மேல் வெளியே நோக்கியபடி வைத்துக் கொண்டு உட்கார்ந்தார். சில விநாடிக்கெல்லாம் அந்த உருவம் மெள்ள நடந்து, ஜன்னலுக்குச் சற்று தூரத்தில் நடந்து சென்றது.

நண்பர் துப்பாக்கியைத் தூக்கிவிட்டார். நான் திகைத்தேன். 'டுமீல்' என்ற சப்தம் கேட்டது. நண்பர்கள் எல்லோரும் எழுந்துவிட்டார்கள்.

சப்தம் கேட்டதும் அந்த உருவம் தலைச்சட்டியைக் கீழே வைத்துவிட்டு, 'என்னைச் சுடாதே, நான்தான் மாலி, சுடாதே' என்று அலறியது. உடனே விளக்கை ஏற்றினேம்.

'அப்படியே இங்கே வா' என்ருர் நண்பர், அதிகாரத்தோடு.

ஜன்னலுக்கு அருகில் அந்த உருவம் வந்தது. இந்த உயரம் மாலிக்கு ஏது? இது ஏதோ பொய் சொல்லித் தப்பிக்கப் போகும் பேய்; அல்லது, நம்மை வஞ்சனையால் தாக்கப் போகிறது என்று நான் நினைத்தேன். ஜன்னல் ஓரத்திற்கு வந்ததும், அந்த உருவம் தன்மீது போட்டிருந்த கறுப்பு அங்கியைக் கழற்றியது. மாலியும், அவன் கழுத்தில், கருடவாகனத்தில் அமரும் எம்பெருமான் மாதிாி ஒரு மனிதனும், தோன்றினர்கள்.

மாலி சொன்னன், வெட்கப்பட்டுக் கொண்டே: 'இந்த வீட்டுக்காரர் அடிக்கடிக் கடிதம் கொடுத்து அநேகம் பேரை இங்கு அனுப்பிவிடுகிருர். அவ்வாறு அனுப்பாதுபோனல் நான் இந்த வீட்டை வாடகைக்குவிட்டு, ஏதோ சம்பாதிப்பேன். 'ஆகையினல், வாடகை இல்லாமலும், எனக்கு லாபம் இல்லாமலும் இங்கு வருபவர்களை இது மாதிாி செய்து துரத்திவிடுவேனுங்க'.

நாங்கள் எல்லோரும் சற்று நேரம் பிரமித்து நின்ருேம்.

'உக்ராண உள்ளில் சப்தம் செய்தது நீதானே, ரொம்பச் சிரமப்பட்டுவிட்டாய்' என்ருர் நண்பர் கிண்டலாக, அந்த மாலியின் தோளிலிருந்து இறங்கியவனை நோக்கி. அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

ஃ ஃ ஃ

கதையை முடித்துவிட்டு நண்பர் ராமமூர்த்தி "இந்த விஷயம் எப்படி, பார்த்தீர்களா! நிஜப் பேயைக் காட்டிலும் இந்தப் போலிப் பேய் என்னைப் பயமுறுத்திவிட்டது. பிழைப்புக்குச் சிலர் கடவுளை நம்பியிருப்பதுபோல் இவன் பேயை நம்பியிருக்கிருன். துப்பாக்கி நண்பர் மட்டும் இல்லாமல் இருந்தால்..."

"இதுவரையில் பேசியதுபோல் அடித்து, பேய்வாதம் புாிய ஆரம்பித்துவிடுவீர்கள்..."

"அப்படிச் சொல்லாதீர்கள். உங்களிடம் மறைக்க வேண்டும் என்ருல், நான் இந்தச் சம்பவத்தையே சொல்லாமல் இருந்திருக்கலாம். இதே பேய் நண்பருடன் இன்னொரு பேய் ஆராய்ச்சி நடத்தச் சென்ருேம். நண்பர் இதே வேலையை அங்கு நடத்தப் பார்த்தார். ஆனல், வேறு விஷயம் நடந்துவிட்டது."

"விவரமாகச் சொல்லுங்கள், கேட்க ஆவலாக இருக்கிறது" என்று அவசரப்பட்டேன் நான்.

"அவசரப்படாதீர்கள். பிறகு, 'அந்த மாலியைப் பற்றி, வீட்டுக்காரராிடம் புகார் செய்ய வேண்டும்' என்று வாசு சொன்னர். நான்தான், "அந்த மாலிக்கும், இரவல் 'பாஸி'ல் பிரயாணம் செய்யும் எனக்கும் வித்தியாசம் அதிகமில்லை. அவரவர்கள் அவரவர்களுடைய சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி பிறரை ஏமாற்றுகிருர்கள். ஆகையால், அவனைக் கண்டித்துவிட்டுப்போகலாம்" என்று சொன்னேன். ஏன், இது நியாயந்தானே...?"

அவர் பேச்சை மாற்ற முயற்சிக்கிருர் என்பதை உணர்ந்த நான், "அந்தக் கதையைச் சொல்லுங்கள்" என்று வற்புறுத்தவும், "அடுத்த தடவை வரும் பொழுது" என்று கூறிக்கொண்டே போய்விட்டார் ராமமூர்த்தி.

தாயார் : பரீக்ஷை எல்லாம் பாத்து நன்ன எழுதிப்பிட்டு வாடா குழந்தை.

பையன் : பாத்து எழுதவிட மாட்டேங்கருளே ! அதாமமா ரொம்ப கஷ்டமா இருக்கு......

தெருவில் நடத்தை—யார் தவறு?

'சுமங்கலி'

"நம் நாடு பூரண சுதந்திரம் அடைந்ததாக எப்பொழுது கருதலாம்?" என்று பத்திரிகைநிருபர்ஒருவர்காந்திமகானைக் கேட்டதற்கு, அவர், "என்று நம் நகரங்களில் அழகிய ஆடை ஆபரணங்களை அணிந்த அழகிய மாது ஒருத்தி பயமில்லாமலும், துணையில்லாமலும், ஒருவரது ஹிம்ஸையின்றியும் இரவு பன்னிரண்டு மணிக்குத் தெருவில் நடமாட முடிகிறதோ, அன்றுதான் நம் மக்கள் பூரண சுதந்திரமடைந்ததாகக் கருதுவேன் நான்" என்று பதில் அளித்தாராம்.

நமது பட்டணங்களைப் பொறுத்த வரையில், அப்பொன்னாள் வருவதற்கு இன்னும் பன்னாள் ஆகும்போலத்தான் தோன்றுகிறது! பெண்மணிகள் எவ்வளவோ துறையில் முன்னேறியிருக்கிறார்கள், இன்று. ஆனால், இன்னும் அவர்கள் ஆண் பிள்ளைகளின் ஹிம்ஸையும், வாலிபர்களின் கிண்டல் தொந்தரவும் இல்லாமல் தெருவில், சுதந்திரமாக அவரவர் அலுவல்களைக் கவனிக்க முடியவில்லை என்பது அவமானப்பட வேண்டியதொரு விஷயமே.

சென்னையில் சமீபத்தில் சங்கீத பாடசாலைக்கு ரிக்ஷாவில் சென்று கொண்டிருந்த ஓர் இளம் பெண்ணை, வாலிபனொருவன் அவமானப்படுத்தியதாகப் பத்திரிகைகளில் படித்தோம். இதைப்போலவே நாகபுரியிலும், இன்னும் பல ஊர்களிலும் வாலிபர்கள் தெருக்களில் செல்லும் பெண்களிடம் ஆபாசமாக நடந்துகொண்டார்கள் என்றும் நாம் பத்திரிகைகளில் கண்டோம். 'இதை எப்படித் தடுப்பது?' என்ற பிரச்னையும் எழும்பியது. 'இக்கீழ்த்தர நடத்தையை மசோதாவினால் நிறுத்த முடியுமா?' என்றுகூட யோசித்தார்கள்.

அவ்வாலிபர்களோ, அல்லது சில வயது முதிர்ந்த பழைய காலத்து கட்டுப் பெட்டிகளோ பலர் இதற்குப் பெண்களையே காரணமாகப் பழித்தார்கள். 'அவர்கள் மெல்லிய உடை அணிந்து, நாகரீகமாக அலங்காரம் செய்து கொண்டு, ஒய்யாரமாக நடந்துசெல்வது தான் இதற்கு முக்கிய காரணம்' என்றார்கள். இன்று நாகரீகமான பெண்களைப் பழிப்பதே ஒரு பழக்கமாய்ப் போய்விட்டது. பெண்களின் உடையைப் பொறுத்திருக்கிறது நமது நாட்டுப் படித்த

ருல், நம் தேசத்து வாலிபர்கள் அயல் நாடுகளுக்கோ, கிராமங்களுக்கோ போவதற்கே லாயக்கில்லை என்பது தான் நிதர்சனமாகிறது. அயல் நாடுகளில் பெண்கள் நீச்சல் உடை அணிந்து கொண்டு மணிக்கணக்கில் கடற்கரையில் உலாவுகிறார்கள். கிராமங்களில் பெண்கள் ரவிக்கை அணியாமல், ஈரப்புடவையுடன் நீர் நிறைந்த குடம் சகிதமாகக் காட்சியளிக்கிறார்கள். அதனால், 'எங்கள் காம உணர்ச்சிகளை இவர்கள் கட்டுக்கடங்காமல் தாண்டிவிட்டார்கள்' என்று சொல்லி, அப்பெண்களிடம் மரியாதை தவறி நடப்பார்களா, இவ்வாலிபர்கள்? அப்படி நடந்தால், அயல் நாட்டுப் பெண் மணிகளானாலும் சரி, கிராமப் பெண்களானாலும் சரி; கூச்சல்போட்டு ஊரைக் கூட்டி அவ்வாலிபர்களின் உடம்புத் தோலை உரித்துவிட மாட்டார்களா? 'பட்டணத்துப் பெண்களுக்கு அவ்வளவு தைரியம் போறாது' என்று எண்ணித்தான் இந்தப் படித்த முட்டாள்கள், இப்படி நடந்துகொள்கிறார்கள் போலும்! அது மட்டுமல்ல; 'பட்டணத்துப் பெண்களுக்கு அவ்வளவு ஒழுக்கம் போதாது' என்றும் அவர்கள் எண்ணிவிடுகிறார்கள்.

எவ்வளவோ ஆங்கிலேயப் பழக்க வழக்கங்களை நாம் அனுசரித்து வருகிறோம். ஆனால், அவர்களது நல்ல பழக்கமான அறிமுகப்படுத்தும் கலையை நம் இளம் பெண்கள் அவ்வளவாக அறிந்து கொள்ளவில்லை. பக்கத்து வீட்டில் வசிப்பவரானாலும், ஒரே பஸ்ஸிலோ, டிரெயினிலோ பல வருஷங்களாகப் பிரயாணம் செய்தவர்களானாலும், ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தப்படவில்லையென்றால் ஆங்கிலேயர்கள் ஒருவருடன் மற்றவர் பழக்கம் வைத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால், நம் பட்டணங்களிலோ, பெண்கள் எல்லோரையும் சுலபமாக நம்பி சிநேகம் செய்து கொண்டு விடுகிறார்கள். ஒரு வாலிபர் பஸ்ஸில் உட்கார இடம் கொடுத்தாரென்றால், அவருக்கு வந்தனம் செலுத்திவிட்டு அதோடு அவரை மறப்பதைவிட்டு, பஸ்ஸெல்லாம் 'சளசள'வென்று அவருடன் பேசவோ, சிரிக்கவோ ஆரம்பித்துவிட்டால், அவ்வாலிபன் என்றுமே மற்ற பெண்களுடன் பேசிப் பழகாத காரணத்தால் அப்பெண் தன்னிடம் காதல் கொண்டு விட்டாள் என்று எண்ணி அவளுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்துவிடுகிறான்.

இதற்கெல்லாம் முதற் காரணம், ஆண்களும், பெண்களும் சிறு வயதிலிருந்தே, சகஜமாக வீட்டில் அண்ணன் தங்கைகள் ஒரு குடும்பமாகப் பழகுவது போல் பழகாததுதான். அதனாலேயே வெளியில் வந்தவுடன் வீட்டின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்ட இவ்விளைஞர்கள் காணாததைக்கண்டதுபோல் நடக்கத் துவங்குகிறார்கள். பள்ளிகளிலும், இவ்

கெமிஸ்ட்ரியும் சொல்லித் தருகிறார்களேயன்றி, திருமணமென்பது ஒரு பொறுப்புமிகுந்த விஷயமென்பதையும், மணமாகும் வரை பெண்களைத் தாய் தங்கைகளாகவே பாவித்து நடந்துகொள்ள வேண்டுமென்பதையும், பெண்களும் ஆண்களை அநாவசியமாகக் கவர்ச்சி செய்வது தவறு என்பதையும் சொல்லித் தருவதில்லை. இந்த அவல நிலை மாறி, ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பழிப்பதைவிட்டு, 'நன்னடத்தைதான் நம் தேசத்துக்கு மிகவும் அவசியமான செல்வம்' என்ற பெருநோக்குடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இதைச் சிறு வயதிலிருந்தே நம் இளைஞர்களுக்கு உணர்த்த வேண்டியது தாய் தந்தையரின் கடமையாகும். பள்ளிகளும் இந்தப் பொறுப்பை உணர்ந்து, நல்ல பண்பை வளர்க்க வேண்டும். இதுதான் இப்பிரச்னை தீரப் பரிகாரம் என்று நான் கருதுகிறேன்.

(வாசக அன்பர்கள் தங்கள் அபிப்பிராயத்தையும் கடிதம் மூலம் அறிவித்தால் மிகவும் உதவிகரமாக இருக்கும்.)

★ சொதி

கத்தரிக்காய் 5 பலம், உருளைக் கிழங்கு 5 பலம், பீன்ஸ் 2½ பலம், பட்டாணி 5 பலம், சீமைக்கத்திரிக்காய் 1, வாழைக்காய் 1, டபிள் பீன்ஸ் 5 பலம், காலிஃப்ளவர் 2½ பலம், காரட் 2½ பலம், பெரிய வெங்காயம் இரண்டு, இஞ்சி 1 பலம், எலுமிச்சம்பழம் ஒன்று, பயத்தம் பருப்பு 1 ஆழாக்கு, சிறிய தேங்காய் ஒன்று, பச்சை மிளகாய் ஐந்தாறு, கடுகு ஒரு தேக்கரண்டி, உளுத்தம் பருப்பு கொஞ்சம், உப்பு ருசிக்குத் தக்கபடி—இவைதான் வேண்டிய பொருள்கள்.

செய்யும் விதம்:

பயத்தம் பருப்பைத் தண்ணீரில் களைந்து மூன்றுழாக்கு தண்ணீரில் கொதிக்க வைக்கவும். காய்கறிகளை ஒரே அளவாகத் திருத்தவும். பருப்பு பாதி வெந்தவுடன் காய்கறிகளை அத்துடன் சேர்க்கவும். இப்போது உப்பையும் சேர்க்கவும். தேங்காயைத் துருவி, அப்பூவை அரைத்து, மூன்று தரம் பிழிந்து, தேங்காய்ப்பால் தனித்தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும். காய்கறிகள் பாதி வெந்ததும், இரண்டாந்தரம், மூன்றாந்தரம் பிழிந்த தேங்காய்ப்பாலை மட்டுமே அத்துடன் சேர்க்கவும். பிறகு இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, நெய்யில் வதக்கி, கடுகு, உளுத்தம் பருப்பை தாளித்து, அக்காய்கறிகள் வெந்த பின் சேர்க்கவும். இப்பொழுது முதல் பிழிந்த தேங்காய்ப் பாலைச் சேர்த்து, ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு கொதியை அடுப்பிலிருந்து இறக்கவும். எலுமிச்சம் பழத்தைத் திருத்திக் கொட்டை விழாமல் இந்தக் கொதியில் அதன் ரஸத்தைப் பிழியவும். இதைச் சாப்பாட்டுடனும், சப்பாத்தி, பூரி, தோசை ஆகியவைகளுக்குத் தொட்டுக்கொள்ளவும் சூடாகப் பரிமாறிக்கொண்டால் வெகு ருசியாக

அன்வாரி தெரு மசூதி பழுது பார்ப்பதற்கு பத்தாயிரம் ரூபாய், உள்ளூர் அரபு மதராஸாவிற்கு ஆறாயிரம், பாத்திமா பீ அநாதை விடுதிக்கு ஐயாயிரம்–இம்மாதிரியாக ஏராளமான நன்கொடைகள் தாராளமாக அளித்த ஷேக் மீரா ராவுத்தரிடம் ஆண்டவன் காட்டிவிட்ட சோதனைகள் என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. ஐந்து வேளை 'நமாஸ்' தவறாதவரும், எதற்கெடுத்தாலும் 'அல்லாஹுத்தாலாவின் செயல்' என்று பல்லவி பாடுபவருமான ராவுத்தருக்கு உண்டான இன்னல்கள், எனக்கோ அல்லது என் குடும்பத்திற்கோ நேர்ந்திருந்தாலும் நான் அவ்வளவு வாட்டமடைந்திருக்க மாட்டேன்.

மக்காவிற்கு 'ஹஜ்' யாத்திரை கிளம்ப ராவுத்தர் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்ததாக என் காதில் விழுந்தது. அவர் பம்பாய்க்குச் சென்று கப்பலேற ஒரு மாத காலம் தானிருந்தது. அந்த இடைக்காலத்தில் ராவுத்தரின் வாழ்க்கையில் பல பூகம்பங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்துவிட்டன. செய்கோனில் பலே ஜோராக நடந்து வந்த அவர் வியாபாரம் தடாலென்று படுத்துவிட்டதாக 'கேபிள்' பறந்தது. பர்மாவில் பெகு நகரிலிருந்த அவர் கடை, கொள்ளைக்காரர்களால் சூறையாடப்பட்டதாகச் சேதி செவிகளில் வீழ்ந்தது. ஏராளமாகப் பணத்தைப் போட்டு வைத்திருந்த உள்ளூர் பாங்க் தலைமுழுகி, தீபாவளி கொண்டாடிவிட்டது. ராவுத்தருக்கு வலது கை போன்றவனும், அவர் கைலிக் கடையை நிர்வகித்து வந்தவனுமான கரூர் கந்தசாமி கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு கம்மென்று கம்பி நீட்டிவிட்டான். ராவுத்தர் ஐ. பி. ஜாப்தாவில் சேர்த்துக்கொள்ள எத்தனிப்பதாக ஹேஷ்யம் நிலவியது.

நாணயமும், நேர்மையும் கொண்ட தர்மப்பிரபுவாகிய ஷேக் மீரா ராவுத்தருக்கு, அதுவும் அவர் புண்ணிய யாத்திரையைத் தொடங்கும் சமயத்திலே, இத்தகைய ஜபர்தஸ்த் 'அடிகள்' வீழ்ந்ததை யாரும் எதிர்பார்க்கவில்லை. அவருக்கு நெருங்கிய நண்பனும், ஆலோசனையாளனுமான நான், (அடியேன் ஒரு ரிடையர்டு சப் ரிஜிஸ்ட்ரார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.) ராவுத்தரின் மோசமான நிலைமையைக் கேள்விப்பட்டு, மதி மருண்டு, கதி கலங்கினேன். நேரிலே சந்தித்து ஆறுதலளிக்க வாக்கிங்–ஸ்டிக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

"அஸ்ஸலாமலேகும், நாயுடுகாரு! ஏது திடீர் விஜயம் விடியகாத்தாலே?" என்று புன்சிரிப்பு சிரித்த வண்ணம் என்னை வரவேற்றார் ராவுத்தர்.

அவர் வதனத்தில் சலனமோ, உடலில் நடுக்கமோ, பேச்சில் குழப்பமோ இல்லாதததைக் கண்டு, எனக்கு என்னமோ போலிருந்தது.

"சும்மா பார்த்துட்டுப் போக வந்தேன்" என்று சொல்லி, ஹி. . . ஹி. . . என்று வழக்கம்போல் சிரிப்

"வந்தது நல்லதாப் போச்சு. இன்றைக்கு ராத்திரியே கிளம்பி, பம்பாய் போய்விடத் தீர்மானித்துவிட்டேன். அடுத்த வாரம் ஏதோ ஒரு கப்பல் கிளம்புதாம் ஜெட்டாவிற்கு. . ."

எதிர்பாராத தாக்குதல்களிலிருந்து மீள முடியாத ராவுத்தர், திடீரென்று இப்படி முடிவு செய்துவிட்டார் என்று எனக்கு விளங்கிவிட்டது.

"ஏதோ ஆண்டவன் கட்டளைபோலும். தன் திருவிளையாடல்களுக்கு அப்பாவியாகிய உங்களையும் ஓர் இலக்காக வைத்து அந்த ரங்கநாதன் பரீட்சித்துவிட்டானே! அதுதான் எனக்குப் புரியவில்லை" என்று தழுதழுத்த குரலில் சொல்லி, விஷயத்தில் நேரடியாக இறங்கினேன். ராவுத்தர் வாய்விட்டுக் கடகடவென்று சிரித்தார்.

"உங்களைப்போன்ற நாணயமும் நேர்மையும் உடையவர் வாணிபத் துறையில் இருப்பார்களா என்று எனக்குச் சந்தேகம் சாயபு. ஒரு பாவமும், அபவாதமும் புரியாத உங்களுக்கு, இந்தக் கஷ்ட காலம் வந்தது ஏதோ நாங்கள் சொல்லுவதுபோல் பூர்வஜன்ம பலாபலன்களின் கோளாறுதானே" என்றேன் நான், உணர்ச்சியுடன்.

"நாயுடு, இப்போ நீங்க சொன்னீங்களே, அதில்தான் நீங்கள் பிசகுசெய்து விட்டீங்க" என்று ராவுத்தர் சொன்னதும், எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"என்ன!" என்றேன் நான் ஒரே திகைப்புடன்.

"பூர்வஜன்ம பலாபலனில்லை நாயுடு. இந்த ஜன்மத்திலே செய்துவிட்ட காரியம்தான் காரணம்" என்று சொல்லி ராவுத்தர் தொடர்ந்தார்: "நல்லா சம்பாதிச்சேன். ஆடம்பரமாக வாழ்ந்தேன். நான் விரும்பியபடியே, கடைசியாக

இப்படி நடந்தது என் மனச
கொடுத்துச்சு நாயுடு!"

"நிம்மதியா!" என்று தி
வாயைப் பிளந்து நின்றேன்

"பரிபூர்ணமான நிம்மதி ந
படின்னு சொல்றேன் கேளுங்
நிதானமாகச் சொல்லிவிட்டு,
தொடர்ந்தார்:

ஃ ஃ

"சுமார் இருபது வருஷத்
ஞலே நம்ம சிந்தாதிரிப்பே
நடந்த சம்பவம் நாயுடு! கிழிந்

யும், சல்லடைப் போன்ற கோலாலம்பூர் பனியனையும் உடுத்திக்கிட்டு பீடி, சுருட்டி பிழைச்சிட்டிருந்தேன். ஆயிரம் பீடி சுருட்டினா அரை ரூபாய் கிடைச்சுடும். அது செஞ்சு முடிக்கிறத்துக்குள்ளே இரண்டு உள்ளங் கைகளும் சிவந்து ரத்தம் கக்கிவிடும். அப்படி ஆரம்பிச்ச சீவனம் நாயுடு! அப்போ என்னைப் பார்த்தவங்க, "அதோ போறான் குண்டன்!" என்று பெருமையாகச் சொல்லுவாங்கோ. அப்படி மாலிஷ் பண்ணி கொழுகொழுன்னு வளர்த்தேன், இந்த உடலை. மொஹரம் பண்டிகையிலே

மசூதிக்குள்ளே நுழைஞ்சுட்டான். நானும் அவன் பின்னாலே புகுந்தேன். மக்ரீப் நமாஸ் முடிஞ்சு போனதாலே பள்ளி வாசல்லே யாருமில்லை. அந்தக் கயவன் அந்த இடத்திலே மாய்மா மறைஞ்சுபோனது ஒரே ஆச்சரியமாக இருந்தது. இந்தக் கலாட்டா இங்கே நடக்க, அந்தக் கிழவியும் பெரிய கூட்டமும் மசூதிக்கு முன்னாலே நின்னுகிட்டு ஒரே கூச்சல் போட ஆரம்பிச்சுடுச்சு. எல்லோரையும் வெளியே நிற்கும்படிச் சொல்லிவிட்டு, நான் மசூதி முழுவதும் தேட ஆரம்பிச்சேன். இடது கோடி

தேன். கூடப் பொறந்த பாழாய்ப்போன குணம், மறுபடியும் இந்தத் தொழிலிலே இறங்கும்படிச் செஞ்சுடுச்சு. என்னை மன்னிச்சு என்னைக் காப்பாத்துங்க. சாயபுமார் கோயிலிலே கெஞ்சுறேன்" என்றுசொல்லிவிக்கிவிக்கிஅழுதான்.என் மனசு இளநீர் போல இளகிப் போச்சு. "ஏதோ போறாத காலம். மறுபடியும் திருடிவிட்டான். எத்தனை வருஷம்



புலி வேஷம் போட்டா அசல் வரிப் புலி மாதிரி பாஞ்சு பாஞ்சு ஆடுவேன். ஆ. . . மா!. ரௌடிங்க கூட்டத்தோட நான் பழகினாலும் ஒரு கெட்ட குணம் என்னை ஒட்டவில்லை. ஆயிரம் பீடி சுருட்டுவேன். ஒரு பீடிகூடப் பிடிக்க மாட்டேன். தப்புத் தண்டாக்களுக்குத் தப்பித் தப்பி வாழ்ந்தேன். அப்படி இருந்தது என் வாழ்வு. ஒரு நாள் சாயந்திரம். சூரியன் அஸ்தமிக்கிற நேரம். வேலையெல்லாம் முடிச்சிட்டு, சிங்கண நாய்க்கன் தெரு வழியாக வீட்டுக்குத் திரும்பிகிட்டிருந்தேன். எனக்கு ஒரு பத்து கஜத்துக்கு முன்னாலே ஒரு கிழவி தள்ளாடிதள்ளாடிப்போயிட்டிருந்தாள். தெருவிலேஜனநடமட்டம்ஜாஸ்தியில்லை. வலது பக்கத்திலே யாரோ திண்ணையிலே உட்கார்ந்திருந்த ஒரு தடியன் பாய்ந்தான். கிளவி தொபக்னு கீழே விழுந்துட்டாள். அவளிடமிருந்த சின்ன டிரங்க் பெட்டியை எடுத்துக்கொண்டு, அந்தப் பயல் ஓட்டமெடுத்தான். அந்தக் காட்சியைக் கண்ணாலே பார்த்துக்கிட்டிருந்த இந்தச் சிங்கலடி சிங்கம் சீறாமலிருக்குமா? சும்மா வேங்கைபோலத் துரத்தினேன், அவன் ஓட, நான் துரத்த, கடைசியிலே அந்தத் தடிப்பயல் ஒரு வளைவு கொடுத்து, அய்யாமுதலித் தெரு

யிலே ஒரு சின்ன அறை இருந்தது எனக்குத் தெரியும். அங்கே தான் ஏணி, சுண்ணாம்புச்சட்டி, லோட்டா, டப்பா வைப்பாங்க. இரண்டு பெருச்சாளிகூட அங்கே குடி வைச்சுட்டிருந்தது. அந்தப் பேர்வழி அதுக்குள்ளே ஒளிஞ்சிருப்பான்னு நினைச்சு, உள்ளே காலடி வைத்தேன். அவன் சுவரோட சுவராக மூலையிலே நின்னுட்டிருந்ததைப் பார்த்தேன். 'அத்தாரிப்பாச்சா கொழுக்கட்டை' என்று வீர கோஷம் போட்டுக்கிட்டு இரண்டு முண்டாக்களையும் தட்டிக் கொடுத்துட்டு, அவன் மேலே பாய்ஞ்சு, அவன் பரட்டைத் தலையை இறுகப் பிடிச்சுக்கிட்டேன். தொபக்னு கையிலே இருந்த பெட்டியை அவன் கீழே போட்டுட்டான். அவ்வளவு தான். அவன் வயிற்றிலேயும், முதுகிலேயும் இரண்டு கைகளாலும் 'கும்மா' குத்துக்களை மாறி மாறிக் கொடுத்தேன். அவன் மசியவில்லை. கடைசியாக, என் சொந்த ஊர்ச் சரக்கு கூத்தாநல்லூர் குத்து ஒண்ணு காண்பிச்சேன்! அவன் அப்படியே என் காலடிலே வீழ்ந்துட்டான்.

"இனிமே என்னை அடிக்காதீங்க.

கம்பி எண்ணப் போறானே! தொலைஞ்சுப் போகட்டும்"னு நெனைச்சு அவனைவிட்டுவிடத் தீர்மானித்தேன். அதே அறையிலே பின் தெருவுக்குப் போக ஒரு கதவு இருந்தது. அதை ஒரு ஏணி

படுத்தி, கதவைத் திறந்து அவனை அனுப்பிவிட்டேன். அப்புறம் என் உடம்பிலே இருக்கிற வியர்வையைத் துடைச்சிகிட்டு, கைலியை இறுகக் கட்டிக்கிட்டு, பெட்டியை எடுத்துக்கிட்டு வெளி வாசலுக்கு நான் வருவதற்குக் கால் மணி நேரம் ஆயிடுச்சு. டிரங்க் பெட்டியை அந்தக் கிழவிகிட்ட கொடுத்தேன்.

"என்னைப் பெத்த ராசா! நீ நல்லா இருப்பேடா" என்று வாழ்த்தினாள் அவள். கூட்டம் அப்படியே என்னை அலக்கா தூக்கிகிட்டு ஜே கோஷம் போட்டுச்சு. "திருடன் எங்கே?" என்று கேட்டாங்க.

"அவன் சுவரேறி ஓடிவிட்டான்" என்று சொல்லி, நான் மழுப்பினதுதான் தாமதம். "அட பாவி மவனே! என் கடைசி சொத்தைக்கூட அடிச்சிக்கிட்டுப் போயிட்டானே. கடன்காரன் என் குடிசையைப் பிடுங்கிகிட்டான். இருந்த ஒரே புடவையும், என் வீட்டுக்காரர் பண்ணிப் போட்ட மோதிரத்தையும் இந்தப் பெட்டியிலே போட்டுக்கிட்டு கிளம்பினேன். மோதிரத்தை விற்று, அந்தப் பணத்திலே இடியாப்பம் சுட்டு வயிறு வளர்க்கலாம்னு நினைச்சேன். அதை எடுத்துக்கிட்டுப் போயிட்டானே அந்தப் படுபாவி. அவன் உருப்பட மாட்டான்" என்று கிழவி கூச்சல் போட்டு ஓவென்று அழுதாள். விஷயம் புரிஞ்சுடுச்சு. "பயல் முக்கியமான பொருளைக் கிளப்பிக்கொண்டு டிமிக்கிக் கொடுத்துட்டான்" என்று எல்லோரும் பேசிக்கிட்டாங்க. நான் வாயை மூடிக்கிட்டு கைகளைப் பிசைந்துகிட்டு லாந்தர் கம்பம்போல் நின்னுட்டேன். அந்த ஒரே ஒரு சம்பவம்தான் நான் இப்போ நடுத்தெருவிலே நிற்கிறதற்குக் காரணம் நாயுடு!" என்றார் ராவுத்தர், நாசூக்காகத் தாடியைக் கோதிவிட்டு.

"சாயபு, நீங்களோ உபகாரம் பண்ண அவ்வளவு துணிச்சலோட போனீங்க. விஷயம் வேறு விதமாக நடந்துடுச்சு. அதுவா ஒரு பாவம்?" என்றேன் நான் சற்று வியப்புடன்.

"அதுதான் நான் செஞ்ச பாவம் நாயுடு!"

"என்ன சாயபு, தலைகீழாகப் பேசுறீங்க? உபகாரத்தை அபகாரம் என்று நீங்களே முடிவு கட்டிட்டிங்களே. இது நல்லதா?" என்று சொல்லி, ராவுத்தரை மேலும் கீழும் ஒரு மாதிரி பார்த்தேன்.

"அந்தக் கிழவி பறிகொடுத்தாளே. . ."

"அதைத்தான் அந்தக் கேடிப் பயல் அடித்துக்கொண்டு போயிட்டானே."

"அதுதான் இல்லை நாயுடு!"

"என்ன?"

"செஞ்சவன் வேறு ஒரு அயோக்கியன்!"

"யார் அவன்?"

"நேர்மையும், நாணயமும் கொண்ட தர்மப்பிரபுன்னு சர்டிபிகேட் கொடுத்தீங்களே, அந்தப் பிரபுவாகிய நான்தான் நாயுடு".

"நீங்களா!"

"அந்தரத்திலே ஒரு அந்தர் பல்டி அடித்ததுபோன்ற ஓர் பிரமை எனக்கு உண்டாயிற்று."

தொடர்ந்தார் ராவுத்தர்: "மசூதியிலே அந்த அறையின் கதவைத் திறந்து பின்வழியாக அந்தத் தடியனை வெளியே அனுப்பிவிட்டேன் என்று சொன்னேனல்லவா?"

"ஆமாம்."

சுதேசமித்திரன், சென்னை-2
தேவை

கீழ்க்கண்ட இடங்களில் எமது மித்திரன் தினப்பதிப்பு, வாரப்பதிப்புகளை விற்பனை செய்யவும், சந்தாதாரர்களுக்குப் பட்டுவாடா செய்யவும் ஊக்கமுள்ள ஏஜெண்டுகள் தேவை. விண்ணப்பதாரர் செக்யூரிடி கட்டக்கூடியவராகவும் உள்ளூர் வாசியாகவும் இருத்தல் நலம். விவரங்களுக்கு, கீழ்க்கண்ட விலாசதாருக்கு எழுதவும்.

விஜயவாடா
குத்தி
அனந்தப்பூர்
நெல்லூர்
கூடூர்
கடப்பை

சர்குலேஷன் மானேஜர்.

"அவன் போனபிறகு என் குணம் எப்படி மாறிடுச்சு தெரியுமா? அந்தப் பெட்டியைத் திறந்து அதற்குள்ளே என் கை துழாவ ஆரம்பிச்சுது. மோதிரம் சிக்கியதும் ஓசைப்படாமல் இடுப்பிலே செருகிக்கொண்டு பரம யோக்கியன் போல் மசூதி வெளி வாசலுக்கு வந்தேன். சைத்தான் புத்தி என்னை எப்படி ஆட்டி வச்சுது பாருங்கோ? கலாட்டா முடிஞ்சு ஒரு வாரத்திற்கப்புறம் அந்தப் பொருளை விற்றேன். முப்பது ரூபாய் கிடைச்சுது. அந்தப் பணத்தை முதலாகப் போட்டுத்தான் இப்போ நடக்கிற கைலி வியாபாரத்தை ஆரம்பிச்சேன். அதிர்ஷ்டம் அடிச்சுது. வியாபாரத்திலே பணம் மலைபோல குவிஞ்சுது. நீங்கள் எல்லோரும் என்னை வாயாரப் புகழ்ந்தீங்க. ஆனால், அந்தக் கிழவியின் சாபம் என்னைச் சும்மா விட்டு வைக்குமா? அந்தப் பழிதான் பழி வாங்காது இருக்குமா? செல்வத்திலே புரண்ட என்னை, மண்ணிலே புரளும்படி இப்போ செஞ்சுடுச்சு நாயுடு!"

ராவுத்தரின் விழிகளின் விளிம்பிலே நீர்த்திவலைகள் தத்தளித்தன. மேலும் தொடர்ந்தார், "நிலத்தைப் பண்படுத்தி, உரம் போட்டு, மரத்தை வளர்த்து, பழத்தைப் பறித்துத் தானம் கொடுத்துட்டா போதுமா? போட்ட விதை கசப்பு ஜாதியில்லாமல் பார்த்துக் கொள்ளணும் நாயுடு! ஹஜ் முடிச்சபிறகு, எந்த மசூதியிலே அந்தப் பாவம் செஞ்சேனோ அதே இடத்தில் பாங்கொலி கூவும் மோதினார் வேலை செய்யத் தீர்மானித்துவிட்டேன். அப்போதான் என் பாக்கி நாட்களை அமைதியாகக் கழிக்க முடியும்" என்றார் ராவுத்தர்.

❧ ❧ ❧

ஏதேதோ வேதாந்த எண்ணங்கள் குமிழியிட்டு என் அறிவிலே எழும்பின. வழியெல்லாம் அதே யோசனையிலீடுபட்டு, ஆடுபோல் தலையை அசைத்துக் கொண்டே, வாக்கிங்-ஸ்டிக்கை எட்டி எட்டி வைத்து நான் வீடு திரும்புவதற்குள், என் நிலைமை போதும் போதுமென்

எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்!



மோசடி

★

ஒருவரை ஏமாற்றி, அவரிடமிருந்து ஒரு பொருளைப் பெற்றுக்கொள்வதும் அல்லது, அவர் கொடுப்பதைத் தடுப்பதும் மோசடிக் குற்றமாகும். அம்மாதிரி ஏமாற்றிப் பறிப்பது அவருக்கு எவ்வித மேனும் தீங்கு அல்லது நஷ்டம் இழைப்பதாக இருக்க வேண்டும். இந்தியன் பீனல் கோட் ஷரத்து 415 இக்குற்றத்தை விளக்குகிறது.

உண்மையை மறைப்பதும், பொய் கூறுவதும் ஏமாற்றமாகும்.

தனக்கு பாங்கில் கணக்கில்லாமலிருந்தும், தான் வாங்கிய சரக்கிற்கு சேகர் ஒரு செக்கைக் கொடுக்கிறான். கடைக்காரர், அவன் பாங்கில் கணக்குள்ள ஒரு பிரமுகர் என்று நம்பி, சரக்கைக் கொடுக்கிறார். சேகர் புரிந்தது மோசடி.

கதிரேசன், சொக்கலால் சேட்டிடம் சென்று, தன்னிடமுள்ள போலி வைர மோதிரத்தை நிஜ வைரம் என்று கூறி, அடகு வைக்கிறான். கதிரேசன் மோசடிக் குற்றம் புரிந்தவன்.

பழனியாண்டி தன் நிலத்தைத் தங்கவேலனுக்கு விற்று விடுகிறான். அதற்குப் பின் ஷி விற்பனையைக் கூறாமல் அதே நிலத்தை ஏழுமலைக்கு அடமானம் வைக்கிறான். பழனியாண்டி புரிந்தது மோசடி.

ஷி உதாரணங்களில்,குற்றம் புரிந்தவருக்குத் தான் கூறுவது அல்லது செய்வது உண்மையல்ல; ஏமாற்றம் என்பது தெரியும். மேலும், அதனால் தனக்கு லாபமும், மற்றவருக்கு நஷ்டமும் ஏற்படும் என்பதும் தெரியும். இதுதான் இக்குற்றத்தின் சாராம்சம். ஏமாற்றுவதற்குப் பொய் கூற வேண்டுமென்பதில்லை. நடிப்பினால் இன்னொருவரை நம்ப வைத்தால் போதும்.

ஒருவரைப் பயமுறுத்தி, மிரட்டிப் பொருளைப் பெறுவது மோசடியாகாது. அது வேறு குற்றம். மோசடியில், பொருளைக் கொடுப்பவர், விரும்பித்தான் கொடுக்கிறார். ஆனால், அவ்வாறு கொடுப்பது உண்மையை மறைப்பதினால்தான்.

வியாபாரிகள் தங்கள் சரக்குகளைப் பற்றி மிகவும் சிறந்த சரக்கு, நல்லது என்று வியாபாரத்திற்காகக் கூறி, வாங்குபவரை வாங்கத் தூண்டுவது மோசடி அல்ல. ஆனால், விவரிக்கப்பட்ட சரக்கும், கொடுத்த சரக்கும் முற்றிலும் வெவ்வேறாக இருந்து, ஏமாற்றும் நோக்கத்துடன் தான் அவ்வாறு செய்திருந்தால் அது ஷி குற்றமாகும்.

கல்யாணத்திற்காகத் தேவை என்று கூறி, பெரியசாமி சில சாமான்களை வாடகைக்கு வாங்கினான். ஒரு சிறிய தொகையை முன்பணமாகக் கொடுத்து, கல்யாணம் முடிந்ததும் சாமான்களையும், பாக்கிப் பணத்தையும் தருவதாக எழுதிக் கொடுத்து, சாமான்களைப் பெற்றுக்கொண்டு போனான். பெரியசாமிக்குத் தெரியும் ஒரு கல்யாணமுமில்லை என்று. சாமான்களைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணமுமில்லை. அவன் நோக்கமே அதே சாமான்களை வேறு கடையில் விற்றுவிடுவதுதான். பெரியசாமி புரிந்தது மோசடி.

சமீபத்தில் நடந்த ஒரு வழக்கில், லோட்டஸ் குறுக்கெழுத்துப் போட்டி ஸ்தாபனத்தை நடத்திக்கொண்டிருந்தவர்போில் ஷி குற்றம் சாட்டப்பட்டது. அவர் நெ. 92 போட்டியில் ரூ. 3,10,000 பரிசு தருவதாக விளம்பரம் செய்து, ஷி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுத் தொகையைக் கொடுக்கவில்லை. மோசடி செய்தார் என்பது வழக்கு. தன் தீர்ப்பில் மாஜிஸ்ட்ரேட், "போட்டியை நடத்தினவருக்கு அதை நடத்தும்பொழுதே பரிசுத் தொகையைக் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்ற நோக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. பரிசுத் தொகைக்கு மேல் கட்டணம் மூலம் வருவாய் வரும் என்று எண்ணினர். இப்படி பெரும் தொகையை எதிர்பார்த்தது முட்டாள்தனமும், முன் யோசனையின்மையும் ஆகலாம். மேலும் போட்டி நடத்துவதில் பொறுப்பின்மையையும் நிரூபிக்கலாம். ஆனால், மோசடி செய்யும் எண்ணம் முன்கூட்டியே இல்லாவிடில், பரிசுத்தொகையைக் கொடுக்காததனாலும், ஒரு சிலருக்கு நஷ்டமேற்பட்டதனாலும் அவர் மோசடி செய்தவராக மாட்டார்" என்றார்.

மூன்றாவது வகுப்பு டிக்கெட் வாங்கின ஒரு பிரயாணி, ரயிலில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்வது அல்லது தன்னிடமுள்ள அதிகப்படியான சாமான்களைக் கட்டணம் கொடுக்காமல் கொண்டு போவதற்காக, வேறு ஒரு நண்பரிடம் தனது சாமான்களில் ஒரு பகுதியைக் கொடுப்பது ஆகியவை மோசடியல்ல என்று தீர்ப்புகள் இருக்கின்றன.

வேறு ஒருவரைப்போல நடித்து மோசடி செய்வதும் 416–வது ஷரத்துப்படிக் குற்றமாகும். இதற்கு மூன்று வருஷம் வரை காவல் தண்டனையும், அபராதமும் விதிக்கலாம்.

பல்கலைக் கழகப் பரீட்சையில் தான் தான் மாணாக்கன் என்று பிரவேசச் சீட்டுப் பெற்றுத் தன் மாணாக்கனுக்காக பரீட்சை எழுதிய ஒரு ஆசிரியர் இக்குற்றம் செய்ததாகத் தண்டிக்கப்பட்டார்.

சாதாரண மோசடிக்கு ஒரு வருஷம் வரை வெறுங் காவலோ, கடுங்காவலோ விதிக்கலாம்.

சொத்தைக்காப்பாற்றவேண்டியபொறுப்புள்ள நபர், இக்குற்றம் புரிந்தால், மூன்று வருஷம் வரை காவல் தண்டனையும், அபராதமும் விதிக்கலாம். டிரஸ்டிகள், ஹிந்து குடும்ப மானேஜர், பாங்கின் டைரக்டர் முதலியவர்களைப் பாதிப்பது இது.

மோசடி செய்து பொருளைப் பெறுவது, அல்லது முக்கியமான தஸ்தாவேஜியை மாற்றி அமைக்கவோ, அழிக்கவோ செய்தல் இவைபோன்ற குற்றத்துக்குத் தண்டனை ஏழு வருஷம்வரை காவலும், அபராதமும் ஆகும்.

—வழக்கறிஞர்.



மேற்கு மாம்பலம் ஸ்ரீ சத்திய நாராயண பெருமாள் தேவஸ்தான கட்டிட விழாவையும். பிரும்மஸ்ரீ திருவாரூர் வி. ராமச்சந்திர சர்மா அவர்களின் ஸ்ரீராமாயண ஹரிகதா காலட்சேபத்தையும் மார்ச் 21-ந் தேதி ஆனந்த விகடன் நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ தேவன் துவக்கி வைத்த பொழுது எடுத்த படம்.

சாரணர் உலகம்



முதல் சிகிச்சை

★

சென்ற கட்டுரையில் 'ஸ்ட்ரெச்சரின்' மேல் கம்பளியைப் போட்டு அதன் மேல் தான் அடிபட்டவனை படுக்க வைக்க வேண்டுமென்று கூறியது ஞாபகமிருக்கும். அதில் ஒரு கம்பளி அல்லது இரு கம்பளிகள் உபயோகிக்கலாம். நமக்கு முக்கியமாகத் தெரிய வேண்டியது, ஒரே கம்பளியிருந்தால் அதை 'ஸ்ட்ரெச்சரின்' மேல் எப்படிப் போடுவது, இரு கம்பளி களிருந்தால் எப்படிப் போடுவது என்பதுதான்.

நாம் ஒரே கம்பளிதானிருப்பதாக வைத்துக் கொள்வோம். அதை எப்படி 'ஸ்ட்ரெச்சரின்' மேல் பரப்ப வேண்டும்? முதலில் ஸ்ட்ரெச்சரை பிரித்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு கம்பளியை அதன் மேல் போட வேண்டும். கம்பளியையும் நன்றாக பிரித்து வைத்துக்கொள்ள வேண்டும். கம்பளி சாதாரணமாக நீளம் அதிகமாகவும், அகலம் குறைவாகவுமிருக்கும். கம்பளியை நீளமாக அப்படியே போடாமல் சற்று சாய்த்தவாறு போட வேண்டும். இதன் நீள மூலைகள் 'ஸ்ட்ரெச்சரின்' மேல், கீழ்ப் பாகங்களின் மத்தியில் வரும். இதை நன்கு புரிந்துகொள்ள படம் 1–ஐப் பாருங்கள்.

இதன் பிறகு அவனை அந்தக் கம்பளியினால் போர்த்திவிட வேண்டும். எப்படி போர்த்துவது? மேல் நீட்டியிருக்கும் பாகத்தை கொஞ்சம் மடித்து விட வேண்டும். இதன் பிறகு இடது புறமிருக்கும் கம்பளியை அடிபட்டவனின் மேல் போட்டு நீண்டிருக்கும் பாகத்தை அவன் பக்கவாட்டில் சொருகி விட வேண்டும். இதன் பிறகு வலது புறமிருக்கும் கம்பளியையும் இவ்வாறு செய்ய வேண்டும். கீழ்ப்பாகத்தில் நீட்டியிருக்கும் கம்பளியையும் மடித்து விட வேண்டும். இவ்வாறு செய்தால் எவ்வாறு அமையும் என்பதை படம் 2–ஐப் பார்த்து புரிந்து கொள்ளலாம்.

எப்பொழுதும் இரு கம்பளிகள் அகப்பட்டால் அவைகளை உபயோகப்படுத்துவது நல்லது. இரு கம்பளிகளை எப்படி உபயோகப்படுத்துவது? முதலில் ஒரு கம்பளியை பிரித்துக் கொள்ளுங்கள். மேல் விதத்தில் நீள வாட்டமாக போட வேண்டுமென்று சொன்னோமல்லவா? இங்கு அகல வாட்டமாக போட வேண்டும். 'ஸ்ட்ரெச்சரில்' தூக்கிக்கு பாதிக்கு வரவேண்டும். இதைப் போடுகையில் ஒரு பக்கம் மற்றதை விட சற்று அதிகமாகயிருக்கவேண்டும். இதை நன்கு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சித்தார்த்தன்

இதன் பிறகு இரண்டாவது கம்பளியை மூன்றாக மடிக்க வேண்டும். இது முதல் கம்பளியின் மேலும் வரும். அதன் மேல் பாகத்திற்கு 15 அங்குலத்திற்கு கீழாக போட வேண்டும். இந்த கம்பளியின் கீழ்ப் பாகத்தை இரண்டடிக்கு பிரிக்க வேண்டும்.

இதன் பிறகு அடிபட்டவனை 'ஸ்ட்ரெச்சரில்' படுக்க வைக்க வேண்டும். இரண்டாவது கம்பளியின் கீழ்ப்பாகத்தை அகல விரித்திருக்கிறோமல்லவா? இதை அடிபட்டவனின் கால்களுக்கடியில் நன்றாக சொருகிவிட வேண்டும். இதன் பிறகு முதல கம்பளியால் அவனை நன்கு போர்த்த வேண்டும்.

சென்ற கட்டுரையில் எல்லா சந்தர்ப்பங்களிலும் அடிபட்டவன் கம்பளியில் படுத்திருக்கமாட்டான் என்றும், அவனை கம்பளியில் படுக்க வைக்க வேண்டுமென்றும் கூறியது ஞாபகமிருக்கும். 'ஸ்ட்ரெச்சரி'ல் கம்பளி போடாமல் கம்பளியில் படுக்க வைத்து அப்படியே தூக்கி 'ஸ்ட்ரெச்சரி'ல் படுக்கவைக்கலாமல்லவா? அதற்கு இந்த முறை உபயோகப்படும். எவ்வாறு அடிபட்டவனை அதிகம் அலட்டாமல் கம்பளியில் படுக்க வைப்பது?

ஒருவன் தரையில் படுத்திருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். கம்பளியை நன்றாக சுற்றி வைத்துக்கொள்ள வேண்டும். அதை அவனுக்கருகில் தள்ள வைக்க வேண்டும்.

இதன் மேல் அடிபட்டவனை பக்கவாட்டாக கொஞ்சம் புரட்டவேண்டும். அதாவது உதவியாளர்கள் தங்களை நோக்கிப் புரட்டவேண்டும். இதன்பிறகுகம்பளியை பாதி வரையில் பிரித்து அடிபட்டவனுக்கருகில் வைக்க வேண்டும். மீண்டும் அவனை பழையபடி படுக்க வைக்க வேண்டும். இதன் பிறகு மற்ற பாதியையும் பிரிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் அடிபட்டவன் கம்பளியில் நடு மத்தியில் படுத்திருப்பான்.

இந்த கம்பளியின் உபயோகமென்ன? ஏன் அடிபட்டவர்களை கம்பளியில் படுக்க வைக்க வேண்டும் அல்லது கம்பளியில் போர்த்த வேண்டும்? கம்பளிக்கு சூட்டை காப்பாற்றும் தன்மையிருக்கிறது. இதுதான் இதை உபயோகிப்பதன் முக்கிய காரணம். மனிதர்கள் உயிர் வாழ சூடு அல்லது உஷ்ணம் அவசியம். மனித உடலில் உஷ்ணம் குறைந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும். கம்பளியால் நன்கு போர்த்தினால் இந்த உஷ்ணம் குறையாது. நாடி துடிப்பும் சரியாக இருக்கும். இதுதான் முக்கிய காரணம்.

மேலும் கம்பளி சற்று இதம் தரும். மிருதுவாகவுமிருக்கும். ஆதலால் உபாதைக்குட்பட்டவர்களை இதில் படுக்க வைத்தால் அவர்களுக்கு வலி அதிகம் தெரியாமலிருக்கும். இது இரண்டாவது காரணம்.

கம்பளி சற்று கனமானது. ஆதலால் மனிதர்களை அதில் படுக்க வைத்து தூக்குவது சுலபம். இவ்வாறு தூக்கினால் கம்பளி பிய்ந்து அதனால் விபத்தேற்படாது.

'யாழ்ப்பாண ஓவியக் கலா நிலைய'த்தின் கிளை நிலையமொன்றை சென்ற மா ம் 25-ந் தேதி திரு. கல்வி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் கோடம்பாக்கத்தில் தி து வைத்தார். அப்போது யாழ்ப்பாண ஓவியக் கலாநிலைய ஆசிரியர் ஸ்ரீ பெனடிக்ட் பல உருவச் சித்திரங்களை மின்னல் வேகத்தில் வரைந்து காட்டினர்.

நாராயணீயம்

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

5. மனைவியுடன் மஹாபலி தானம்செய்தல்

याचत्येवं यदि स भगवान् पूर्ण
कामोऽस्मि सोऽहं
दास्याम्येव स्थिरमिति वदन् काव्य
शप्तोपि दैत्यः ।
विन्ध्यावल्या निजदयितया
दत्तपाद्याय तुभ्यं
चित्रं चित्रं सकलमपि स प्रापयत्तोय
पूर्वम् ॥

யாசத்யேவம் யதி ஸ பகவான் பூர்ண
காமோஸ்மி ஸோஹம்
தாஸ்யாம்யேவ ஸ்திரமிதி வதன்
காவ்ய சப்தோபி தைத்ய:
விந்த்யாவள்யா நிஜதயிதயா தத்த
பாத்யாய துப்யம்
சித்ரம் சித்ரம் ஸகலமபி ஸ
ப்ரார்ப்பயத்தோய பூர்வம்.

ஸ:-அந்த, பகவான்-பகவானே, ஏவம்-இம்மாதிரி பிராம்மண வேஷத்துடன், யாசதி யதி-யாசிக்கிறானேயாகில், ஸ. அஹம்-பகவானால் கேட்கப்பட்ட அந்த நான், பூர்ண காம: அஸ்மி-பூர்த்தியடைந்த அபீஷ்டங்களை உடையவனாயிருக்கிறேன். ஸ்திரம்-நிச்சயமாக, தாஸ்யாமி ஏவ-கொடுக்கவே போகிறேன், இதி-என்று, வதன்-சொன்ன, ஸ: தைத்ய:-அந்த அஸுரனான மஹாபலி, காவ்ய சப்தோபி-குருவான சுக்ராசார்யரால் சபிக்கப்பட்டபோதிலும், விந்த்யாவள்யா-விந்த்யாவளீ என்ற பெயருள்ள, நிஜதயிதயா-தனது மனைவியினால், தத்த பாத்யாய-கொடுக்கப்பட்ட பாத தீர்த்தத்தை உடைய, துப்யம்-உமக்கு, ஸகலமபி-தன்னிடமுள்ள எல்லாவற்றையும், தோயபூர்வம்-தான ஜலம் போடுவதை முன்னிட்டு, ப்ரார்ப்பயத்-கொடுத்தானமே, சித்ரம் சித்ரம்-மிக மிக ஆச்சரியம்.

கருத்துரை

"ஹே குருவாயூரப்பா 'ஸ்ரீ பகவானே பிராம்மண வேஷம் பூண்டு இம்மாதிரி யாசிப்பாரேயாகில், எனது அபீஷ்டங்கள் யாவும் பூர்த்தியாகி விட்டன. அந்த பகவானால் யாசிக்கப்பட்ட நான், நிச்சயம் கொடுக்கவே போகிறேன்' என்று சுக்ராசார்யர் சபித்த பொழுதும் மஹாபலி சொன்னான். இந்த ஸமயத்தில் மஹாபலியின் விந்தியாவளீ என்ற பெயருள்ள மனைவி தங்கள் காலை அலம்ப, தீர்த்தம் ஊற்றினாளாமே! மஹாபலி தான ஜலத்துடன் தனது எல்லாப் பொருள்களையும் தங்களுக்கு அர்ப்பணமும் செய்தானாமே!" என்று நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் 'ஆம்' என்று தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம். அப்பொழுது நம்பூதிரி ஆனந்த பரவசத்தில் "ஆச்சரியம் ஆச்சரியம்!" என்று வாய்விட்டுச் சொல்கிறார்.

விளக்கவுரை

சுக்ராசார்யரின் சாபத்தால் மஹாபலி மனம் மாறவில்லை (தளரவில்லை). தனது ஆசார்யன் சொல்வது போல், வந்திருக்கும் வாமனர், பகவானாகவே இருந்தால், அதைவிடப் பெரிய பாக்கியம் கிடைக்கப் போவதில்லை. எந்த பகவானுடைய அருள் கிடைக்க வேண்டுமென்று யாகங்களும், யக்ஞங்களும் செய்கிறோமோ, அந்த பகவானே நேரில் வந்து யாசிக்கும்போது, தன்னைவிடக் கொடுத்து வைத்தவன் இந்த பிரபஞ்சத்தில் இல்லை-என்று மஹாபலி நிஸ்சயம்செய்து விடுகிறான்.

ஸாதாரண மனிதர்களுக்குத் தானம் செய்வதே மேல். வந்திருப்பவர் பிராம்மண வேஷத்தில் வந்திருக்கிறார். அம்மாதிரியான வேத வித்துக்குத் தானம் செய்வது இன்னும் உத்தமம். அவர் ஷாட்குண்ய பரிபூர்ணனான ஸ்ரீய: பதியேயாக இருக்கும்பட்சத்தில், அவருக்குத் தன்னுடைய ஸகலத்தையும் கொடுத்து விடுவதை விடப் பெரும் பாக்கியம் வேறு என்ன உண்டு என்று எண்ணுகிறது, மஹாபலியின் மனம்.

இந்த ப்ரபஞ்சம் முழுவதற்கும் ஈஸ்வரனாயிருக்கும் தன்மை, வீர்யம், கீர்த்தி, ஸ்ரீ, ஞானம், வைராக்கியம்-என்ற இந்த ஆறு குணங்களும் பூரணமாக நிறைந்துள்ள பகவான் தன்னிடம் வந்து யாசிக்கவேண்டுமென்றால், தன்னைப்பூரணமாக-அதாவது ஸர்வ அபீஷ்டங்களையும் அடைந்து விட்டவனாக-மஹாபலி கருதுகிறான்.

'ஸ பகவான்' அந்த பகவானே யாசிக்க வந்திருக்கும் பட்சத்தில்-என்று மஹாபலி குறிப்பிடுகிறான். எந்த பகவான், தாரித்ரியத்தின் எல்லையைக் கண்டுவிட்ட குசேல ஸ்வாமியை குபேர ஸம்பத்தை அடையும்படி ஒரு க்ஷண நேரத்தில் செய்துவிட்டாரோ, எந்த பகவான் அளவற்ற பொருளை குபேரன் அடையும்படிச் செய்தாரோ, எந்த பகவானிடம் ஸ்ரீயே மார்பில் ஸதாகாலமும் குடிகொண்டிருக்கிறாளோ, அந்த பகவான் இப்பொழுது தன்னிடம் யாசகத்திற்கு வந்திருக்கிறார். ஆறு குணங்களும், நிரந்தரமாகவும், பூர்ணமாகவும் குடிகொண்டிருக்கும் பகவான், தன்னிடம் யாசகத்திற்கு வர வேண்டுமென்றால், தன்னிடம் அவரைக் காட்டிலும் அதிக அளவில் அந்த ஆறு குணங்களும் நிறைந்திருக்கின்றன என்றுபுலனாகிறது. ஈஸ்வரத்தன்மை, ஸ்ரீ, கீர்த்தி, வீர்யம், ஞானம், வைராக்கியம்-இந்த ஆறு குணங்களும் எவருக்குக் கிட்டிவிட்டதோ, அப்பொழுது அவருக்கு மோட்சம் நிஸ்சயம்.

இவ்வாறெல்லாம் மஹாபலியின் மனம் எண்ணுகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் மஹாபலியின் பேச்சைக் கொஞ்சம் கேட்போம்.

सत्यं भगवता प्रोक्तं धर्मोऽयं गृह
मेधिनाम् ।
अर्थं कामं यशो वृत्तिं यो न बाधेत
कर्हिचित् ॥
स चाहं वित्तलोभेन प्रत्याचक्षे कथं
द्विजम् ।
प्रति श्रुत्य ददामीति प्राह्लादिः कितवो
यथा ॥
नह्यसत्यात्परोऽधर्म इति हो वाच
भूरियम् ।
सर्वं सोढुमलं मन्ये ऋतेऽलीक परं
नरम् ॥
नाहं बिभेमि निरयान्नाधन्याद
सुखार्णवात् ।
न स्थानच्यवनान्मृ योर्यथा विप्रप्रलम्भ
नात् ॥
यद्यद्धास्याति लोकेस्मिन्संपरेतं
धनादिकम् ।
तस्य त्यागे निमित्तं किं विप्रस्तुष्येन्न
तेनचेत् ॥

ஸத்யம் பகவதா ப்ரோக்தம் தர்மோயம்
க்ருஹ மேதினாம்
அர்த்தம், காமம், யசோ வ்ருத்திம்,
யோ ந பாதேத கர்ஹிசித்
ஸ சாஹம் வித்தலோபேன ப்ரத்யா
சக்ஷே கதம் த்விஜம்
ப்ரதிஸ்ருத்ய ததாமீதி ப்ராஹ்லாதி:
கிதவோ யதா
நஹ்யஸத்யாத்பரோ(அ)தர்ம:இதிஹோ
வாச பூரியம்
ஸர்வம்ஸோடுமலம்மன்யேருதே(அ)ளீக
பரம் நரம்
நாஹம் பிபேமி நிரயாத் நாதன்யாத
ஸுகார்ணவாத்
நஸ்ய தானச்யவனான்ம்ருத்யோ: யதா
விப்ர ப்ரலம்பனாத்
யத்யத்தாஸ்யதி லோகேஸ்மின்
ஸம்பரேதம் தனாதிகம்
தஸ்ய த்யாகே நிமித்தம் கிம்
விப்ரஸ்துஷ்யேன்ன தேனசேத்

"பொருள், காமம், கீர்த்தி, ஜீவனம் இவற்றைப் பாதிக்காதவண்ணம் ஒரு

கிரஹஸ்தனுடைய தருமம் அமைய வேண்டும் என்று ஆசார்யரான தாங்கள் சொல்வது முற்றிலும் உண்மையே. இருந்த போதிலும், நான் ப்ரஹ்லாத குலத்தில் பிறந்திருக்கின்ற காரணத்தால், நான் சொன்ன வார்த்தைகளை மீறி நடந்து, என் குலத்திற்கு இழுக்கு தேட விரும்பவில்லை. அப்படி நான் செய்வேனாகில், நான் ஒரு யோக்கியமில்லாதவன். பொய்யைக் காட்டிலும், பெரிய அதர்மம் இல்லை என்று பூமிதேவியே சொல்லியிருக்கிறாள். பொய் பேசும் மனிதனைத் தவிர, வேறுஎதையும் பூமிதேவி சுமந்து விடுகிறாள். நரகத்தை அடைவதாயிருந்தாலும், பதவியை இழப்பதாயிருந்தாலும், மரணம் ஏற்படுவதாயிருந்தாலும், நான் பயப்படப் போவதில்லை. ஆனால், வேதத்தை ஏமாற்றுவது என்பது மாத்திரம் எனக்கு மிகுந்த பயத்தை உண்டு பண்ணுகிறது. நாம் சம்பாதித்த பொருள், நாம் மரணம் அடையும்போது நம்மை விட்டுவிடப் போகிறது. அது அவ்வாறு நம்மை விடுவதற்கு முன்பே, நாம் அதை ஒரு வேத வித்துக்குத் தானம் செய்வதால் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடப் போகிறது? அம்மாதிரிச் செய்வதைக் காட்டிலும் பெரிய லாபம் ஒன்று உண்டோ! ஒரு வேத வித்திற்குக் கொடுக்கின்றேன் என்று சொல்லிவிட்டு, இப்போது மாட்டேன் என்று சொல்வதால் அந்த வேத வித்தின் அதிருப்தியைத் தான் ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு மஹாபலி தன் குருவான சுக்கிராசாரியரிடம் கூறுகிறான். இவ்வளவு கருத்தையும், ஸ்ரீ நம்பூதிரி 'ஸ்திரம் தாஸ்யாமி ஏவ' (கட்டாயம் கொடுக்கத்தான் போகிறேன்) என்ற தொடரால் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு குருவின் கட்டளையை மீறி, மஹாபலி தீர்மானம் செய்துவிட்ட போது, சுக்ராசாரியர் அவனை சபித்து விடுகிறார். சிஷ்யன் எவ்வளவு தவறுகள் செய்தாலும் குரு அவனை திருத்தவேண்டுமேயன்றி, அவனை சபிக்கக்கூடாது; சபிக்க மாட்டார். அப்படி இருக்கும் போது சுக்ராசார்யர் தனது அன்புக்குப் பாத்திரமான மஹாபலியைச் சபித்ததற்குக் காரணம் என்ன? பகவானின் தூண்டுதலேதான் காரணம் என்பது ஸ்ரீ சுகரின் கருத்து. ஸ்ரீ சுகர் பாகவதத்தில்

एवं अश्रद्धितं शिष्य अनादेशकरं गुरुः ।
शशाप दैवप्रहितः सत्यसन्धं मनस्विनम् ॥

ஏவம் அச்ரத்திதம் சிஷ்யம்
அனாதேசகரம் குரு:
சசாப தைவப்ராஹித:
ஸத்யஸந்தம் மனஸ்வினம்.

என்று குறிப்பிடுகிறார். அதாவது, தனது வார்த்தையில் சிரத்தை கொள்ளாமல், தனது உத்தரவிற்குக் கீழ்ப்படியாமல் நடந்த அந்தப் பெரிய மனது படைத்த உண்மையுள்ள சீடனை தெய்வத்தால் தூண்டப்பட்டு சுக்ராசார்யர் சபித்து விட்டார் என்று இந்த ஸ்லோகத்தின் பொருள். சுக்ராசார்யர் மஹாபலியைப் பார்த்து, "நீ ராஜ்யத்தை இழக்கக் கடவது" என்று சபித்த பிறகுதான் பகவான் அந்த ராஜ்யத்தை ஸ்வீகரித்துக் கொள்ள முடியும் என்பதை முந்திய (நாராயணீய) ஸ்லோகத்தில் விவரமாகக் கண்டோம். ஆகையால், பகவானே சுக்ராசார்யரின் மனத்தில் புகுந்து அவரை சபிக்கும்படி தூண்டுகிறார் என்பது கருத்து.

மஹாபலி தன் குருவின் கட்டளையையும் மீறி, வாமனருக்குத் தானம் செய்ய எத்தனிக்கும் தருவாயில், மஹாபலியின் அன்புள்ள மனைவியான விந்தியாவளீ தன் கணவனிடமிருந்து தங்கப் பாத்திரத்தை வாங்கிக் கொள்கிறாள். ஸ்ரீமத் பாகவதத்தில்

विन्ध्यावलिस्तदागत्य पत्नी जालकमालिनी ।
आनिन्ये कलशं हैमं अवनेजन्यपां भृतम् ॥

விந்தியாவளிஸ்ததாகத்ய
பத்னீ ஜாலகமாலினீ
ஆனின்யே கலசம் ஹைமம்
அவனே ஜன்யபாம் ப்ருதம்

என்று இந்த விஷயம் கூறப்பட்டிருக்கிறது.

யாகம் செய்த மஹாபலியின் மனைவி தலையில் அணிந்துகொள்ள வேண்டிய ஆபரணத்தை அணிந்துகொண்டு தீர்த்தத்துடன் கூடிய தங்கப் பாத்திரத்தை அங்கு கொண்டு வந்தாள்.

அந்தத் தங்கப் பாத்திரம் மஹாபலியின் கையில் இருந்தது என்பது

वामनाय महीं दातुं जग्राह जल भाजनम् ।

வாமனாய மஹீம் தாதும்
ஜக்ராஹ ஜலபாஜனம்

என்ற பாகவத வாக்கியத்திலிருந்து வெளியாகிறது. மஹாபலியின் பேச்சையும், சுக்ராசார்யரின் தடங்கலையும், இது வரையில் கவனித்துக்கொண்டு வந்த விந்தியாவளீ, மஹாபலியின் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். அவ்வாறு நின்றுகொண்டிருந்தவள், திடீரென்று மஹாபலியின் கையிலிருந்து தீர்த்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டதும், மஹாபலிக்கு ஒரு ஸந்தேகம் ஏற்பட்டுவிட்டது. தன் மனைவிக்கும் தான் தானம் செய்வது பிடிக்கவில்லை போலும் என்று மஹாபலி நினைக்க நேரிடுகிறது. இவ்வளவு நேரம் மஹாபலிக்கும், அவருடைய ஆசார்யரான சுக்ராசார்யருக்கும் நடந்த சம்பாஷணைகள் முழுவதையும் விந்தியாவளீ கேட்டுக் கொண்டிருந்தாள். ஸ்திரீ ஜாதிக்கு எப்போழுதும் செல்வங்களை இழக்க மனம் வராது. இழப்பதைப் பொறுக்காமல், மஹாபலி தானம் செய்ய முடியாமல், அவன் கையிலிருந்து தீர்த்தப் பாத்திரத்தைப் பிடுங்கிக் கொண்டு விட்டாளோ என்று எல்லோருக்கும் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அதே சந்தேகம் மஹாபலிக்கும் ஏற்பட்டது. ஆனால், விந்தியாவளீ மஹாபலியைக் காட்டிலும் அதிக தர்ம சிந்தனையுடையவள் என்பது அவளுடைய காரியத்திலிருந்து பின்னால் தெரிய வருகிறது.

ஒரு தானம் செய்யும்போது மனைவி தீர்த்தம் போட்டு, கணவன் தானம் செய்தால்தான், அது தெய்வீகச் சட்டப்படி செல்லுபடியாகும். இந்த ரஹஸ்யத்தை அறிந்த விந்தியாவளீ, தன் கணவன் செய்யும் தானம் விதிப்படி இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, தீர்த்தப் பாத்திரத்தைத் தான் வாங்கிக் கொண்டு, வாமனரின் காலை அலம்பி, ஜலம் போடப் போகிறாள். மஹாபலி தானம் செய்வதில் தீவிரமாக இருந்த அந்தத் தருணத்தில், எங்கே தானே தீர்த்தம் போட்டு தானத்தை செய்து விடுவானோ என்று, விந்தியாவளீ அவன் கையிலிருந்த தீர்த்தப் பாத்திரத்தைத் தான் வாங்கி, அதன் பிறகு ஸ்ரீ வாமன மூர்த்தியின் காலை அலம்ப ஜலம் போடுகிறாள். புராணாந்திரங்களில் மஹாபலி விந்தியாவளியைப் பற்றிய இந்த ஸந்தேகத்திற்கு இடங் கொடுத்தான் என்பதைக் காணலாம்.

விந்தியாவளி தங்கக் கிண்டியை எடுத்து ஜலம் போடும் ஸமயத்தில், சுக்ராசார்யர் அதைத் தடை செய்யத் தவளை வடிவமெடுத்து, கிண்டியின் மூக்கில் போய் உட்கார்ந்துகொண்டு ஜலம் அதிலிருந்து வெளி வராமல் அடைத்துக் கொண்டு விட்டார் என்றும், ஸ்ரீ வாமன மூர்த்தி தர்ப்பைப் புல்லால் அந்தத் துவாரத்தில் குத்தியதாயும், அதன் காரணமாக சுக்ராசார்யரின் ஒரு கண் கெட்டுப் போய் விட்டதாகவும் ஸாதாரண ஜனங்களிடையே ஒரு பேச்சு வழக்கு உண்டு. ஆனால், இந்தக்கதைக்கு ஸ்ரீமத் பாகவதத்தில் எந்த விதமான ஆதாரமும் கிடையாது. ஆனால், யாராவது பக்தர்கள் சொல்லியிருக்கலாம். மஹாபலியின் தீவிரமான தர்ம சிந்தனையைத் தெரியப்படுத்துவதற்காகவே இந்தக் கதைகள் வழக்கத்திலிருக்கின்றன.

விந்தியாவளியின் பதி பக்தியையும், தர்ம சிந்தனையையும் நினைத்து, நினைத்து நாராயண நம்பூதிரி 'இப்படியும் ஒரு பத்தினி உண்டா!' என்று ஆச்சரியப் படுகிறார். அவருடைய ஆச்சரியம்

चित्रं चित्रं

"சித்ரம் சித்ரம்" என்ற வார்த்தைகளிலிருந்து தெரிகிறது.

(தொடரும்)

சிறுவர் தொடர்கதை

அதிசய வீணை

வாண்டுமாமா

ரயில் விபத்து நடந்து இரண்டு நாள் ஆகிவிட்டது. ஒரு நாள் டாக்டர், ரகுபதியின் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது விச்சு வீட்டிலிருந்தான். தன் தகப்பனும் டாக்டரும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை ஒட்டுக் கேட்கவேண்டும் என்று அவன் நினைக்கவில்லை. ஆனால், தற்செயலாக அவர்கள் பேசுவதை அவன் கேட்கும்படியாகிவிட்டது. பீரோவுக்குப் பின்னால் உருண்டு ஓடிய ரப்பர் பந்தை எடுக்க முதலிலேயே அந்த அறைக்குள் வந்திருந்த விச்சுவை, அவர்கள்தான் கவனிக்கவில்லை.

டாக்டர் கேட்டார்: “அந்த மல்லிகைக்கொல்லை ஜமீன் வாரிசு விஷயம் தெரியுமல்லவா?.... அதான்னு; அந்த வீணை...வாசிக்கும் பொம்மையின் கதை.”

“இல்லை; வீணை இல்லாமல் வாசிப்பதுபோலுள்ள பெண் பொம்மை என்று சொல்லுங்கள். வீணை இருந்தால்தான் அந்தப் பொம்மைக்கு இத்தனை மவுசு ஏற்பட்டிருக்காதே!” என்றார் ரகுபதி.

“அந்த வீணையைப் பத்தித்தான் நான் இப்ப சொல்ல வறேன். ரயில் விபத்தில் காயம்பட்டு ஆஸ்பத்திரியிலே [illegible]வர்களுள் இளவயது கனவானும் ஒருவர். விபத்தின் அதிர்ச்சியினால் அவர் நினைவிழந்து கிடக்கிறார். அவர் விலாசத்தை அறிந்துகொள்வதற்காக அவர் சட்டைப் பையில் இருந்த கடிதங்களைச் சோதித்ததில், அவர்தான் வரதராஜன் என்று முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.”

“அப்படியானால் பத்து நாள் முன்பு...” என்று ஏதோ சொல்ல வந்தார், ரகுபதி. அவர் சொல்ல வந்தது மல்லாரியையும் சேகரையும் பற்றித்தான். ஆனால், டாக்டருக்கும் இந்த விஷயம் தெரியுமாதலால்,

“ரகு, நீ சொல்ல வந்தது எனக்குத் தெரியும். இப்போதான் வரதராஜன் விஷயத்தில் சிக்கல்கள் அதிகமாகப் போகிறது. மர்மம் இன்னும் ஆழமாகிவிட்டது. ஏன் தெரியுமா? ரயில் விபத்தில் நினைவிழந்து ஆஸ்பத்திரியில் கிடக்கும் அந்த மனிதரின் பெட்டியில் பட்டுத் துணியினால் சுற்றி வைத்திருந்த அழகிய சின்ன வீணையையும் கண்டுபிடித்து விட்டோம்.”

“என்ன, வீணையையா?” என்றார் வியப்புடன் ரகுபதி.

பீரோவின் பின்னால், வெளியே வரவும் முடியாமல் அங்கேயே புழுக்கத்தில் நிற்கவும் முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்த விச்சுவுக்கு டாக்டரின் பேச்சைக் கேட்டதும், தூக்கிவாரிப் போட்டது. சின்ன அழகான வீணை கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா? ‘அப்படியானால், மல்லாரி, சேகரின் கதி? அவர்கள் யார்?’ என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

தன் தந்தையும் டாக்டரும் பேசிக்கொண்ட விஷயத்தைக் கேட்ட பிறகு, விச்சுவினால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. முதலில், அதைச் சகுந்தலாவிடம் தெரிவித்தால்தான் அவன் தவிப்பு அடங்கும்போலிருந்தது. உடனே பங்களாவுக்குக் கிளம்பிவிட்டான்.

விச்சு சொன்ன விஷயத்தைக் கேட்ட சகுந்தலாவுக்கு ஆத்திரமாக வந்தது. முகம் சிவக்க, “சேகர் மோசக்காரன் என்பதை நான் நம்பமாட்டேன். அவன்தான் என் சித்தப்பா பிள்ளை. நிச்சய

மாக சேகர்தான் சொத்துக்கு வாரிசு" என்றாள்.

"அது சரி சகுந்தலா..அப்போ அந்த வீணை..?" என்றான் விச்சு.

"அந்த வீணை எப்படி யாவது போகட்டும். சேகர்தான் என் தம்பி..விச்சு..நீ? அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்பது தெரியும். ஆனால், அது தப்பு." எப்படியும் சேகரைத் தன் தம்பி யாக்கிக்கொள்ள வேண்டுமென்ற துடிப்பு, அவள் குரலில் கலந்திருந்தது.

ராஜ்குமாரும், கோவிந்தசாமி யும் ஆஸ்பத்திரியில் நினைவிழந்து கிடந்த மனிதனைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். அவனிடமிருந்த கடிதம், தஸ்தாவேஜுகளில் வரதராஜ பூபதி என்று குறிக்கப்பட்டிருந்தது. உடைகளில் 'வ' என்ற குறியும் இருந்தது. அந்த மனிதனுக்குப் பிரக்ஞை வந்துவிட்டது. ஆனால், தலையில் பலமான அடிபட்டு இருப்பதால், அவனுக்குத் தன்னைப்பற்றிய நினைவுகளே இல்லாமல் மூளை குழம்பிக் கிடந்ததாக டாக்டர் சொன்னார். தன் வீடு, தன் குடும்பம், தன் வாழ்க்கை இவைகளைப் பற்றி, அவனால் ஒரு சிறு விஷயத்தையும் சொல்லமுடியவில்லை. ஏதோ பிரமை பிடித்தவன் போலப் படுத்துக் கிடந்தான்.

புதிய இடத்தில், புதிய மனிதர்களின் மத்தியில் தன் ஞாபக சக்தியை இழந்து படுத்துக் கிடக்கும் அந்தப் புதிய மனிதனிடம் விச்சுவுக்கு இரக்கம் ஏற்பட்டது. ஆனால், சகுந்தலா மட்டும் தன் முடிவை மாற்றிக்கொள்ளவே இல்லை. 'அந்த வீணையைக் கொண்டுவந்து பங்களாவிலுள்ள பெண் பொம்மையின் கைகளுக்கு இடையில் பொருத்தினால் எப்படி இருக்கும்? இத்தனை பேருடைய குழப்பத்திற்கும் ஒரு முடிவு ஏற்பட்டுவிடுமே' என்று நினைக்க நினைக்க விச்சுவுக்கு வீணையோடு கூடிய பூர்த்திபெற்ற அப்பொம்மையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அதிகமாகிக்கொண்டிருந்தது. அவனுடைய அந்த ஆவல் நிறைவேறும் சந்தர்ப்பமும் வாய்த்தது.

ஆஸ்பத்திரியிலிருந்த அந்த மனிதனை டாக்டர் ரங்கநாதன் பங்களாவுக்கு அழைத்து வரப் போகிறார் என்ற செய்தி, குழந்தைகளிடையே ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கியிருந்தது. வரப்போகும் மனிதனையும் நடக்கப் போகும் சம்பவங்களையும் காணத் துடிப்போடு ஹாலில் எல்லோரும் கூடி இருந்தார்கள். அப்போது ராஜ்குமாரின் அண்ணா, "குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுந்தான் இங்கு நிற்கலாம்" என்று ஒரு உத்தரவு போட்டார். பாவம்! விச்சு, சரசு, ராமு மூவரின் முகமும் சுண்டிவிட்டது. அவர்கள் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில்லையே! தொங்கிய முகத்துடன் அறையை விட்டு வெளியேற எத்தனித்த விச்சுவின் கையைப் பிடித்து இழுத்துப் பேசாமல் உட்கார்ந்திருக்கும்படி ஜாடை காட்டினாள் சகுந்தலா.

பஞ்ச தந்திரம்

மறுநாள் ஓயான் தானுமொரு
மண்டை யுடைத்துப் பொன்னாக்கத்
தெருவில் வருவோர் போவோரில்
தேடிக் கண்டான் ஒரு முனியை!



ஓயான் :
"அடியேன் வீட்டிற் குங்களை நான்
அழைத்துச் செல்வேன் வாருங்கள்"
அடியார் போனார் வீட்டிற்குள்
அடித்தான் ஓயான் ஓர் தடியால்.

பொன்னாய்ச் சிலையாய் ஆகாமல்
பொத்தென் றடியார் சாய்ந்திட்டார்;
பின்னால் வந்தார் அவர்தோழர்
பிரக்ஞை இழந்த வகைகண்டார்

மல்லாரியும் சேகரும்கூட அந்த அறையில் இருந்தார்கள். ரயில் விபத்தில் அடிபட்ட மனிதனுக்கு தன்னைப் பற்றிய நினைவே மயங்கி விட்டது. ஆனால், அவன் ஒன்றுமே சொல்லவில்லை. கதவு திறந்தது. ஏதோ ஒரு ரசமான நாடகத்தின் முக்கிய கட்டத்துக்காகக் காத்திருக்கும் ரசிகர்களைப்போல எல்லோரும் ஆடாமல் அசையாமல் அந்த அறையில் உட்கார்ந்திருந்தார்கள். டாக்டர் ரங்கநாதன் வந்தார். அதன் பிறகு வக்கீல் ஆபத்சகாயமும் தோல்பையுடன் நுழைந்தார். கடைசியாக, எல்லோரும் அந்தப் புது மனிதரைப் பார்த்தார்கள். தலையில் ஒரு கட்டு வேறு போட்டிருந்தது. அவர்கள் மூவரும் ஹாலின் மத்தியில் அவர்களுக்காகக் காத்திருக்கும் மற்றவர்களின் முன்னால் போனார்கள். சேகரை அந்தப் புது மனிதன் தாண்டிச் சென்றபோது, அவன் முகம் கோபத்தினால் சிவந்தது.

அந்தப் புது மனிதன் மட்டும் தன் கோட் பையில் கையைவிட்டு, ஏதோ ஒரு பொட்டலத்தை எடுத்து வக்கீலின் கையில் கொடுத்தான். எல்லோருடைய கண்களும் அந்தப் பொருளினிடம் போய் ஒட்டிக்கொண்டன. ராஜ்குமார் பேசாமல் எழுந்து போய் கண்ணாடி ஜாடிக்குள் இருந்த பெண் பொம்மையை எடுத்து வந்து எல்லோர் நடுவிலும் இருந்த ஒரு டீப்பாயில் வைத்தார்.

"கடவுளே..அந்த வீணை இந்தப் பெண்ணின் கைகளுக்குப் பொருந்தக்கூடாது. சாமி ஆண்டவனே.. பொருந்தவே கூடாது.." என்று சகுந்தலா முணுமுணுப்பது விச்சுவின் காதில் விழுந்தது. ராஜ்குமார் அந்தப் பொம்மையை டீப்பாயின் மீது வைத்ததும் வக்கீல் அந்தப் பொட்டலத்தை புது மனிதரிடம் கொடுத்தார். அவன் அந்தக் கட்டுகளை அவிழ்த்து, அதைச் சுற்றி இருந்த விதவிதமான வர்ணக் காகிதங்களைப் பிரித்தான். கடைசியிலே அவன் கையில் பளபளவென்ற பீங்கானினாலான வீணை ஒன்று காட்சி அளித்தது. அந்த மனிதன் வாய் பேசாது குனிந்து, அதை அந்தப் பெண் பொம்மையின் தோளில் சாத்தி, இரண்டு கைகளும் அதன் மீது பதியும்படிப் பொருத்தினான். கச்சிதமாக அது அந்தப் பெண்ணின் கைகளுக்கிடையே உட்கார்ந்தது! பல வருஷங்களுக்குப் பிறகு அந்த அழகிய சைனு பொம்மை வீணையுடன் பூர்த்தியாகிப் புது அழகுடன் காட்சி அளித்தது. வீணை பொருத்தப்பட்டதும் யாருமே பேசவில்லை. பிறகு வக்கீல் தமக்கே உரித்தான தோரணையில் கனைத்துக்கொண்டு பேசினார்: "பம்பாயிலிருந்து நான் தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். இந்த விவகாரத்தில் நாம் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வருவதற்கில்லை. சொத்துக்கு மூன்றாவது வாரிசான வரதராஜனுக்கு ஒரு மகன் இருப்பதாகத் தெரிகிறது." இதைச் சொல்லிவிட்டு, சேகரை அர்த்த பாவத்துடன் பார்த்தார். பிறகு விபத்தில் அடிபட்டு வந்துள்ள வரதராஜனாக வந்துள்ளவனையும் பார்த்தார். யாரும் ஒன்றும் பேசவில்லை. அசையவில்லை. ஏன்;இமைக்கக்கூட இல்லை. கடைசியில் பம்பாயிலிருந்து எதிர்பார்க்கப்படும் தகவல்களுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வருவதாகத் தீர்மானித்தார்கள்.

(தொடரும்.)

மண்டை உடைத்துப் பொன்–2

அரசன் சபையில் ஓயானை
அவர்கள் குற்றம் சாட்டியதும்
அரசன் கேட்டான் ஓயானை
'அடித்தேன் கந்தனைப் போ லென்றான்!

அரசன் :
"கந்தா நீயேன் அடிவைத்தாய் ?"
கந்தன் :
"கனவில் முனிவர் அருள்செய்தார்
வந்தா ரவராய் அடியென்றார்
வளரும் நிதியாம் சிலையானார்"

அந்தோ பாவம் ஓயானை
அரசன் ஜெயிலில் சிறைவைத்தான்!
கந்தன் அருளை யவ்வேந்தன்
கண்டதும் 'மந்திரி நீ' என்றான் !!

[பஞ்சதந்திரச் சித்திரத் தொடர் சம்பூர்ணம்.]

இட்ட பலன்

கேயார்

"பவானி! இன்று நான் கல்லூரியில் யாரைப் பார்த்தேன் என்று சொல் பார்ப்போம்?" என்று வினவினான் பாஸ்கரன், சிறு குழந்தையைப் போல்.

"சொல்லாமல் தெரிந்துகொள்ள யட்சிணி தேவதையை நான் உபாஸிக்கவில்லையே!"

"அவர்கள் பெயரைச் சொன்னால் உனக்குப் பிடிக்காது."

"அப்படியானால் சொல்ல வேண்டாம். காலேஜிலிருந்து வந்ததும் வராததுமாய் காப்பி கூடச் சாப்பிடாமல் எனக்குப் பிடிக்காத விஷயத்தைப் பற்றி ஏன்பேச வேண்டும்."—சிரித்துக்கொண்டே சொன்னாள் பவானி.

"வந்தவர் சொன்ன விஷயம் உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?"

"ஐய! உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்து விட்டது! இன்னும் சின்னக் குழந்தை மாதிரி பேச்சுத்தான்! மடமடவென்று விஷயத்தைச் சொல்ல என்றைக்குத்தான் தெரிந்து கொள்ளப் போகிறீர்களோ!"

"சட்டென்று விஷயத்தைச் சொல்லி முடித்து விட்டால், என்னெதிரில் நீ இப்படி வந்து நிற்க மாட்டாயே. ஆசையாக.. உன்னை...அட! அட! ஓடாதே பவானி! உன் பிள்ளைக்கு ஒரு பெண்டாட்டி வரப்போகிறாள்." பவானி உள்ளே ஓடுவதைக் கண்டு சட்டென்று பேச்சை முடித்தான் பாஸ்கரன். உள்ளே செல்லத் திரும்பிய பவானி பரபரப்புடன் பாஸ்கரனைப்பார்த்து, "என்ன விஷயம்? யாரைப் பார்த்தீர்கள்?" என்று கேட்டான்.

"இன்று காலை கல்லூரிக்குக் கைலாசம் வந்திருந்தான். அவன் தம்பி மைத்துனிக்கு ட்யூஷன் சொல்லித் தர தகுந்த வாத்தியார் வேண்டுமாம். என்னை ஏற்பாடு செய்யச் சொன்னான். பேச்சு வாக்கில் சாவித்திரி கர்ப்பிணியாக இருப்பதாகச் சொன்னான்..."

"அப்படியா? எத்தனை மாதமாம்? நாம் போய்ப் பார்க்க வேண்டாமா?" ஆவலோடு கேட்டாள் பவானி.

"ஆமாம்! நீயும் நானும் போகவில்லையென்றுதான் அவர்கள் அழுகிறார்கள்! இது எட்டாவது மாசமாம்" விரக்தியாகப் பதில் சொன்னான் பாஸ்கரன். தொடக்கத்தில் இருந்த உற்சாகம் இப்போது அவனுக்கு இருக்கவில்லை.

"எட்டு மாசமா? வளைகாப்பு சீமந்தம் என்று ஒன்றும் செய்யவில்லையா?"

"செய்யாமலா? போன வாரம் தடபுடலாக நடந்ததாம். தங்கக் காப்பு, பட்டுப் புடவையோடு நாம் போய் நிற்கப் போவதில்லையாதலால் நமக்குச் சொல்ல வேண்டாம் என்று விட்டு விட்டார்கள்" என்றான் பாஸ்கரன் உடைந்த குரலில்.

"யார் சொன்னார்கள்?" என்று கேட்ட பவானியின் குரல் கூடக் கம்மித்தான் இருந்தது.

"யார் சொல்லுவார்கள்? கைலாசம் தான் சொன்னான். என் இல்லாமையும் தன் உயர்வும் எனக்குத் தெரிந்திருக்கட்டுமென்று சொன்னானா, அல்லது 'அப்படிச் சொல்லி எனக்குத் தடை விதித்து விட்டாள்' என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் சொன்னானா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும், மதிக்காத..."

"மாப்பிள்ளை நல்லவர்தான்; உங்கள் தங்கையின் குரல் கொஞ்சம் ஓங்கியிருப்பதாகத்தான் கேள்வி. அதைப் பற்றியெல்லாம் நமக்கேன் கவலை? அல்ப விஷயத்தை நாம் பெரிதாகப் பாராட்டவேண்டியதில்லை. உங்கள் பாசம் எனக்குத் தெரியும். நாளை மத்தியான்னம் நாம் போய்ப் பார்த்து விட்டு வரலாம்" என்று சொல்லி அதற்கு மேல் வார்த்தையை வளர்த்த விரும்பாதவள் போல் உள்ளே சென்று விட்டாள் பவானி.

♣ ♣ ♣

விவாகமாகிப் பத்து வருடங்கள் கழித்துக் கர்ப்பந் தரித்திருக்கும் தங்கையைப் பார்க்க மனமில்லாத கல் நெஞ்சனல்ல பாஸ்கரன். பவானி சொன்னபடி சாவித்திரி என்றால் அவனுக்கு உயிர்தான். இருந்தாலும் சுய மரியாதையுள்ளவன். பணக்காரர் என்ற மமதையில் தன்னையும் தன் மனைவியையும் அலட்சியமாக நடத்தக் கூடிய வீட்டிற்கு—அது தன் சொந்த சகோதரியின் வீடாக இருந்த போதிலும்—செல்வதில் பாஸ்கரனுக்கு விருப்பமில்லை. ஒரு காலத்தில் சாவித்திரியும் தன் சகோதரனிடத்தில் பாசமுடையவளாகத்தான் இருந்தாள். ஆனால் எந்த விவாகத்தின் மூலம் தங்கைக்காகத் தன் உடமையையும், சுகத்தையும் தியாகம் செய்து விட்டோம் என்று பாஸ்கரன் பெருமையடைந்தானோ அதே விவாகத்தின் மூலம்தான் சாவித்திரி பாஸ்கரனிடம் வெறுப்புக் கொள்ளத் தொடங்கினாள். அந்த வெறுப்பு வேர் கொள்ளப் பணம் உதவியது.

'பிஸ்கெட் மாமா'வாக இப்போது பிரபலமாகியிருக்கும் கைலாசம் சாவித்திரியை மணந்த காலத்தில் 'ஹோட்டல் மாமா'வாகத்தான் இருந்தான். தகப்பனற்ற கைலாசத்திற்கு ஒரு வீடும் கடையும்—அதாவது அந்த ஹோட்டலும்—சொந்தமாக இருந்தன. தாயாரும் ஒரே ஒரு தம்பியும்தான்; வேறு பிக்கல் பிடுங்கல் கிடையாது. பையன் தங்கமானவன்

என்று எழும்பூர் வட்டாரத்தில் பெயர் வாங்கியிருந்தான். எனவே தயக்கமின்றி அவனைத் தன் தங்கைக்கேற்ற கணவனாகத் தேர்ந்தெடுத்தான் பாஸ்கரன். ஆனால் சாவித்திரிக்குத் தன் கணவன் பட்டதாரியாக இல்லாமல் கேவலம் ஹோட்டல் நடத்துபவனாக அமைந்தது பெரிய குறையாகத்தான் இருந்தது. தான் படிக்காததினால் தங்கையின் கணவனும் படிக்காதவனாக இருப்பதையே பாஸ்கரன் விரும்புகிறான் என்று தவறாகத் தீர்மானித்து விட்டாள். எல்லாவற்றையும் விட முற்போக்கு நோக்கங் கொண்டவன் என்று தன்னைப் பற்றிப் பெருமையாக நினைப்பவன், "உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்று மணம் செய்துகொள்ளப் போகிறவளைக் கேட்கவில்லையே என்ற நினைப்பு தான் சாவித்திரியின் மனதில் மாறாத தப்பெண்ணத்தை வளர்த்து விட்டது. எப்படியாவது பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்த்தே தன் அபிப்பிராயத்தைக் கேட்க அஞ்சியதாக அவள் நினைத்துக் கொண்டு விட்டாள். உலக விஷயம் தெரிந்த நாலு பெரியவர்கள் இளைஞனை அவன் தேர்ந்தெடுத்த வரனை மெச்சிப் புகழ்ந்ததனால், மறுத்துச் சொல்ல சாவித்திரிக்கு ஒன்றுமே இருக்காது என்றுதான் எண்ணினான். குறைந்த சம்பளத்தில் மாகாணக்கல்லூரியில் "ஹெர்பேரியம் அஸிஸ்டண்ட்"டாக வேலை செய்து வந்த பாஸ்கரன், உடனடியாகத் தங்கைக்குக் கல்யாணம் நிச்சயம் செய்து, தன் தகப்பனார் இறக்கும்போது வைத்துவிட்டுப் போன நாலாயிர ரூபாயைச் செலவு செய்து பெரியவர்கள் வியக்கும்படியாக விவாகத்தை நடத்தி முடித்தான். எனவே தான் செய்த காரியத்தை நினைத்துப் பெருமையடைந்தானே தவிர, சாவித்திரி குறைப்பட இடமுண்டு என்று எண்ணவேயில்லை பாஸ்கரன். ஆனால் ஹோட்டல்காரன் மனைவியாக இருப்பது சாவித்திரிக்குப் பிடிக்கவில்லையென்பதை ஒரு வருடத்திற்குள்ளாகவே தெரிந்து கொண்டு விட்டான் பாஸ்கரன்.

ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று காலையிலேயே புறப்பட்டு நண்பர்கள் வீடு என்று போனதில் பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. இருந்தும் அதே மூச்சில் தங்கையையும் பார்த்து விட்டு வந்துவிட வேணுமென்ற ஆவல் உண்டாகவே, சாப்பிடாமலேயே எழும்பூரை நோக்கிப் புறப்பட்டான். நண்பர்கள்வீட்டில் காபி பலகாரம் என்று கொடுத்ததால் வயிற்றைப் பசிக்கவும் இல்லை. அவனை வரவேற்ற கைலாசம், "பார்த்து ரொம்ப நாளாச்சு; சாப்பாடாச்சா? இல்லேன்னா அப்படியே நம்ப ஹோட்டலுக்குப் போய் சாப்பிட்டு விட்டு வரலாம். இன்றைக்கு ஸண்டே ஸ்பெஷல்" என்று உபசரித்தான். பாஸ்கரன் நிலைமை சங்கடமாய்ப் போய்விட்டது. கைலாசம் ஹோட்டல் சொந்தக்காரர் என்பது நினைவுக்கு வந்திருந்தால் சாப்பாட்டை முடித்துக் கொண்டே புறப்பட்டிருப்பான். சாப்பிட்டாய் விட்டது என்று பொய் சொல்ல வாய் கூசியது; வந்தவுடன் சாப்பிட உட்காருவதும் அநாகரிகமாகத் தோன்றியது. எனவே, என்ன பதில் சொல்லலாம் என்று அவன் தயங்கிய போது உள்ளே சாவித்திரியின் குரல் கேட்டது.

"அண்ணா எங்கே சாப்பிட்டிருக்கப் போகிறான்? அவன் சாப்பிடவில்லையென்பதை முகம் சொல்லுகிறதே. தனியாக இருக்கப் போகும் தனக்குச் சாப்பாட்டுச் சௌகரியம் இருக்க வேணும் என்ற எண்ணத்தில்தானே என்னைக் கூடக் கேட்காமல் ஒரு ஹோட்டல்காரரைப் பார்த்துத் தேடிக் கொடுத்தான்!" என்றாள் சாவித்திரி. காய்ச்சின இரும்பைத் தன் காதுள் செலுத்துவது போன்ற வேதனை உண்டாயிற்று பாஸ்கரனுக்கு. கைலாசம்கூட அவள் பேச்சை விரும்பவில்லை. எனவே நிலைமையைச் சமாளித்துப் பேச விரும்பி, "உண்மையோடு செய்யும் எந்தத் தொழிலிலும் இழிவில்லை என்பது நம் இருவருடைய எண்ணமும். ஆனால் சாவித்திரிக்கு அப்படியில்லை..." என்று கைலாசம் சொல்லிக் கொண்டு வரும்போதே சாவித்திரி இடைமறித்து, "ஆமாம் அண்ணா, இந்த ஹோட்டல் வியாபாரம் இந்த மாதத்தோடு சரி. இன்றைய விசேஷ சாப்பாட்டைச் சாப்பிட்டு விடு" என்றாள் குறும்பாகச்சிரித்துக் கொண்டே. சுழித்துக் கொண்டு ஓடும் வெள்ளத்தில் தன்னைத் தள்ளியதுடன் நில்லாமல், நீந்திப் போய்த் தப்பிக்க ஒட்டாமல் தன் தலையையும் தண்ணீருக்குள் அமிழ்த்துவது போன்ற உணர்ச்சியில் உழன்று தத்தளித்தான் பாஸ்கரன். அன்றைய சம்பவத்திற்குப் பிறகு, சாவித்திரியின் வீட்டுக்குப் போவதையும் குறைத்துக்கொண்டான் பாஸ்கரன்.

♣ ♣ ♣

அடுத்த நாள் மத்தியானம் பாஸ்கரனும், பவானியும் எழும்பூரிலிருந்த சாவித்திரியின் பங்களாவை அடைந்த போது வரவேற்கும் அறையில் அவள் யாருடனோ அளவளாவிக்கொண்டிருந்தாள். பாஸ்கரன் உள்ளே நுழைந்து "என்ன சாவித்திரி, சௌக்கியமா?" என்று விசாரித்தான், சிரித்துக் கொண்டே. வந்திருக்கும் தன் தோழிக்கு இவர்களை அறிமுகம் செய்து வைப்பதா, வேண்டாமா என்ற தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டுவிட்டது சாவித்திரிக்கு. அவர்களை ஏறஇறங்கப் பார்த்தாள். நல்ல காலமாக அன்று பவானி தனக்கிருந்த ஒரே பட்டுப் புடவையைக் கட்டிக்கொண்டு வந்திருந்தாளாகையால், சாவித்திரி திருப்தியடைந்து சம்பிரதாய அறிமுகத்தைச் செய்து வைத்தாள்.

"அண்ணா! உன் அதிர்ஷ்டம் இன்றைக்கு நான் வீட்டிலிருக்கிறேன். இனிமேல் வருவதானால் இப்படி திடுதிப்பென்று வராதே. இன்று வருவதாகப் 'போன்' செய்திருந்தால் காரைக்கூட அனுப்பியிருப்பேன்."

"நமக்கெல்லாம் 'டெலிபோன்' எதற்கு சாவித்திரி? பாசங்கொண்ட மனசு இருக்கிறதே, அது எனக்குச் செய்தி சொல்லிற்று, 'இன்று போனால் உன் அருமைத் தங்கையைப் பார்க்கலாம்' என்று. உடனே கிளம்பிவிட்டேன். மேலும் போனில் பேசுவதென்றாலே எனக்குப் பிடிப்பதில்லை. என்ன இருந்தாலும் சொந்த மனிதர்களிடம் அதுவும் அன்புக்குப் பாத்திரமான அருமைத் தங்கையிடம், போனில் ஐந்து நிமிஷம் பேசிவிட்டால் போதுமென்று மனது



கேட்டுவருகிறதா?" என்று பாஸ்கரன் தனது உள்ளத்தைத் திறந்து பேசினன்.

சாவித்திரி சிரித்தாள். கொஞ்சம் அதிகமாகவே சிரித்தாள் என்று சொல்லவேண்டும். "அந்த நாளில் எப்படியிருந்தாயோ அதே போலத்தான் இப்போதுமிருக்கிறாய். உன் சுபாவம் மாறவேயில்லை" யென்றாள்.

"என்றைக்கும் மாறாமல் இருக்கும் குணத்தைத்தான் சுபாவம் என்று சொல்லுகிறோம்."

"போறும் போறும்; உன் கேலிப் பேச்சில் மன்னியையும் மருமானையும் மறந்தே போய்விட்டேன். உட்காரேன் மன்னி; நின்று கொண்டேயிருக்கிறாயே? குழந்தைக்கு என்ன பெயர்? என்ன வயதாகிறது?" என்று பக்கத்தில் நின்றிருந்த தனது அண்ணன் மகன் குமாரைக் குறிப்பிட்டுக் கேட்டாள் சாவித்திரி.

"ஐந்து வயதாகிறது. அத்தையைப் பார்க்கப்போகிறோம் என்றதும் சந்தோஷம் தாங்கலை. வெட்கம் என்னடா குமார்? அத்தையைப் பாரேன். . ." —பெருமை பொங்கப் பேசினாள் பவானி.

"சாவித்திரி, இதற்கு முன் நீ இவனைப் பார்த்ததேயில்லையே? அவன் ஆண்டு நிறைவிற்குக்கூட உன்னை வந்து அழைத்தேன். நீதான் வரவில்லை" என்றான், பாஸ்கரன் இடைமறித்துக் குற்றஞ் சாட்டும் பாவனையில்.

"அண்ணாவைப் பார்த்தாயா மன்னி? விஷயம் தெரியாமல் பேசுகிறான். உனக்குச் சொன்னால் புரியும். இந்த வீட்டில் அப்போது கட்டிட வேலை நடந்துகொண்டிருந்தது. நம் கண்காணிப்பைவிட்டு ஒரு நிமிஷம் நகர்ந்துவிட்டாலோ குட்டிச் சுவர்தான்."

"எனக்குத் தெரியாதா? எதையாவது சொல்லிக் கிண்டல் செய்து கொண்டிருப்பது இவர் வழக்கம்" என்றாள் பவானி சமாதானமாக.

"எனக்கு நாழியாகிறது சாவித்திரி; உனக்கும் அண்ணா, மன்னியுடன் பேச நிறைய விஷயங்கள் இருக்கும்" என்று சொல்லிப் புறப்பட்டாள் வந்திருந்த தோழி. சாவித்திரி அவளுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு, பவானி, பாஸ்கரனுடன் ஊர் விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசினாள். அவல் கேசரியும், காப்பியும் கொடுத்து உபசரித்தாள். பவானியும், பாஸ்கரனும் எதிர்பார்த்து வந்ததைவிட உபசாரம் கொஞ்சம் பலமாகவேயிருந்தது என்றுதான் சொல்லவேண்டும். அவர்கள் வீட்டிற்குக் கிளம்பியபோது, வெற்றிலை பாக்குடன் இரண்டு தேங்காய்களை வைத்துக் கொடுத்த சாவித்திரி, "இது நம்ப தோட்டத்துத் தேங்காய் மன்னி; முதல் தடவையாகக் காய்த்தது. இந்தப் பரங்கிக்காயையும் பையில் போட்டுக்கொள். இதுவும் நம்ப தோட்டத்துக் காய்தான். அண்ணாவிற்கு தேங்காய்துகையல், பரங்கிக்காய் சாம்பார் என்றால் உயிர். இப்போது எப்படியோ தெரியாது" என்றாள்.

"என் சுபாவம் மாறவேயில்லையென்று சற்று முன்தானே நீ சொன்னாய் சாவித்திரி? ஆனால் பஸ்ஸில் இவைகளையெல்லாம் தூக்கிக்கொண்டு போவதுதான் கஷ்டம்" என்றான் பாஸ்கரன்.

"வரும்போது எப்படி வந்தாயாம்? நீ எடுத்துக்கொள் மன்னி" என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினாள். அவர்கள் புறப்பட்டுப் போய் தெருக்கோடியைக் கடந்திருப்பார்களோ என்னவோ, கைலாசம் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். "என்ன சாவித்திரி, பழம், பூ என்று பலமாக இருக்கிறதே, யார் வந்தார்கள்?" என்று விசாரித்தான்.

"அண்ணாவும் மன்னியும் வந்திருந்தார்கள்?" அசுவாரஸ்யமாக பதில் சொன்னாள் சாவித்திரி.

"அட, நேற்றைக்குத்தான் சொன்னேன்; அதற்குள் பார்க்க வந்துவிட்டானா? ஏதோ புதுப் பாத்திரம் வைத்திருக்கிறதே அதற்குள் என்ன இருக்கிறது?"

"அது என்ன இருக்கிறதோ நான் பார்க்கவேயில்லை."

கைலாசம் அதைத் திறந்து பார்த்துவிட்டு "அடேடே, திரட்டுப்பால் சாவித்திரி! ஆகா, அண்ணா மன்னியென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்?"

"ஆமாம்! இவன்தான் அதிசயமாகத் தங்கையைப் பார்க்க வந்துவிட்டான்! அங்கிருந்து வந்தானே வாய்வார்த்தைக்காவது 'என்னுடன் இரண்டு நாளைக்கு வந்து இரேன்' என்று சொல்லவில்லை. உங்களுக்கென்னடா என்றால் உச்சி குளிர்ந்துவிட்டது."

"இதென்ன பேச்சு? அவன் கூப்பிட்டால் போகப்போகிறாயா என்ன? அவன் அந்தஸ்துக்கும் உன் தோரணைக்கும் ஒரு நிமிஷம்கூடச் சரிப்பட்டு வராது. அது தெரிந்துதான் அவன் கூப்பிடவில்லை. அண்ணன் தங்கைக்குள் சம்பிரதாயம் என்ன வேண்டியிருக்கிறது? இன்னும் சொல்லப்போனால் அவர்களை இரண்டு நாளைக்கு இருந்துவிட்டுப் போகும்படிச் சொல்லாதது உன் தப்பு என்பேன்" என்றான் கைலாசம்.

"போறுமே, நமக்கென்ன கொட்டியா வைத்திருக்கிறது? இவர்களுக்கெல்லாம் செய்கிறதென்று கிளம்புவது சமுத்திரத்தில் சர்க்கரையைக் கரைக்கிற காரியம் தான்!"

"பாஸ்கரன் ஒன்றும் ஒட்டுப்பூச்சியில்லை. பிறத்தியாரை அண்டியிருந்து காலங்கழிக்கிறதுஎன்பது அவனுக்கு அப்படிப் பிடித்தமான காரியமில்லை. அது போகட்டும், வந்தவர்களையாவது சரியாக உபசரித்தாயா, இல்லை, உன்கோபத்தில்.."

"எல்லா உபசாரமும் செய்தேன்; என் சிநேகிதிக்காகச் செய்திருந்த அவல் கேசரி இருந்தது, கொடுத்தேன். போகும்போது சாமானறையில் பாக்கி இருந்த இரண்டு தேங்காயையும் ஒரு பரங்கிக் காயையும் கொடுத்தேன்."

"எந்தக் காயை? கடைக்காரன் நேற்று வேண்டாமென்று ஒதுக்கினானே அந்த இரண்டையுமா?"

"கொடுத்தால் என்னவாம்? கடைக்காரன் சின்னதென்று சொல்லி ஒதுக்கினன்."

கைலாசத்திற்கு மனைவியின் பேச்சும் செயலும் பிடிக்கவில்லை. "சரி. ." என்று சொல்லிவிட்டு, உடுப்புக் களைய மாடிக்குச் சென்றுவிட்டான். அதேசமயத்தில் பஸ்ஸிற்குக் காத்திருந்த பவானியும் சாவித்திரியின் செயலைப்பற்றி விமர்சனம் செய்து கொண்டிருந்தாள்.

"ஒரு ஜாடி நிறைய பிஸ்கட் போட்டு வைத்திருந்தது. மாதிரிக்குக்கூட இந்த குழந்தையின் கையில் ஒன்றைக் கொடுக்க மனசு வரவில்லை, உங்கள் தங்கைக்கு!"

"என்ன பவானி இது! எல்லாப் பெண்களையும்போல நீயும் பேச ஆரம்பித்துவிட்டாயே? பிஸ்கெட் தாவில்லை. பசும் பால் கறந்து வந்தது; அதில் கொஞ்சம் குழந்தைக்குக் கொடுக்கவில்லை. ஷெட்டில் கார் தூங்கிற்று. அதில் நம்மை ஏற்றி அனுப்ப மனசு வரவில்லை. இப்படி ஒவ்வொன்ருகச் சொல்லிக்கொண்டே போனல் முடிவேயிருக்காது!"

"நான் குற்றமாகச் சொல்லவில்லை. கொடுக்க வாய்த்திருந்தும் மனசு வரவில்லையே என்று தோன்றியது; சொன்னேன்."

"தோன்றுவதையெல்லாம் தின்றுவிடு, பிஸ்கெட்டு சாப்பிடுவதாக நினைத்து" என்று சொல்லிச் சிரித்தான் பாஸ்கரன். பவானியும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டாள்.

"பவானி, இன்று என்ன சமையல் தெரியுமோ? பரங்கிக்காய்தான் போட்டு பருப்பு சாம்பார், உருளைக் கிழங்கு வறுவல். தேங்காய் பச்சடி"

"தங்கையைப் பார்த்துவிட்டு வந்த உற்சாகம் தலைகால் தெரியவில்லை! முதலில் பார்க்கவே போகிறதில்லையென்று குதித்தீர்களே?" கேலி செய்தாள் பவானி.

"என் மனசிலிருப்பது தெரிந்து செய்யும் நீ இருக்கும் வரை நான் என்ன பேசினல் என்ன பவானி? இரு இரு. . பெரிய காயாக இருக்கிறது. நான் போய்க் கத்தியை எடுத்து வந்து காயை நறுக்கித் தருகிறேன்."

பெரிய போர் வீரனைப்போல காயை ஒரு கையால் பிடித்து அழுத்திக் கொண்டு கத்தியைப் பாய்ச்சி, அதை இரண்டாகப் பிளந்தான்.

என்ன ஏமாற்றம்! காய் முற்றிலும் அழுகி நீர் கொட்டியது!

"அட பாவமே!"

"போனல் போகிறது விட்டுத் தள்ளுங்கள். வெங்காயம் போட்டுச் சாம்பார் செய்துவிடலாம்".

"ஊஹூம். தேங்காய் தொகையலும், வறுவலும்."

மறு பேச்சில்லாமல் பவானி தேங்காயை எடுத்து வந்து உடைத்தாள். "ஐயய்யே!" என்ற சொல் வெளி வந்தது.

"என்ன, அதுவும் அழுகலா?"

"இல்லை ஒல்லி"

"சரி மற்றொன்றை உடை"

"பட் பட்"

"நான் சுமந்ததுதான் மிச்சம். இதுவும் அழுகல்"

"காய்க்குள் புகுந்து பார்க்கவா முடியும்? தெரிந்திருந்தால் கொடுத்திருக்க மாட்டாள்."

"வேண்டுமென்று கொடுத்தாள் என்று நான் சொல்லவில்லை. பிள்ளைத்தாச்சி கொடுத்தது அச்சான்யம்போல் இப்படி ஆகிவிட்டதே என்று மனசு சங்கடப்படுகிறது"

"ஐயே! இங்கே தேங்காய் அழுகினல் அங்கே அவளுக்கு ஏதாவது வந்துவிடுமாக்கும்?" ஏமாற்றத்தை மீறிக்கொண்டு வந்தது சிரிப்பு.

"வரக்கூடாது என்பது தான் என் பிரார்த்தனை" என்று சொல்லி சமையலை கவனிக்கப் போனாள் பவானி.

அன்றைக்கு வெங்காய சாம்பாரும் உருளைக்கிழங்கு வறுவலும்தான் பாஸ்கரன் இலையில் விழுந்தது.

"பவானி, உனக்கொரு சமாசாரம்"

"நல்லதா கெட்டதா?"

"இரண்டு விதமும் தான். முதலில் நல்லதைச் சொல்லுகிறேன். எங்கள் புரொபஸர் செய்துவரும் ஆராய்ச்சி வேலையில் நான் அவருக்கு உதவி செய்ததால் சந்தோஷப்பட்டு ஹானர்ஸ் படிப்பதற்கு பெரிய சிபார்சு பிடித்து உபகாரச் சம்பளம் வாங்கித் தந்திருக்கிறார். இன்னும் மூன்று வருடங்களுக்குப் பின் நீ ஒரு உதவி ஆசிரியரின் மனைவியாகிவிடுவாய்!" மேலே படிக்க வேண்டும் என்ற தன் லட்சியம் தன் சொந்த முயற்சியின் பலனக நிறைவேறியதில் பாஸ்கரனுக்கு அளவு கடந்த பெருமை.

"உங்கள் நல்ல மனசுக்கு இதற்கு மேலும் கிடைக்கும். இன்னொரு சமாசாரம் என்ன?"

"அதுவா. . உம். . இன்று காலையில் சாவித்திரிக்கு ஆஸ்பத்திரியில் குறை பிரசவம் ஆகிவிட்டதாம்."

"என்ன?" பாஸ்கரனின் முகத்தை நிமிர்ந்து நோக்கினள் பவானி. ஏனே பாஸ்கரன் தலையைக் குனிந்து கொண்டான்.

"சுருக்கக் காரியத்தை முடித்துவிட்டு வந்து விடுகிறேன். போய்ப் பார்த்துவிட்டு வந்து விடலாம்"

"உம்" என்ருன் பாஸ்கரன்.

அரை மணியில் இருவரும் மாம்பலத்திலிருந்த நர்ஸிங் ஹோமை அடைந்தனர். சாவித்திரி படுத்திருந்த அறையினுள் தயங்கியவாறு நுழைந்தனர்.

கட்டிலருகில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த கைலாசம் இவர்களைக் கண்டதும் எழுந்திருந்தான். கண் விழித்த சாவித்திரி பாஸ்கரனைப் பார்த்து "வா, அண்ணு, மன்னி" என்று வார்த்தைகளைச் சொல்லி முடிக்கு முன் கண்ணீரைக் கொட்டினள்.

"அழாதே சாவித்திரி. உன் உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள

வேண்டும், அதுதான் முக்கியம்" என்றான் பாஸ்கரன் ஆறுதலாக.

"நான் சுமந்ததுதான் மிச்சம் அண்ணா. என் மடியில் குழந்தை வளர நான் கொடுத்து வைக்கவில்லை!"

அவளுடைய வார்த்தைகள் பாஸ்கரனின் உள்ளத்தில் சுருக்கென்று தைத்தன. இதே வார்த்தைகளைப் பவானி சொல்லி பதினைந்து நாட்கள்கூட ஆகவில்லை. இப்போது சாவித்திரி சொல்கிறாள். அன்றைய சம்பவத்திற்கும் இந்த சம்பவத்திற்கும் சம்பந்தம் உண்டோ? இப்படியாக ஓடியது அவன் சிந்தனை. அவன் மௌனத்தைக்கண்ட சாவித்திரி, தொடர்ந்து பேசினாள்: "எனக்கு ஆறுதல் சொல்ல உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அன்றைக்கு நீங்கள் வந்தபோது உங்களை சரியாக உபசரிக்கவில்லையென்று இவர் ரொம்பக் கோபித்துக்கொண்டார். . "

"எதையாவது பேசி உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள்." அன்போடு கடிந்து கொண்டாள் பவானி.

"நீ பேசாதே சாவித்திரி, உன் இஷ்டத்தை நான் சொல்லுகிறேன். நீங்கள் எங்களோடு வந்து இருக்க வேணுமென்பதுதான் அவள் ஆசை" என்றான் கைலாசம், பாஸ்கரனைப் பார்த்து.

"கைலாசம், என் அன்பும் ஆசியும் உங்களுக்கு எப்போதும் உண்டு. ஆனால் அது போதாது. தொழிற்சாலையிலும் மற்றத் துறையிலும் உங்களை அண்டிப் பிழைக்கும் எளியவர் உள்ளம் குளிர வேண்டும். குளிர்ந்த மனம், வாயார மனமார வாழ்த்தும். அப்போதுதான் உங்கள் வம்சம் தழைக்கும். சாவித்திரி உடம்பை அலட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்னொரு நாள் சாவகாசமாக வருகிறேன்."

பாஸ்கரன் புறப்பட்டுவிட்டான்.

ஃ ஃ ஃ

பஸ்ஸிற்காகக் காத்திருந்த போது பாஸ்கரன் பவானியிடம், "நீசொன்னது அப்படியே பலிக்குமென்று நான் நினைக்கவில்லை"யென்றான்.

"நான் என்ன சொன்னேன்? அவளுக்கு ஒன்றும் வரக்கூடாது என்று தானே சொன்னேன்?" என்றாள் பவானி திடுக்கிட்டு.

"ஒன்றும் வரக்கூடாது என்று தான் நீ சொன்னாய். ஆனால் அன்று ஆசையைத் திரட்டிக்கொண்டு சென்ற உன்னிடம் சர்க்கரையாகப்பேசி, தனக்கு வேண்டாததைக் கொடுத்து 'நான் சுமந்ததுதான் மிச்சம்' என்று நீ சோர்ந்து சொல்லும்படிச் செய்தாள். இப்போது எட்டு மாதம் அவள் ஊனைச் சுமந்தது வியர்த்தமாகிவிட்டது. . ."

"அப்படிச் சொல்லாதீர்கள். தெய்வச் செயலுக்கு விளக்கம் தரும் சக்தி நமக்கில்லை. பின்னால் நடக்கப் போவதற்கு ஒரு சூசகமாக அமைந்தது அன்றைய சம்பவம். அவ்வளவுதான்." அமைதியாக சொன்னாள் பவானி.

"இருக்கலாம் பவானி; ஆனால், இட்டார்க்கு இட்ட பலன் உண்டு என்பதை மறுக்க முடியாதே" என்று திட்டமாகக் கூறினான் பாஸ்கரன்.

அப்போது அவர்கள் ஏறவேண்டிய பஸ் வந்துவிட்டது.

எழுத்துலகம்

எஸ். ராஜா

★

காலம் சென்ற கு. ப. ராஜகோபாலன் ஒரு சமயம் ஒரு எழுத்தாள நண்பரை டிராம் வண்டியில் சந்தித்தார். எழுத்தாள நண்பர் சாதாரணமாக கு. ப. ரா. வின் எழுத்துப்போன்ற எழுத்துக்களில் நம்பிக்கையேயற்றவர்; வித்துவான் பரீக்ஷை கொடுத்துப் பரிசுகள் வாங்கித் தேறியவர். வாத்துக்கள் நீந்துவது ஏன், மீனுக்கு நீந்தக் கற்றுக் கொடு, தேன் சாப்பிடு என்பது போன்ற உபயோகக் கட்டுரை இலக்கியத்தில் திளைத்தவர் அவர். அந்த மாதம் கு. ப. ரா.வின் கதையொன்று ஒரு பத்திரிகையில் வெளி வந்திருந்தது. அந்தக் கதை நன்றாக இருந்தது என்று யாரோ சொல்லக் கேட்டுவிட்டு வந்திருந்தார் போலும். பாவம்! கு. ப. ரா.வைக் கண்டதும் சும்மா இராமல் "நீங்கள் எழுதியிருந்த கதை மிகவும் நன்றாக இருந்தது" என்று சொல்லி வைத்தார். எதிர்பாராத இந்தப் பாராட்டுதலைப் பெற்ற கு. ப. ரா. "சந்தோஷம். நன்றாக இருந்ததா? உங்களுக்குப் பிடித்ததா?" என்று கேட்டார். "ரொம்ப நன்றாக இருந்தது. ஆமாம். அடுத்த இதழில் வரும் இல்லையா?" என்று கேட்டு வைத்தார் எழுத்தாளர். அது அந்த இதழிலேயே முடிந்துவிட்டது என்றுகூடப் படித்தறிந்து கொள்ளாமல் பாராட்டிய நண்பருக்குப் பதில் என்ன சொல்வது? - கு. ப. ரா. பதில் சொல்லவில்லை.

ஃ ஃ ஃ

ஒரு ஆங்கிலேய பத்திரிகை நிருபன் ஒரு ஜப்பானிய ஸ்திரீயைக் கல்யாணம் செய்து கொண்டான். எட்டு வருஷங்களுக்குப் பிறகு அவன் "ஜப்பானின் பயங்கரம்" என்று ஒரு புஸ்தகம் எழுதினான். தன் கல்யாணத்திற்கும் இந்தப் புஸ்தகத்தின் தலைப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று அவன் தன் நண்பர்கள் எல்லோருக்கும் ஒவ்வொரு தடவையும் சத்தியம் செய்து தரவேண்டியதாக இருந்ததாம்.



ஆங்கில வசன நடையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிகவும் சிறந்த ஒரு ஆசிரியராக விளங்கியவர் ராபர்ட் லூயி ஸ்டீபன்ஸன். அவர் பிறந்தது 1850-ல். இறந்தது 1894. இள வயது முதலே அவருக்கு வியாதி படுத்திக் கொண்டேதான் இருந்தது. எனினும் சாவின் நிழலிலேயும் ஆனந்தமாக வாழ முடியும் என்பதற்கு அவர் வாழ்க்கை ஒரு உதாரணமாக அமைந்தது என்று சொல்ல வேண்டும். ஸ்காட்லந்தில் பிறந்த அவர், மாரிக் காலம் பூராவும் இருமிக் கொண்டேதான் கழிப்பார். தெருவிலே ஓடியாடி, உலகமெல்லாம் சுற்றிவர விரும்பிய அவர், படுக்கையிலே படுத்தபடியே பொம்மை வீரர்களை அப்படியும் இப்படியும் நகர்த்தித் தன் வீரச் செயல் ஏக்கத்தைத் தணித்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது.

தகப்பனாருடன் சண்டை போட்டுக் கொண்டு அவர் ஐரோப்பாவிலே ஆற்றங் கரைகளிலே இஷ்டப்படி சுற்றினார். மலைப்பிரதேசங்களிலே ஒரு கழுதையைத் துணைக்கு அழைத்துக்கொண்டு சுற்றினார். ஒவ்வொரு பிரயாணத்தைப் பற்றியும் அற்புதமான நூல் ஒன்று எழுதியிருக்கிறார். ஃபானி ஆஸ்வார்ஸ்ன் என்கிற ஒரு அமெரிக்க ஸ்திரீயைப் பாரீஸ் நகரில் சந்தித்து அவளிடம் காதல் கொண்டு அவளுடன் அமெரிக்கா போனார். ஃபானி கல்யாணமானவள்; அவள் விவாக ரத்து செய்துகொண்டு ஸ்டீபன்ஸனைக் கல்யாணம் செய்துகொண்டாள். அவளுடைய பதிமூன்று வயது மகனுக்காக "புதையல் தீவு" என்னும் நாவலை எழுதினார் ஸ்டீபன்ஸன். இந்த நாவல் அவருக்கு ஏராளமான புகழையும் பணத்தையும் தேடித் தந்தது. ஒரு நாள் இரவில் பயங்கரமான கனவொன்று கண்டு எல்லோரையும் எழுப்பிவிட்டார் ஸ்டீபன்ஸன். இந்தக் கனவின் விஷயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஸ்டீபன்ஸன் மூன்றே நாட்களில் "டாக்டர் ஜெகிலும், மிஸ்டர் ஹைடும்" எனும் கதையை எழுதினார். வெளிவந்தவுடனேயே அது பிரமாதமான வெற்றி பெற்றுவிட்டது. அடிப்படையில் ஒரு அற்புதமான உண்மையைக் கொண்ட இந்த இரட்டை மனிதன் கதை பல லட்சம் பிரதிகள் விற்பனையாயின.

ஸ்டீபன்ஸனின் புகழ் ஏறிற்றே தவிர அவர் உடல் நலம் அதிமோசமாகிக் கொண்டிருந்தது. கப்பல் பிரயாணங்களையும், கால்நடையாகத் திரிவதையும் ரஸிப்பதைக் கடைசி வரை நிறுத்தவேயில்லை ஸ்டீபன்ஸன். மெலாகாய் என்கிற தீவில் குஷ்டரோகிகளுடன் சாதாரணமாகப் பழகவும் அவர் தயங்கவில்லை. கையுறைகள் அணியாமல் அவர்களுடன் கைகுலுக்கவும், அவர்கள் பாதிப் புகைத்துவிட்டு தந்த சிகரெட்டுகளைப் புகைக்கவும் அவர் தயங்கவில்லை. ஸமோவா தீவில் வைலிமா என்கிற பெயருடன் வீடு கட்டிக்கொண்டு அதில் கடைசி காலத்தைக் கழித்தார் அவர். அவர் மனைவியும், மனைவியின் மகனும் கடைசி வரை அவருடன் இருந்தார்கள். அவர் மனைவியின் மகனை ஆஸ்பார்ஸூடனும் சேர்ந்து சில நூல்கள் எழுதி வெளியிட்டார்.

மோகமுள்

தி. ஜானகிராமன்

தான் வந்துவிட்டதைத் தெரிவிப்பதற்காக பிற்பகலில் அங்கு போனபோது நீலுப்பாட்டி வீட்டில் இல்லை. அவள் பிள்ளையும் எங்கேயோ திருவையாறு போயிருந்தானாம். இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் அவன். வாயில் ஈ புகுந்தது தெரியாமல் அலைபவன். கிராமங்களை வளைத்துக் கட்டிக்கொண்டிருந்தான். அதுவும் இப்போது குறுவை அறுத்து நெல் போட்டிருப்பார்கள். அவனை வீட்டில் காண்பது துர்லபம். அவன் மனைவியிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தான் பாபு.

வீட்டில் நுழையும்போது "யாரு?" என்று குரல் கேட்டது. நீலுப்பாட்டிதான்.

"நான்தான், பாட்டி."

"யாரு பாபுவா? வா. அத்திப்பூவா போயிட்டே வரவா!" என்று வரவேற்றாள் பாட்டி.

"ஊரிலேர்ந்தே மத்தியானம்தானே வந்தேன், பாட்டி. வந்துட்டேன்னு சொல்றதுக்காக வந்தேன் மத்தியானம். நீங்க இல்லே."

"நீ வந்துட்டுப்போனேன்னு சொன்னா. நீ காலமேயே வந்துடுவேன்னு ஜவ்வரிசி கருவடாம் பொரிச்சு, சேனைக்கிழங்கு வறுவல் பண்ணியிருந்தேன். தேங்கா போட்டு பச்சைச் சுண்டைக்காய் குழம்பு பண்ணியிருந்தேன். கலத்துக்குப் பயத்தம் பருப்பு வச்சிருந்தேன். குழம்பு இன்னிக்கு சக்குசக்குனு நாக்கிலே ஒட்டிண்டு தேனா அமைஞ்சிருந்துது. நீ வரலியா, எனக்குச் சாப்பிடறாப் போலவே இல்லெ. ஊரிலேயே சாப்பிட்டு வந்துட்டியா?"

"ஆமாம்."

"உனக்காகத்தான் இன்னிக்கு வறுவல், மணத்தக்காளிக் கீரை வதக்கல் எல்லாம். இளஇளன்னு நல்ல கீரையா வந்திருந்துது. நெய்யை ஊத்தி வதக்கியிருந்தேன்."

இந்த மாதிரி பேசுகிறதுதான் பாட்டிக்கு வழக்கம். அவன் வராத வேளைகளில் அவனுக்காக அவள் செய்து வைத்தது பெரிய ஜாபிதாவாகத்தான் இருக்கிற வழக்கம். நரிக்கொம்பு, புலிப்பால், முதலைக் கொழுப்பு, மயில் எண்ணெய் முதலிய அபூர்வங்களைக் கொண்டுவந்து வைத்துவிட்டதுபோல, மூக்குத்திக் காய்க் கறி, வாளவரங்காய்க் கூட்டு, சீமைப்பலா முசுக்கறி, பலாப்பழப் பச்சடி என்று ஒரு மூச்சு சொல்லிவிடுவாள்.

"அடேடே, எனக்குத் தெரியாம போயிட்டுதே" என்றான் பாபு.

"ஊர்லே சாப்பிட்டாத்தான் என்ன? மத்தியானம் ரண்டு மணிக்கு வரது. ஒரு தடவை சாப்பிட்டுட்டுப் போறது... கப்பூ, மத்தியானக் குழம்பு மிச்சம் வச்சிருக்கியோ" என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள் பாட்டி.

★ தொடர் நாவல் ★

"தொட்டுக்க இருக்கு."

"நல்ல வேளைடிம்மா! தொட்டுக்க இருக்காம். இந்தப் பெரிசு இருக்கே, அது குழம்பு நன்னாருக்கு நன்னாருக்குன்னு தீட்டித்தே பாரு" என்று கூடத்தைப் பார்த்தாள். கண்ணில் சதை வளர்ந்து, ஆபரேஷன் செய்து, போட்ட அந்தப் பூதக்கண்ணாடிக்குள், அவள் வலது கண் விளம்பரக் கண்ணாக விரிந்திருந்தது.

'பெரிசு' பாட்டியின் மூத்தப் பேத்தி. நாலு வயதிருக்கும். அப்போது கூடத்தில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது.

"சரி, கையைக் காலை அலம்பிண்டு உட்காரேன்."

பாபு உட்கார்ந்தான்.

வாழை இலையில் நீர் தெளித்து ஒரு மூலையில் சிறிது உப்பும், மாவடுவும் வைத்திருந்தது. பாட்டியின் மருமகள் ஒரு ஈயப் போணியைக் கொண்டு வைத்து, நீர் கொட்டின சாதத்தை நாலைந்து கை பிழிந்து வைத்தாள்.

"இன்னிக்காவது கொஞ்சம் மோர் போட்டுக்கோயேன் பாபு" என்றாள் பாட்டி.

"வாண்டாம் பாட்டி."

"புளிக்காத மோர்தாண்டா. கப்பூ, கடையாத மோர்லே கொஞ்சம் போடும்மா."

"வாண்டாம் பாட்டி."

"எல்லாத்துக்கும் வாண்டாம், வாண்டாம், வாண்டாம். சரி, குழம்பாவது போட்டுப்பியோ மாட்டியோ?"

"அது போடுங்கோ" என்று பாபு மனதிற்குள் சிரித்துக்கொண்டான். பாட்டி இந்தமாதிரி உபசாரம் செய்வ

தில் கை தேர்ந்தவள். அவளுக்கு ஒன்றும் மனது கடிசல் இல்லை. ஆனால், நன்ருகச் சம்பாதித்து வந்த புருஷன் திடீர் என்று குடும்பத்திற்கு மீறிய கடனை வைத்துவிட்டு இறந்துபோன நாளிலிருந்து, ஒன்றியாக ஒரு எருமையை வைத்துக்கொண்டு, பால் விற்று, மோர் விற்று ஒரு பிள்ளையைப் படிக்கவைத்து, அவன் பள்ளிக் கடைசி வகுப்பில் மூன்று தடவை தவறி, வேலையில்லாமல் திண்டாடி, கடைசியில் இன்ஷியூரன்ஸில் புகுந்து, ஆளாகி, கல்யாணம் செய்து, இரண்டு குழந்தைகளைப்பெற்று, சம்பாதிப்பதில் முக்கால் வாசியை வெளியே உதறிவிட்டு, மீதியில் அம்மா கண்ணில் காண்பித்து—அவதிதான். இரண்டு குழந்தைகளுக்கும் வயிற்றில் கட்டி. அதற்குச் செலவு. மருமகள் பிரசவிப்பது, ஏழைகள் பிரசவமாகவும் இராது. பாட்டிக்கு இந்த வாயுபசாரத்தைக் கற்றுக்கொள்ளும் தேவை வந்துவிட்டது.

அந்த வருஷம் கல்லூரி திறந்து, ஜூலை மாதம் பாட்டி வீட்டில் அவன் சாப்பாட்டுக்கு ஏற்பாடாயிற்று. ஹாஸ்டல், ஹோட்டல்—இரண்டிலும் செலவு சற்று கூடுதல்தான். அதுமட்டுமில்லை. ஜுரம், உடம்பு வலி என்று படுத்துக்கொண்டால், பத்தியமாக இருப்பதற்கு இப்படித் தெரிந்தவர்கள் வீட்டில் வைத்துக்கொள்வது நல்லது என்று, வைத்தி அவனைக் காலேஜில் சேர்த்த நாள் முதல் செய்துகொண்டிருந்தார்.

ஜூலை மாதம் இங்கு வந்தபோது, முதல் நாலு நாளைக்கு இரவிலும் குழம்பும், கறியும், ரசமுமாகச் செய்து போட்டாள் பாட்டி. பாபுவுக்குச் சற்று மனதுக்குச் சிரமமாயிருந்தது. அங்கு இரவுச் சமையல் என்பது அவனுக்காகத்தான். வெய்யில் காலம். புழுக்கமோ 'ஹாஹா' என்று அரற்றினால் தேவலைபோலிருந்தது. "பாட்டி, ராத்திரியிலே எதுக்கு இதெல்லாம்? கொஞ்சம் நீர் கொட்டின சாதமே போரும். எனக்கு அதுதான் வழக்கம்" என்று சொல்லி வைத்தான். அவன் இஷ்டப்படியே செய்துவிட்டாள் பாட்டி. "மோர் வாண்டாம் பாட்டி. நீர் கொட்டின சாதத்திற்கு, அதுவும் புழுங்கரிசிச் சோறுக்கு, ஒரு கடுப்பும், மணமும் உண்டு. மோரைப் போடாதீங்கோ. அந்த மணத்தை அடிச்சிண்டு போயிடும்" என்ருன் பாபு. மறு நாள் பாட்டி அதற்கு இசைந்தாள்.

நடுவில் மழை ஒரு வாரம் அடித்து, சற்றுக் குளிராகக்கூட இருந்தது. பாட்டி அதை மாற்றவில்லை. சுடச்சுட வேண்டும் போலிருந்தது பாபுவுக்கு. தானே வாயைக் கொடுத்து மாட்டிக்கொண்டது போல் விழித்தான். ஆனால், வாயைத் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. இரண்டு வருஷம்தானே, எப்படியாவது தள்ளிவிடுகிறேம் என்று மூன்ருவது மழையன்றே திடப்படுத்திக்கொண்டுவிட்டான். பாட்டி போடுகிற காபிகூட காபிப் பொடி காலும், வறுத்த கொண்டைக் கடலை முக்காலுமாகத்தானிருக்கும். முதலில் கொஞ்சம் பேதிக்குச் சாப்பிடுகிற மாதிரிதான் இருந்தது. ஆனால், இப்போது அதுவும் பழகிவிட்டது; அயன் காபியில்கூட அன்னிய ருசி வாடையடிப்பதாகப் படுகிற அளவுக்குப் பழகிவிட்டது!

அவனுக்குப் பசிதான். நீர் கொட்டின சோறு கடுப்பும், தவிட்டு மணமுமாக மூக்கையிழுத்தது. பாபுவுக்காகப் பண்ணினது என்று பாட்டி சொன்னது கொஞ்சம் மிகையாக இருக்கலாம். எப்படியோ, சுண்டைக்காய்க் குழம்பு அசாத்திய ருசியாகத்தான் இருந்தது. நமக்காகப் பண்ணினதாகவே அவள் சொல்லட்டுமே—ஒன்றும் தவறில்லை. பாட்டியும் மாவடு வாங்குவதில் பெயர் போனவள். வடுவடு என்று கண்டதை வாங்கி ஊறப் போட்டுவிட மாட்டாள். மஞ்சநாறி, அரிசிக்காய்ச்சி என்று வாசலில் உட்கார்ந்து, நூற்றுக்கணக்கில் கூடைகளை இறக்கி, முகர்ந்து, நசுக்கி ருசி பார்த்து, ஒரு கலம் வடு பொறுக்கி எடுப்பதற்கு மாவடு சீசன் முடிகிற வரையில் ஆகிவிடுகிற வழக்கம். நீர் கொட்டின சோற்றைச் சாப்பிடுகிற வாழும் முறையைக்கூட ரசிகத்தன்மையோடு வகுத்துக்கொண்டவன்தான் அவன். கொண்டைக்கடலைக் காபியைக் காபி என்று சமாதானம் செய்துகொள்கிற மனோபாவத்திற்கும் இதற்கும் முரண்பாடாகத்தான் இருக்கிறது. முரண்பாடு என்று நினைப்பானேன்! முடிந்தால், பிள்ளை இன்னும் நாலு காசைக் கண்ணில் காண்பித்தால், இந்தச் சமாதானத்திற்கு அவசியமே இருந்திராது.

பாபு சாப்பிட்டுவிட்டுக் கையலம்புகிற போது, நடையில் செருப்புச் சப்தம் கேட்டது. பாட்டியின் பிள்ளை.

"யாரு பாபுவா?"

"ஆமாம்பா. இப்பதான் வறியா?"

"ஆமாம். நீ எப்ப ஊர்லேர்ந்து வந்தே?"

"காலமே வந்தேன். . உன்னைக் காண்றதே முடியலியே இப்ப. பிஸினஸ் ரொம்ப மும்முரம்போலிருக்கு."

"ஆமாம், பிஸினஸ் மும்முரமாயிருந்தா, நான் ஏன் இப்படியிருக்கேன்? ஏதோ அலஞ்சிண்டே இருக்கவேண்டியது. நாய்க்கு வேலையும் கிடையாது; ஓய்ச்சலும் கிடையாது."

"பார்த்தபோதெல்லாம் இதான் சொல்றே. திருவையார்லே என்ன முப்பதாயிரத்துக்காவது வசூலியிருப்பே இன்னிக்கி!"

"ஆமாம் முப்பது லட்சம்! நீ ஒண்ணு. எழுநூறு கலம் நெல் அளந்துவிட்டிருக்கான். மூவாயிரத்துக்கு ஒரு பாலிசி எடுத்துக்கோன்னு முப்பது தடவை அலஞ்சாச்சு. எல்லாத்தையும் பண்றேன். முதல் பிரீமியத்தை நீ கட்டிப்பிடேங்கருன். பணம் படைச்சவன்லாம் இப்படி பஞ்சப் பாட்டு பாடருன். கடைசியிலே நீ இழு நான் இழுன்னு டாக்டர் பீஸை நான் போட்டுக்கறேன்யான்னு சொல்லி, அதைக் கழிச்சிண்டு கட்டுன்னு கையெழுத்தை வாங்கினேன். நீ என்னமோ பிஸினஸ் மும்முரமோன்னு கேக்கறே."

"நீயும் பார்ட்டியை டாக்டர் கண்ணிலே காமிக்காமலே டாக்டர் சர்டிபிகேட்டெல்லாம் தயார் பண்ணிப்பிடறே!'

"அப்பா, இரைஞ்சு சொல்லாதே. என்ன பண்றது? தொழில்னு எல்லாம் தான் பண்ணவேண்டிருக்கு. ஒவ்வொரு இடமா டாக்டருக்குக் காபியும் சார்ஜூம் சாப்பாடும் கொடுத்து அழைச்சிண்டு போறதுன்னு முடியறதா? என்ன பண்றது? தொழில்னு இறங்கிப்பிட்டா எல்லாம் ஜாடையாப் போகவேண்டியதுதான்...அதெல்லாம் கிடக்கட்டும். உன் சங்கதி என்ன? ஊருக்குப் போனு அப்பாட்ட கேக்கறேன்னியே, கேட்டியோ?"

"கேட்கலாம்னு பார்த்தேன். அதெல்லாம் நீ சம்பாதிக்க ஆரமிச்சுன்னுடா யோசிக்கணும்னு ஒரு வார்த்தை சொல்லிப்பிட்டார்னு, என்ன பதில் சொல்றது? பேசாம இருந்துட்டேன்."

"நீங்கள்ளாம் இப்படிச் சொன்னு அப்புறம் போற வழி என்ன சொல்லு?"

"நீங்கள்ளாம்னு இஞ்ச என்ன எஸ்டேட்டு பாழாப் போறதா?"

"சரி; அப்படி ஒரே தரியா சொல்லிப்பிட்டா நான் என்ன பண்றது?..எஸ்டேட் இருக்கிறவாளுக்கு என்ன முடை இப்ப? நமக்குத்தான் முடை. கையிலே இருந்தா செலவழிஞ்சிண்டே இருக்கும். அதுக்குத்தான் இது கட்டாயமா ஒரு கட்டு மாதிரி."

"வாஸ்தவம். ஆனு, நான் இன்னும் சம்பாதிக்க ஆரம்பிக்கலியே."

"நீ இப்படிச் சொல்றே. ஏழெட்டு வயசுக் குழந்தைகளுக்கெல்லாம்கூட பல பேர் இன்ஷூர் பண்ருு இப்ப."

"அப்பாதானே கட்டணும்."

"ஆமாம். கீழ்வாரிசுக்குச் சொத்து சேர்க்கருப்போலத்தானே இது? இது ஒரு தினுசு."

"கீழ் வாரிசுக்கு எதுக்காகச் சொத்து சேக்கறது? பிள்ளையைப் பெத்ததுக்காக படிக்க வச்சு, அதுகள்ளாம் தானு நிக்கற வரையில் காப்பாத்த வேண்டியதுதான். அப்பறமும் அதுகளைக் காப்பாத்தணுமா? இது இயற்கைக்கு விரோதமானது."

"சொத்துச் சேர்க்கறவாள்ளாம் அசடுகள்னு சொல்லு."

"அசடோ, கெட்டிக்காரர்களோ. அவா செய்யறது நியாயமில்லை."

"உங்கப்பா கிட்ட போய் இதெல்லாம் சொல்றதுதானே?"

"எங்கப்பாவுக்கே பூர்வீக சொத்து கிடையாதே. எங்கம்மா வழியா வந்துதுதான்."

"அது சரி, அவர் கிட்டபோய் இதெல்லாம் சொன்னுத் தெரியும்."

"என்ன தெரியும்? அவர் இதுக்கு உடன்படாம இருக்கலாம். அவ்வளவுதானே? நான் உங்க சொத்து எனக்கு வாண்டாம்னு சொல்லிபிடறேன். நீங்களே இஷ்டப்படி செலவழிச்சுங்கோன்னு சொல்லிட்டுப் போறேன்."

"சொல்லுவே சொல்லுவே. நாலு வருஷம் போகட்டும். உனக்கும் ஒருத்தி வந்து, ஒண்ணு ரண்டாகி, மூணுகி, நாலாகி, அஞ்சாறபோறதுன்னு தெரியப்போறது?"

"அந்தமாதிரி பிடுங்கல் வரபோது பிடிவாதமும் அதிகமாகாதா?"

[illegible] செல்லாம்? உங்க ஊர்லெ தெரிஞ்சவாள்ளாம் இருப்பாங்க. அவங்களிடமாவது சொல்லி வையி. நீ பண்ணினப் பண்ணிக்கோ, பண்ணுட்டாப் போ." பாபு பதில் சொல்லுவதற்குள், பாட்டி பிள்ளையைச் சாப்பிட மூன்றும் தடவையாகக் கூப்பிட்டு விட்டாள்.

" சரி, அப்ப நான் வரட்டுமா?" என்று எழுந்தான் பாபு.

"இரேன். போகலாம்."

"இல்லெப்பா, இப்படி ஒருத்தரைப் பாத்துட்டு வந்துடறேன். எட்டரை மணிக்குள்ள வரேன்னு சொல்லியிருக்கேன்."

"சரி, எப்ப வருவே திரும்பி?"

"பத்து மணிக்குள்ள வந்திடுவேன்."

"சரி, அப்புறம் பார்க்கிறேன்."

"போயிட்டு வரேன் பாட்டி."

தெருவெல்லாம் புரட்டாசி நிலவு வெள்ளி பூசியிருந்தது. ஜிலு ஜிலுக்கும் மென்காற்றும் புலன்களைக் குளிர்வித்தது. அக்கரையில் ஓங்கி நின்ற தென்னைகளின் கீற்றுகள் நிலவில் குளித்து மின்னிக் கொண்டிருந்தன. தலைமைக் குமாஸ்தாவின் வீடு சாத்தியிருந்தது. வாசல் மாடத்திலிருந்த அகல் விளக்கு மட்டும் முத்தாக எரிந்துகொண்டிருந்தது. வீட்டு வாசல்களில் என்னமோ சாப்பிட்ட இடத்தை மெழுகுவதுபோல் சின்னதாக நீர் தெளித்துக் கோலம் போட்டிருந்தார்கள். இன்னும் பத்து வாளி நீரைத் தெருவையடைத்துத் தெளித்திருந்தால், புழுதியும் அடங்கும்; மனதுக்கும் குளுமையாக இருக்கும். கடனே என்று இப்படி ஒப்பேற்றுவானேன்? இந்த ஊரில் தண்ணீருக்கா பஞ்சம்! தெருவின் பழுப்புக்கு நடுவில் சுட்டிசுட்டியாக, வீட்டு வாசல்களை ஒட்டின நீர்த்தெளிப்பைக் கண்டதும் சிரிப்பாகத்தான் இருந்தது. நீர் தெளிப்பதில் கூடவா இவ்வளவு தாித்ரம்! இவ்வளவு கணக்கு! தெருவையடைத்துத் தண்ணீரைத் ததும்பத் தெளித்து, பளிச்சென்று கோலத்தைப் போட்டு, திண்ணையில் வந்து உட்கார்ந்து வாசலில் காவேரி ஓடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தால். . வெறும் நம்பிக்கைதான், அப்படி யாரும் உட்காரவில்லை. உள்ளே அழகிருந்தால் வெளியே மலரும். சோம்பலும் வாசல் நம்முடையதல்ல என்ற மன விகாரமும் பிறர் சொல்லியா நீங்கப் போகின்றன? சந்திரன் இதை சட்டை செய்யவில்லை. கும்பகோணத்துச் செம் புழுதியைக்கூட வெள்ளியாக மாற்றி, அழகை இறைத்திருந்தான்.

மாவடு இன்னும் வாயில் மணக்கிறது. பாட்டி பழங்காலக் கிராமத்து ரசிகை. ஆனால், மாவடு, வற்றல்களுக்கு மேல் அந்த ரசிகத் தன்மை இப்பொழுது மிஞ்ச முடியவில்லை. வக்கீல் குமாஸ்தாவாக இருந்த அவள் புருஷனுக்கு பெரிய வக்கீல்களுக்குச்சமமாகச் சம்பாத்தியம் கொழித்துக்கொண்டிருந்தது. பாரிச் செலவு. கட்சிக்காரர்கள் முதற்கொண்டு அங்கேயே சாப்பிட்டுக்கொண்டிருப்பார்களாம். சதவருஷம் இருக்கப் போகும் நம்பிக்கையுடன்தான் எல்லோரும் வாழ்கிறார்கள்—அதுவும் பெரிய மனதுகளுக்

[illegible] ப்பு வந்துவிடும் என்று யாருக்குத் தெரியும்? மனிதன் கண்ணை மூடி இரண்டே மாதம். நகைகள் கடனுக்குப் போக, பெரிய வீட்டை விட்டு சின்ன வாடகை தேடி, எருமை வைத்துக்கொள்ளும் காலம் வந்துவிட்டதாம். அதற்காகப் பாட்டி அஞ்சவில்லை. ஆயிரம் ரூபாயிலும் ஒற்றை ரூபாயிலும் அவளுக்குக் குடும்பம் நடத்த முடியும். . . இந்தப் பிள்ளைமட்டும் வெளியாடம்பரங்களைக் குறைத்துக்கொண்டு, இன்னும் கொஞ்சம் பணம் கொடுத்தால்? செலவில் அப்பாவைக் கொண்டுதான் பிறந்திருக்கிறான். சம்பாதிப்பதில் என்னவோ? தொழிலுக்கு ஏற்ப, குடும்பத்துக்கே சிக்கனம் பழக்கி வைக்கிறான் போலிருக்கிறது...

திடீரென்று நின்றான் பாபு. ஆனையடி வந்ததும் துக்காம்பாளையத் தெருவில் அவன் திரும்பி, சிறிது தூரம் நடந்துவிட்டிருந்தான். நேரே போகவேண்டியவன் இங்கு திரும்புவானேன், தன்னையறியாமல்? யமுனா வீட்டுக்குச் சாயங்காலம் தானே போய்வந்தோம்...மறுபடியும் போனால் என்ன? போகலாம். போனால், சுருக்கென்று ஏதாவது சொல்லுவாள். கேலி செய்வாள். வாயைத் திறக்காமல் கண்ணால் சிரிப்பாள். படிக்காமல் ஊர் சுற்றுகிறது அவள் கண்ணை உறுத்தும்..

பின்னாலும் திரும்ப மனம் இல்லை. மேலே நடந்தான் அவன். யமுனா வீட்டு வாசல் கதவு சாத்தியிருந்தது. மாடத்து விளக்கும் அணைந்துவிட்டது. நல்ல

[illegible] போனாலும் எட்டரை மணிக்குச் சரியாக ராஜத்தின் வீட்டுக்குப் போய்விடலாம்..

ஃ ஃ ஃ

வழக்கம்போல ராஜம் சட்டையைக் கழற்றிவிட்டு, வெறும் உடம்புடன் வாசல் படியில் உட்கார்ந்து, காற்று வாங்கிக் கொண்டிருந்தான். கடலங்குடித் தெருவிலுள்ள மற்ற வீடுகளைப்போல இதுவும் அகலமான வீடுதான். இரண்டு மனை அகலம். ஹோ என்று பெரிய திண்ணை. திண்ணையில் ஒரு விசுப்பலகைகூட இருந்தது. ஆனால், ராஜம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வாசல்படியில்தான் உட்கார்கிற வழக்கம்.

"வா பாபு; சாப்பிட்டாச்சா?"

"ஆச்சு"

"அப்பா அரை மணியாகக் கேட்டுண்டிருக்கா, எங்கே நீ வல்லியே வல்லியேன்னு".

"எட்டரை மணிக்குத்தானே வரேன்னேன்?"

"அது சரி; அவர் அவசரப்படறதைப் பார்த்தா அவரே இப்ப ஒரு தம்புராவை வச்சிண்டு, உனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்சுடுவரோன்னு பயமாயிருக்கு" என்று மெதுவாகச் சிரித்தான் ராஜம்.

அவர்கள் உள்ளே போனபோதும் "வாய்யா" என்று உரக்க வரவேற்றார் தியாகராமன். "சொன்ன சொன்ன நேரத்துக்குத்தான் வருவே போலருக்கு" என்று அவர் சொல்வதற்கும் கூடத்துக்

கடிகாரம் காறிக்கொண்டு ஒரு அரை அடிப்பதற்கும் சாயாயிருந்தது.

முற்றம் பெரிய முற்றம். மேலே முழுவதும் கம்பி போட்டிருந்தது. அதற்கும் மேல் பெரிய கோடைப் பந்தல்— தெற்கு நோக்கி மேலே எழும்பியிருந்தது. தெற்குக் காற்றை அப்படியே பிடிப்பதற்காக வாயைப் பிளப்பதுபோல் போட்டிருந்த பந்தல். நடு முற்றத்தில் ஒரு பெரிய மேஜை. மேஜை நிறையப் புத்தகங்கள். சுற்றிலும் இரண்டு மூன்று நாற்காலிகள், பெஞ்சுகள். மேஜைக்குப் பின், ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தார் தியாகராமன். "வாய்யா" என்று சொல்லிவிட்டு, டிராயரை இழுத்து, பல் செட்டை எடுத்து வாயில் மாட்டிக்கொண்டார் அவர். மாநிறம். ஒல்லி. அவரைப் பார்த்தால் ராஜம் கிழவனுனதுபோலிருக்கும். முன்னர் தலை வழுக்கை விழுந்து, பின்னர் தலையில் நரை அரை வட்டமாகப் பின்னேடிக் கொண்டிருந்தது.

"என்ன பாபு, பாட்டுச் சொல்லிக்கணுமாமே?"

"ஆமாம்."

"நீதான் நாலு வருஷம் சொல்லிண்டிருக்கியாமே."

"அது போரலே, இன்னும் கரை கிட்ட வேணான் இருக்கேன்."

"அப்படியே நீஞ்ச வேண்டியதுதான். ஆழம்வரையில் உன்னைக் கொண்டுவிடுவாளா?"

"ஆழம்வரையில் போக நினைக்கறதுக்குத் தைரியம் வேணுமோல்லியோ? எனக்கு அதுகூட வரலே இன்னும்."

"நான் போய் சொல்றேன்பா ரங்கண்ணு கிட்ட. உன்னையும் அழச்சிண்டு போறேன். எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால், ரொம்ப வேலை வாங்குவர் அவர். பாடத்தை அன்னி அன்னிக்குச் செய்யலேன்னு நாக்கைப் பிடுங்கிண்டு சாகும்படியாப் பேசுவர். வெய்வர். உங்க ரண்டு பேருக்கும் காலேஜ்பாடமே அன்னி அன்னிக்கிப் படிக்க முடியலெ. காவேரி மணல்லியும் நாகேச்வரசாமி கோயில் பிராகாரத்திலியும் காந்தி பார்க்கிலேயும் உட்கார்ந்து பேசறத்துக்குத்தானே போது சரியா இருக்கு?"

பாபு ராஜத்தைப் பார்த்தான். ராஜம் கிழக்கே சுவரைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தான்.

"அதுக்கெல்லாம் இருக்காதே, அவர் கிட்ட போனு!"

பாபு பேசாமலிருந்தான்.

"எது பெரிசு, எது முக்யம்னு தீர்மானம் பண்ணிக்கோ. சங்கீதம் பெரிசா, இப்படி மூலைக்கு மூலை உட்கார்ந்து மந்த்ராலோசனை பண்றது பெரிசா? யோசிச்சுனுடு. நான் சொல்றதைப் பத்தி என்ன இப்ப?"

"அதெல்லாம் குறைச்சுக்கறேம். நான் அவனைக் கட்டி இழுக்கலே" என்முன் ராஜம்.

"நீயா? நீ அவன் பாட்டுச் சொல்லிக்கறபோது போய், ரங்கண்ணுவோடயே பேச ஆரமிச்சுடுவயே" என்முர் அவர்.

"அங்கியும் போகலெ."

"நாங்க வீணைப் பேசிப் பொழுதைப் போக்கறதில்லே மாமா" என்முன் ராஜம்.

"நீங்க என்ன பேசறேளோ? பன்னண்டு மணிக்குக் குறைஞ்சு இவன் வீட்டுக்கு வந்து நான் பாக்கலெ. இப்பதான் நீ ஊருக்குப் போயிருக்கேன்னு வீட்டிலே கிழக்கெயும் மேற்கெயும் பாத்துண்டு உக்காந்திருக்கான் நாலு நாளா."

"நாலஞ்சு புஸ்தகமாவது வாசிச்சு முடிச்சிருப்பனே ராஜம்?" என்முன் பாபு.

"அரை மணி பேசு. ஒரு மணி பேசு. இப்படியா ராத்திரி பகல் தெரியாம?"

"லண்டன்லெ போய் ராஜாவோட பேசினாலும் சுயராஜ்யமாவது வாங்கிண்டு வரலாம்" என்முள், எச்சில் மெழுகிவிட்டு, முற்றத் தாழ்வாரம் வழியாகக் கையலம்பப் போன அவர் மனைவி.

"அதானே சொல்றேன்?"

சிறிது மௌனத்திற்குப் பிறகு அவர் எழுந்து உள்ளே சென்முர். வெளியே வரும்போது தட்டாடை மூலக்கச்சமாக மாறியிருந்தது. மேலே ஒரு முழுக்கைச் சட்டை. அங்கவஸ்திரம்.

"போவோமா?"

"இப்பவேவா!" என்று பாபு திகைத்தாற்போலக் கேட்டான்.

"பின்ன எப்ப? போய்ப் பார்க்க யோசிக்கிறது ஒரு நாளைக்கு. பார்க்கறது ஒரு நாளைக்கு. எப்ப வரலாம்னு கேக்கறது ஒரு நாளைக்கா?" என்று அடிமாடத்திலிருந்த செருப்பை மாட்டிக் கொண்டார் அவர்.

"ஏண்டா ராஜம், கிளம்பேன்."

ராஜமும் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினன்.

வாசலில் இறங்கி சற்று தூரம் சென்றதும், "நீங்க இவ்வளவு சீக்கிரம் புறப்படுவேள்னு நான் நினைக்கலே" என்முன் பாபு.

"இதெல்லாம் நினைச்ச உடனே செய்யணும். நாளைக்கு உனக்கு எதாவது தோணும். காலேஜ் பாடம் இருக்கே, ரண்டையும் கவனிக்க முடியுமோ முடியாதோன்னு யோஜனையெல்லாம் வரும். அப்புறம் என்னைப் பார்க்கறபோது இதைப் பேசாம இருப்பே. நானும் ஏதாவது சொல்றனு இல்லியா என்று நாலு தடவை பாத்துட்டு, எனக்கென்னன்னு பேசாம இருந்திடுவேன், இப்பவே போய் கிளப்பி, பாத்து சொல்லிப்பிட்டா. தண்டா இல்லை பாரு."

பாபுவுக்குத் திக்திக்கென்றது. பரீட்சைக்குப் போகிறதுபோல, என்னவோ ஏதோ என்ற ஒரு நடுக்கம். உடனே இப்படித் தர தரவென்று கழுத்தில் வேஷ்டியைப் போட்டு இழுப்பதுபோல இவர் அழைத்துப் போவார் என்று எதிர்பார்த்திருந்தால்தானே!

கும்பேச்வரன் கோயில் தெற்கு வீதி வழியாய் போகும்போது மங்களாம்பிகையிடம் வேண்டிக்கொண்டான். வைத்தி சொன்ன பிரார்த்தனையைச் சொல்லிச் சொல்லி, தைரியத்தைத் தருவித்துக் கொண்டான். மூவரும் கோயிலை வலம் வந்து வடக்கு வீதிவந்து திருமஞ்சன வீதியில் திரும்பினர்கள். ஒரு கிழக்குப் பார்த்த வீட்டின்முன் நின்முர் அவர்.

வாசல் கதவு ஒருக்களித்திருந்தது. குறட்டின் சிவப்புச் சிமிட்டுப் பரப்பு நிலவு விழுந்து பளபளத்தது. நடை இருட்டாக இல்லை. மங்கிய வெளிச்சத்தில் உறங்குவதுபோலிருந்தது.

"அண்ணு" என்று குரல் கொடுத்தார் தியாகராமன்.

பதில் இல்லை.

ஆளோடியில் ஏறி மெதுவாகக் கதவை விரலால் தள்ளினர்.

சிறு வெளிச்சத்தில் அவர்கள் கண்ட காட்சி வாயை அடைத்து, கண்ணை அகலச் செய்தது. ரங்கண்ணு நடையில் இருந்த ஒட்டுத் திண்ணையில் சப்பணம் கட்டி உட்கார்ந்திருந்தார். கண் மூடியிருந்தது. வலது கை முழங்கைக்கு மேல் அசைந்துகொண்டிருந்தது. மேலும் கீழும் முன் கையை உயர்த்தித் தாழ்த்திக் கொண்டிருந்தார் ரங்கண்ணு. கண் மூடின முகமும் கையோடு மேலும்கீழும் அசைந்துகொண்டிருந்தது. உதடுகள் சற்றுப் பிரிந்திருந்தது. ஆனால், சப்தம் ஏதும் வாயினின்றும் எழவில்லை. தியானத்தில் ஆழ்ந்து, சுழலில் சிக்குவதைப் போல, சூழ்நிலை நினைவின்றி, சிக்கின ஒரு நிலையின் முகபாவம்தான் அது. நடுவில் இரண்டு தடவை இரண்டு கைகளும் ஏதோ வானைக் கண்டு இறைஞ்சுவது போல் மல்லாந்தன. நாலைந்து கணங்கள் அந்த நிலையில் நின்று, முழங்கால்களின் மீது அமர்ந்தன. முகம் சற்று மேல் நோக்கி அசைவு ஓய்ந்தது. நாலைந்து விநாடிக்குப் பிறகு மீண்டும் வலது முன்னங்கை மீண்டும் பழையபடியே மெதுவாக உயர்ந்து உயர்ந்து தாழ்ந்தது. முகமும் அதன் சலனத்திற்கேற்ப உயர்ந்து தாழ்ந்தது.

அந்த முகத்தில் ஒரு எல்லை காணு அமைதி. ஆனால், சிம்மம்போன்ற அதன் அமைப்பு மட்டும் சற்று பயத்தையும் எழுப்பத்தான் செய்தது. ஏதோ பெரிய



தேரழுந்தூர் ஸ்ரீ ஆமருவியப்ப பெருமாள் கோவிலில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் கம்பர் சந்நிதி.

அலைகள் மீது ஏறி ஏறி இறங்குவது போல, இந்தக் கையும் முகமும் எழும்பி இறங்குவது உள்ளே நிகழும் இயக்கத்தின் வெளித் தோற்றமாகத் தோன்றுகிறது. அப்படி எந்த அலைமீது இந்த உள்ளம் ஏறி மிதக்கிறது? அசைப்பில் பார்த்தால், சித்தஸ்வாதீனமில்லாத நிலையென்று ஐயம் எழுப்பும் சேஷ்டை இது. பாபுவுக்குப் பளிச்சென்று முதலில் தோன்றியதே அந்த எண்ணம்தான். அது கரைந்துபோகக் கால் நிமிஷம் ஆயிற்று. தனியாக நடையில் உட்கார்ந்து, ஏன் இந்த சேஷ்டை! சற்று உற்றுப்பார்த்தால், அவருடைய உடல் முழுவதுமே அந்த அசைவில் ஏறியிருப்பதுபோலவே தோன்றிற்று. தன்னை மறந்த அந்த லயிப்பில், அவர் உடல், உள்ளம், உயிர் எல்லாவற்றையுமே இழந்துவிட்டதுபோல் தானிருந்தது.

பாபு ராஜத்தைப் பார்த்தான். ராஜம் அவன் தந்தையைப் பார்த்தான். அவர் உள்ளங்கையை மலர மல்லாத்தி வாயைத் திறக்காமல் எதையோ சொன்னார். 'யாருக்கு அறிய முடியும்? பெரியவர்...' என்பதுபோன்று இரண்டு மூன்று அர்த்தங்கள் பாபுவுக்குத் தோன்றின அந்த ஜாடையைப் பார்த்து.

அவர்கள் வந்து நின்று ஒன்றரை இரண்டு நிமிஷமாயிருக்கும். ஆளோடியில் செருப்புகள் ஏறின சப்தம் உள்ளேயும் யார் காதிலும் விழவில்லைபோலிருக்கிறது. வந்தபோது போல்தான் இப்போதும் இருந்தது. கூடத்திலும் அரவம் இல்லை. வெளிச்சம் மங்கி, பழுப்பு இருளாகத்தான் தெரிந்தது.

அசைந்துகொண்டிருந்த கை துடையில் அமர்ந்தது. இடது கை இடது துடையில் மல்லாந்தது.

"ஆகா" என்ற பெருமூச்சுடன் குரல் எழுந்தது. ரங்கண்ணு எதற்கு இந்த ஆஹாகாரம் செய்தார் என்று புரியவில்லை.

"அண்ணு" என்றார் தியாகராமன், இந்த இடைவெளியைப் பிடித்துக்கொண்டு.

"யார் அது?" என்று திரும்பினார் ரங்கண்ணு. இரண்டு மூன்று பேர் நிற்பதைப் பார்த்ததும், சற்று மருண்டது போல் எழுந்து, "யாரு?" என்று கண்ணை இடுக்கினார்.

"நான்தான் அண்ணு."

"யாரு, தெரியலியே. இப்படி வெளிச்சத்திலே வாங்கோளேன்" என்று எதிரே சுவரில் மாட்டியிருந்த பெட்ரூம் விளக்கைத் திருகிப் பெரிது பண்ணினார் அவர்.

"நான்தான் அண்ணு, தியாகராமன்." தியாகராமன் நிலைப்படியைத் தாண்டி நடையில் வந்தார்.

"யாரு" என்று மறுபடியும் உன்னிப் பார்த்தார்.

"தியாகராமன்."

"காலேஜ் தியாகராமனு?"

"ஆமாம்."

"வாங்கோய்யா, வாங்கோ. நான் யாரோன்னு நெனச்சிண்டிருக்கேன். உடகாருங்கோ, எத்தனை நாளாச்சு பாத்து அ..." என்று பிரமாத சந்தோஷத்துடன் வரவேற்றார் ரங்கண்ணு. அவருடைய சிம்ம முகத்தின் தோற்றமே மாறி விட்டது போலிருந்தது பாபுவுக்கு. யாராவது வேண்டிய மனிதர்களைப் பார்த்தால், குழந்தைகள்தான் இப்படி மனப்பூர்வமான சந்தோஷத்தைக் காண்பிக்கும். ஒரே மலர்ச்சியாக மலர்ந்த அந்த முகத்தில், மனமும், வாக்கும் ஒன்றையே நினைக்கும் நிர்மலமான குழந்தைத் தன்மைதான் மலர்ந்தது. எவ்வளவு பெரிய பல் இவருக்கு! எல்லாம் வெள்ளை வெளேரென்று வரிசையாக ஒரு அழுக்கு பழுதில்லாமல் மின்னின. செயற்கைப் பல்லோ என்னவோ! கணைக்காலுக்குக் கீழ் போகாத பஞ்சகச்சம். இடையில் மேல் வேஷ்டி சுற்றியிருந்தது. நெற்றியிலும், மார்பு, கைகளிலும் அந்தியில் அணிந்த விபூதிப் பட்டைகள் இன்னும் மறையவில்லை.

"எங்க இப்படி அபூர்வமா? அங்க யாரு?"

"என் பையன். அவனோட வாசிக்கறான் இன்னொரு பையன்."

"உங்க பையனா? வாங்கோடாப்பா, குழந்தைகளா, வாங்கோ, உட்காருங்கோ. . . பையன் என்ன படிக்கிறான்?"

"பி. ஏ.தான். முதல் வருஷம்."

"பேஷ். . . இதுதானே உங்க பையன்?"

"ஆமாம்."

"இது?"

"இதுதான் அவன்கூடப் படிக்கிறான்."

"ஓகோ. . பேஷ். . உட்காருங்கோடாப்பா."

"ஏய் ராஜம், நமஸ்காரம் பண்ணுடா அண்ணுவுக்கு. பாபு, நீயும் பண்ணு" என்ற தியாகராமன், அவர்கள் விழுந்து வணங்கின பிறகு, தானும் வணங்கி எழுந்தார்.

"என்னத்துக்கு இதெல்லாம்?" என்று சிரித்துக்கொண்டே, எல்லோருக்கும் ஆசி கூறினார் ரங்கண்ணு.

பாபுவுக்கு பயமெல்லாம் போய்விட்டது.

"வேலையிலேர்ந்து. . ."

"ரிடயராயிட்டேனே. . .போன வருஷம்."

"அதான் அதான் ஞாபகம். அதே வீட்டிலெதானே வாசம்?"

"ஆமாண்ணு."

"ரிடயராச்சுன்னு கவலையில்லெ. அனவரதம் என் அப்பனை . ஸ்மரிச்சுண்டே உட்கார்ந்திண்டிருக்கலாம். நீங்க நல்ல விவேகியாச்சே!"

தியாகராமன் வெட்கப்படுகிறாற் போலிருந்தது பாபுவுக்கு.

"என்மாதிரி அபஸ்வரங்களைக் கட்டிண்டு அழவாண்டாம் பாருங்கோ. அதுக்காகச் சொன்னேன்" என்றார் ரங்கண்ணு.

"அபஸ்வரம் நாசமாறதுக்குத்தானே இஞ்ச வரது?" என்றார் தியாகராமன்.

"ஆமாம். . .நீங்க ஒண்ணு. நான் என்னத்தைப் பண்ணப் போறேன்? அபஸ்வரம் நாசமாறதுக்கு பகவான் கடாட்சிக்கணும். நான் என்ன செய்ய இருக்கு? அ? அவன் பாக்கலேன்னு, என் கழுத்து அறுந்திண்டிருக்கும். ஐயா, என்னை விடுன்னாலும் விடமாட்டேங்கறு. என்ன செய்யறது? இப்படீ போயிண்டிருக்கு? அ?"

"ஒவ்வொரு பெரியவாளும் ஒரு காரியத்துக்காகப் பிறக்கிறு. கடைசி மூச்சு



விடறவரைக்கும் அதைச் செஞ்சிண்டு தான் இருக்கணும்."

"பெரியவாளுக்குன்னய்யா அது? என் மாதிரி பாஷண்டிகளுக்கெல்லாம் என்ன?"

"நீங்களே இப்படிச் சொல்லிண்டா நாங்கள்ளாம் எங்களை என்னன்னு சொல்லிக்கிறது?"

"நீங்கள்ளாம் நன்னு நாலு வித்தை யைக் கத்துண்டு, ஞானத்தைச்சம்பாதிச் சிண்டவா இல்லியா? கொக்குக்கு ஒண்ணே மதின்னு இல்லியே இஞ்ச மாதிரி."

"எனக்கு என்ன சொல்றதுன்னு புரி யலே. நாங்க படிச்சதெல்லாம் வித்தை யில்லே. செப்பிடு வித்தை."

"போங்கய்யாபோங்கோ. உமக்கு அடக் கம் ஜாஸ்தி. நீங்க சாஸ்திரங்கள்ளாம் ஜீரணம் பண்ணின பேர்வழின்னு எனக் குத் தெரியாதா?" என்று மறுபடியும் குழந்தை மாதிரி சிரித்தார் ரங்கண்ணு. "நிறைகுடம் தளும்பாதையா."

தியாகராமனுக்கு என்ன சொல்வது என்று தெரியத்தான் இல்லை. "சரி, நீங்க எப்படி வாணு வச்சுக்குங்கோ" என்று சொல்லிவிட்டார்.

"எங்க இப்படி இவ்வளவு தூரம் ராத்திரியிலே?" என்று ரங்கண்ணு ரதனுகக் கேட்கிறவரையில், அவர் பிறகு வாயைத் திறக்கவில்லை.

"இந்தப் பையன் விஷயமாய் வந் தேன்" என்று பாபுவைக் காண்பித்தார் தியாகு.

"என்ன?"

"பி. ஏ. வாசிக்கிறான். நாலு வருஷம் சங்கீதம் சொல்லிண்டிருக்கான். மேலே அண்ணகிட்ட இருக்கணும்னு ஆசை."

"இப்பத்தான் சொல்லி, வாயைமூடலை; அதுக்குள்ளியும் ஒரு பாலசிக்ஷையைக் கொண்டுவிடறேங்கிறேளே?"

"அப்படி ரொம்ப பாலசிக்ஷை இல் லேண்ணு; நாலு வருஷம் ஆயிருக்கே."

"நாலு வருஷம் ஆயிருக்கா?"

"ம்."

"சரி, யாரு கிட்ட ஆச்சுன்னு தெரிய வாண்டாமா? கட்டடத்தையே இடிச்சு வேற அஸ்திவாரம் போடும்படியா ஆயிட றதே சில சமயம். அப்ப பாலசிக்ஷையை விட சிரமமாப் போயிடறதே."

"நீங்கன்ன அதைச் சோதிக்கணும்?"

"ஏண்டா குழந்தை—யார் கிட்டடா சொல்லிண்டே."

பாபு பழைய ஆசிரியரின் பெயரைச் சொன்னான்.

"தஞ்சாவூர்ணு அவருக்கு?"

"ஆமாம்; அங்கேதான் சொல்லிண் டேன்."

"உனக்கு எந்த ஊரு?"

தியாகராமன் வைத்தியைப்பற்றிச் சொன்னபோது, ரங்கண்ணுவின் குரலில் அலுப்பு சற்று மறைந்தது.

"அவரா? ரொம்ப பெரியவர்னு கேள் விப்பட்டிருக்கேன். எப்பவோ ஒரு ராதா கலியாணத்துக்குக் கச்சேரி பண்ணப் போயிருந்தேன். அப்ப அவா பாடிக் கேட்டேனே. நல்ல திவ்யமான சாரீர சம்பத்து. தம்புராவுக்கு ஜீவாப் புடிச் சாப்போல இருக்கும். அவர் புள்ளையா? சந்தோஷம். ஒரு வில்லங்கம் தீர்ந்துது."

"என்னண்ணு?"

"ஆமாம். பரம்பரைப் பணக்காரன், புதுப் பணக்காரன்னு ரண்டு தினுசு உண் டோல்லியோ? ரண்டும் வேறே வேறே" என்று சிரித்தார் ரங்கண்ணு. "சரி, மெதுவா, ரண்டு கீர்த்தனம் பாடுவி யோப்பா?"

"பாடறேன்."

"சின்னக் குரல்லெ பாடு. போரும். மணி ஆயிடுத்து."

பாபு பாடினன்.

அனுபல்லவி முடிந்ததும், "பயப்படாம பாடு" என்றார் ரங்கண்ணு.

ஒரு கீர்த்தனை பாடி முடிகிறவரை யில், அவர் முகத்தில் ஒன்றும் தெரிய வில்லை.

"பரவாயில்லை. . . அஸ்திவாரத்தைப் பெயர்க்க வாண்டாம். ஆனாலும் பால சிக்ஷைதான். பரவாயில்லே. ஸ்வரம்கிரம் பாடுவியோடப்பா."

"தெரியாது."

"நல்லவேளை. இன்னொரு வில்லங்கமும் தீர்ந்துது..தியாகு, ஒண்ணுமில்லே. வித் யாசமா நினைச்சுக்காதீங்கோ. ஒடிஞ்ச கையா தப்பா ஒட்டவச்சிருப்பன். ஒடி ச்சு நிமித்தியாகணும். வைத்தியனுக் கும் வேதனை. ஒடிஞ்சவனுக்கும் அவஸ்தை. நல்ல வேளையா அப்படி ஒண் ணும் இல்லே. . ம்" என்று பாபுவையே பார்த்தார் அவர்.

"ஏண்டா, குழந்தே! நீ ஒரு பாட்டு பாடேண்டா" என்று ராஜத்தைப் பார்த் தார்.

"பாடத் தெரியாது அவனுக்கு. பேசு வன்" என்றார் தியாகு.

"பேசறதுதான் கஷ்டம் ஐயா. பாட றது எல்லாரும்தான் பண்றா? குயில் பாடறது. வானம்பாடி பாடறது. பாரத் வாஜம் பாடறது. திர்யக் ஜந்து பலது பாடறது. பேசறது மனுஷன் ஒருத்தன் தானே. அப்ப பேசறது பெரிசு இல்லையா, நீங்க சொல்லுங்கோ, அ?"

"அண்ணு மாதிரி பேசாளு, பெரிசு தான்" என்றார் தியாகு.

"நீங்க ஒண்ணு..ம்..சரி.அப்ப என் னிக்கி வரேடா குழந்தே?" என்றார் பாபு வைப் பார்த்து.

"நீங்க எப்ப சொல்றேளோ அப்ப வரான்."

"சரி, நாளன்னிக்கி வரட்டுமே. புதன் கிழமையா இருக்கு."

"என்ன பாபு?"

"சரி மாமா."

"காலமே வா. சாயங்காலம் என் னென்னமோல்லாம் வரது. நீ காலமே வந்துடு."

"சரி."

பாபுவுக்கு திடீரென்று நல்லவெய்யிலில் நீரில் குதித்ததுபோல் இருந்தது. இவர் சொல்லிக் கொடுப்பதாக ஒப்புக்கொண் டாலே அதிர்ஷ்டம்தான் என்று அப்பா சொன்னது ஞாபகம் வந்தது. இவர் ஒப் புக்கொள்ளும்படியாக என்னிடம் எதைக் கண்டார் ரங்கண்ணு?

"பையன் ரொம்ப இல்லாதவனு மில்லே. இருக்கிறவனுமில்லே..." என்று இழுத்தார் தியாகு.

"ம்..அப்புறம்?"

"ஏதோ முடிஞ்சதை. . ."

"அது சரி, உங்களை யார் இப்ப கேட்டா இதை? திடீர்னு என்னத்துக்கு இந்தப் பேச்சு?" என்று அலுத்துக் கொண்டார் ரங்கண்ணு.

சிறிது நேரம் கழித்து எல்லோரும் விடைபெற்று வெளியே வரும்போது, நிலவு பன்மடங்கு சோபை பெற்றுவிட் டதுபோலிருந்தது பாபுவுக்கு. ரங்கண் ணுவின் முக ஒளியையும் அவர் தடை யில்லாமல் அங்கீகரித்ததையும் நினைக் கும்போது, உலகமே நல்லது நிறைந்த தாக அவனுக்குப் பட்டது.

"போருமோல்லியோ பாபு?" என்றார் தியாகு, திருமஞ்சன வீதியைவிட்டுத் திரும்பும்போது.

"எனக்கு ஒண்ணுமே சொல்லத் தெரி யலே, மாமா" என்றான் பாபு. அவன் குரல் நடுங்கியதைக் கேட்டு, "இப்ப ஒண்ணும் சொல்லாதீங்கோ, அப்பா. அவன் கொஞ்சம் உணர்ச்சி 'டைப்.' தழ தழன்னு பேசவும் முடியாம, பேசாமியும் இருக்கமுடியாம திண்டாடுவன்" என் றான் ராஜம்.

"சரி, இன்னும் இரண்டு வருஷத்திலே பாபுவுக்கு வெத்திலே பொட்டி தூக்க ணும் நான்!" என்று அவன் தொடர்ந்து சொன்னபோது, "அவன் வெத்திலையைப் போட்டுண்டு, புகையிலையைப் போட் டுண்டு, பேச முடியாம நிக்கறச்சே, நாம பேசலாம்னு உனக்கு சந்தோஷமாக்கும்!" என்றார் தியாகு.

பாபுவுக்கு இந்த அப்பா, பிள்ளை பழகுவதைப் பார்த்து வேடிக்கையாகத் தான் இருந்தது. இந்த ராஜம் பொல்லாத வன். எப்படிச் சின்னச் சின்ன விஷயங் களைக்கூட சமாளிக்கிறான்! எவ்வளவு பரிவு இவனுக்கு! நாம் அதிர்ஷ்டசாலி தான்..அப்பா, யமுனா, ராஜம், ரங்கண்ணு....

(தொடரும்)

அறைக் கதவு திறக்கப்பட்டது. "பார்த்தசாரதி யாரு ஸார்?" என்றான் அறையிலிருந்து வெளிவந்த பியூன்.

"இதோ. . . சாட்சாத் நான்தான்" என்று கூறிக்கொண்டே, அங்கு அமர்ந்திருந்த ஆறு பேர்களில் ஒருவனான பார்த்தசாரதி எழுந்திருந்தான்.

எழுந்தவன் தொண்டையை ஒரு முறை கனைத்துக்கொண்டான். தனது கழுத்தை இறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்த 'நெக் டை'யைச் சரி செய்துகொண்டான். இடது கை, சர்டிபிகேட்டுகள் கொண்ட 'பைலை' ஏந்த, வலது கையில் கைக்குட்டை கசங்கித் தவிக்க, பியூன் வழி காட்ட 'இன்டர்வ்யூ' அறைக்குள் பிரவேசித்தான் பார்த்தசாரதி.

"குட் மார்னிங்.., மிஸ்டர் . பார்த்தசாரதி, இப்படி அமருங்கள்" என்றார்... அங்கு 'இன்டர்வ்யூ' செய்ய வந்திருந்த ஆபீஸர்களுக்கு நடுவில் உட்கார்ந்திருந்த வழுக்கைத் தலை மனிதர்.

"குட்மார்னிங்..." என்று கூறிக்கொண்டு, அவர் சுட்டிக் காட்டிய நாற்காலியில் மிகப் பவ்யமாக அமர்ந்தான்.

பேட்டி ஆரம்பமாகியது.

"மிஸ்டர் பார்த்தசாரதி! உங்கள் சொந்த ஊர்?.."

"பேரளத்திற்கு அருகிலுள்ள இஞ்சிக்குடி ஸார்..."

"ஏன், அங்கு இஞ்சி ரொம்ப அதிகமோ?"

"இல்லை ஸார்.. அது காரணப் பெயர் அல்ல...இடுகுறிப் பெயர். அங்கு இஞ்சி கிஞ்சித்தும் கிடைப்பதில்லை.."

"அப்படியா.. எம். எஸ்ஸி. யில் உங்கள் பிரதான பாடம்?"

"மிருக நூல் ஸார். ."

"கங்கை நதியின் உபநதிகளைக் கூறுங்கள்..."

பார்த்தசாரதி வெளுத்து விட்டான்.

"ஜீலம், ஜீனப், ராவி, பியாஸ், ஸட்.."

"போதும்.. சிந்துவின் உபநதிகள்.."

பார்த்தசாரதி தன் பிதற்றலை உணர்ந்தான்.

"வெரி ஸாரி ஸார்.. ஜீலம் ஜீனப் முதலியவை சிந்துவின் உப.."

"பரவாயில்லை.. பர்மாவின் நிதி மந்திரி யார்?

பர்மாவாவது நிதி மந்திரியாவது!

"மன்னிக்க வேண்டும். ஞாபகத்தில்லை.."

"சரி. அர்ஜன்டைனாவின் ஜனத்தொகை.."

"மன்னிக்கவும்.. தெரியாது"

"அமேஸானின் நீளம் ."

"தெரியாது.."

"சரி. கால் பந்து ஆடத் தெரியும் என்று எழுதியிருக்கிறீர்களே, இரண்டு கோலுக்கும் இடையேயுள்ள தூரம்.."

மௌனம்.

மற்றும் பல கேள்விகள். கடைசிக் கேள்வி.

"உமது மிருகநூல் படிப்பால், உமக்கேனும், அல்லது மனித சமுதாயத்திற்கேனும் ஏதேனும் நன்மைகள் உண்டா?"

இந்தக் கேள்வியை பார்த்தசாரதி சுமார் லட்சம் தடவை தன்னைத்தானே கடந்த இரண்டு வருஷங்களாக கேட்டுக்கொண்டும் பதில் கிடைக்காதபோது இப்பொழுது கிடைத்து விடுமா என்ன?

அவன் அந்தக் கேள்விக்கும் மௌனம் சாதித்தது அந்த வழுக்கைத் தலை மனிதருக்குப் பிடிக்கவில்லையோ என்னமோ, "மிஸ்டர் பார்த்தசாரதி.. நீங்கள் போகலாம்.." என்றார்.

பார்த்தசாரதி தன் உடம்பை ஒரு முறை பார்த்துக்கொண்டான். அவனது உடலிலே தோன்றிய வேர்வை, பனியன், சட்டை வழியே ஊடுருவிப் பாய்ந்து, கோட்டையும் நனைத்துவிட்டிருந்ததையும், அதனால் லேசான குளிர் வேறு ஏற்படுவதையும் உணர்ந்தான்.

களையற்ற முகத்துடன் இயந்திரம் போல் அறையை விட்டு வெளியேறினான். அவன் அறையை விட்டு வெளியே வந்ததும், "ஸார்.. என்ன கேள்விகள் கேட்டார்கள்? . ." என்றார், அங்கு பேட்டிக்குத் தயாராக உட்கார்ந்திருந்த 'ட்வீட் சூட்' பேர்வழி ஒருவர்.

"கேட்டார்கள் ஐயா பொருவிளங்காயை" என்று ஆத்திரத்துடன் கூறிக்கொண்டே அந்த அலுவலகத்தை விட்டு வேகமாக வெளியேறினான்.

அவன் வாசல் 'கேட்'டைத் தாண்டிக்கொண்டிருக்கும் சமயம் "ஸார்" என்ற பழக்கமான குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அந்த ஆத்மா வேறு யாருமில்லை. "உங்களுக்கு அவசியம் அந்த வேலை கிடைத்துவிடும்.. நீங்கள் இன்டர்வ்யூவிற்குப் போய் வாருங்கள்.." என்று அவனை அங்கு அனுப்பிய புண்ணியத்தைக் கட்டிக்கொண்ட மஞ்சுளாதான். அவளிடம் எல்லாவற்றையும் ஆத்திரம் தீர ஒருமுறை கூறி அழவேண்டும்போல் அவனுக்குத் தோன்றியது. ஆனால், அழகிய புன்சிரிப்பு தவழும் அவள் வதனத்தைக் கண்டதும், தன் முகத்திலும் ஒரு அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "வெளுத்துவிட்டேன் போங்கள். . ." என்றான்.

"அப்படியானால் நான் சொன்னபடி அந்த வேலை உங்களுக்குத்தானே. ?" என்றாள் அவள்.

"அதுதான் கொஞ்சம் சந்தேகம்.."

"ஏன்?"

"இதோ பாருங்கள். அங்கு வந்தவர்களில் ஒருவருக்குச் சிபாரிசு ஜாஸ்தியிருக்காம்"

"ஓகோ.. ஆனால் அந்த வேலை உங்களுக்குத்தான்.."

அவளது அறியாமையை எண்ணிப் பார்த்தசாரதி மனதிற்குள் சிரித்துக்கொண்டான். அவன் இருந்த மனோநிலையில் அவளிடம் ஜாஸ்தி பேச விரும்பவில்லை. "வருகிறேன்" என்று கூறிக்கொண்டே, தன் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான்.

பார்த்தசாரதி எம். எஸ்.ஸி. பட்டதாரி. கலாசாலைக்கே முதலாவதாகத் தேறியவன். அழகிய இருபத்து நான்கு வயது இளைஞன். பட்டம் பெற்று விளையாட்டுப்போல் இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.

அவன் போடாத விண்ணப்பம் இல்லை. போகாத பேட்டி இல்லை. ஆனால், வேலை மட்டும் கிடைக்கவில்லை. அவனது தாய் தந்தையர் இளம் வயதிலேயே இறந்துவிட்டனர். அவனுடைய தாய்வழித் தாத்தாதான் அவனை ஒரு பட்டதாரியாக்கிவிட்டது. அவர் கிராமத்தோடு இருந்து கொண்டிருந்தார்.

இப்படி இருக்கும் பொழுதுதான் திடீரென்று சற்றும் எதிர்பாராதவிதமாக, அவனுக்குச் சென்னையில் ஒரு கல்லூரியில் மிருக நூல் போதகர் வேலை கிடைத்தது. அது ஒரு 'லீவ் வேகன்ஸி'. வேலை மூன்று மாதத்திற்குத்தான். வேலையில்லாமல் இருப்பதற்கு இது தேவலை என்று எண்ணி, உடனே வேலையில் போய்ச் சேர்ந்தான்.

வேலையில் சேர்ந்த கொஞ்ச நாட்களுக்கெல்லாம் நல்ல பெயரும் எடுத்துவிட்டான்.

அன்றொருநாள், பிரின்ஸிபால் அவனைக் கூப்பிட்டனுப்பினார். என்னமோ ஏதோ என்று பயந்துகொண்டே, பிரின்ஸிபாலின் அறையில் நுழைந்தான். அவ

ளுக்கு அருகில் முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார். அவரது தோற்றத்திலிருந்து அவர் ஏதோ ஒரு பெரிய ஆபீஸராகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். அங்கு அவனுக்கு என்ன வேலை? அவனுடைய சந்தேகத்தைத் தெளிவுபடுத்துவதுபோல் பிரின்ஸிபால் ஆரம்பித்தார்:

"மிஸ்டர் பார்த்தசாரதி...உமக்கு இவரைத் தெரிந்திருக்காது...இவர் சென்னையில் பிரபல 'ஸிவில் இன்ஜினீயர்'...என் அத்யந்த நண்பர்..."

"ஓஹோ, அப்படியா...நமஸ்காரம்" என்றான் பார்த்தசாரதி.

"இண்டர்மீடியட்டில் படித்துக்கொண்டிருக்கிறாளே மஞ்சுளா, அவள் இவரது தங்கை...அவள் கொஞ்சம் மிருக நூலில் 'வீக்'காம். அவளை டாக்டருக்குப் படிக்க வைக்க வேண்டுமாம்...ஆகையால் அவளுக்கு மிருக நூல் டியூஷன் சொல்லித் தர ஒரு நல்ல லெக்சரரை சிபாரிசு செய்யச் சொன்னார். நான் உம்மை சிபாரிசு செய்கிறேன்" என்று தொடர்ந்தார், பிரின்ஸிபால்.

"சரி சார்...உங்கள் இஷ்டம்" என்றான் பார்த்தசாரதி.

"அவள் நிறைய மார்க்குகள் வாங்கி பரீக்ஷையில் தேற வேண்டியது உமது பொறுப்பு" என்று அவளை அவன் தலையில் கட்டினார்!

"ஏதோ சார்...என்னால் ஆனதைச் செய்கிறேன்" என்று கூறிவிட்டு, அறையினின்றும் வெளிவந்தான்.

பார்த்தசாரதி இப்பொழுது இன்ப வெள்ளத்தில் நீந்திக்கொண்டு இருந்தான். அவனுக்கு மஞ்சுளாவை நன்றாகத் தெரியும். நல்ல அழகி. சுமார் 17 வயது இருக்கும். பிரின்ஸிபால் சொன்னதைப் போல் பாடத்தில் கொஞ்சம் 'வீக்' இல்லை. படு சூன்யம்!

மஞ்சுளாவிற்குத் தாய் இல்லை. அவளும், அவள் அண்ணாவும் அவர்கள் தாய் தந்தையருக்கு இரண்டே குழந்தைகள். அவள் தந்தை வட இந்தியாவில் எங்கோ இருந்துகொண்டிருந்தார்—இவைதான் டியூஷன் ஆரம்பித்த சில நாட்களுக்கெல்லாம், பார்த்தசாரதி அவளைப்பற்றி அறிந்துகொண்டிருந்த விஷயங்கள்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. பிப்ரவரி மாதக் கடைசி. பார்த்தசாரதியின் மனதில் ஒரு தினுசான பயம் உலாவ ஆரம்பித்தது.

மஞ்சுளா, 'ஜூனியர்' வகுப்பிலிருந்து 'ஸீனியர்' வகுப்பிற்குப் போயாக வேண்டும். இரண்டாவது, மார்ச் மாதக் கடைசியுடன் அவன் வேலைக்குச் சீட்டு கிழிந்துவிடும். மறுபடியும் வேலை? மஞ்சுளாவின் டியூஷன்? தினம் ஒரு தடவை கல்யாண விநாயகர் கோவிலுக்குப் போய் வந்தான். பத்திரிகைகளின் தேவைப் பகுதிகளை அலசினான். என்ன பயன்?

ஒரு நாள் மஞ்சுளாவிடம் விஷயத்தைக் கூறிவிட்டான். மஞ்சுளா மிகவும் வருத்தப்பட்டாள். "பயப்படாதீர்கள் சார்... வேறு வேலை கிடைக்காமலா போய் விடும்?...ஆனால் சார்...டியூஷனை மட்டும் நிறுத்தக் கூடாது" என்று அவள் வேண்டிக்கொண்டது அவன் மனத்திற்கு ஆறுதலை அளித்தது.

ஒரு வாரம் கழித்து, பத்திரிகையில் வெளியாகியிருந்த விளம்பரம் ஒன்றைச் சுட்டிக் காட்டி, "இதற்கு மனுச் செய்யுங்கள்...இந்த வேலை உங்களுக்குத்தான்" என்றாள் மஞ்சுளா.

பார்த்தசாரதி விளம்பரத்தை வாங்கிப் படித்தான். அது ஒரு பிரபல பாங்கியில் ஆபீஸர் வேலை. இரண்டு வருஷங்கள் பயிற்சி. பிறகு அந்த வேலையில் ஸ்திரம் செய்வார்கள். யோக்கியதாம்சங்கள்: ஒரு முதல் வகுப்புப் பட்டம், நல்ல 'பர்ஸனாலிடி'.

அந்த விளம்பரத்தைப் படித்ததும் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஏனெனில், அவனது அனுபவம், அவனை ஓர் முடிவுக்குக் கொண்டுவந்திருந்தது. பேப்பர்களில் வெளியாகும் விளம்பரங்களில் பெரும்பாலானவை, காலியாயுள்ள ஸ்தானங்களைப்பற்றியவை அல்ல! முதலிலேயே தங்களுக்கு வேண்டிய ஒரு ஆளைத் தயார் செய்துவிட்டு, விளம்பரம் செய்கிறார்கள். இரண்டாவதாக, அந்த ஸ்தானத்திற்கு விதிக்கப்படும் யோக்கியதாம்சங்கள், அவர்கள் தயார் செய்து வைத்துள்ளவரின் யோக்கியதாம்சங்கள் ஆகும். இது இப்படியிருக்க, யாரேனும் மனுச் செய்தால் வேலை கிடைத்து விடுமா என்ன?

"என்ன ஸார் சிரிக்கிறீர்கள்? நீங்கள் மனுச் செய்யுங்கள்...கிடைக்காவிட்டால் பாருங்களேன்" என்றாள் மஞ்சுளா.

அவளுடைய திருப்திக்காக அன்றே ஒரு மனுவை எழுதிப்போட்டான். ஒரு வாரத்திற்கெல்லாம், சென்னையில் பேட்டிக்கு ஆஜராகும்படி லெட்டர் வந்தது. இது அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகவே இருந்தது. அங்கு போவதற்கு அவனுக்கு இஷ்டம் இல்லைதான். ஆனால், மஞ்சுளாவிற்காகப் போனான். அப்பொழுதுதான் முதலில் கூறிய சம்பாஷணை நடந்தது.

பேட்டி முடிந்த அன்று மாலை டியூஷன் சொல்லித் தருவதற்காக சுமார் ஏழு மணிக்கு மஞ்சுளாவின் வீட்டை அடைந்தான், பார்த்தசாரதி.

வீட்டு வாசலில் வழக்கமாக நின்று வரவேற்கும் மஞ்சுளாவை அன்று காணவில்லை. அவளுக்குப் பதில் அவள் அண்ணாதான் நின்றுகொண்டிருந்தார்.



"வாருங்கள்...மிஸ்டர் பார்த்தசாரதி" என்று வரவேற்றார் அவர்.

"மஞ்சுளா எங்கே?" என்று கேட்டுக் கொண்டே [illegible] நுழைந்தான் பார்த்தசாரதி.

"பார்த்தசாரதி, நீங்கள் அங்கு போக வேண்டாம். டியூஷனை நிறுத்திவிட யோசனை செய்திருக்கிறோம்" என்றார் அவர், சிரித்துக்கொண்டே.

பார்த்தசாரதிக்குப் பகீரென்றது.

"உள்ளே வாருங்கள்" என்று அழைத்துச் சென்றார் அவர்.

அவன் கூடத்தை அடைந்ததும் அவன் தலை சுழன்றது! அவன் கால்கள் நடக்க மறுத்தன! அங்கே, அன்றைய காலையில் நடந்த பேட்டியில் 'கன்னாபின்னா' கேள்விகளைக் கேட்ட அந்த வழுக்கைத் தலை மனிதர் உட்கார்ந்துகொண்டிருந்தார்!

"மிஸ்டர் பார்த்தசாரதி! இப்படி அமருங்கள். இங்கு அமேஸான், அர்ஜென்டைனா ஒன்றும் இல்லை" என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

பார்த்தசாரதி அவர் காட்டிய நாற்காலியில் யந்திரம்போல் அமர்ந்தான்.

அவர் ஆரம்பித்தார்:

"இதோ பாருங்கள், பார்த்தசாரதி! மஞ்சுளா என் ஒரே பெண். அவளை டாக்டருக்குப் படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணியிருந்தோம். ஆனால் இப்பொழுது அவளுக்குப் பிடித்த ஒரு நல்ல இளைஞன் கிடைத்துவிட்டான்...காலா காலத்தில் பெண்களுக்குக் கல்யாணம் செய்து வைப்பதுதானே நல்லது? அப்பொழுதுதானே அவர்கள் வாழ்வு மலரும்?...நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ... மேலும் அவள் படித்துச் சம்பாதிக்க வேண்டும் என்ற அவசியம் எங்கள் குடும்பத்திற்கு இல்லை."

பார்த்தசாரதியால் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. 'மஞ்சுளா கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாள்...அதனால் டியூஷனை நிறுத்தப் போகிறார்கள்' என்று அவன் அந்தராத்மா கூறிக்கொண்டிருந்தது.

"ஆமாம் ஸார்" என்றான் மிக்க சிரமத்துடன்.

அவர் தொடர்ந்தார்:

"நீங்கள் வித்தியாசமாக நினைக்கக் கூடாது...எனக்குப் பணம் பெரிதல்ல... மஞ்சுளாவின் வாழ்வுதான் பெரிது...மஞ்சுளாவிற்கு உங்களை ரொம்பப் பிடித்துவிட்டது...அவள் அண்ணா எழுதியிருந்தான்...ஆகவே நீங்கள் அவளை..."

அவர் கூறி முடிக்கவில்லை. பார்த்தசாரதிக்குத் தான் காண்பது கனவா நனவா என்றே புரியவில்லை. அந்த இன்பக் குழப்பத்தில் அவன் என்ன கூறியிருக்க இயலும்?

"இன்னும் ஒரு வாரத்தில் அந்த பாங்கி ஆபீஸர் வேலைக்கு உங்களுக்கு உத்தரவு வரும்" என்று அவர் கூறியபோது, ஓடிப் போய், அவரை இறுகக் கட்டிக்கொண்டுவிடலாமா என்றுகூட அவனுக்குத் தோன்றியது.

அங்கேயே இரவு போஜனத்தை வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்தவே, பார்த்தசாரதி அங்கு தங்கினான். சாப்பிட்டுவிட்டு, கை கழுவக் குழாயடிக்குப் போனபோது, அங்கு மஞ்சுளா நின்றுகொண்டிருந்தாள்:

"மஞ்சு...என்னை 'இன்டர்வ்யூ' செய்ய வந்த ஆபீஸர் உன் அப்பாதான் என்று முன்னமேயே ஏன் கூறவில்லை?" என்றான் பார்த்தசாரதி.

"அது மட்டுமா? ..அந்தபாங்கிஆபீஸர் வேலையை சிருஷ்டி செய்ததும் அப்பாதான்...இவை எல்லாம் முன்னமே கூறிவிட்டால், இன்பம் என்ன இருக்கும்?" என்றாள் அவள்.

"இவ்வளவையும் செய்துவிட்டு மௌனியாக இருந்திருக்கிறாயே...உன்னை என்ன செய்யட்டும்..." என்றான் பொய்க் கோபத்துடன்.

"இதோ பாருங்கள்...அர்ஜென்டைனாவின் ஜனத்தொகை. ." என்றாள் அவள்.

அவளுடன்கூடி 'கலகல'வென்று நகைத்தான், பார்த்தசாரதி.

மறு சுவை

எஸ். விஜயா

நான் உணர்வற்று உட்கார்ந்திருந்தேன்; என் உள்ளம் வரண்டு கிடந்தது. இல்லை, தவறு; உள்ளத்தில் கசப்பு நிறைந்து வழிந்துகொண்டிருந்தது. மரத்துப் போகச் செய்யும் உள்ளம் என்று ஒன்றுண்டா என சந்தேகிக்கச் செய்யும் கசப்பு அது.

நினைவை வேறு எதிலாகிலும் நிலைக்கச் செய்து கசப்பை மறக்க முயன்றேன். அதே சமயம் சமையலறை சம்பாஷணை என் செவிகளுக்கெட்டியாது:

"ஐய்யய்ய, எனக்கு வேண்டாம்மா கொத்தவரங்காய் கறி!"— சிறுவன் பாபுவின் குரல்தான்.

"தடியா! நீதானேடா 'பண்ணு, பண்ணு'ன்னு உயிரை வாங்கினே?" —அம்மா கடுகடுத்தாள்.

"அன்னி மாதிரி இருக்கும்னு நினைச்சேன்; நன்னாயிருக்காதுன்னு எனக்கு எப்படித் தெரியும்?" பாபுவின் குரலில் கறியில் தான் எதிர்பார்த்த ருசியில்லாதது குறித்து திருப்தியின்மை பிரதிபலித்தது.

"ஏம்மா இன்னிக்கு கறி நன்னாயில்லே?" பத்மா மெதுவாகக் கேட்டு வைத்தாள்.

இவ்வளவுதான் என் உணர்வுக்கு எட்டியது. எதை மறக்க முயன்றேனோ அதே விஷயத்தின் மையத்தைத் தொட்டுவிட்டனர், பாபுவும் பத்மாவும்.

பாபு, நாக்கைச் சூள் கொட்டிக் கொண்டுதான் அன்று கொத்தவரங்காய் கறி பண்ணச்சொல்லி இருந்தான்.

நான், நானும்...அக்கா குமுதம்தான் என் ஆவலைத் தூண்டிவிட்டாள்; ஊரிலிருந்து வந்திருந்தாள் அவள்.

"வாத்தியார் சிவராமகிருஷ்ணனைப் பார்த்தேன்; இந்தப் பக்கம் வந்தால், 'ஆத்துக்கு வரேன்'னார்; 'அட்ரஸ்' வாங்கிண்டிருக்கார்.." அவள் வார்த்தைகள் என் நினைவின் பசுமையான இடத்தைச் சுட்டிக் காட்டின. அதன் பசுமையில் ஏனைய, சுற்றிலுமுள்ள வரண்ட பாலைவனத்தின் கானலை மறக்க முயன்றேன்.

என் குழந்தைப் பருவம், அதன் பெரும் பாகத்தை ஆக்ரமித்த சிவராமகிருஷ்ணன்...வாழ்வில் எதற்காவது நான் பெருமிதம் கொள்ளலாமெனில், இவை இரண்டிற்கும்தான்! மற்றது எல்லாம் ஒரே தோல்வி. ஆத்மத் தோல்வி, உலக வாழ்க்கையில் தோல்வி. இவ்வாறு எல்லாமே ஒரே தோல்வி மயம்!

எதிர்கால, நிகழ்காலச் சிந்தனைச் சுமையினின்றும் விடுபட, நானும் பழமையின் உதவியை நாடினேன், அன்று..

ஒரு பெரிய வீடு. கூடத்திலிருந்த கடிகாரம் நாலடித்து ஓய்ந்தது. சிறு குழந்தைகள் நான்கைந்து, 'வாத்தியார் வந்துடுவார்!' எனப் பரபரவென்று புத்தகங்களை எடுத்துக்கொண்டு ஒரு நாற்காலியின் கீழ் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டன. வாசலில் செருப்புச் சப்தம்... வாத்தியாரும் வந்துவிட்டார்.

கருத்துச் சுருள் சுருளாக இருந்த அந்த அழகிய 'கிராப்'பும், யௌவனம் பொலியும் களை பொருந்திய அந்த முகமும், சிவப்பாக பளபளவென்று திகழ்ந்த அந்த பருமனோ ஒல்லியோ இல்லாத திட்டமான அந்த தேகமும், குழந்தைகளிடம் சரளமாகப் பழகும் அந்த சுபாவமும் அந்தச் சின்னஞ்சிறு பெண் குழந்தைகளின் உள்ளத்தைக் கவர்ந்திருந்தன. காலையில் பள்ளிக்கு வந்ததும் வாத்தியார் சிவராமன் வருவதைக் குழந்தைகள் எதிர்பார்த்து ஏங்குமளவுக்கு அவ்வளவு இனியவனாகிவிட்டார், சிவராமன்! அன்றும் அப்படித்தான் சிவராம வாத்தியாரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் அந்தச் சின்னஞ் சிறுமியர்...

ஆனால், வந்ததோ ..நடுத்தர வயதுடைய ஒருவர். ஸ்தூல தேகி; மை வண்ணப் பொலிவுடையவர்!

குழந்தைகள் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன. அவற்றின் முகத்தில் ஏக்கத்தின் சாயை; ஏமாற்றமடைந்து விட்டது போன்ற இருள்..

அக்குழந்தைகளின் திகைப்பை உணர்ந்தோ என்னமோ அந்தப் புது வாத்தியார் தான் அந்த வகுப்புக்கு அன்று வந்ததன் காரணத்தை விளக்க ஆரம்பித்தார். சிவராம வாத்தியாருக்கு ஜுரமாம். அதனால்தான் அவர் வரவேண்டி நேரிட்டதாம். அவர் கூட சிவராம வாத்தியாரின் அண்ணாதானாம்..

அவர் "சிவராமனின் அண்ணாதான் நான்..." என்று சொன்னதைக் கேட்டதும் குழந்தைகளுக்கு ஒரே திகைப்பாகி விட்டது. 'அவ்வளவு அழகான வாத்தியாருக்கு இப்படி ஒரு அண்ணாவா!' என்று அவைகள் ஆச்சரியப்பட்டு விட்டன.

அந்த வாத்தியார் புத்தகத்தை எடுத்துக்கொண்டு அன்றைய பாடத்தைப் படிக்க ஆரம்பித்தார். நாலு வரிகள்கூட படித்திருக்கமாட்டார், ஒரு பெண்—பச்சை கவுன் அணிந்திருந்த ஒரு பெண் —சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒரே ஓட்டமாக வகுப்பை விட்டு ஓடினாள்...

புது வாத்தியார் காலடிச் சப்தம் கேட்டு, படிப்பதை நிறுத்தி விட்டுப் பார்த்தார். ஒரு சிறுமி ஓடுவதைக் கண்டதும் இன்னொரு சிறுமியை அழைத்து, அவளை அழைத்துவருமாறும் சொன்னார். திரும்பி வந்த ஓடினவளைப் பிடிக்கப் போன பெண், "இந்தக் கறுப்பு வாத்தியார் எனக்குப் பிடிக்கலே போ...! சிவராம ஸார் வந்தாத்தான் பாடம் சொல்லிப்பேன் போன்னு சொல்ரு ஸார்" என்று சொன்னதைக் கேட்டதும், அந்த வாத்தியார் ஒரு நிமிஷம் பிரமித்துப் போய்விட்டார்.

'சிவராமனிடத்தில் குழந்தைகளுக்கு இவ்வளவு ஒட்டுதலா!' என்று வியந்து போனார்.

பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "பரவாயில்லை. அவள் வர வேண்டாம். சிவராம ஸார் நாளண்ணிக்கு வந்துடுவார், அப்ப வந்து அவர் கிட்ட பாடம் சொல்லிக்கச் சொல்லு" என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தார்.

அண்ணா வந்து வகுப்பில் நடந்த விஷயத்தைச் சொல்லக் கேட்டதும் சிவராமன் அப்படியே பூரித்துப் போய்விட்டான். "சசி என்னிக்கும் தனிதான் அண்ணா. நல்ல சூடிகையான குழந்தையண்ணா அவள்" என்று பெருமிதமாகக் கூறி உள்ளம் நெகிழ்ந்தான்.

இரண்டு நாள் கழித்து பள்ளிக்குச் சென்ற சிவராமன், சசியின் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளி "பொல்லாத சசி!" என்று தட்டிக் கொடுத்தான்.

பழைய சம்பவங்களின் நினைவில் நான் லேசாகச் சிரித்தேன். என் மகிழ்ச்சிக்குத் தகுந்த காரணம் இருந்தது. அந்தச் 'சசி' தான், இன்று 'சசீ' என்று அழைக்கப்படும் 'நான்'! சரியாகப் பத்து வருஷங்கள் ஆகின்றன, 'சிவராம ஸாரை'ப் பார்த்து. வாழ்வின் சுழலில் சிக்குண்ட பின் 'சிவராம ஸாரும்' எங்கோ போய் விட்டார்; நாங்களும் மாற்றலாகி வந்து விட்டோம். ஆனால் சிவராம ஸார் பாடம் சொல்லிக் கொடுத்ததெல்லாம் என் நெஞ்சில் 'கருக்கழியாமல்' இன்னும் நிற்கின்றன. 'வெறும் நினைவு' என்று அவைகளைச் சொல்லிவிட முடியாது. நினைக்க நினைக்க சில் லென்ற தென்றல்போல் வீசும் பசிய நினைவுகளே அவை. 'சிவராம ஸார்' அப்படி என் மன அரங்கத்தில் இடம் பெற்று விட்டார்...!

ஒவ்வொரு நாளும் சிவராம ஸாரை ஆவலாக எதிர்பார்த்து, ஏமாந்தேன். ஒருநாள் இரவு ஒன்பதுமணி இருக்கும். நான் வாசற்புற அறையினுள் புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். குழந்தைகள், அம்மா எல்லோரும் அறையை ஒட்டிய ரேழியில் படுத்திருந்தனர். அந்த வாடகை வீட்டில், குளிருக்குப் பயந்து ஒதுங்கக் கூடிய இடம் ரேழியொன்று தான்! வாசற்கதவு வழக்கம் போல் தாளிடப் பட்டிருந்தது.

"சசீ! சசீ!"

வாசலிலிருந்து ஒரு ஆண் குரல் கேட்டது.

எனக்குத் தெரிந்த குரலாக இல்லை. ஏனெனில் இருபதாவது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த என்னை, யாரும் 'சசீ' என்று செல்லமாகக் கூப்பிடுவதில்லை.

அம்மா "யார்?" என்று கேட்கத் தொடங்கவும், சுந்தரம் எழுந்தான் பாயை விட்டு. தம்பியானாலும் வீட்டுக்கு அப்பாவிற்கு அடுத்த ஆண் பிள்ளை அவன்தானே!

"கும்பகோணமாம். யாரோ சிவராமகிருஷ்ணனாம்..."

சுந்தரத்திற்கு என்ன தெரியும், சிவராமனைப்பற்றி? அந்த 'சிவராம ஸார் படலம்' முடிந்த பின்பல்லவா அவன் பிறந்திருக்கிறான்!

அம்மாவுக்கும் அவரைப் புரியவில்லை போலும்! அந்த அகால வேளையில் ஒரு

ஆண்பிள்ளை கதவைத் தட்டுவதைத் தான் அவள் விரும்பவில்லையோ..? 'யாரோ, என்னமோ?' என்ற பயத்தையும் தொனிப்பதாகத்தான் இருந்தது அவளுடைய குரலும்.. "அவர் இல்லே. வந்தால் சொல்லுகிறேன்" என்று சத்தினச் சுருக்கமாகச் சொன்னாள் அம்மா. அகால வேளையில் அவர் வரவு விரும்பத் தக்கதல்ல என்பதையும் கோடி காண்பித்துவிட்டாள்!

என்னால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. "முன்னே இருந்த வாத்தியார் சிவராமன் அம்மா; குமுதா கூடச் சொல்லவில்லே..." என்று அம்மாவுடன் கூறியவாறே, வெளியே பாய்ந்தேன். இடையில் ஒரு தயக்கம்... 'உள்ளே பாயும் படுக்கையுமாகப் போட்டிருக்கிறதே? அவரை எப்படி உள்ளே அழைப்பது...?'

வாசலுக்கு வந்துவிட்ட நான், அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்.

"அட, இவரா எங்கள் சிவராம ஸார்!" என் உள்ளம் பின் வாங்கியது.

'அந்த அழகு சொட்டும் முகம்தான் எவ்வளவு உப்பி சதைப் பிண்டமாகக் காட்சியளிக்கிறது! முகமென்ன, உடல் மட்டும் என்ன வாழ்ந்ததாம்..? அப்பப்ப, என்ன பருமன்!'

அவருடைய உருவத்தை எனது கண்கள் எடை போட்டன; ஒரு கணம்தான், ஒரே கணம்தான் எடை போட்டன. அந்த ஒரு கணத்திற்குள் அன்றைய 'சிவராம ஸாருக்கும்' இன்று எதிரில் நிற்கும் சிவராமனுக்கும் எவ்வளவோ வித்தியாசம் மலைபோல் பளிச்சிட்டது. அந்தக் களை பொருந்திய முகம் போன இடம் தெரியவில்லை. ஒருகால் சதைப்பற்று அதை மூடி விட்டிருக்குமோ, என்னமோ! பணத்தில் மூங்கி மூங்கியெழுந்த ஒரு பாவம் அந்த தேகமெங்கும் வியாபித்து விளம்பரப்படுத்திக்கொண்டிருந்தது.

"ஓ, நீங்களா! எங்கே வந்தேளோ?" நான் கேட்டு வைத்தேன்.

அந்த வீட்டில் கிடைத்த அரைகுறையான வரவேற்பு அவருக்கு எப்படிப்பட்டதோ... "இல்லே, வெறுமனேதான் அப்பாவைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.. காலையில் இங்கேயே தங்கியிருந்தால் பார்த்து விட்டுப் போகிறேன்.. அப்ப நான் வருகிறேன்.." என்று சொல்லிவிட்டு அவர் சென்றுவிட்டார்.

❀ ❀ ❀

பணம், பதவி எல்லாம் பெற்று நல்ல வாழ்வில் இருந்தும் பழையதை நாடி வந்த அவருக்கு அளிக்கப்பட்ட 'வரவேற்பு' என் நெஞ்சைச் சுடத்தான் செய்தது. அந்த நிகழ்ச்சிக்காக நான் வருந்தாமலில்லை. ஆனால், அவர் முன்னைப் போலில்லையே! 'வரவேற்பு இல்லாததால் பாதகமில்லே, போ' என்று ஏதோ ஒன்று அடிக்கடி கூவி உள்ளத்தைக் கல்லாக்கி, வாழ்வைக் கறையானாக அரிக்கிறதே! அதற்காகவன்றோ, அதைத் தடுக்கவியலாமல் அழுகிறேன்!



கவிதை இலக்கிய ஆராய்ச்சி, சிறுகதை, சமயம், வைத்தியம், இயற்கை நூல் ஆகிய துறைகளில் சிறந்த தமிழ் நூல்களை எழுதி, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இவ்வாண்டுப் பரிசைப் பெற்ற காலஞ்சென்ற 'கவிமணி' தேசிக விநாயகம் பிள்ளை, மற்றும் அ. ச. ஞானசம்பந்தன் ஆர். வெங்கடராமன் ('ஆர்வி') பு. ரா. புருஷோத்தம நாயுடு, டாக்டர் திரிபுரசுந்தரி ('லக்ஷ்மி'), ஆர். வீரபத்திரன் ஆகிய நூலாசிரியர்களை மேலே காணலாம். சென்ற மாதம் 30-ந்தேதி சென்னை பல்கலைக் கழக செனேட் மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு 'மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் தலைமை வகித்துப் பரிசுகளை வழங்கினார்.

கலாமண்டபம்

சினிமாச் செய்திகள்

படப்பிடிப்புத் துறையில் புனர்ப்பிரவேசம் செய்துள்ள தமிழ்நாடு டாக்கீஸ் ஸ்ரீ சௌந்தரராஜன் பழையபடி பரபரவென ஏற்பாடுகள் செய்துவருகிறார். பிரபல கதாசிரியர் ஸ்ரீபி. எஸ். ராமையாவைக்கொண்டு கதை—வசனம் எழுதியாகிவிட்டது; 'மங்கள வாசம்' என்று அதற்கு தாற்காலிகமாக நாமகரணமும் செய்தாகிவிட்டது. சம்பாரங்கள் விரைவாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பிரதான நடிகர், நடிகையர் யாரும் இன்னும் ஒப்பந்தமாகாவிடினும் நடன கீதம் உள்பட ஏழு பாட்டுகள் பதிவாகி விட்டன. ஜூனில் படப்பிடிப்பு துவங்கி, நாலே மாதத்தில் முடிவுற்று, தீபாவளியின் போது திரையிடப்பட்டு விடுவது நிச்சயமாம்.

இவ்வாறு பழைய படமுதலாளிகள் தவிர பழையநட்சத்திரங்களும் திரும்பி வரத்துவங்கி விட்டனர். எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்துள்ள 'புது வாழ்வு' விரைவில் வெளியாக விருக்கிறது. அவர் அடுத்தபடி எடுக்க விருக்கும் 'பாக்கிய சக்கரம்' என்ற படத்தில் அவரோடு வைஜயந்திமாலாவின் தாயாரும், 'மங்கம்மா' மூலம் மங்காப்புகழ் பெற்றவருமான வசுந்தரா தேவியும் நடிக்கப் போகிறார். இது தவிர புனரவதாரம் எடுக்க விருக்கும் 'வஸந்தஸேனை' விலும் அவர் தோன்றப் போகிறாராம்—முருகதாஸா டைரக்ஷனில் ஆஷ்லேஷா ஸினி எண்டர்பிரைஸார் இதை எடுக்கவிருக்கின்றனராம். திரைக்கதை—வசனத்தை ஏ. டி. கிருஷ்ணசாமி எழுதுவதாகத் தெரிகிறது.

மற்றும் பல பழைய கதைகளும் புத்துருவெடுக்கவிருக்கின்றன. அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது 'உத்தம புத்திரன்.' சமீபத்தில் 'நல்லதங்காளை' வெளியிட்ட பி. வி. கிருஷ்ணய்யர் எடுக்கப் போவதாகக் கூறப்படும் இப்படத்தில் முன்பு பி. யூ. சின்னப்பா ஏற்றிருந்த பாகத்தில் இப்போது சிவாஜி கணேசனும், எம். வி. ராஜம்மா தோன்றிய பாகத்தில் ஜமுனாவும் நடிக்கக் கூடுமாம். திரைக்கதை—வசனத்தை ஏ. பி. நாகராஜன் எழுதுவதாயும் கூறப்படுகிறது—இவர் கதை—வசனம் எழுதி, எம். ஏ. வி. பிக்சர்ஸார் பிடிக்கும் 'செங்கமலத்தீவி'ல் ஸ்ரீமதி சுந்தரி தம்பியின் புதல்வியும், நடன உலகில் விரைவாக முன்னுக்கு வந்துகொண்டிருப்பவருமான குமாரி பத்மினி பிரியதர்சினி நடிக்கப் போவது நிச்சயமாம்.

சென்ற வாரம் இந்தப் பத்திகளில் கொடுக்கப்பட்ட ஜாப்தாவில் 'அசல் தமிழ்' சித்திரங்கள் மட்டுமல்ல, 'டப்' செய்யப்பட்டு வரும் சில படங்களும் அடங்கியிருந்தன. இவற்றில் முக்கியத்துவம் வகிப்பது 'வேடன் கண்ணப்பா'. பண்டரி பாய், ராஜ சுலோசனா, ராஜ்குமார், சந்தியா முதலானோர் நடித்து பிரமாத வெற்றி பெற்றுள்ள கன்னடப் படம் 'பேடர கண்ணப்பா'வின் பிரதியே இது. எச். எல். என். ஸிம்ஹா டைரக்ட் செய்துள்ள இது இம்மாதமே திரைக்கு வரவிருக்கிறது. வாடியாவின் முழுநீள கேவாகலர்ப் படம் 'ஹதிம் தாயி'ன் தமிழ்ப் பதிப்பான 'மாய மோகினி'யும் விரைவில் வெளியாகவிருக்கிறது; மந்திர தந்திரக் காட்சிகள் மிகுந்த இந்த அரபிக் கதைப் படம் இப்போது வடநாட்டில் பிரமாத ஆதரவு பெற்று வருகிறதாம்.

தெலுங்கோடு தமிழிலும் எடுக்கப்படும் படங்களில் இப்போது மேலுமிரண்டு சேர்ந்துள்ளன. ஒன்று, நந்தி பிக்சர்ஸின் 'சௌபாக்கியவதி.' ஜம்பனா டைரக்ட் செய்யும் இதில் ஜெமினி கணேசனும் சாவித்திரியும் பிரதான பாகமேற்றுள்ளனர். தமிழ் வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுதுகிறாராம்.

மற்றொன்று, விட்டல் ப்ரொடக்ஷன்ஸின் 'கன்னிகாதானம்'. இதன் தமிழ்ப் பதிப்பிலும் ஜெமினி கணேசனும் சாவித்திரியுமே பிரதம பாகமேற்பாராம். மற்றும் சாரங்கபாணி, எம். என். ராஜம், தங்கவேலு முதலானோரும் நடிக்கவிருக்கும் இப்படத்தை விட்டலாசார்யா டைரக்ட் செய்வாராம். தமிழ் வசனத்தை வலம்புரி சோமநாதன் எழுதலாமெனத் தெரிகிறது.

புதிதாகச் சில அசல் தமிழ்ச் சித்திரங்கள் எடுக்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. காவேரி பிலிம்ஸின் 'முதல் முரசு' இவற்றிலொன்று; ஏ. கே. வேலன் திரைக்கதை—வசனம் எழுதியுள்ள இப்படம் கே. எஸ். மணி டைரக்ஷனில் ரேவதியில் உருவாகுமாம். சேலம் ரத்னா ஸ்டுடியோவில் எடுக்கப்படவிருக்கும் 'அங்கயர்க்கண்ணி' இன்னொன்று. ஏ. எல். நாராயணன் கதை—வசனம் எழுதும் இப்படத்தில் யோகானந்த் டைரக்ஷனில் சிவாஜி கணேசன், பானுமதி போன்றோர் நடிக்கக்கூடுமாம்.

⁂ ⁂ ⁂

புதுடில்லியில் சென்ற வாரம் நடந்த நாடக விவாத அரங்கில் தமிழ் நாட்டின் ஏகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட டி. கே. ஷண்முகத்தின் பிரசங்கம் சென்னை நாடக வட்டாரங்களிடையில் மட்டுமன்றி படவுலகிலும் மிகுந்த திருப்தியேற்படச் செய்திருக்கிறது. தமிழ் நாடகக் கலை குறித்து கூடியவரை விரிவான, பொறுப்பான விமர்சனம் செய்துள்ளார் என்பதிலும், உருவான யோசனைகள் பலவற்றைக் கூறியுள்வார்

கிருஷ்ணா பிக்சர்ஸ் 'மதுரைவீரனி'ல் எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி

என்பதிலும் நாடகக் கலையபிமானி களுக்கு மெத்த மகிழ்ச்சி. சினிமாவினுல் நாடகங்கள் சீரழிந்துவிட்டன என்று சிலரைப்போல் கண்டிக்கப் புகாமல், அதற்குப் பதிலாக நாடகங்கள் அபி விருத்தியுறவே அது ஆக்கமளித்துள்ள தெனக் கூறியிருப்பது குறித்து பட வுலகப் பிரமுகர்களுக்கு பரம திருப்தி. அவர் கூறியுள்ளது போல இரு கலைகளும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என் பதை சர்க்காருள்பட எல்லோரும் உணர்ந்து, இரண்டையும் சமமாக போஷித்துக் காப்பாற்ற வேண்டுமென் பதே அவர்கள் கோரிக்கை.

'அனுபவம் வாய்ந்த நாடக நடிகர்கள் இல்லாமலிருந்தால் தற்போது சினிமாத் தொழில் வளம் பெற்றிருக்க முடியாது. சினிமாத் தொழிலின் எதிர்காலம் நாட கக் கலையைப் பொறுத்திருக்கிறது' என்று தெளிவுபட மேற்படி அரங்கில் பேசியிருக்கிறார் ஸ்ரீ ஷண்முகம். இதை யுணர்ந்துதான், திரையுலகுக்கு மேலும் பல புது நடிகர்களை அறிமுகப்படுத்தும் பொருட்டே இம்மாதம் 12-ம் தேதியன்று ரஸிக ரஞ்சனி சபையில் அடையாறு நாடக மன்றத்தினரின் 'அவள் நினைவு' என்ற நாடகத்தை தென்னிந்திய சினி மாப் பத்திரிகையாளர் சங்கத்தார் நடத் தப் போகின்றனராம்.

பம்பாய்த் தபால்

அமெரிக்கப் படமுதலாளிகள் சங்கத் தின் தலைவரான எரிக் ஜான்ஸ்டன், சென்ற வாரம் இங்கு வந்து, இவ்வூர் பட முதலாளிகளை ஒரு கலக்கு கலக்கிவிட்டுச் சென்றார். அவரை தடபுடலாக உபசரிக்க வும், கௌரவிக்கவும் இவ்வூர் பட முத லாளிகளும், அமெரிக்கா தேசத்து பட வினியோகிகளும், இந்தியப் பட முத லாளிகளின் சங்கமான பிலிம் பெடரேஷ னும் பெரிய பெரிய விருந்துகளை நடத்தினார்கள்.

ஆயினும் இந்தியப் பட முதலாளிகளி டம் உலக சமாதானத்தையும் முன்னேற் றத்தையும் பற்றியே பேசினார் ஜான்ஸ் டன்; சினிமாவைப்பற்றி லேசாகப் பேசி விட்டு, மற்ற விஷயங்களைப் பற்றியே அதிகமாகப் பிரசங்கம் செய்தார்.

பம்பாய் சினிமாப் பத்திராதிபர்களி டமோ "அமெரிக்காவிலும், இந்தியப் படங்களைக் காண்பிக்கலாமே; நாங்கள் உங்கள் படங்களை வேண்டாமென்று சொல்லவேயில்லையே" என்று சொன் னார் அவர். "இப்படி வாயால் சொன்னால் என்ன பிரயோசனம்? நீங்கள்தான் இந்தியப் படங்களை அமெரிக்காவில் காண்பிப்பதில்லையே; இதற்கு சரியான வழி செய்யக்கூடாதா?" என்று திருப்பிக் கேட்டதற்கு, "அமெரிக்காவில் சினி மாக் கொட்டகைகள் எங்கள் கைகளி லில்லை; இந்தியப் படங்களைக் காண் பிக்குமாறு தியேட்டர் முதலாளிகளிடம் நாங்கள் சொல்லலாம். அதற்கு மேல், என் னால் உபகாரம் செய்ய முடியாது. இந் தியப் படங்கள் நன்றாயிருந்தால், தானா கவே அமெரிக்கா தேசத்து சினிமாக் கொட்டகைக்காரர்கள் உங்கள் படங்களை எடுத்துக் கொள்வார்கள்" என்று சாதுர்ய மாக பதிலளித்தார் ஜான்ஸ்டன்.

மொத்தத்தில் அவர் இவ்வூருக்கு வந்து போனதில் ஒன்று தெளிவாக வெளிப்பட் டது: "அமெரிக்கப் படங்களின் செலா வணியை இந்தியாவில் எப்படி விருத்தி செய்யலாமென்பதே அவர் கருத்து. இந் திய சினிமாத் தொழிலுக்கு உதவி செய்ய வேண்டும், இந்தியப் படங்களை அமெரிக்காவிலும் காண்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்த தாகவே தெரியவில்லை.

ஃ ஃ ஃ

அகில இந்திய பிலிம் பெடரேஷனுக்கு இரண்டு வருஷமாகத் தலைவராயிருந்த ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அப்பதவியி லிருந்து விலகி, இப்பொழுது ஒரு உப தலைவராகியிருக்கிறார். இவ் வருஷம் பிலிம் பெடரேஷனுக்குத் தலைவர் ஸ்ரீ லாலா ஜகத் நாராயண். அவரைத் தலைவ ராகத் தேர்ந்தெடுத்ததைப்பற்றி பம் பாய் பட முதலாளிகளுக்கு அவ்வளவாக திருப்தியில்லை. -தி. மா ராமச்சந்திரன்

★

தண்ணீரே இல்லாத குடத்தைக் கவிழ்த்து முனிகுமாரனின் தாகத்தைத் தீர்க்கிறார் வாஹிதா ரஹ்மான், 'ஒன்றே குல'த்தில்!

(வலது)

என் குடமும் அப்படித்தான். அதைக்கண்ட மாத் திரத்திலேயே தாகவிடாய் தீர் [illegible] என்கிறார் சசிகலா, 'ஸப்ஸே படா ரூபய்யா'வில்

நகர அரங்கம்

ஸ்ரீ ஜோதி நடன கலா மன்ற உதவி நிதிக்காக மதராஸ் சகோதரிகளான சசி, கலா, மாலா ஆகியோர் இம்மாதம் முதல் தேதி ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் பரதநாட்டியமும், ஓரியண்டல் நடனங்களும் ஆடினர்.

'தாயே யசோதா', 'மாலைப்பொழுதினிலே' இரண்டுக்கும் குமாரி மாலா அழகாக அபிநயம் பிடித்தார். குமாரி சசி ஆடிய 'வர்ணம்' மிகவும் பாராட்டத்தக்கது. தில்லானாவில் குமாரிகள் சசி, கலா நன்கு சோபித்தார்கள். மூவருக்கும் மொத்தத்தில் தாளக் கட்டு பரவாயில்லை. ஆனால், நல்ல முகவெட்டு இருந்தும் முக பாவம் போதாது. இன்னும் கருத்தூன்றி உழைத்து ஆடுவார்களேயாகில் இவர்கள் நிச்சயம் முன்னணிக்கு வருவார்கள்.

பரதநாட்டியத்தைப் பொறுத்த மட்டில் இச்சகோதரிகள் ஸ்ரீமதி எம். கே. செல்வமணியின் சிஷ்யைகள். ஓரியண்டல் நடனங்களை ஸ்ரீ பி. ஜி. செல்லப்பா கற்றுக்கொடுத்திருக்கிறார். அன்றைய தினம் தலைமை வகித்த ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன், குமாரிகளின் திறமையை வெகுவாகப் பாராட்டினர்.

ஃ ஃ ஃ

பணத்தாசை பிடித்த ஒருவர் தன் சுய நலத்திற்காக விரிக்கும் சதித்திட்ட வலையில் தூய காதல் ஜோடியொன்று சிக்கித் தவித்து, கடைசியில் விடுபடுவதை ஹாஸ்யச்சுவையுடன் வருணிக்கிறது "வாழ்விலே. . ." என்கிற தமிழ் நாடகம். எழுதியவர் ஸ்ரீ கோமதி ஸ்வாமிநாதன். பொம்பூர் அமெச்சூர் குழுவினர் சென்ற 30-ந் தேதி அண்ணாமலை மன்றத்தில் இதை நடித்துக்காட்டினர்.

குமாஸ்தா சாம்புவாகத் தோன்றிய ஸ்ரீ என். சூர்யநாராயணன் தம் பாகத்துக்குரிய குண விசேஷங்களைப் பூரணமாக உணர்ந்து பிரமாதமாக நடித்தார். ஆனால் கைதாகும் கட்டத்தில் அவர் முழுத் திறமையைக் காட்டத் தவறிவிட்டார். அடுத்தபடி 'கணபதி'யாக வந்த ஸ்ரீ என். பாலசந்தரின் நடிப்பைக் குறிப்பிட வேண்டும். அரைப் பைத்தியமாக இருந்த போதும் சரி, அது தெளிந்து தாடி தரித்த சந்நியாசியாக மாறிய போதும் சரி, அவர் கச்சிதமாக நடித்தார்.

'ப்ரணதார்த்தி' ஸ்ரீ டி. நாராயண ராவுக்கு வேஷப் பொருத்தம் தேவலை. ஆனால், அவர் யாரோ ஒரு சினிமா நடிகரை 'காப்பி'யடித்து குரல் இழுப்பதைத் தவிர்க்க வேண்டும். 'சுந்தரம்' பாத்திரம் ஏற்ற ரயில்வே ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாஸன் அநாயாசமாகப் பேசினார். அனாவசியமாக முகத்தை நெளியவிட்டால் அது நடிப்பாகிவிடாது. தம் எடுப்பான பேச்சுக்கேற்ப நடிப்பின் தரத்தையும் அவர் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

'ராஜா' ஸ்ரீ எம். கே. ராமரத்தினம் கூடிய மட்டில் திறம்பட நடித்தார். கதாநாயகன் என்கிற நிலையை மறந்து அவர் அடிக்கடி உரக்கப் பேசியதாகத் தோன்றியது. உடல் விறைப்பைத் தளர்த்தி அவர் இன்னும் சற்று உழைத்து நடிக்க வேண்டும். 'பெருமாள் சுவாமி' ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாசன் பரவாயில்லை. குமாரிகள் ஜி சரோஜா, எம். ஆர். விஜயலட்சுமி இருவரும் சுமாராக நடித்தனர். பெண் வேஷங்களை ஏற்றுக்கொண்ட ஸ்ரீமான்கள் எஸ். பத்மநாபன், ஆர். எஸ். மணி, ஆர். மலையப்பன் ஆகியோரின் நடிப்பு தேவலை. மற்றும் ஸ்ரீமான்கள் வி. ஷண்முகம், ஆர். தத்தாத்ரி, எஸ். தேசிகன், எஸ். குருஸ்வாமி முதலியோரும் நன்கு ஒத்துழைத்தனர்.

சரளமான நடையில் வசனங்கள் ஓடுகின்றன. அநேக இடங்களில் நடிப்பு சுரத்தில்லாமல் போனதால் நாடகாசிரியர் கலந்திருந்த ஹாஸ்யச்சுவை நெடியேறாமல் நின்றுவிட்டது. கடைசி இரு காட்சிகள் அனாவசியம்.

டைரக்ஷன் பொறுப்பைத் திறம்படச் செய்தார் ஸ்ரீ பி. டி. சேஷாத்திரி. 'ஆனந்த விகடன்' ஆசிரியர் ஸ்ரீ ஆர். மகாதேவன் தலைமை வகித்துப் பேசுகையில், நாடகாசிரியரையும், நடிகர்களையும் புகழ்ந்தார்.

—ஸஞ்சாரி

முதல் தேதியன்று ஓவியாளிக் ஓட்டலில் ஆடி ரஷ்ய தேசவித்தைக்காரர்களை மகிழ்வித்த குமாரி பத்மினி பிரியதர்சினி. மாதக்கடைசியில் மயிலை ரஸிக ரஞ்சனி சபையில் நடனமாடவிருக்கிறார்

சென்ற மாதம் 16-ந் தேதி தியாகராய நகர் வாணி மஹாலில் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் தலைமையில் குமாரி ரத்னபாப்பாவின் அரங்கேற்றம் விமரிசையாக நடைபெற்றது.

30-ந் தேதி அண்ணாமலை மன்றத்தில் நடந்த 'வாழ்விலே...!' என்ற நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள்

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்

கீர்த்தனைகள்

சங்கீதகலாநிதி
ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் உதவியது

இக்கீர்த்தனையை ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் அவர்களின் பாடாந்தரப்படி ஸ்வரப்படுத்திக் கொடுத்தவர் ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யரான ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்கள்

பல்லவி

வல்லபா நாயகஸ்ய பக்தோ பவாமி
வாஞ்சிதார்த்த தாயகஸ்ய வரமூஷிக வாஹனஸ்ய (வல்லபா)

சரணம்

பல்லவ பத ம்ருது தரஸ்ய பா சாங்கு சாதி தரஸ்ய
மல்லிகா ஜாதீ சம்பக ஹாரஸ்ய மணிமாலஸ்ய

மத்யம காலம்

வல்லீ விவாஹ காரணஸ்ய குருகுஹ பூஜிதஸ்ய
காளீ கலா மாலினீ கமலாக்ஷீ ஸன்னுதஸ்ய (வல்லபா) (20)

விரும்பிய புருஷார்த்தங்களைக் கொடுப்பவனும், சிறந்த மூஷிகம் என்னும் ஜந்துவை வாகனமாகக் கொண்டவனும், மிகவும் மிருதுவான தளிர் போன்ற பாதங்களை உடையவனும், பாசம், அங்குசம் இவைகளை ஏந்தி இருப்பவனும், மல்லிகை, ஜாதீ, சம்பகம் இவைகளால் ஆகிய மாலை, மணிமாலை இவைகளை அணிந்திருப்பவனும், வல்லீ என்னும் மங்கையின் திருமணத்திற்குக் காரணமானவனும், குருகுஹனால் பூஜிக்கப்பட்டவனும், காளீ, கலா மாலினீ, கமலாக்ஷீ இவர்களால் துதிக்கப்பட்டவனும் ஆகிய வல்லபையின் கணவனுக்கு பக்தனாகிறேன்.

ராகம் : பேகட. (29-வது மேளத்தில் ஜன்யம்) தாளம் : திச்ர ஏகம். (1 களை)

ஆ : ஸகரிகமபதபஸா.
அவ : ஸ்நிதபமகரிஸ.

பல்லவி

1	காபம பாதா பா;	தநீ தபம\ரீ ஸஸா	ஸநி தா பா ஸா ;;	ஸ/ப ப மகா காமரீ கா
	வல். . ல பா.	நா. ய. . க. . ஸ்ய	ப . . க்தோ. .	ப . வா . . . . மி
2	கா பம பா தா பா, த	ரிஸ் நிதபம\ ரீ, ஸ ஸா	ஸநி தா பா ஸா ;;	ஸ/ப ப மகா தாபம மரிகா
	வல் . . . ல பா. .	நா. . ய. . க. . ஸ்ய	ப . . . க்தோ. .	ப . வா. . . . . . . மி
	ஸா ம கா ம பாமதாப	த்ரி ஸ்நிதப நி தபமக ரி	(வல்லபா)	
	வாஞ் சி தார்த்த தாய கஸ்ய	வர மூ ஷிகவா. ஹன. ஸ்ய		

சரணம்

	\கா ; கமபா தாபா	ஸ் நி தாபா ஸ்ா ; ஸ்ா	தாரீ ஸ்ாரிஸ்நீ தாபா	; பத தப/ரீ ; ஸ்ா
	பல் . ல . வ ப த	ம்ரு . து த ர . ஸ்ய	பா. சா . . . ங்குசா	. தி. த. ர . ஸ்ய
1	ஸ்ா கா க்ரிகா, ம் க்ம்	\ரீ. ஸ் ரிஸ் நிஸ் தாபா	ப தா பஸ்நி ரிஸ்ா. த ரி	\ நீ . தபம\ரீ. ஸஸா
	மல் . லி. கா. ஜா. .	தீ . . சம். . . ப க	ஹா . . ர . . ஸ்ய மணி	மா. . . . ல. . ஸ்ய
2	ஸ்ாக்ா க்ரி க்ா, த பம	\ரீ ஸ் ரி ஸ் நிஸ் தாபா	பதாப ஸ்நிரீஸ்ா த ரி	ஸ்\நீதபம\ரீ, ஸ ஸா
	மல் . லி. கா . ஜா. .	தீ. . சம் . . . ப க	ஹா. . ர . . ஸ்ய மணி	மா . . . . ல. . ஸ்ய

மத்யம காலம்

தாபா த மாப\கா மரி	, ஸ . மகமப ததப ஸ்ாஸ்	மக மபத\பா ஸ்நிரிஸ்ா	க்ம்\ரீஸ்ா நிநி த பாத
வல்லீ விவா ஹ கா ர ண	. ஸ்ய குருகுஹ பூ. ஜி தஸ்ய	கா. ளீ . க லா மா. லினீ	கம லாக்ஷீ ஸ.ன் னு தஸ்ய

(வல்லபா)

நாகுவின் 'பிரேமபாச'த்தில் சாவித்திரி

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House'